

கல்கி
KALKI 5.12.1965
35 காசு



செம்பாலான
அடிப்பாகம் கொண்ட
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்களில்
சுகாதார ரீதியாக
உங்கள் உணவைச்
சமையுங்கள்!
• உணவு காந்துவதோ,
தீய்ந்து போவதோ இல்லை.
• சூடு சமசீராகப் பரவுகிறது.
• சுத்தம் செய்வதும்,
துப்புரவாக வைத்துக்கொள்வதும்
சுலபம்—கழுவித் துடைத்தால்
போதும்—வேறெதுவும்
...செய்யவேண்டியதில்லை!
செம்பாலான அடிப்பாகம் கொண்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் சமைப்பதற்குச் சிறந்தவை.
மேலும், அவை ஆயுட்காலம் வரை நீடித்துழைக்கின்றன.
அவற்றை இன்றே வாங்குங்கள். அவற்றில் சமைப்பதே பேரானந்தம் அளிக்கும்...சுத்தம் செய்வதோ மிகவும் சுலபம்!
அவை உங்கள் வட்டாரத்தில் கிடைக்கவில்லையானால்,
தயாரிப்பாளர்களின் பிரதிநிதிக்கு எழுதுங்கள்:
மகாலக்ஷ்மி மெடல் இண்டஸ்ட்ரீஸ், 192 B, பாக்ஜூரா போக் ரோடு, பம்பாய்-4.
இந்த வியாபாரச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள் Meghdoot
LPE Alyars I 3 TAM

கல்கி

— புய

வீக்கத்திலே உயர்
    நோக்கத்திலே

காக்கத் திறல் கொண்ட
    மல்லர் தம்

— சேனைக்

கடலினிலே உயர் நாடு

என்ற அமர கவியின் வாக்குக்கு விளக்கமாகத் திகழும் வீரர்களை வணங்கி, இம் மலரைச் சமர்ப்பிக்கிறோம்.


ராணுவ மலர்


பொருளடக்கம்


விகவாவக கார்த்திகை 20 ● டிஸம்பர் 5

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




ஜனநாயகம்
PK


ஆயிரம் வருஷங்கள் போர் புரிவோம் என்று பயமுறுத்துகிறார் புட்டோ
பேஷ் பேஷ்! நமக்
ஆயிரம் வருஷங
நெருக்கடி நிலை
நீடிக்கும்.


நம்முடை
சொந்த
குண்டு!
பணவீக்கம்

மலர் 25 ● இதழ் 19



வீர வணக்கம்

'ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி' என்பதே பாரத தத்துவத்தின் ஜீவநாடி என்று அனைவரும் அறிவர். 'உட்பகை, வெளிப்பகை எவையுமின்றிச் சாந்த நிலை எய்துவதே மானுட வாழ்வின் இறுதி இலட்சியம் என்று மாமுனிவர்கள் மறைகளில் வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

அதே பொழுதில், நடைமுறை உலகின் போக்குகளையும் ஒப்புக் கொள்ளும் மகரிஷிகள், சாந்தி என்பது இறுதி இலட்சியம் மட்டுமே என்பதையும் அங்கீகரித்து, உலக வாழ்வின் உடனடி இலட்சியங்களில் வீரத்துக்கும், போருக்கும் இடம் அளித்திருக்கிறார்கள். அறத்தை நிலைநாட்டுவதற்கு அன்பு வழி பயன்படாதபோது ஆயுதத்தின் வழியை நாடித்தான் ஆக வேண்டும் என்பதை உணர்ந்து வேத காலத்திலேயே வீரப் பெருவாழ்வுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

ப்ரேதா ஜயதா நர இந்த்ரோ
வ:சர்ம யச்சது ||
உக்ரா வ: ஸந்து பாஹவோ S
நாத்ருஷ்யா யதாஸத ||

வீரர்காள்! முன்னேறுவீர்! வெற்றி எய்துவீர்! கடவுள் உங்கட்குக் காப்புத் தருவானாக! தாக்குதலைத் தாங்குமாறு உங்கள் புஜங்களில் பலம் செழிக்கட்டும்!

என்ற வீர கோஷத்தையும் வேத மந்திரமாகத் தந்தனர் விகவ சாந்தி கண்ட வித்தக முனிவர்கள்.

கொல்லாமையைத் தலையாய தத்துவமாகக் கொண்டு தமிழ் வேதம் தந்த வள்ளுவர் பெருமானும், நடைமுறையில் அறத்தை நிலைநாட்ட மறத்தையும் கைக்கொள்ளுமாறு உபதேசிக்கிறார். அரசு இயலின் ஆறு அங்கங்களைக் கூறுகையில் முதலாவதாகப் படை பலத்தையே இயம்புகிறார். படைபலம், குடிமக்களின் கூட்டு வாழ்வு, உணவு, நாட்டு நிர்வாகம், பிற நாடுகளின் சிநேக பாவம், காவல் ஆகிய ஆறு அங்கங்களை உடையவனே அரசரில் சிறந்தவன் என்பது வள்ளுவர் வாசகம்.

படைகுடி கூழ் அமைச்சு நட்பு
அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

தருமத்தி லிருந்து வழுவாமலும், அதருமத்தை நீக்கியும், வீரத்துடன் மானம் காப்பவனே மன்னன் என்கிறது இன்னொரு குறள்.

அறன் இழுக்கா(து) அல்லவை நீக்கி
மறன் இழுக்கா
மானம் உடைய(து) அரசு

எனவே, மேல்நாட்டவர்கள் இந்தியா தேக சக்தியில் கவனம் செலுத்தாமல் ஆன்ம சக்தியில் மட்டுமே கவனம் செலுத்தியதால் அடிக்கடி அந்நியராட்சிக்கு ஆளாயிற்று என்று குறை கூறிய போதிலும் உண்மை இதுவல்ல. போர்ப் பயிற்சி முறைகளைக் கூறும் சாஸ்திரத்தைத் 'தனுர்வேதம்' என்பதாகவே பெயரிட்டு மறைகளுக்குச் சமமாக மதிப்புத் தந்த இந்நாட்டில் வீரப் பண்பு அநாதிகாலமாக ஊறி வந்திருக்கிறது. சாந்திக்காகவே வாழ்ந்த காந்தி மகானும் 'அஹிம்சை என்பது கோழைத்தனமாகி விடக் கூடாது எனில் அச்சந்தர்ப்பத்தில் போரிடுவதே அன்பும் அஹிம்சையுமாகும்' என்று சுதந்திர பாரதத்துக்கு உபதேசித்து, அவசியம் நேர்ந்தபோது ராணுவ நடவடிக்கையை அனுமதித்தார். சந்திரகுப்த மௌரியனும், ஹர்ஷவர்த்தனனும், ராஜ ராஜனும், ராஜேந்திர சோழனும் பிறந்து வளர்ந்து போராடி மகத்தான சாம்ராஜ்யங்களை ஸ்தாபித்திருக்கும் இந்தியாவின் ஆண்மையைக் குறைத்துப் பேசுவது எவ்விதத்திலும் பொருந்தாது.

ஆயினும் மேல்நாட்டவர்கள் எடுத்துக் காட்டுவது போல் இம்மாபெரும் உபகண்டம் மீண்டும் மீண்டும் வெளியார் ஆதிக்கத்துக்கு இலக்கானது உண்மைதான். ஆனால் இதற்குக் காரணம் நாம் வீரத்தில் பின்தங்கி யிருந்ததுதான் எனக் கொள்ளலாகாது. இந்நாட்டின் பல அரசுகளிடையே இருந்த ஐக்கியக் குறைவே அந்நியராட்சிக்கு வழி வகுத்

தது. இது பாரதத்தின் புனித சரித்திரத்தில் படிந்துள்ள ஒரு கறை எனலாம்.

இன்று இந்தக் கறையை நாம் கழுவிக் கொண்டுவிட்டோம். பாகிஸ்தானின் சமீபத்திய ஆக்கிரமிப்புக்குப் பின் குமரியிலிருந்து இமயம் வரையில் உள்ள மக்களனைவரும் ஒருயிராக ஓங்கி எழுந்து எதிரியை முறியடித்திருக்கிறோம்; இனி எதிர்ப்பு நிகழ்ந்தாலும் முறியடிப்போம் என்ற முனைப்பைக் காட்டியிருக்கிறோம். இங்கு வீரத்தோடு ஐக்கியமும் இருக்கிறது என்பதை உலகுக்கு நிரூபித்துவிட்டோம். பாகிஸ்தான் எந்த மத பேதக் கிளர்ச்சியை எதிர்பார்த்து மதியீனமான ஆக்கிரமிப்பை நிகழ்த்தியதோ அது கனவிலும் நடக்காத காரியம் என்பதை வெளிக்காட்டி விட்டோம்.

இந்திய மக்கள் அனைவருக்கும் உரிய இப்பெருமை ஒருமுகமாகக் குவியும் மையஸ்தானம் நமது சைனியம். நிகழ்காலப் போரில் பாரத வீரர்கள் திறமைசாலிகளான தளபதிகளின் ஆணைப்படியும் பிரதமர், பாதுகாப்பு மந்திரி ஆகியோரின் திடசங்கல்பத்தின் கீழும் புரிந்துள்ள பராக்கிரமச் செயல்களைப் பொன்னேட்டில் வைர மணிகளால் பொறிக்க வேண்டும். யுத்த நீதியினின்று இம்மியும் வழுவாமல் விழுப்புண் கொண்டு நாட்டினைக் காத்த காவலர்களுக்கு நமது நெஞ்சு நிறைந்த நன்றிகள் உரித்தாகின்றன. எதிரியின் ஆயுத சக்தி அதிகமாயிருப்பினும் சரி, களத்தின் தன்மை எதிரிக்குச் சாதகமாயிருப்பினும் சரி, இத்தடைகளையெல்லாம் தங்களது மனோதிடத்தாலும் நுண்ணறிவாலும் தவிடுபொடி செய்து வீரகாப்பியம் சமைத்துவிட்டனர் நமது யுத்த வீரர்கள். இன்னுயிர்த் தியாகம் செய்த அபிமன்யுக்கள் பலர்; கடுமையாக ரணம் கண்ட விசயாலயர்கள் பலர். இவர்களுக்கெல்லாம் நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பது சொல்லில் அடங்காது. ஜவான்களுடையவும், அவர்களுடைய குடும்பத்துடையவும் க்ஷேமத்துக்காக நம்மாலியன்ற உதவிகள் அனைத்தையும் அளிப்பதாலேயே நமது கடமையை ஓரளவேனும் செலுத்தியவராவோம்.

நம் படைவீரர்களின் பெரும் செயல்களை உன்னி உணர்ந்து பார்த்து இனிய பாரதத்தினருக்கு ஓர் ஆதர்சமாக எடுத்துக் காட்டுவதும் நம் நன்றிக்கு அடையாளமாகும். அத்தகைய நன்றி உணர்வின் ஒரு வடிவமாகவே இந்தக் 'கல்கி' ராணுவமலரை வழங்குகிறோம்.

தீய சக்திகளுக்கும் தூய சக்திகளுக்குமிடையே அநாதி காலமாகவே போராட்டம் நடந்து வந்துதான் இருக்கிறது. சிவபிரானுக்கும் திரிபுராசுரருக்கும் — அம்பிகைக்கும் மகிஷனுக்கும் — முருகனுக்கும் சூரனுக்கும் — ராமனுக்கும் ராவணனுக்கும்—கண்ணனுக்கும் கம்சனுக்கும் இடையே நடைபெற்ற போர்களை நமது புராணங்கள் கூறுகின்றன. தெய்வ வடிவங்களின் திருக்கரங்களில் திவ்விய ஆயுதங்களைக் காண்கிறோம். ஆனால் அந்த ஆயுதங்கள் தருமத்துக்கும் சத்தியத்துக்குமே பயனாயின; அவற்றாலேயே வென்றன. இன்று தருமம் நம் புறமே உள்ளது. சமாதானத்தையே இலட்சியமாகக் கொண்டுள்ள நாம் மண்ணாசைக்காகப் போர் தொடரவில்லை. எதிரியின் துராக்கிரதத்தைத் தடுக்கும் நடவடிக்கையாகவே போரில் இறங்கினோம். எனவே தருமத்துக்காகவும், சத்தியத்துக்காகவும் போரிட்ட நமது படைகள் அமோக வெற்றி பெற்றதில் அதிசயமில்லை. ஆயுதம் தாங்கிய தேவதையாயினும் அதன் திருமுக மண்டலத்தில் கருணையே வழிவது போல் நம் வீரர்களின் தோள்களில் தீரம் செறிந்திருந்தாலும் உள்ளத்தில் அன்பு நிறைந்திருக்கிறது — தாய்நாட்டு அன்பு மட்டுமல்ல; எதிரி நாட்டின் பொதுமக்களிடமும் அன்பு கொண்டிருந்ததால்தான் நமது படையினர் யுத்த தருமத்தை ஒருபோதும் மீறாமல் எதிரிப் படைகளுடன் மட்டுமே பொருதினர். அவர்களின் வீரப் பிரதாபத்தைப் பற்றி ஒருபுறம் மகிழ்ச்சி கொள்ளும்போது, எதிரி நாட்டின் 'ஸிவிலியன்' மக்களிடம் அவர்கள் காட்டியுள்ள அன்புப் பாங்கை நினைந்து நெகிழ்ச்சியும் கொள்கிறோம். 'இரத்திலே படை வீரத்திலே' சிறந்து தோன்றும் அதே சமயத்தில் 'நெஞ்சில் ஈரத்திலே உபகாரத்திலே' உயர்ந்து விளங்கும் நமது வீரர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.

பேசியது யார்?

'பாகிஸ்தானுடன் நிரந்தரமாகப் போர்புரிய வேண்டும் என்று நான் யோசனை கூறுவதற்கில்லை. இறுதியில் இந்தியா சமாதானத்திலேயே நம்பிக்கை கொண்டிருக்கிறது. எனவே, சமாதானத்துக்கு ஒரு வாய்ப்பு இருக்குமாயின் அதனை நாம் விட்டுவிடக் கூடாது. மிகப் பெரும் யுத்தங்களும்கூடச் சமாதான முறையில் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

'ஜனநாயக நாடாகிய இந்தியா உலக அபிப்பிராயத்துக்கு விரோதமாகச் செயலெடுக்க விரும்பவில்லை. உலகத்திலுள்ள எல்லா நாடுகளும், இரண்டு தேசங்கள் தமது விவகாரங்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் போது அவ்விரு நாடுகள் நிகழ்காலச் சூழ்நிலையில் நீண்ட காலம் போரைத் தொடர்வது சாத்தியமல்ல. ஆனால், இந்தச் சமாதானத் தீர்வு கௌரவமான முறையில் அமைய வேண்டும்.'

இவ்வாறெல்லாம் அறிவுரை கூறியது யார் என்று நினைக்கிறீர்கள்? ராஜாஜி என்று? அல்ல. பிரதமர் லால்பகாதுர் அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த போது காங்கிரஸ் தொண்டர் கூட்டத்தில் மொழிந்தவையே மேற்கண்ட வாசகங்கள். பிரதமரின் உத்தமமான கருத்து, ராஜாஜி கூறி வருவதையே எதிரொலிக்கிறதல்லவா?

போர் முனையில் கவனம் செலுத்துவது காரணமாக உள்நாட்டுப் பொருளாதார

முனை சீர்கெடுவதற்கு விடக்கூடாது என்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதையே தலையாய நிரந்தரப் பொறுப்பாகக் கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் தெளிந்த சிந்தனையுடன் கூறியுள்ளார். ராஜாஜியின் யோசனை இதிலும் பிரதிபலிக்கிறதல்லவா! பிரதமர் உணர்ந்துள்ள விவேகமான பாதையில் நாட்டினை நடத்திச் செல்வதற்கு அவரது சகாக்கள் இடையூறு செய்துவிடக் கூடாது என்பதே நம் பிரார்த்தனை.

நினைவு அஞ்சலி

''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்றால் அதற்கு இலக்கியமாக விளங்கியவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

அமரர் கல்கி மறைந்த இந்த டிசம்பர் ஐந்தாம் தேதி நம் சிந்தனையெல்லாம் அப் பேராசிரியரிடமே செல்கிறது. அப்போது அம்மகாபுருஷர் 'செயற்கரிய செய்ததை' நினைவு கொள்கிறோம்.

பத்திரிகைத் தொழிலைத்தான் எடுத்துக் கொள்வோமே.

இத்தொழிலில் இரண்டு அம்சங்கள் உண்டு.

ஒன்று: பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பது.

மற்றையது: பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தீரத்துடன் உருவாக்குவது.

முன்னது சுலபமான, லாபகரமான பணி.

பின்னது எதிர்ப்புக்களையும், கஷ்ட நஷ்டங்களையும் சமாளிக்க வேண்டிய பணி.

ஆனால் ''கல்கி'' எப்பொழுதும் பின்னதையே தமது பத்திரிகை தர்மமாக, தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு செயற்கரியதைச் செய்தார்.

ஆம், அவர் அரசியலைப் பற்றி எழுதினாலும் சங்கீதம், சினிமா, நாட்டியம் ஆகிய எக் கலைத் துறையைப் பற்றி எழுதினாலும் எதிலும் ஒரு புது நோக்கு, ஒரு புது வழி!

இலக்கியத் துறையில் அவர் காட்டிய புது வழிகள்தான் எத்தனை எத்தனை?

அரசியல் வாழ்க்கையைப் புறப் படலமாகக் கொண்டு நவீனம் புனையப் புது வழி காட்டியவர் ''கல்கி''. தமிழ் நாட்டுச் சரித்திரத்தைப் புறப்படலமாகக் கொண்டு கதை புனைய முடியாது என்று கருதிய காலத்தில் முப்பெரும் சரித்திரக் கதைகள் புனைந்து, தமிழ் மக்களின் வீரமும், சிறப்பும் வாய்ந்த பொற்காலத்தை நினைவூட்டி இலக்கியம் செய்தார்.

இப்படிப் பல இனங்களில் கல்கி அவர்கள் வகுத்த வழியை இன்றும் நாம் பின்பற்றி வருவது பற்றிப் பெருமகிழ்ச்சி யடைகிறோம். இதற்குத் தமிழ்கூறும் நல்லுலகம் தரும் ஆதரவுக்கு நம் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

கல்கி அவர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் இன்று, இந்தப் பழைய படம் எத்தனையோ பேர்களுக்கு இனிய ஞாபகங்களை உண்டாக்கும். 1921ம் ஆண்டில் திருச்சி மாகாண காங்கிரஸ் கமிட்டியினர், பட்டிதொட்டிகளிலும் காங்கிரஸ் பிரசாரம் செய்யத் தொண்டர்களைத் தேர்ந்தவர்களாக்குவதற்கு ஒரு பிரசாரப் பயிற்சி முகாம் நடத்தினர். இந்தப் பயிற்சி முகாமில் கல்கி அவர்களும் கலந்து கொண்டார். நாற்காலிகளில் அமர்ந்திருப்பவர்கள் டாக்டர் ராஜன், ஸ்ரீ ஹாலாஸ்யம், டாக்டர் சுவாமிநாத சாஸ்திரி, டாக்டர் பாலகிருஷ்ண சாஸ்திரி ஆகியோர். தரையிலே இருப்பவர்களில் இடமிருந்து மூன்றாவதாக ஸ்ரீ ரா. நாராயணய்யங்காரையும் நான்காவதாக ஸ்ரீ கோபாலய்யரையும் ஐந்தாவதாக கல்கியையும் காணலாம்.




அரசாங்கபூர்வமாக நமது தேசத்தின் தலைவராக ஒப்புக்கொள்ளப்பட்டவரும், உலகத்தால் ஒரு தலைசிறந்த ஆன்மிக அரசியல் வாதியாகக் கருதப்படுபவருமான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள், சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜவாஹர்லால் நேரு நினைவு நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

"ஏகைவ மாநுஷி ஜாதி:

"மனித குலம் முழுவதும் ஒன்றே. இது வெறும் வாய்ச் சொல்லோ, கற்பனைத் தோற்றமோ அல்ல. இதுவே சரித்திரப் பூர்வமான உண்மையுமாகி வருகிறது.. போக்குவரத்துத் தொடர்புகள் விரைவு பட்டு வருவதால், கருத்துக்களும் கருவிகளும் இன்று உலகமாந்தர் யாவரிடையும் பரவி வருகின்றன... நாம் ஒரு புதிய சமுதாயத்தின் நுழைவாயிலில் நிற்கிறோம். எதிர்காலப் பிரச்னைகளை விழிப்புடன் உணருபவர்கள் மனித குலத்தின் ஒருமை என்ற இலட்சியத்தையே தங்களது சிந்தனைக்கும் செயலுக்கும் வழித்துணையாகக் கொண்டிருக்கிறார்கள்.

"சரித்திரத்தை ஆராயும் சில தத்துவ அறிஞர்கள் பொது உண்மைகளாகக் கருதிச் சில கொள்கைகளை அநாயாசமாக வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றைத் தவறாகவும் பொருள் செய்து கொள்ளக் கூடும். இவ்வாறு ஹேகல் அவர்கள் 'பெர்ஷியா ஒளியின் நாடு, கிரீஸ் நளின எழிலின் நாடு, இந்தியா



கனவு காணும் நாடு, ரோம் சாம்ராஜ்ய அபிலாஷை கொண்ட நாடு' என்றெல்லாம் கூறுகிறார்.

"எந்த நாகரிகம் ஆயினும் சரி, அது ஜீவ தத்துவத்தில் பெறக்கூடிய மிகப் பெரும் பயன் உன்னத வாழ்வுக்காகக் காணும் கனவுதான். புதுப் புது சிருஷ்டிகளைச் செய்து கொண்டிருப்பதே மனிதனின் சாரம். பழைய அமைப்புக்களோடு அவன் திருப்தியுறுவதில்லை. ஒவ்வொரு காலையும் ஒரு புது தினத்தைக் கொணர்கிறது: ஒவ்வொரு ரத்தத் துடிப்பும் ஒரு புது வாழ்வைக் கொணர்கிறது என்று மனிதன் உணருகிறான். அப்பட்டமான ராணுவ சித்தையும், அப்பட்டமான சுதேசியமும் இன்று பழங்கால வஸ்துவாகி விட்டன... இன்றைய காலத்தில் யுத்தம் என்பது மனிதன் தொடர்ந்து வாழ உதவாது; மனித குலத்தின் தற்கொலைக்கே வழி செய்யும். சர்வ தேசச் சச்சரவுக்குச் சண்டையின் மூலம் தீர்வு காண்கிற உபாயத்தைக் கைவிட்டாக வேண்டும். சமாதானத்தின் இடத்தில் அமர்த்தக் கூடிய மாற்று இலட்சியம் வேறெதுவுமே இல்லை. சமாதான சக வாழ்வு என்பது சாதுரியத்தையோ பலவீனத்தையோ அடிப்படையாகக் கொண்ட கொள்கையல்ல. நாடுகளுக்கிடையே சகிப்புத் தன்மை அற்றுப்போயிருப்பதையும், ஒன்றையொன்று தவறாகப் புரிந்துகொள்வதையும் மாற்றி, உலகைச் செம்மைப் படுத்துவதற்குச் சமாதான சகவாழ்வு ஒன்றே வழியாகும்."

இந்தியா கனவு காணும் நாடு என்பதையும், உன்னத வாழ்வுக்குக் கனவு காண்பதே மனிதனின் மாண்பு என்பதையும் ஒட்டி நான் எனது கனவு காணும் உரிமையைத் தொடருகிறேன். இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புடன் ஒத்துழைத்துக் கூடி வாழ வேண்டும் என்கிற என் கனவைப் பற்றி எழுதுகிறேன். இது கனவல்ல; பைசாசப் பிரமை என்று சிலருக்குத் தோன்றக் கூடும். ஆனாலும் பாரத ராஷ்டிரபதியும் பிரதமரும் இவர்களில் அடங்கியிருக்க மாட்டார்கள் என்றும், என் கனவில் வருங்காலத்தில் வாஸ்தவமாக நடக்கக் கூடியவற்றின் ஆரோக்கியமான முன்னறிவிப்பைக் காண்பார்களெனவும் நம்புகிறேன்.

அறிவிக்கப்பட்டபடி பாரதப் பிரதமரும், பாகிஸ்தான் ஜனாதிபதியும் தாஷ்கண்டில் ருஷியப் பிரதமரின் நட்பு வாய்ந்த துணையின் கீழ் கூடிச் சம்பாஷிக்கவேண்டும் என்று இந்திய உபகண்டத்தின் க்ஷேமத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் நம்புகின்றனர். இந்தச் சம்பாஷணை எல்லா விதத்திலும் வெற்றி பெற வேண்டுமென விரும்புகிறேன்.

இச்சமயத்தில் எவ்விதமான மனக் கட்டுப் பாடுகளுமின்றிச் சில ஆரம்ப நடவடிக்கைகளில் அடியெடுத்து வைக்க வேண்டுமென்பது என் யோசனை. அவையாவன: (1) அடுத்த இருபத்தைந்தாண்டுகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்விதமான ராணுவ பலாத்காரத்தையும் நாடாமலிருப்பது. (2) பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள வர்த்தகத் தடைகளை நீக்குவது; (3) வர்த்தகத் தடையில்லாதிருப்பதை எவரும் துஷ்பிரயோகம் செய்து கொள்ளாதபடியும், இருநாடுகளும் சமநிலையிலிருப்பதற்கும் ஏற்றவாறு இரு தேசங்களிலும் பரஸ்பர ஆலோசனைகளுக்குப்பின் சுங்க வரிகள் நிர்ணயித்தல்; இந்த ஏற்பாடு குறித்து எழும் எல்லா விவகாரங்களையும் தீர்த்து வைக்கப் பரஸ்பரமாக இருநாட்டு இலாகாக்களும் கலந்தாலோசித்தல்; (4) இரு நாடுகளிடையே மோதலும் போட்டியும் இல்லாதவாறு ஒன்றையொன்று இட்டு நிரப்பும் வகையில் இவ்விரு தேசங்களின் உற்பத்தியையும் அமைக்க வழிகாணுமாறு இரு நாடுகளுக்குமாக ஒரு பொதுத் திட்டக் குழுவை அமைப்பது. ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டுக்குமாகச் சேர்த்துச் சில பண்டங்களை அனுகூலமாக உற்பத்தி செய்ய முடியுமானால் இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உற்பத்திப் பொருள்கள் இரு நாடுகளுக்கும் பரிவர்த்தனையாவதற்கு எவ்வித சுங்கமோ, இதர கட்டுப்பாடுகளோ இருக்கலாகாது.

இத்தகைய ஒரு திட்டம் நல்ல அமைப்பின் உருவாகி அரசாங்கங்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென விரும்புகிறேன்.



வீரம் வளரட்டும்

பாகிஸ்தான் திணித்த வலுச்சண்டையைச் சமாளிக்க நாம் போரில் இறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை நமக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் மக்கள் மீது நமக்குத் துவேஷம் ஏற்பட்டுவிடக் கூடாது. துவேஷத்தை விரும்பி வளர்ப்பது தனி மனிதனுக்கானாலும் ஒரு தேசத்திற்கேயானாலும் எப்போதுமே நல்லதல்ல. இந்த நிலைமை நமக்கு ஏற்படாமல் இருக்கட்டும். இப்போது நிலவும் போர்நிறுத்தம் நிம்மதி அளிப்பது அல்ல. தினசரி நடக்கும் அத்துமீறல்களைப் பார்க்கும்போது மறுபடியும் போர் நிகழாது என்று எண்ணுவதற்குத் தைரியம் வரவில்லை. பாகிஸ்தான் அரசினிடம் போர் வெறியும் வேகமும் தணிந்ததற்கான அறிகுறிகள் ஒன்றையும் காணவில்லை. எப்போது இந்தக் குமுறல் வெடிக்குமோ என்றே அஞ்ச வேண்டியிருக்கிறது.

வடக்கு எல்லையிலும் நாம் விழிப்புடனேயே இருக்க வேண்டிய அவசியம் நீடிக்கிறது. பாகிஸ்தானுடன் இணைந்து எந்தச் சமயத்திலும் போர் நடவடிக்கைகளில் செஞ்சீனா ஈடுபடலாம் என்ற நிலைமைக்கு நாம் தயாராகவே இருக்க வேண்டும்.

நமது மண்ணை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதுடன் நமது ஜனநாயக வாழ்க்கை முறையையும் காத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையில் எதையும் சமாளிக்க நமது மன உறுதியைத் தளரவிடாது எஃகுப் போலாக்கிக் கொள்ளுவதைத் தவிர வேறு வழி இல்லை. நமது ஜவான்களும், ராணுவ அதிகாரிகளும், முப்படைத் தலைமைத் தளபதிகளும் போர்முனையில் பிரமிக்கத் தக்கவாறு வீர தீர பராக்கிரமங்கள் புரிந்திருக்கின்றனர். அவர்கள் எல்லோருக்கும் நம்முடைய உளங்கனிந்த நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகும். அவர்களை மனதார வாழ்த்துகிறேன். அவர்களுடைய வீரம் வளரட்டும். போரில் உயிரிழந்தவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு, நாட்டின் சேவையில் ஒப்பில்லாத் தியாகத்தைச் செய்த ஜவான்களின் தீரத்தை நாடே போற்றிப் புகழ்கிறது என்ற பாராட்டுதலைக் கூறிக்கொண்டு எனது ஆறுதலையும் நாட்டு மக்களின் ஆறுதலையும் சேர்த்துத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ராஷ்டிரபதி எஸ். ராதாகிருஷ்ணன்
முப்படைகளுக்கும் தலைமைத் தளபதி




சென்னையில் பிரதமர்

○ பாரதப் பிரதமர் லால்பகதூர் சென்னைக்கு விஜயம் செய்த போது, தமிழ் மக்கள், வெற்றி வீரருக்குரிய வரவேற்பை நல்கினார்கள். என். ஸி. ஸி படையினர் விசேஷ உற்சாகம் காட்டினர்.

○ தமிழகப் பெண்மணி, நாட்டுப் பாதுகாப்புக்காக நகைப் பெட்டியை அளித்துப் புன்னகை பூக்கிறாள்.

○ சென்னை பல்கலைக்கழக மன்றத்தில் நடைபெற்ற மாதர் கூட்டத்துக்குப் பிரதமர் தமது இல்லாளுடன் வந்தபோது, சிறுமிகள் அளித்த வரவேற்பு.







மனித குலத்தின் சேவையில் . . .

இருப்பிடம்

வசிப்பதற்கும் ... வேலை செய்வதற்கும் தேவை இருப்பிடம். இந்த அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய, தற்போதைய 439 மில்லியன் ஜனத்தொகை கூடிய சீக்கிரத்தில் 470 மில்லியன் ஜனத்தொகையாக அதிகரிக்கும் என்ற அடிப்படையின் மேல், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும், மற்றும் அடுத்து வரும் ஐந்தாண்டு திட்டங்களிலும் வீடு கட்டும் கொள்கைகளும், திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இருப்பிட அபிவிருத்திக்கும், நகர அபிவிருத்திக்கும், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் 140 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத்திட்ட முடிவில் பலதரப்பட்ட வீடு கட்டும் திட்டங்களின் கீழ் 9 லக்ஷம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இந்த மகத்தான தேசீயப் பணியில் திறமையான ஸிமெண்ட் ஒரு முக்கிய பங்கு கொண்டுள்ளது.

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாங்கள் மிகுந்த பெருமையுடன், நாட்டை வளரச்செய்யும் காரியங்களில், சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்ட், சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் போஸலோனா ஸிமெண்ட் உற்பத்தி செய்வதின் மூலம் எங்கள் பங்கை பூர்த்தி செய்து வருகிறோம்.

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்.

சென்னை-2

தொழிற்சாலைகள் : சங்கர்நகர், திருநெல்வேலி மாவட்டம் - சங்கரி மேற்கு, சேலம் மாவட்டம்

Criterion-ICT-757 TM

உயிரளித்துக் காப்போம்!

''மஹி''

எல்லை காக்கும் வீரரே நம்
எதிரி தாக்க நிற்கிறீர்
தொல்லை தாங்கும் தீரரே உம்
தீரம் எங்கள் பொக்கிஷம்

தாயகத்தைக் காத்து நீர்
தாதை முன்னோர் பூமியாம்
தாயர் தந்தை மக்கள்வாழ்
தேச மானம் காக்கிறீர்!

நம்முள் பேதம் நூறுதான்
நமது மொழி வேறு தான்
பம்மி வரும் பகைவனுக்கு
நமது பதில் ஒன்று தான்.

முந்தையோரின் வீரம் சேர
முனையும் நமது திறமையால்
வந்த பகைவன் ஓட நின்று
வாழும் புகழ் எய்த நீர்,

பதியும் குண்டும் நெஞ்சி லேற்றுப்
பார தத்தைக் காக்கிறீர்!
உதய வாழ்வு லட்சியம் எம்
இதய நன்றி பரிசு தான்!

நினைவு உங்கள் நெற்றியில் எம்
நெஞ்சம் உங்கள் பின்பலம்
முனைவு காண வாழ்த்துவோம்!
மூண்ட பகையை நீக்குவோம்!

இந்த நாடு நம்மதிதில்
இழையும் பண்பு நம்மதே
வந்த பகைவ னடி படாமல்
உயிரளித்துக் காப்போமே!





தென்னகம் தரும்


ராணுவப் பயிற்சி

எங்கேயோ தேன் கொட்டினுல் வேறு எங்கேயோ நெறி கட்டுமாம். எல்லாருடைய நோக்கும் நமது நாட்டின் வடகோடியிலுள்ள இமயமலைச் சாரலையும், காஷ்மீரையும் ஸியால்கோட் வட்டத்தையும் வட்டமிட்டுக் கொண்டிருக்கையில், அங்கே நமது தென்னுட்டைச்சேர்ந்த வீரர்கள் புரியும் சாகஸச் செயல்களைக் கேட்டு உள்ளம் பெருமிதத்தால் விம்மும் வேளையிலே, எனது சிந்தனை தென் மேற்கே அமைதி சூழ்ந்த நீலகிரி மலையையே சுற்றி வட்டமிட்டது! உல்லாச வாழ்க்கையைக் குறித்து அல்ல. அங்கே வடகோடியில் நமது வீரர்கள் புரியும் சாகஸச் செயல்களுக்கு ஊற்றுக் கண் இங்கல்லவா இருக்கிறது? ஆம், நீலகிரி மலையில் வெலிங்டனில் ராணுவ உயர்தர அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியும், ''மதருஸ் ரெஜிமெண்ட்'' என்று புகழ் பெற்ற ராணுவ வீரர்களின் பயிற்சித் தலமும் இங்கு அல்லவா இருக்கின்றன !

இது அவசர காலம். எல்லாம் அவசர அவசரமாக நடைபெறுகின்றன! நாமும் இந்தப் பயிற்சிக்கூடங்களை அவசரமாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்! முதலில் நாம் உயர்தர ராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் கல்லூரிக்குப் போவோம். பார்க்கப் போனுல் இங்கே பார்ப்பதற்கே ஒன்றுமில்லை. கேட்பதற்குத்தான். சர்ச்சை செய்வதற்குத்தான் இந்த இடம் ஏற்பட்டது.

இக்காலங்களில் போர் என்ருல், எதிரியை ஏதோ ஒரு படை கொண்டு மட்டும் தாக்குவது என்ற நிலை மாறிவிட்டது. பல சந்தர்ப்பங்களில் மும்முனைத் தாக்குதல்களும் நடத்த வேண்டியிருக்கிறது. தரை மார்க்கமாகவும், வான மார்க்கமாகவும்,

மேல் படம்: வெலிங்டன் ''மதருஸ் ரெஜிமெண்ட்'' பயிற்சிப் பள்ளிக்கூடமும், உயர்தர அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் சின்னமும். கீழே: மதராஸ் ரெஜிமெண்டைச் சேர்ந்த வீரர்கள்.




கடல் மார்க்கமாகவும் சென்று எதிரிகளைத் தாக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இத்தகைய போர் முறைக்குத் தரைப் படை அதிகாரிகள், கப்பற்படை அதிகாரிகள், விமானப் படை அதிகாரிகள் ஆகிய மூன்று பிரிவினரும் கூட்டு சேர்ந்து, ராணுவ தந்திர முறைகளை வருக்கப் பயிற்சி தருகிறது இக்கல்லூரி.

கல்லூரி என்றவுடன் ஓர் அறையில் நூற்றைம்பது மாணவர்களை அடைத்து, ஓர் ஆசிரியர் பிரசங்கம் செய்யும் முறைதான் யாருக்கும் ஞாபகம் வரும். அந்த முறைதான் இங்கு கிடையாது. அதற்கு நேர் மாறுபட்ட முறை கையாளப்படுகிறது. ஏழு எட்டுப் பேர் சேர்ந்து குழுக்கள் அமைத்துக் கொண்டு சர்ச்சைகள் புரிவார்கள். ஒரு பிரதேசத்தின் வரைபடம் இருக்கும். அதில் எதிரியின் நிலைகள், பலங்கள் குறிப்பிட்டிருக்கும். நம் நிலைகளும் குறிப்பிட்டிருக்கும். எதிரியைத் தாக்குவதற்கு எத்தகைய யுக்திகள் கையாள வேண்டியிருக்கும் என்பதைத் தரைப் படை, கப்பற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளையும் சேர்ந்த மாணவர்கள் சர்ச்சை செய்து முடிவுகட்ட வேண்டும். சுமார் எட்டு அல்லது ஒன்பது பேர்கள் சேர்ந்த குழுக்கள் அமைத்துக் கொண்டு, மேற்கூறிய பிரச்னைக்குப் பரிகாரம் காண வேண்டியிருக்கும். இப்படிப் பல குழுக்கள் இயங்கும். ஒவ்வொரு குழுவையும் சேர்ந்த மாணவர்களின் சிந்தனைக்கு லெப்டினன்ட் கர்னல் அந்தஸ்து உள்ள அதிகாரி உதவி புரிவார். ஆம், இக் கல்லூரிக்கு எப்படி அநுமதிக்கப்படுகின்றனர் என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

ஏழு ஆண்டுகள் எட்டு ஆண்டுகள் மேஜர்களாகவும், காப்டன்களாகவும் பணியாற்றிய தரைப் படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் போட்டி நடத்தப்படுகிறது. அந்தப் போட்டியிலிருந்து 130 பேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். விமானப் படையிலும், கப்பற் படையிலும், அந்தந்தத் துறை உயர் அதிகாரிகளே தங்கள் படையிலிருக்கும் முன்னுக்கு வரக் கூடிய இளம் அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களைத் தவிர

வெலிங்டனிலுள்ள ராணுவ உயர் அதிகாரிகள் கல்லூரியில் மாதிரி போர்க்களத்தை அமைத்துப் போர் முனைப் பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேடுகிறார்கள்.





வெலிங்டன் உயர் அதிகாரிகள் கல்லூரியில் பயில வந்துள்ள வெளிநாட்டு ராணுவ அதி காரிகளுடன் நம் ராணுவ அதிகாரிகள்.

அரசாங்கத்தில் பாதுகாப்பு இலாக்கா,—வைக்குத் தனிக்கை இலாக்காவைச் சேர்ந்த இளம் ஐ. ஏ. எஸ். உத்தியோகஸ்தர்கள் ஒரு சிலரையும் இப்பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்தும், முக்கியமாக காமன்வெல்த் நாடுகளிலிருந்தும் எகிப்து, அமெரிக்கா போன்ற நேச நாடுகளிலிருந்தும் இக்கல்லூரியில் பயிற்சி பெற இராணுவ அதிகாரிகள்வருகிறார்கள். இப்படிக் கிட்டத்தட்ட 175 பேர் இங்கு பயிற்சி பெற வருகிறார்கள். சாதாரணமாக இங்கு பயிற்சிக்காலம் நாற்பத்தாறு வாரங்களாக இருந்தது. இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையைக் கருதி முப்பது வாரங்களாகச் சுருக்கியிருக்கிறார்கள்.

பயிற்சிக்கு வரைபடங்கள் மட்டுமின்றி, மாதிரிப் போர்க் களங்களைத் தரையில் நிர்மாணித்து, 175 பேர்களும் சேர்ந்து சர்ச்சை புரிவதும் உண்டு. அத்துடன், களத்துக்குப் போனால் டெலிபோனில் எப்படி உத்தரவுகள் அளித்து, படைகளை ஏவிப் போர் நிகழ்த்துவார்களோ, அப்படியொரு 'டெலிபோன் போர்' நடத்துவதும் உண்டு.

இவற்றை யெல்லாம் பற்றிக் கேட்கும் போது போர்முறை விஞ்ஞான ரீதியாக வளர்ந்து வரும் ஒரு கலை என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அதற்கு ஏற்பவே, இக்கல்லூரியின் அடையாளமாக ஆந்தையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், மேனாட்டினர் ஆந்தையை அறிவுள்ள பறவையாகக் கருதுகின்றனர். யுத்தம் பிரக்ஞயா — "அறிவுடன் போர் செய்" என்பதே இவர்கள் குறிக்கோள்.

பல சமயங்களில், கல்லூரியை விட்டு, வெளியே பல பகுதிகளுக்குச் சென்று, பிரத்தியட்ச முறையில் பயிற்சி பெறுவதும் உண்டு. உதாரணமாகக் கப்பற் படை பயிற்சி பெற, கொச்சி முதலிய ஊர்களுக்கே கப்பலேறிப் போய்ப் பயிற்சி பெறுவர்.

குழுக்கள் அவ்வப்போது மாறிவரும். ஒரு வாரம் ஏழு எட்டுப் பேர்களுடன் சர்ச்சைகள் புரிந்தால், அடுத்த வாரம் வேறு ஏழெட்டுப் பேருள்ள குழுவில் இயங்கவேண்டியிருக்கும். இப்படி இக்கல்லூரியில் பயிற்சி பெறும் எல்லா மாணவர்களும், மற்ற எல்லா மாணவர்களுடனும் நெருங்கிப் பழகி ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

இவர்கள் பிற்காலத்தில் மிகப் பொறுப்பு வாய்ந்த ராணுவ அதிகாரிகளாக வேண்டியிருப்பதால், அதற்கு இப்போதே, மற்றத் துறை அதிகாரிகளை நன்கு அறியவும், பழகிக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. அத்துடன், உண்மையான நெருக்கடிக் காலங்களில் விமானப் படை அதிகாரி, தரைப்படை அதிகாரிகள் எந்த நிலையில் இருப்பார்கள், அவர்கள் வசதி — வசதிக் குறைவுகள் என்ன இருக்கக் கூடும் என்பதை ஊகிக்கவும்; அப்படியே தரைப் படை அதிகாரிகள், கப்பல் படை அதிகாரிகள் விமானப் படை தளபதிகள் ஆகியோரின் வசதி, வசதிக்குறைவுகளை ஊகிக்கவும் இப்பொழுதே வாய்ப்பளிக்கப்படுகிறது. இப்படிப் பரஸ்பரம் உணர்ந்து இயங்குவதில்தானே எந்தப் போரின் வெற்றியும் இருக்கிறது!

இது 1905ம் ஆண்டிலேயே தோன்றியது; குவெட்டாவிலிருந்தது. சுதந்திரம் அடைந்த போது குவெட்டா பாகிஸ்தான் வசம் சென்று விட்டதால், வெலிங்டனில் இக்கல்லூரி 1948ல் தொடங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

இனி "மதராஸ் ரெஜிமெண்ட் ஸெண்டர்"ருக்குப் போவோம். இருநூறு பிராயம் நிரம்பிய இந்த மதராஸ் ரெஜிமெண்டின் பெயரைக்கேட்டவுடன் உலகில் ராணுவ சரித்திரம் அறிந்தவர்கள் யாருக்குமே, உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பும் மரியாதையும் தோன்றும். அத்தனை வெற்றி வாகைகள் உலகின் பல போர்களில் பெற்றிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பெற்ற வெற்றிகள் இருக்கட்டும், சமீப காலத்தில் காங்கோவில், நேபா பகுதியில், காஷ்மீரில் நாகா மலைப் பகுதியில் — ஆகிய பல முனைகளில் எத்தகைய சாகஸச் செயல்களைப் புரிந்து பெயரும் புகழும் எய்தியிருக்கிறார்கள்!

"மதராஸ் ரெஜிமெண்ட்" என்றால் தமிழ் நாட்டை மட்டும் குறிக்கவில்லை. தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம் ஆகிய நான்கு ராஜ்யங்களிலும், முதன் முதலில் ராணுவப்

தேவநாயகன் திருப்பணி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பரிபூரண அநுக்கிரகத்தைத்துணை கொண்டு, அன்பும் அடக்கமும் திருவும் ஒரு சேர்ந்த பெருமாட்டியாகிய ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ணா அவர்கள், சென்னை வண்ணிய தேனாம் பேட்டையில் எழுந்தருளியுள்ள தேவநாயகனாகிய பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்துக்குத் திருப்பணி செய்வதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருப்பதை வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும். இவ்விறை பணி இனிது நிறைவு பெற்று டிஸம்பர் 12ந் தேதி காலை ஏழு மணியிலிருந்து எட்டரைக்குள் மகாகும்பாபிஷேகம் நடைபெற விருக்கிறது. எட்டாம் தேதியிலிருந்தே சாஸ்திரோக்தமான பூர்வாங்கங்கள் யாவும் நடைபெறும். இத்திருப்பணிக்குப் பொருளுதவி புரிய விரும்புவோர் அடியிற்கண்ட முகவரிக்குத் திரவியம் அனுப்ப வேணும்: ஸ்ரீமதி மதுரம் கோபால கிருஷ்ணா, 3, மஹாராணி சின்னம்பா சாலை, ஆழ்வார்ப் பேட்டை, சென்னை — 18.

அடுத்த வாரக் கல்கி ராஜாஜி இதழ்



பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இங்கு கொண்டு வந்து முழு சிப்பாய்களாக் குவதற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

முதலில் ராணுவத்தில் போர் வீரனைச் சேருவதற்கு விசேஷப் படிப்பு தேவையில்லாவிடினும், சில அடிப்படைத் தேவைகள் உள்ளன. பதினேழு முதல் இருபத்தொரு வயதுக்குள் இருக்க வேண்டும். எடை 105 பவுண்டு; மார்பகலம் 31–32 அங்குலம், உயரம் 5 அடி, 3 அங்குலம் இருக்க வேண்டும். இவ்வளவும் பெற்றவர்களை வேறு நோய் நொடி இல்லாமல் இருக்கிறார்களா என்று பார்த்து விட்டு, இங்கு அனுப்பி வைக்கிறார்கள். இங்கு வந்த பிறகும் 21 நாட்கள் தனியாகவே வைக்கப்பட்டிருப்பார்கள்.... இவர்களை அறியாமலே தொத்திக் கொண்டு வரக் கூடிய நோய்கள், பயிற்சி பெறும் மற்றவர்களுக்குப் பரவாமலிருக்க வேண்டும் என்பதற்காகத்தான். பிறகு இருபத்தியாறு வாரங்கள் கடுமையான உடற்பயிற்சிகள் அளிக்கிறார்கள். தேகாப்பியாசம் தவிர, உயரமான சுவரைப் போர்க் கருவிகளுடன் எம்பி ஏறுதல், கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏறுதல், பலவித இடையூறுகளைத் தாண்டி ஓடப் பயிலுதல், எதிரியை நேருக்கு நேர் கண்டவிடத்து எப்படித் தாக்க வேண்டும் என்பதற்குப் பயிலுதல் ஆகிய பல பயிற்சிகளை அளிக்கிறார்கள். இதனிடையில் ஹிந்தியும் கற்றுத் தருகிறார்கள். இப்படிக் கடும் பயிற்சி பெற்றவர்கள், உள்ளத்திலும் உடலிலும் அசாத்தியமான உறுதி பெற்ற கட்டிளம் காளையர்களாகத் திகழ்கிறார்கள்.

இந்த ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள், இப்பயிற்சிகளைத் தவிர பல விளையாட்டுக்களிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். மதராஸ் ரெஜிமெண்ட், கால்பந்தாட்டப் போட்டியில் எப்பொழுதுமே முன்னணியில் நிற்பது. 1955லும், 1958லும் மிக சிரம சாத்தியமான "டுராந்த் கோப்பை"யை இந்த ரெஜிமெண்டார் கால் பந்தாட்டப் போட்டியில் பெற்றிருக்கிறார்கள்.

அழகிய மலைகளும், குன்றுகளும் சூழ்ந்து, வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி, மனத்தைக் கவரும் குளிர்ச்சிப் பிரதேசமான இவ்விடத்தை அந்நாட்களில் வெள்ளையர்கள் தேர்ந்தெடுத்தார்கள், தங்களுடைய வெள்ளை சோல்ஜர்களுக்காக. அவ்வெள்ளை சோல்ஜர்கள் தங்கியிருந்த அந்தக் கம்பீரமான பாரக்ஸ் கட்டடமும், அதனிடையிலிருக்கும் பயிற்சி மைதானமும் இன்னமும் மனத்துக்குக் கம்பீரமானதோர் உணர்ச்சி யூட்டுகின்றன. அந்நாட்களில் இவ்விடம் சுமார் 840 பேருக்குத்தான் ஏற்பட்டது. இப்போது நமது தேவை அதிகமாகி விட்டது. இந்த ரெஜிமெண்டின் வேலைகளும் பெருகி, பக்கத்தில் உள்ள கொய்யா மலைக்கும் விரிந்திருக்கிறது. அங்கேயும் இதைப் போல் ராணுவப் பயிற்சிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது.

பயிற்சி காலம் முடிவு பெற்ற வீரர்கள், போர்க்களத்துக்கு ஏகுமுன், அவரவர் மதக் கோட்பாட்டுப்படி, நாட்டுக்கு விசுவாசத்துடன் பணிபுரிவதாக, பிரமாணம் எடுத்துக் கொள்கின்றனர். கிறிஸ்தவர் என்றால் பாதிரியார், முஸ்லிம் என்றால் மௌல்வி ஆகியோர் வந்து, பிரமாணம் செய்விக்கிறார்கள்.


இந்த ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள் ஓர் அழகிய முருகன் ஆலயம் எடுப்பித்துச் சிறப்புற நடத்தி வருகிறார்கள். முருகன் வீரத்துக்குப் பெயர் எடுத்தவன் அல்லவா ?

மதராஸ் ரெஜிமெண்டார் போர்ப் பயிற்சி பெறுகையிலேயே கல்வி பெறவும் வசதியளித்துள்ளார்கள். ஒரு பள்ளிக்கூடமே நடத்துகிறார்கள். அதில் படித்து மெட்ரிகுலேஷன் பட்டமும் பெறலாம்.

வீரர்கள் இயல்பாகப் பெற்றுள்ள பல கலையுணர்ச்சிகளை வளர்க்க ஓர் அருமையான பத்திரிகை நடத்துகிறார்கள். அதில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய ஐந்து மொழிப் பகுதிகளையும் பார்க்க முடிந்தது.

வீரர் மலிந்த தேசம் இது. அந்த வீரம் செழிக்கட்டும். நாட்டின் புகழ் ஓங்கட்டும்!





முப்படைத் தலைமைத் தளபதிகள்

நடு இரவு. பன்னிரண்டு மணி. இந்தியப் படைகள் நடநடவென்று ஹைதராபாத்துக்குள் நுழைந்தன. அதிக இரத்தமின்றி, நாசமின்றி ஹைதராபாத் நடவடிக்கை 1948ம் வருஷம் மே மாதம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கட்டளை இட்டவர் 'இரும்பு இதயம்' படைத்த சர்தார் வல்லபாய் படேல். இதை வெற்றிகரமாக முடித்து வைத்தவர் ஜெனரல் சௌத்ரி.

ராணுவப் படைத் தளபதி ஜெனரல் ஜெயந்தோ நாத் சௌத்ரி 1908ம் வருஷம் ஜூன் பத்தாம் தேதி பிறந்தார். அவரது இளமைப் படிப்பு கல்கத்தாவிலும் பிறகு லண்டனில் உள்ள ஹைகேட் கல்லூரியிலும் தொடர்ந்தது. ஸாண்ட்ஹர்ஸ்ட் ராணுவக் கல்லூரியில் சேருவது என்பது அந்தக் காலத்தில் கனவிலும் நினைக்க முடியாத, கிட்டாத பாக்கியம். ஆனால், சௌத்ரிக்கு ஸாண்ட்ஹர்ஸ்ட் ராயல் ராணுவக் கல்லூரியில் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. 1928ம் வருஷம் பிப்ரவரியில் அதில் தேர்ந்து ராணுவப் பட்டம் பெற்றார். பிறகு ஏழாவது 'லைட் காவல்ரி' படையில் சேர்ந்தார்.

ராணுவத்தில் திறமைசாலியாவதற்குக் கடுமையான படிப்பும் பயிற்சியும் தேவையாகும். ஜெனரல் சௌத்ரி 1940ம் வருஷம் மறுபடியும் குவெட்டா அதிகாரிகள் கல்லூரி (Staff College)யில் ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டார். இந்தப் பயிற்சிக்குப் பிறகுதான் அவர் ஐந்தாவது இந்தியப் படையினரோடு கடல் கடந்து சென்றார். சூடான், எரிட்ரியா, அபிசீனியா, மேற்கத்திய பாலைவனம் ஆகியவற்றில் இந்தியப் படை காட்டிய வீரம் சரித்திரப் பிரசித்தமானது. இவரது திறமையைக் கண்டு குவார்ட்டர் மாஸ்டர் ஜெனரல் பதவி மத்திய கிழக்கில் இவருக்குக் கிடைத்தது. இவருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் மிக உயர்ந்த கௌரவப் பட்டமான ஓ. பி. ஈ.யை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அயல் நாடுகளில் இந்த வெற்றிகரமான பிரயாணத்துக்குப் பிறகு இந்தியா திரும்பியதும் குவெட்டாவில் உள்ள அதிகாரிகள் கல்லூரியில் ஸீனியர் போதகர் பதவியைப் பெற்றார். 1944ம் வருஷம் ஆகஸ்டில் மிகப் பழைமையும் புகழும் வாய்ந்த பதினாறாவது 'லைட் காவல்ரி' படையின் தலைமைப் பதவியை ஏற்றார். அந்தக் காலத்தில் ஆங்கிலேயருக்குத்தான் இத்தகைய படைத் தலைமை கொடுக்கப்பட்டு வந்தது. ஆயுதம் தாங்கிய இந்த இராணுவப் படை இவரது தலைமையின் கீழ் போர்முனைக்குச் சென்றது. குவெட்டாவிலிருந்து மூவாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள பர்மாவில் மெக்டிலாவுக்குச் சென்று இந்த இந்தியப் படை இரண்டாம் உலகப் போரில் பங்கு பற்றியது. ஜெனரல் சௌத்ரியின் தலைமையில் இந்தியப் படை ரங்கூனில் வெற்றிகரமாக முன்னேறியதும், மத்திய பர்மாவில் இந்தியப் படை காட்டிய வீரமும் வரலாறு கண்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜெனரல் சௌத்ரி 1946 ஜனவரியில் மலேயாப் பிரிவின் நிர்வாகத்தில் பிரிகேடியர் பதவியைப் பெற்றார். பிரிட்டிஷ் – இந்திய ராணுவத்தில் பிரிகேடியர் பதவியைப் பெற்றுப் புகழடைந்த மூன்றாவது இந்தியர் இவரே. 1946ம் வருஷம் லண்டனில் நிகழ்ந்த போர் வெற்றி வைபவங்களில் இந்திய ராணுவக் குழுவின் தலைமை தாங்கிச் சென்று கலந்து கொண்டார். இம்பீரியல் ராணுவக் கல்லூரியில் ராணுவப் பயிற்சியை மேலும் மேற்கொண்டார். இப்படி இம்பீரியல் ராணுவக் கல்லூரியில் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்ற இரண்டே இந்திய அதிகாரிகளில் இவர் ஒருவர்.

இந்தியா 1947 ஆகஸ்டில் சுதந்திரம் பெற்றது. ஜெனரல் சௌத்ரி 1947 நவம்பரில் இட்டப் பிரிகேடியராகவும், ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பீரங்கிப் படை, துப்பறியும் இலாகா ஆகியவற்றுக்கு டைரக்டராகவும் செயலாற்றினார். ஹைதராபாத் நடவடிக்கைக்குப் பிறகு இவரையே 1948ம் வருஷம் செப்டம்பரில் ஹைதராபாத்தின் ராணுவ கவர்னராக இந்திய சர்க்கார் நியமித்தனர். 1956ம் வருஷத்தில், அன்று நட்புடன் பழகிய சீனாவுக்குச் சென்ற ராணுவத் தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றார் சௌத்ரி.

1959ம் வருஷம் ஜூனில் தெற்கத்திய ராணுவப் படையின் தளபதி பதவியைப்

பெற்றார். 1961 டிசம்பரில் இவரது ராணுவ மேற்பார்வையிலே கோவா நடவடிக்கை எடுக்கப்பட்டது. திறமை மிக்க ஜெனரல் வெகு எளிதில் கோவாவைக் கைப்பற்றினார்.

1962ம் வருஷம் ஆக்டிங் ஜெனரலாக ஆன ஜெனரல் சௌத்ரி, ஜெனரல் தாப்பரின் ஓய்வுக்குப் பிறகு இந்திய ராணுவத்தின் ஜெனரல் பதவியை அடைந்தார். பாகிஸ்தான் போரில் சமீபத்தில் இந்தியப்



படை காட்டிய தீரசாகசங்கள் பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டியவை. பாகிஸ்தான் போரில் இந்தியப் படையினர் காட்டிய வீரத்தை மெச்சி, அப்படையின் ஜெனரல் சௌத்ரிக்குப் பத்ம விபூஷண் பட்டத்தை வழங்கி இந்திய சர்க்கார் கௌரவித்துள்ளனர். இதற்கும் மேலாக இன்று இந்திய மக்களின் இதயத்தில் ஜெனரல் சௌத்ரி கொலுவேறி விட்டார்.

ஃ ஃ ஃ

சீக்கியர்கள் இரத்தத்தோடு வீரமும் தீரமும் பிறந்தவை என்பார்கள். சீக்கிய ராஜா ரஞ்சித் சிங்குக்குப் பீரங்கி என்றால் அளவில்லாத ஆசையாம். எந்த விதமான புதிய பீரங்கியானாலும் அதைப் பெறாமல் விடமாட்டாராம் ரஞ்சித் சிங். ஏதாவது ஒரு கோட்டையில் ஓர் அபூர்வமான பீரங்கி இருக்கிறதென்றால் உடனே அந்தக் கோட்டையைப் பிடித்துப் பீரங்கியைக் கைப்பற்றுவார்; அல்லது கோட்டை இடியுறாமல் பாதுகாக்க வேண்டுமானால் பீரங்கிப் படையினரை முதலில் சரணடையச் செய்வாராம். ராஜா ரஞ்சித் சிங் தோன்றிய அதே சீக்கிய வீரப் பரம்பரையில் பிறந்தவர்தான் நமது விமானத் தளபதி அர்ஜுன் சிங். அவரது தலைமையில் இந்திய விமானிகள் தப்பாக் குறியுடனும், சண்டைத் திறமையுடனும் வானில் தீர சாகசங்கள் புரிந்ததில் அதிசயமொன்றுமில்லை. பாகிஸ்தானிய விமானங்களுக்கும் விமானத் தளங்களுக்கும் இட்டு நிரப்ப முடியாத அளவுக்குப் பெரும் சேதம் விளைவித்ததுடன் நம் தரப்பில் சேதங்கள் அதிகமில்லையென்றும், அப்படிச் சில விமானங்களுக்கு நேர்ந்த ஓரளவு சேதமும் இதற்குள் சீராக்கப்பட்டுவிட்டன என்றும் அர்ஜுன் சிங் பெருமிதத்துடன் அறிவித்திருக்கிறார்.

ஏர் மார்ஷல் அர்ஜுன் சிங் விமானப் படைத் தலைமைத் தளபதியாக 1964 ஆகஸ்ட் 1ந் தேதி பதவி ஏற்றார். அவர் விமானம் ஓட்டுவதிலும், விமானப் படையை நிர்வகிப்பதிலும் தலைசிறந்தவர். சீக்கியர்களுக்கு இளமையிலேயே ராணுவத்தில் ஈடு

பாடு இருப்பதில் வியப்பில்லை. 1939ம் வருஷம் அர்ஜுன் சிங் விமானப் படையில் சேர்ந்தார். பிரும்மாண்டமான சூபர் கான்ஸ்டலேஷன் முதல் சிறிய போர் விமானங்கள் வரை அவர் அறுபது வகை விமானங்களை ஓட்டி அவற்றின் எல்லா நுணுக்கங்களையும் அனுபவ பூர்வமாக அறிந்தவர். 1962ம் வருஷம் சீன ஆக்கிரமிப்பின்போது அர்ஜுன் சிங்கே முன்னின்று பல முன்னணிப் போர்க் களங்களுக்குப் படைவீரர்களையும், அவர்களுக்குத் தேவையான இதர பொருள்களையும் விமான மார்க்கமாகக் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

விமானத் தளபதி அர்ஜுன் சிங்குக்கு 1944ம் வருஷமே அவரது திறமையைப் பாராட்டி 'பிளையிங் கிராஸ்' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. 'அர்ஜுன் சிங் அஞ்சாத சிங்கம்; தனித் திறமை பெற்ற விமான ஓட்டி; சமயமறிந்து பணியாற்றவும் நிர்வகிக்கவும் தகுந்த தளபதி' என்று போற்றிப் புகழ்ந்தனர்.

அர்ஜுன் சிங் 1919ம் வருஷம் ஏப்ரல் 15ந் தேதி லயால்பூரில் பிறந்தார். இன்று மேற்கு பாகிஸ்தானில் உள்ள மாண்ட்கோமரியில் கல்வி கற்றார். லாகூர் சர்க்கார் கல்லூரியில் மேல் படிப்பைத் தொடர்ந்தார். 1938ம் வருஷம் அவர் கல்லூரிப் படிப்பை விட்டதும் பிரிட்டனில் கிரான்வெல் விமான ஓட்டிப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939ம் வருஷத்தில் இந்திய விமானப் படையில் சேர்ந்து வடமேற்கு எல்லைப்புறத்தில் நிகழ்ந்த போரில் கலந்து கொண்டார். ஐ. ஏ. எப் முதல் பிரிவில் தமது விமானப் பணியைத் தொடர்ந்த அர்ஜுன் சிங் படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று, 1944ல் பர்மா, அரக்கானில் ஸ்குவார்டன் தலைவராகப் போர் புரிந்தார். 1945ம் வருஷம் இவரது திறமையைக் கண்டு விங் கமாண்டர் பதவி வந்தடைந்தது. பதவியிலிருந்தாலும் பயிற்சி மேற்கொள்ளுவதில் அர்ஜுன் சிங் பின்வாங்கவில்லை. பிரிட்டனில் பிராக்னெல் அதிகாரிகள் கல்லூரியில் பயிற்சி பெற்றார்.

1947ம் வருஷப் பிரிவினையின்போது குரூப் காப்டன் பதவிக்கு உயர்ந்து அம்பாலா விமானத் தளத்தின் தலைமையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றார். 1948ம் வருஷம் மேலும் பதவி உயர்வு அடைந்தது. விமான பிரதம காரியாலயத்துக்குப் பயிற்சி டைரக்டர் பதவி ஏற்கச் சென்றார். மறுபடியும் இங்கிலாந்தில் உள்ள லாட்டிமோர் அதிகாரிகள் கல்லூரியிலும் இம்பீரியல் ராணுவக் கல்லூரியிலும் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார். பிறகு விமானப் படையின் பல உயர்ந்த பதவிகள் வந்தடைந்தன.

அர்ஜுன் சிங் விளையாட்டுக் கலைகளிலே ஈடுபாடு மிக்கவர். நீச்சல் விளையாட்டில் தேர்ந்தவர். 1956ம் வருஷம் மெல்போர்னில் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டிகளுக்கு இந்திய விளையாட்டுக்காரர்களை நிர்வகித்துச் செல்லும் பொறுப்பை இவரே ஏற்றார்.

1963ம் வருஷம் நவம்பரில் அமெரிக்க, பிரிட்டிஷ், ஆஸ்திரேலியா விமானப் படைகளின் பயிற்சி முறைகள் இந்தியாவில் நடத்திக் காட்டப்பட்டபோது இவரே அனைத்துக்கும் தளபதி பதவி ஏற்று 'ஷிக்ஷா' பயிற்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்தி வைத்தார். சமீபத்தில் நிகழ்ந்த பாகிஸ்தான் போரில் இந்திய விமானப் படையின் தீர சாகஸங்களை மெச்சி, சிறிய 'நாட்' விமானங்களைக் கொண்டு பிரும்மாண்ட சாபர்ஜெட் விமானங்களை வீழ்த்திய இந்திய விமானிகளின் தளபதி அர்ஜுன் சிங்குக்கு இந்திய சர்க்கார் பத்மவிபூஷண் பட்டம் வழங்கியுள்ளனர். இந்திய விமானிகள் என்றாலே பாகிஸ்தான் விமானிகளுக்குச் சிம்ம சொப்பனம் என்கிற அளவுக்கு நமது விமானிகள் திறமை வெளிப்படச் செய்த பெருமை அர்ஜுன் சிங்கைச் சேரும்.



★ ★ ★

நாட்டின் பாதுகாப்புக்குக் கடற்படையின் அவசியத்தைச் சற்றும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது.

சுதந்திர இந்தியாவில் கடற்படையின் அவசியத்தை நன்கு உணரக்கூடிய ஒரு நெருக்கடி நிலைமை இன்னும் நமக்கு ஏற்படவில்லை. அத்தகைய ஒரு நிலை ஏற்படவேண்டும் என்று நாம் விரும்பவும் இல்லை. ஆனால் அவ்விதம் ஓர் ஆபத்து கடல் மார்க்கமாக வருவதாயிருந்தால் அதற்குத் தயாராகவே இருக்கிறது பாரதக் கடற் படை. நில மார்க்கமாக முன்னேறி நடத்தும் யுத்தமானாலும் கடலோரப் பகுதிகளில் கடற் படை ராணுவத்துக்குப் பெருந் துணையாக நிற்க முடியும்.


நமது கடற்படை நல்ல தேர்ச்சியும், பயிற்சியும் கொண்டது. வைஸ் அட்மிரல் பாஸ்கர் சதாசிவ் ஸோமன், அட்மிரல் கட்டாரியிடமிருந்து 1962ம் வருஷம் கப்பல் படையின் தலைமைப் பதவியை ஏற்றார்.

ஸோமன் 1913ம் வருஷம் மார்ச்சில் குவாலியரில் பிறந்தார். இவருக்கு இளமையிலேயே கப்பல் படையில் சேர வேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தது. ஆகவே 1931ம் வருஷம் கடல் படை பயிற்சியாளர்களுக்கான பரீட்சையில் தேறி, ராயல் இந்திய கப்பல் படையில் சேர்ந்தார். கடும் பயிற்சிகளும் படிப்பும் தொடர்ந்தன. அவர் பிரிட்டனுக்கு ராயல் கப்பல் படையின் பயிற்சியாளராகச் சென்றார். 1934ம் வருஷத்தில் கப்பல் துறை நுணுக்கங்களிலெல்லாம் தேர்ந்து ஸப் லெப்டினன்டாகப் பதவி ஏற்க இந்தியா திரும்பினார்.

உலகப் போரில் ஸோமன் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. போன யுத்தத்தில் முதல் லெப்டினன்டாகவும் எச். எம். ஐ. எஸ். கார்ன்வாலிஸ் கப்பலின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றினார். போரின் போது இத்தாலிய சப்மரீன் கலிலியோ பிரிட்டிஷ் கடற் படைகளுக்குப் பலவிதத் தொல்லைகளை விளைவித்து வந்தது. ஆழ் கடலுக்குள் அமுங்கிக் கிடந்து சமயத்தில் தோன்றி எதிரிகளை மடக்கும் இந்த இத்தாலிய சப்மரீனைப் பிடிக்கும் முயற்சி ஸோமனுக்கு வழங்கப்பட்டது. இந்திய மாலுமிகள் தந்திரங்களுக்குச் சளைத்தவர்களல்லர் என்பதை இந்தக் கலிலியோ சப்மரீனைப் பிடித்து வெற்றி பெற்று நிரூபித்தார்.

1952ம் வருஷம் வரையில் விசாகப்பட்டினம் கப்பல் தளத் தலைமை பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரிடமே இருந்தது. இந்தப் பதவியை முதல் தடவையாக இந்திய அதிகாரியான ஸோமன் ஏற்றுக்கொண்டார். சுதந்திர மடைந்த பிறகு கடற் படையைச் சேர்ந்த பெரிய வெள்ளைக்கார அதிகாரிகளை ஒவ்வொருவராக வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு, அந்தப் பதவிகளைச் சிறப்பாக ஒன்றன் பின் ஒன்றாக நிர்வகித்துப் புகழ் பெற்றார்.


நம் நாட்டின் பாதுகாப்புக்குச் சக்திவாய்ந்த கப்பல் படை அத்தியாவசியமானது. கடற் படையின் பலமும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஏற்கனவேயுள்ள விமானம் சுமக்கும் கப்பல், நாசகாரிகள் போன்றவற்றோடு நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒன்றிரண்டு வாங்கவும் ஏற்பாடுகள் செய்து வருகிறது நமது அரசாங்கம். ஆனால் எந்த யுத்தத்திலும் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது உபகரணங்களின் எண்ணிக்கை மட்டுமல்ல. அவற்றை நிர்வகிக்கும் மனிதர்களின் ஆற்றலும் திறமும் தான் அதிமுக்கியமானவை. இதனை முப்படை வீரர்களுக்கும் உணர்த்தும் வகையில் அவர்களுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர் அவர்களது தலைமைத் தளபதிகள். அவர்களுடைய படங்களை இந்த ராணுவ மலரில் வெளியிட்டுக் கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.





அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்



ராணுவ அதிகாரிகள் பயிற்சிப் பள்ளி







சீன ஆக்ரமிப்பு நடைபெற்ற சமயம் புது விழிப்பு அடைந்த அரசாங்கம் ராணுவ அதிகாரிகள் அதிகமாகத் தேவைப்படுவதை உணர்ந்தது. உடனே அதிகாரிகள் பயிற்சிப் பள்ளி இரண்டினை நிறுவியது. இவற்றில் ஒன்று மீனம்பாக்கம் விமான நிலயத்துக்கு அருகே தொடங்கப் பட்டது. மவுண்ட் ரோடு நெடுஞ்சாலையில் பல தடவைகள் சென்றிருந்தும் கூட ராணுவ ஆஸ்பத்திரிக்குப் பின்னால் இப்பள்ளியைச் சேர்ந்த விசாலமான புல்வெளிகளும் அழகிய தோட்டமும் இருப்பதைப் பெரும்பாலோர் அறிந்திருக்க மாட்டார்கள். இங்கே பறங்கிமலைக்குன்றுகள் இயற்கையிலேயே ராணுவப் பயிற்சிக்கான நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்கி உதவுகின்றன.

பள்ளியில் சேருவோர் தங்குவதற்கான மிக வசதியான அறைகள் உள்ளன. ஆரோக்யமான உணவு, விளையாட்டுப் பொழுது போக்கு போன்ற எதற்கும் குறைவில்லை.

ஆறு மாதப் பயிற்சி அளிக்கப்படும் இந்தப் பள்ளியில்







சேர்வதற்குக் குறைந்த பட்சம் இண்டர்மீடியட் அல்லது பி.யூ.ஸி. தேறியவர்களாயிருக்க வேண்டும். இவர்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு ரக விரப் பயிற்சிகளைப் படங்களில் காணலாம். பயிற்சி முடிந்ததும் செகண்ட் லெப்டினன்ட் பதவி






பெறும் இவர்களுக்கு நானூறு ரூபாய்க்கும் அதிகமாக மாதசம்பளம் கிடைக்கிறது. இதைத் தவிர பலதரப்பட்ட அலவன்சுகளும் தாராள

மாகக் கொடுக்கப்படுகின்றன. வேறு பல சலுகைகளும் உண்டு. படிப் படியாக உத்தியோக உயர்வும் அதை யொட்டிச் சம்பள உயர்வும் கிட்ட நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன.











பொறி இயல் துறையில் விசேஷத் தகுதி உள்ளோரும் இப் பள்ளியில் ஆறுமாத ராணுவப் பயிற்சி பெற்றுராணுவஇன்ஜினியர்களாக உயர்தர உத்தியோகங்கள் பெறலாம்.

அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியில் சேரக் கூடியவர்களின் எண்ணிக்கை சமீப காலத்தில் நானூற்றைம்பதிலிருந்து ஆயிரத்து ஐந்நூறாக உயர்ந்துள்ளது. நல்ல எதிர் காலத்தை விரும்பும் திடகாத்திரர்கள் இப் பள்ளியில் சேர்ந்து பயன் பெறுவதுடன் நாட்டுக்கும் பெருந் தொண்டாற்ற முடியும். இவர்களுடைய சேவை இன்று நாட்டுக்கு அவசிய தேவை.



தாவும் ஒரு சீக்கிய வீரர். 5. எதிரியின் மீது துப்பாக்கியின் கூரிய கத்தி முனையை இப்படித் தான் பாய்ச்ச வேண்டும். 6. புதர் மறைவில், தரை மட்டத்தில் பதுங்கி யிருக்கக் கூடிய எதிரியைத் தாக்கும் விஷயம். 7. ரேடியோ டெலிபோன்களை இயக்கக் கற்கிறார்கள். 8. லெப்ட் ரைட் ஃபார்வர்டுமார்ச் 9. ஆயுதம் தாங்கி அணி வகுப்பு.







இந்தப் பக்கத்தில்:


10. சர்க்கஸில் கம்பி மேல நடக்கிறார்களே, ஏறக் குறைய அப்படித்தான் இதுவும் மிக உயரத்திலிருந்து குதிக்கவும் வேண்டும். 11. கயிற்றுப் பாலத்தைக் கடப்பது இப்படி. 12.கைக்குண்டு எழுப்பிய புகை மண்டலத்தினூடே பாய்கிறார்கள். 13. வாசகசாலையில் 14. பள்ளியை நடத்தும் ராணுவத் தலைவர்கள்.

இப்பகுதியில் முதலிரு பக்கங்களிலும் உள்ள படங்களில் பின் வரும் அம்சங்களைக் காணலாம்.

1,2. உடற்பயிற்சிக்காக நடக்கும் விளையாட்டுக்கள். 3. கயிற்றைப் பிடித்துக் கொண்டு உயரே ஏறப் பழகுகிறார்கள். 4. டார்ஜான் பாணியில் கயிற்றை உபயோகித்துத்









பாரதம் சுதந்திரம் பெற்ற சிலவாரங்களுக்குள்ளாகவே நம் ராணுவத்தினருக்கு அழைப்பு வந்து விட்டது, காஷ்மீரத்திலிருந்து. இதையடுத்து ஹைதராபாத்தில் நம் ராணுவத்தினருக்கு வேலை இருந்தது. இந்த நடவடிக்கைகளில் முக்கிய பொறுப்பேற்ற பிரபல அரசியல் தலைவர்களையும் ராணுவத் தளபதிகளையும் இப் பக்கத்தில் காணலாம்.

சரித்திரம் கண்ட போர்த்திறம் (1)


















1. நாகாலாந்தில் கலகக்காரர்களைச் சுற்றி வளைக்கும் பணியை ராணுவத்தினர் ஏற்றனர். நாகாலாந்துக்கு விஜயம் செய்த ஜெனரல் சௌத்ரியைக் கிராமத்தினர் வரவேற்று உபசரிக்கின்றனர். 2. போர்ச்சுகீசிய ஆதிக்கத்திலிருந்து கோவாவை விடுவிக்க இந்திய வீரர்கள் வீறுகொண்டெழுந்தனர். பாரத ராணுவத்தினரிடம் சரணடைந்த போர்ச்சுகீசிய சிப்பாய்களின் தலைவனுடன் பேசுகிறார் நம் சேனாபதி. 3. ரன்–கட்ச் பிரதேசம் பாகிஸ்தானியர் படையெடுப்புக்கு உள்ளாகிய போது நம்படைகள் தீரத்துடன் எதிரியை முன்னேற விடாமல் தடுத்தன. 4. கோவா விடுதலை வீரர்களைக் கண்டு மகிழும் புனித கன்னிகா ஸ்திரீகள். 5. போர்ச்சுகீசியரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை இந்தியப் போர் வீரர் பார்வையிடுகிறார்.

இப்பக்கத்திலுள்ள படங்கள் — உதவி: ஜேஹிந்த்.







1. பாகிஸ்தானுடன் நடைபெற்ற சமீபத்திய போரையொட்டி பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களைக் கைப்பற்ற உதவிய பஞ்சாபியர் பாராட்டப் படுகின்றனர். 2. சமாதானத் தூதராக வந்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஊதாண்ட், பாதுகாப்பு மந்திரி சவான், தரைப்படை பிரதம தளபதி சௌத்ரி. 3. கேம்கரனில் கைப்பற்றப் பட்ட ஏராளமான பாகிஸ்தானிய டாங்கிகள் வரிசையாக நிற்கின்றன. 4. ராணுவ வீரர்களுடன் உற்சாகமாக அளவளாவும் பாதுகாப்பு மந்திரி. 5. போரின்போது எதிரிப் படையின் ஜீப்புகளும், லாரிகளும் அடைந்த கதி.








கோகுலத்தை அடுத்த காளிந்தி நதியின் மடுவில் காளிங்கன் என்ற பாம்பு வசித்து வந்தது. குளிக்க வரும் ஆயர்களையும், ஆடுமாடுகளையும் விழுங்கி அது அட்டகாசம் செய்து வந்தது.



ஆயர்கள் கிருஷ்ணனிடம் வந்து முறையிட்டார்கள். தங்களைப் பாதுகாக்கும்படி வேண்டினார்கள்.



எனவே, கிருஷ்ணன் காளிந்தி நதிக்கரைக்கு வந்து, ஒரு மரத்தின் மீதேறி நதியில் குதித்தான.



கிருஷ்ணனுக்கும். காளிங்கனுக்கும் கடுமையான போர் நடந்தது.




ராட்சசப் பாம்பான காளிங்கனின் கொட்டத்தை ஒடுக்கி, அதன் படத்தின் மீதேறி கிருஷ்ணன் வெற்றி நடனமாடினான்.



காளிங்கனின் இரு மனைவியரும் தோன்றி, காளிங்கனைக் கொல்லாமல் ரட்சிக்கும்படி வேண்டவே கிருஷ்ணன் அவ் வேண்டுதலுக்கிரங்கி, காளிங்கனுக்கு உயிர்ப் பிச்சை அளித்தான். அவனை அவ்விடத்தை விட்டுப் போகும்படி கட்டளையிட்டான்.

ஆவடியில் ராணுவத் தொழிற்சாலைகள்



சங்கீத சிட்சை பெறும் மாணவன் அந்தக் காலத்தில் குருவின் ஆடைகளை அறைந்து அறைந்து துவைத்துத் தான ஞானம் பெற்றது போலத் தையற் கலை பயிலும் மாணவன் காஜா தைத்துத் தைத்து மாஸ்டர் டைலர் ஆகிறான் என்பது நமக்குத் தெரியும்.

தையற்கலையில் அநுபவம் வாய்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் ராணுவத்தினருக்குச் சீருடை தைத்துத் தரும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள், ஆவடி ராணுவ உடுப்புகள்—பாராசூட்கள் தயாரிப்புத் தொழிலகத்திலே. ஆனால் இங்கே காஜா தைப்பதில் ஆரம்பித்துப் படிப்படியாகத் தையல் அநுபவம் பெற யாராலும் முடியாது! ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? அத்தனை காஜாக்களையும் இயந்திரங்கள் தைத்து விடுகின்றன விநாடிக்கு ஒன்று வீதம்!

ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அணிந்திருக்கும் உடையைப் பாருங்கள்! அளவெடுத்தாற்போல எவ்வளவு கன கச்சிதமாகச் சீருடை அவர்களது உடலை அலங்கரிக்கிறது? நாம் தீபாவளி அவசரத்தில் தைக்கக் கொடுக்கும் சட்டை ஒன்று தொள தொளவென்றிருக்கும்; அல்லது உடலைப் பிடித்தாற்போல் போய் விடும். கேட்டால், தையற் கலைஞர்கள், ''அவசர அடியுங்க. பண்டிகை கழித்து வாங்க. தளர்த்தியோ பிடிச்சோ தெச்சுத் தந்துடறேனுங்க'' என்று நம்மைச் சமாதானம் செய்வார்கள். நம்மை நேருக்கு நேர் நிறுத்தி ஒன்றுக்கு இரண்டு தடவையாக அளவெடுத்துக் கொண்டபின் தைத்த சட்டையின் இலட்சணம் இது. இப்படி ராணுவத்தில் உள்ள ஒவ்வொருவரையும் நேருக்கு நேர் பார்த்து அளவு எடுத்துத் தைக்க முடியுமா? தைக்கத்தான் கட்டிவருமா?

அப்படியென்றால் எப்படி இப்படிக் கன கச்சிதமாகத் தைக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இத்தனை பெரும் உலகைப் படைத்த ஆண்டவன் தன் படைப்பிலே ஒரு சீர்முறையைக் கையாண்டிருக்கிறான். ஒருவனைப்போல் இல்லாமல் இன்னொருவனைப் படைத்திருந்தாலும், பொதுவாக மனிதனின் உயரம் பருமனுக்கேற்பக் கைகால், கழுத்து, தோள்பட்டை ஆகியவற்றைச் சமைத்திருக்கிறான். பஞ்சாபி உயரமாக வாட்டசாட்டமாக இருக்கிறான். கோர்க்கா கட்டை குட்டையாக இருக்கிறான். மதராஸி இன்னொருவிதமாக இருக்கிறான். இப்படி உலகம் முழுவதிலும் பரவியுள்ள மனித இனம், சாதி மதம் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும் ஒரே ஆண்டவனின் சிருஷ்டி என்பதை மட்டும் நிலைநாட்டி வருகிறது.


ஆண்டவனின் படைப்பில் உள்ள இந்த ரகசியத்தை அவன் படைத்த மனிதனே கண்டுகொண்டான். அதோடு சில விதிவிலக்குகள் நீங்கலாக, இன்ன உயரம், பருமன் உள்ள மனிதனுக்கு இந்த இந்த அளவில் உடை தைத்தால் சரியாக இருக்கும் என்றும் ஒரு கணக்குப் போட்டான்.

இப்படி ராணுவத்தினரைப் பொறுத்தவரை ஆராய்ந்து கணக்குப் போட்டு உடைகள் தயாரிக்க வழிகூறும் ஓர் ஆராய்ச்சி நிலையம் இந்தியாவிலும் இயங்குகிறது.

அது சொல்வதுபோல் உடைகள் தயாரிக்க எத்தனையோ தொழிற்சாலைகள் இந்தியாவில் இயங்கி வருகின்றன.

ஆவடித் தொழிலகத்தில் ஆலைகளிலிருந்து வந்திருக்கும் துணிக்கட்டுகளைப் பிரித்து முதலில் கணக்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஒரே நிறத்தில் ஒரே ரகத் துணிதான். ஜவானும் ஜெனரலானாலும் இதே துணியைத்தான் அணிய வேண்டும். அதனால்தானே இதற்குச் சீருடை அதாவது 'யூனிபார்ம்' என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது! அதோடு போர்முனையில் அனைவரும் ஒன்றே என்ற எண்ணத்தை, சகோதரத்துவத்தை வளர்க்கவும் உதவுகிறது இது.

மேல் படம்: ஆவடி டாங்கி தொழிற்சாலையில் ஓர் அதிநவீன இயந்திரம்.





துணிகள் அகல — நீளத்தில் அரையங்குல, கால் அங்குல வேறுபாடு கொண்டிருந்தாலும், அவற்றைத் தனித்தனியாக வகைப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவற்றை ஐம்பது ஐம்பதாகக் காகிதங்களை அடுக்கிச் சீராக வைப்பது போல வைத்துக் கொள்ளுகிறார்கள். மேஜையின்மீது பரப்பிச் சீருடைக்கான மாதிரி அட்டைகளைத் தயாரித்துத் துணி சேதமாகாமல் குறியிட்டுக் கொள்ளுகிறார்கள். காலர், கழுத்துப் பட்டை, கை, உடல், பை எல்லாவற்றையும் மறக்காமல் 'மார்க்' செய்து கொள்ளுகிறார்கள்.

மின்சார விசையில் இயங்கும் வெட்டும் இயந்திரத்துக்கெதிரே நீட்டினால், அது மனிதனின் உதவி பெற்று ஒரே மூச்சில் ஐம்பது சட்டைகளுக்கான ஒரு பகுதியைச் சிறிதும் கோணாமல் வெட்டித் தள்ளுகிறது. பிறகு ஒவ்வொரு சட்டையாகப் பிரித்துத் தையற்பகுதிக்கு அனுப்புகிறார்கள்.

தையற்பகுதியில் வரிசையாகப் பல இயந்திரங்கள். விசையில் இயங்குபவைதான். ஒவ்வொன்றுக்கும் எதிரே ஒவ்வொரு தையற்காரர். காலர் தைப்பவர் காலர் தைக்கிறார். பை தைப்பவர் பை தைக்கிறார். ஆரம்பத்தில், ஒரு கோடியில் வெட்டுண்ட சட்டைத் துணியாக இருந்தது, கைமாறிக் கைமாறி மறுகோடி வரும்போது முழுச் சட்டையின் உருவம் பெறுகிறது. காஜா தைப்பதும், பொத்தான் தைப்பதும்கூட இயந்திரத்தின் உதவி கொண்டே நடைபெறுகின்றன.

இந்தத் தொழிற்சாலைகளில் பொருளும் வீணாவதில்லை; பொழுதும் வீணாவதில்லை. நேர்த்தியான ராணுவ உடைகள் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கில் தயாரிக்கப்பட்டுக் குவிந்தவண்ணம் இருக்கின்றன.



மேலே: தையல் வேலை மும்முரமாக நடைபெறுகிறது.
கீழே: பாராசூட்டுக்கான நைலான் கயிறுகள்.
பக்கத்தில்: பாராசூட் இறங்கும் காட்சி.

இராணுவத்துக்கு இப்படிச் சிறப்பான சீருடைகளை வழங்கும் பெருமையை 'சிவிலியன்கள்' ஏற்றிருக்கிறார்கள் என்பதைக் கண்டு மகிழ வேண்டும். ஒரு நாட்டின் பாதுகாப்பும், சிறப்பும் இராணுவத்தினரிடம் மட்டும் இல்லை; நாட்டு மக்களுக்கும் அதில் பெரும் பங்குண்டு என்பதை இந்தத் தொழிற்சாலை எடுத்துக் காட்டுகிறது. இத் தொழிலகத்தில் பணிபுரிபவர்கள் தங்கள் பணிக்கேற்பக் கூலி பெறுகிறார்கள். நாள் ஒன்றுக்கு அவர்கள் எத்தனைக்கெத்தனை அதிகமாகச் சட்டை-சராய் தைக்கிறார்களோ, அத்தனைக்கத்தனை அவர்கள் அதிகக் கூலி பெறுகிறார்கள். இம்முறை தொழிலாளர்களிடையே உற்சாகத்தை ஊட்டுவதாகும். இதனைச் சோம்பல் உதறிப் பயன்படுத்திக் கொள்ளும் உற்சாகிகள் இந்த நெருக்கடி நிலையில் மிக மிகத் தேவைப்படுகிறார்கள். இவர்களுடைய சீருடைச் சேவை, நாட்டுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கும் ஜவான்களின் கைகளுக்கு வலுவேற்றும் என்பதில் ஐயமில்லை.

இதுபோன்ற ராணுவத் தொழிலக நிர்வாகிகள் திடீர் திடீரென்று புதுப் புதுப் பிரச்னைகளைச் சமாளிக்க நேரும். உதாரண

மாகச் சீனர் படையெடுப்பின்போது பனி உறையும் குளிரை விடக் கடுமையான குளிரை நமது வீரர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. ஏராளமான கம்பளி ஆடைகள் தேவைப்பட்டன. கம்பளி நூலோ நாட்டில் போதுமான அளவுக்கு இல்லை. அவசரத்துக்கு என்ன செய்வது? இரண்டு அடுக்கு பட்டுத் துணிகளின் மத்தியில் பஞ்சைப் பரப்பித் தைத்து ரஜாய் போன்ற அமைப்புள்ள கனமான புதுவகைத் துணியை உருவாக்கித் தாற்காலிக ஏற்பாடாக அதில் சட்டை தைத்து அனுப்பினார்கள் ஆயிரக் கணக்கிலே. நல்ல கம்பளிச் சட்டை கிடைக்கும்வரை இவை நமது ஜவான்களைப் பாதுகாத்தன.

இத்தகைய தொழிற்சாலைகளில் சில இப்பொழுது சீருடைத் தயாரிப்போடு நிறுத்திக் கொள்ளவில்லை; பாராசூட் போன்ற சாதனங்களையும் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டு வருகின்றன.

பாராசூட்டின் சுருக்கமான வரலாறு இதோ:

பாராசூட் என்னும் சாதனம் ஒன்றை எப்படிப் படைக்கலாம் என்ற எண்ணம் 15ம் நூற்றாண்டிலே லியனார்டோ டா வின்சி என்னும் இத்தாலிய விஞ்ஞானியின் மனத் திரையிலே தோன்றியது. அவன் அதன் உருவத்தைப் படமாக வரைந்து வைத்தான். செபாஸ்டியன் லெனார்மான் என்பவன் அந்தப் படத்துக்கு ஓர் உருவம் கொடுத்துப் பலூனில் பறக்கவிட்டு மகிழ்ந்தான். 1785ம் ஆண்டில் ஜே. பி. பிளைன் ஹார்டு என்பவன் நாயைப் பாராசூட் மூலம் இறக்கினான். அதுமட்டுமல்ல; தானே பாராசூட்டிலிருந்து இறங்கிக் காலையும் ஒடித்துக் கொண்டான்!

ஒரு விஞ்ஞானி இப்படிக் காலை ஒடித்துக் கொண்டுவிட்டானே என்ற அச்சத்தில் பாராசூட்டின் கண்டுபிடிப்பு நிறுத்தப்படவில்லை. பூமியின் ஆகர்ஷண சக்தியையும் காற்றின் தடுப்புச் சக்தியையும் எப்படிப் பயன்படுத்திக் கொண்டால், பாராசூட் சாதனத்தைச் சரியான முறையில் சமைக்கலாம் என்ற ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டே வந்தது. கடைசியில் 1912ம் ஆண்டில் காப்டன் பேர்ரி என்பவன் ஆகாய விமானத்திலிருந்து பாராசூட் மூலம் இறங்கிக் காட்டியே விட்டான்.

முதலாவது உலகப் போரில் ஜெர்மனி பாராசூட்டை உபயோகித்துப் போரில் இறங்கியது. அப்புறம் ஏனைய நாடுகளும் இம் முயற்சியில் இறங்கின.


நவீனப் போரில் பாராசூட் துருப்புகள் இருமுனைத் தாக்குதலுக்குப் பெரிதும் உதவுகின்றன. ஆயுதம் தாங்கிய பாராசூட் துருப்புகள் முன்னேறிச் செல்லும் படைக்குப் பின்னால் இறங்கித் தொந்தரவு தர முடியும். பாலம் முதலியவற்றை உடைத்து எதிரிகளின் கண்களில் விரலை விட்டு ஆட்ட முடியும். அதுமட்டுமின்றித் தங்கள் படையினருக்கே, போக்குவரத்துத் தடைப்பட்ட நிலையிலோ அல்லது அவசரத் தேவை சமயங்களிலோ விமானம் மூலம் உணவுப் பொருள்கள், மருந்துகள், ஆயுதங்கள் முதலியவற்றைக் கொண்டு சென்று வானத்தின் வழியே இறக்கி உதவ முடியும். இந்த நிலை ஏற்பட்ட பின் இந்தியா உள்ளிட்ட எந்த நாடுதான் இத் துறையில் இறங்கத் துணியாது?

இந்தப் பாராசூட் குடைப் பாவாடையைப் போன்ற வடிவமுள்ளது. இது 20, 24, 28 என்று குறுக்களவு கொண்ட பட்டுத் துணிகளை வெட்டித் தைத்து உருவாக்கப்படுகிறது. இவற்றின் பாவுநூல் ஒன்றோடொன்று நேர்க் கோணத்தில் இருக்குமாறு சமைக்கிறார்கள். பாராசூட் தைப்பதற்கு இரட்டை ஊசிகள் கொண்ட தையல் மிஷின்கள் உள்ளன. ஏககாலத்தில் இவை இரட்டைத் தையலை முடித்து வேலையைச் சுலபமாக்குகின்றன.

தாயகத்தைக் காக்கும் தன்னிகரற்ற டாங்கி.



அம்மாவின் சமயோசிதம் உதவியது!





வலிதான் எங்கள் பிரச்சினை...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை சிறந்த மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பதே. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த ஊக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பாராமுவாதான் என்பதை நாங்கள் இன்று அறிகிறோம். அதனால்தான் அது உலகமுழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உங்கள் உடல் வேகத்திற்கும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "மனநலமற்ற" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளின் அழுத்துவதின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டறக் கலந்துவிடுகிறது—வீக்கத்தை நீக்கி—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: வலி • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு.

அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள் தேவையானால் மீண்டும் இதே அளவில் உபயோகிக்கவும். **குழந்தைகள்:** ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G. 8-65 TAM

இரட்டைத் தையல்களுக்கும் இடையே உள்ள இடைவெளி வழியே நேர்த்தியான நைலான் நூல் கயிற்றை இணைத்துச் சுருக்கு முடி போடுகிறார்கள்.

பாராசூட் மனிதர்கள் இறங்குவதற்கென்றும், பொருள்களைப் பூமிக்கு அனுப்புவதற்கென்றும் இரண்டு வகைகளாகத் தயாரிக்கப்படுகின்றன. ராணுவ வீரன் தனக்கு வேண்டிய ஆயுதங்கள், உணவுப் பொருள்கள், உடைகள், முதலுதவி மருந்துகள் ஆகியவற்றுடன் விமானத்திலிருந்து வான வீதியிலே குதிப்பான். பிறகு கயிற்றினால் போடப்பட்டிருக்கும் சுருக்கை இழுத்தால் பாராசூட் குடை விரிவது போலப் பிரிந்து கொள்ளும். காற்று தடுக்க, பூமி இழுக்கப் பாராசூட்காரன் ஆபத்தின்றிப் பூமியில் இறங்க முடியும். உயர்ந்த நைலான் அல்லது பட்டுத் துணியாலானது இது.

பொருள்களைச் சுமந்து வரும் பாராசூட் உயர்தரப் பருத்தி நூல் துணியினாலானவை. இவற்றின் சுருக்குகள் தானாகவே அவிழ்ந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் சில ஜீப்புகளைக்கூட இறக்கும் சக்தி வாய்ந்த உறுதியான தயாரிப்புக்கள்.

மருந்துப் பாட்டில்கள் அடங்கிய பெட்டிகளை இறக்கிச் செல்லும் பாராசூட்களில் காற்றுப் புகுவதற்கான ஜன்னல் சற்று விசாலமாகவே இருந்து பாராசூட் தரையைத் தாக்கும் வேகத்தைத் தணிக்கும். பாட்டில்கள் உடையாமல் தப்ப இந்த ஏற்பாடு.

இந்தப் பாராசூட்டுகள் போர்க்காலத்தில் மட்டுமே பயன்படுபவை என்று எண்ண வேண்டாம். சில சமயம் இயற்கை சீறி எழுந்து, வெள்ளம், புயல் ஆகிய உற்பாதங்களைத் தோற்றுவித்து ஓரிடத்து மக்களுக்கும் மற்ற இடத்தில் உள்ளவர்களுக்கும் உள்ள தொடர்பைத் துண்டித்துவிடுவதுண்டு அல்லவா? அப்பொழுது மக்களுக்கு உணவுப் பொருள்கள், வைத்திய உதவிகள் ஆகியவை அனுப்பவும் இவற்றைப் பயன்படுத்தலாம்.

ஃ ஃ ஃ

இரண்டாம் உலகப் போரின் போது ஸ்டாலினிடமிருந்து பிரிட்டனிலுள்ள லார்டு பீவர்புருக்குக்கு ஒரு தந்தி வந்தது.

“நாங்கள் டாங்கிகளும், விமானங்களும் அனுப்பி வைத்ததற்கு நன்றி. பிரிட்டிஷ் டாங்கிகள் முன்னணிப் போரில் நன்கு இயங்குகின்றன. இன்னும் டாங்கிகளும் விமானங்களும் அனுப்பி வையுங்கள்.” வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்பதுபோல் பிரிட்டிஷ் டாங்கிகளுக்கு ஸ்டாலினே அளித்த நற்சான்றிதழ் இது. டாங்கி தோன்றிய ஆரம்ப நாளிலிருந்தே டாங்கிகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் ஸ்தாபனமாகிய வைக்கர்ஸ் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்தே ஆவடியில் டாங்கிகள் தயாரித்து வருகின்றனர்.

முதல் உலகப் போரின்போது உலகத்தின் முதல் டாங்கி தோன்றியது.

அந்தக் காலத்தில் டாங்கிகளை நீர் நிரம்பிய தொட்டிகள் (Tank) என்று சொல்லிப் போர்க்கருவியின் ரகசியத்தைப் பாதுகாத்து வந்தார்களாம்! இன்றும் சில டாங்கிகளின் மீது, “ஜாக்கிரதையாகப் பெட்ரோகிராட் நகரை அடைய வேணும்!” என்று போக வேண்டிய இடத்தை விட்டு, வேறு இடத்தைக் குறித்து, எதிரிகளுக்குக் குழப்பத்தை உண்டாக்கினார்களாம் !

முதல் டாங்கி உண்டான விதமே ருசிகரமான வரலாறு! கரடு முரடான பிரதேசங்களிலும் மேடு பள்ளங்களிலும் செல்லக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை சர்ச்சில் வெளியிட்டார். அவரது அபிப்பிராயத்தைக் கேட்டு அன்று எள்ளி நகையாடியவர்கள் பலர். ஆனால் அவர் மனந்தளராமல் இத்துறையில் ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளித்தார். அன்று அவர் இட்ட வித்தே இன்று ராட்சத டாங்கிகள் உருவாவதற்கும், போரின் தலைவிதியை நிர்ணயிக்கும் சாதனமாக அவை அமையவும் காரணமாகிவிட்டது. 1916 பிப்ரவரி 2ந் தேதி உலகின் முதல் டாங்கி பிரமுகர்கள் முன்னிலையில் ரகசியமாகச் செலுத்திக் காட்டப்பட்டது. பிரமாதமாக அது இயங்கியது. அப்பொழுது ராணுவ மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் இந்த மாதிரி டாங்கிகள் ஐம்பதுக்கு 'ஆர்டர்' கொடுத்தார். பிறகு இந்த எண்ணிக்கை நூற்றைம்பது ஆயிற்று !

இந்த நூற்றைம்பது டாங்கிகளே பிரான்சில் 1917-ம் ஆண்டில் நேச நாடுகளுக்கு மாபெரும் வெற்றியைக் கொண்டு சேர்த்தன. ஆனால் இந்த ஆரம்ப காலத்திய டாங்கிகள் ராட்சத வடிவத்தில் விகாரமாயிருந்தன பார்ப்பதற்கு. படிப்படியாக டாங்கிகளின் இயந்திரங்களிலும் பிற நுணுக்கங்களிலும் முன்னேற்றம் காண்பதில் கவனம் செலுத்தியதுபோல் டாங்கிகளின் வடிவத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆவடியில் வருஷத்துக்குச் சுமார் நூறு வீதம் தயாராகவிருக்கும் டாங்கிகள் பார்ப்பதற்கு செவர்லே இம்பாலாவையோ ஃபோர்டு லிங்கனையோ தூக்கியடிப்பதாக இருக்கும். வெளிப் பார்வைக்கு மட்டுமின்றி இயந்திர நுணுக்கங்களிலும் சிறந்து விளங்கி உறுதியாகத் திகழும்.

அமெரிக்காவிலிருந்து வந்த பிரும்மாண்டமான பாட்டன் டாங்கிகளை வைத்துக் கொண்டு இந்திய மண்ணில் வெற்றியை நிலை நாட்டி விடலாம் என்று மனப்பால் குடித்த பாகிஸ்தானியரின் டாங்கிகளை யெல்லாம் கேம்கரன் சண்டையில் இந்திய ராணுவ வீரர்கள் கைப்பற்றியும் தகர்த்தும் செய்த உன்னத சாதனைகள் சரித்திரத்தில் காணாத அற்புதமாகும். தன்னிகரற்ற நமது ஜவான்களுக்கு ஏற்கனவேயுள்ள யுத்த சாதனங்களுடன் ஆவடி டாங்கிகளும் இனிப் பக்க பலமாக நின்று துணை புரியும்.

இந்த டாங்கிகள் ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் தனித் தனி

உறுப்புக்கள் உள்ளன. இவற்றைத் தயாரித்து இணைக்க வேண்டியிருக்கிறதென்றால் இது எவ்வளவு அற்புத சாதனை என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம்.

வைக்கர்ஸ் ஸ்தாபனத்தினரின் ஒத்துழைப்புடன் இங்கு டாங்கிகளைத் தயாரிக்கத் தொடங்கு முன் அந்த ஸ்தாபனத்தினரே மாதிரிக்கு ஒரு டாங்கி செய்து பாரத நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். இது நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு நிபுணர்களுக்குத் திருப்தி அளித்து ''விஜயந்தா'' என்ற பட்டப் பெயரும் பெற்றது. சக்தி வாய்ந்த இஞ்சினுடன் கூடிய இது வேகமாகச் செல்லக் கூடியது. இதன் பீரங்கியும் வெகுதூரம் கடக்கூடிய பலம் பெற்றது. இன்று விஜயந்தா ஆவடி டாங்கித் தொழிலகத்தில் அலங்காரமாக நிற்கிறது. அதன் மேல் ஏறுவதற்குப் படிகள் செய்து வைத்திருக்கிறார்கள், நம்மைப் போல் வேஷ்டி கட்டியவர்களுக்காக. போர்முனையில் வீரர்கள் எட்டு பத்தடி உயரம் தாவி ஏற வேண்டியதுதான். இதன் மீது. மேலே டப்பா மூடி போல் கதவு இருக்கிறது. அதைத் திறந்து கொண்டு டாங்கிப் படையினர் உள்ளே இறங்கிச் செல்லவேண்டும். இந்த மூடிக் கதவைத் திறப்பது இலேசான காரியமில்லை. அத்தனை கனம்! உள்ளே ரேடியோ ஆபரேட்டர், டாங்கி ஓட்டி, பீரங்கி இயக்குபவர், இன்ன திசையில் செல்ல வேண்டுமெனத் தேசப் படங்களை வைத்துக் கொண்டு கணக்கிட்டு வழி கூறுபவர், இவர்களின் தலைமை அதிகாரி ஒருவர் ஆகியோர் இருப்பதற்கு இதில் மிகச் சிறிய இடமே உள்ளது. வெளியே இருந்து பார்த்தால் பல அங்குல கனமுள்ள இரும்புத் தகடைத் துளைத்துச் செல்லும் சக்திவாய்ந்த எக்ஸ்ரே கண்கள் இருந்தாலொழிய உள்ளே இருப்போரைக் காண முடியாது! ஆனால் உள்ளே இருப்பவர் வெளியே பார்க்கலாம், 'பெரிஸ்கோப்' மூலமாக. நீர்மூழ்கிகளில் உள்ளோர் கடலின் மேல் மிதக்கும் கலங்களைக் காண்கிறார்களே, அதே போலத்தான். இந்த டாங்கிகளைச் செலுத்துவது ரொம்பச் சுலபம். எல்லாவற்றுக்கும் விரல் நுனியால் விசைகளை அழுத்த வேண்டியதுதான்.

இதில் உள்ள எலக்டிரானிக் சாதனங்கள், பீரங்கி குறி பார்த்துச் சுட உதவுகின்றன. இந்தப் பீரங்கி நாலாபுறமும் சுழலுவதுடன் மேலும் கீழுமாக உயர்ந்தும் தாழ்ந்தும் குறி பார்க்கும். இதில் ஓர் அற்புதம் என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட இடத்தை பீரங்கியால் குறிபார்த்தபின் டாங்கி ஒரு மேட்டின் மேல் ஏறுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போதும் குறி பிசகாமல் பீரங்கி முன் குறிப்பிட்ட அதே இடத்தை நோக்கியே இருக்குமாம். இப்படி அது மேடுபள்ளங்களுக்குத் தன்னால் அநுசரித்துக் கொண்டு போகிற மாதிரியாக எலெக்டிரானிக் சாதனங்கள் கவனித்துக் கொள்கின்றனவாம்! இப்படிப்பட்ட பயங்கர ஆயுதமான டாங்கிகளில்தான் முந்நூறு நானூறை நமது ராணுவத்தினர் சமீபத்திய போரில் எதிரியிடமிருந்து கைப்பற்றியும் செயலிழக்கச் செய்துமிருக்கிறார்கள்!

ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில் நிபுணர்களும், பணியாளர்களும் நூற்றுக்கணக்கான பிரும்மாண்டமான 'லேத்' முதலிய இயந்திரங்களில் டாங்கிப் பாகங்களைத் தயாரிக்கும் வித்தையை நேரில் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். சின்னஞ் சிறு உறுப்புக்களும் மிக நுண்ணிய அளவில் தயாரிக்கப்படுவதற்கான பிரும்மாண்டமான இயந்திரங்கள் குளிர்ப் பதன அறையில் வைக்கப்பட்டுள்ளன. காகிதத்தில் வரிவடிவம் தயாரிக்கப்பட்டதற் கேற்ப விசேஷத் திருகுகளையும், இதர நுணுக்கமான சாதனங்களையும் இந்த இயந்திரங்களில் தயாரிக்கும் ஒவ்வொரு விற்பன்னருமே பாராட்டுக்குரியவர்தான்.

இந்த அறைக்குள் நுழையும்போது ஏது இது மட்டும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிறதே, யாரேனும் பெரிய அதிகாரியின் ஆபீஸோ என்று நினைக்கத் தோன்றும். உண்மையில் அந்த நுணுக்கமான இயந்திரங்களுக்காகவே இந்தக் குளிர்சாதன அறை என்றறிந்து அதிசயப்படுவோம். இந்த நுணுக்கமான கருவிகளில் தயாரிக்கப்படவிருக்கும் பகுதிகளைக் காகிதங்களில் வரிவடிவங்களாக வரைவதும் இந்த அறையிலேயேதான் நடைபெற வேண்டுமாம். ஏனெனில், வெப்பதட்ப மாறுதலுக்கு உட்பட்டால் காகிதம் மிகமிக இலேசாகச் சுருங்கவோ, விரியவோ செய்யுமாம். பிறகு அந்த வரிவடிவக் காகிதத்தை இயந்திரத்தில் பொருத்தி இயக்கும் போது தயாரிக்கப்படும் பொருள் தரக் குறைவாக இருக்குமாம்! டாங்கி பார்ப்பதற்குக் கரடுமுரடாக இருந்தாலும் அதில் எவ்வளவு நுணுக்கமான பகுதிகள் உள்ளன என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா?

★ ★ ★ ★ ★ ★ ★ ஜோக்

ராணுவத்தினர் யுத்தகளத்தில் எதிரிகளின் நேரடித் தாக்குதலைச் சமாளிக்கும்போதுதான் சிரமப்படுகிறார்களென்பதில்லை. வேறு பல தொல்லைகளும் அவர்களுக்குண்டு. இதோ சில உதாரணங்கள்: ராணுவ மலர் பற்றி ராணுவ அதிகாரிகள் சிலரிடம் பேசிக்கொண்டிருந்தபோது கிடைத்த தகவல்கள் இவை.

சீனப் போரின்போது கடுமையான குளிரை அவர்கள் அனுபவிக்க நேர்ந்தால் நாகாலாந்து காடுகளிலோ பாம்பு தேள்களையும் பூச்சி பொட்டுகளையும் இவற்றை விடக் கொடுமையான அட்டைகளையும் சமாளிக்க வேண்டும். காடுகளில் சாதாரணமாக நடந்து போகும்போதே அட்டைகள் மனித உடலில் ஒட்டிக் கொண்டு குருதியை உறிஞ்சுமாம். இதையும் நமது ஜவான்கள் தமாஷாகவே கருதி ''ஒரு 'ஜோக்'தான் இதெல்லாம்'' என்பார்கள். பஞ்சாபியில் ஜோக் என்றால் அட்டை என்று அர்த்தம்!

காஷ்மீரப் போர்முனை ஒன்று. இங்கு ஒரு பட்டாளம். ஏகாந்தமான பகுதி இது. பல மைல் தூரத்துக்கு ஜன சஞ்சாரம் இல்லை. கடுமையான புயலும் மழையும் பிடித்துக்கொண்டது ஒரு சமயம். நிலச்சரிவு ஏற்பட்டு அவ்விடத்தைச் சென்றடையும் மலைப் பாதையை அடைத்துக் கொண்டது. எல்லை காத்த

இந்த டாங்கிகளுக்குத் தேவையான எலக்டிரானிக் சாதனங்களை பெங்களூர் பாரத் எலக்டிரானிக்ஸூம் பீரங்கிகளை அதற்கான வேறு தனித் தொழிற்சாலையும் செய்து அனுப்புகின்றன.

ஆவடி டாங்கித் தொழிற்சாலை ஆயிரத்து நானூறு ஏக்கர் பரப்பில் உருவாகியுள்ளது. சென்னை சர்க்கார் இந்தத் தொழிற்சாலைக்கு 770 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கியதோடு, தொழிற்சாலைக்கான மின்வசதியும், நீர் வசதியும் வழங்கி வருகிறார்கள். இந்தத் தொழிற்சாலை கட்டட நிர்மாணம் 1962 மே மாதத்தில் தொடங்கப்பட்டது. பன்னிரண்டரை ஏக்கர் நிலப்பரப்பின் அதே அளவு விஸ்தீரணமுள்ள ஒரே கூரையால் மூடி அதன் கீழ் இந்த டாங்கித் தொழிற்சாலையை அமைத்திருக்கிறார்கள்!

ஆவடி டாங்கித் தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்காக 1200 வீடுகள் உருவாகியுள்ளன. இந்த டாங்கிகளின் பல பகுதிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பெரும்பாலான கருவிகளையே இந்தத் தொழிற்சாலையில் சில இயந்திரங்கள் உருவாக்கி விடுவதால் ஏராளமான அந்நியச் செலாவணி மிச்சமாகிறது. இன்னும் ஒருசில வருஷங்களில் நூறு சதவிகிதம் இந்திய டாங்கி தயாராகுமாம். இதேபோல் பிரிட்டனிலிருந்து வந்த பொறி இயல் வல்லுனர்களின் எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைந்து இந்திய இன்ஜினியர்களே அதிகப் பொறுப்பெற்று வருகிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையில் பணி புரியத் தொழில் நுட்பம் வாய்ந்த இளைஞர்கள் தேவையல்லவா? அதற்காக 1961 நவம்பர் மாதம் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இதில் சேருபவர்களுக்குப் பொறி இயல் கலையில் தொழில் நுணுக்கப் பயிற்சி தருவதுடன் உணவு, உடை, இருப்பிடம் இவையும் கைச் செலவுக்குக் கொஞ்சம் பணமும் தருகிறார்கள். புத்தகப் படிப்பு குறைவாகவும் இயந்திரங்களை இயக்குவதில் பயிற்சி அதிகமாகவும் கிடைக்கிறது இவர்களுக்கு. பிறகு பிற ராணுவத் தொழிலகங்களிலும் மேலும் அநுபவம் பெற்று டாங்கித் தொழிற்சாலையில் பணியாற்ற வருகிறார்கள். குடிகையான சிலர் பிரிட்டனுக்குப் போய்த் தாய்த் தொழிலகமான 'விக்கர்ஸி'லேயே பயிற்சி பெறும் வாய்ப்பும் அடைகிறார்கள்.

ஆவடி டாங்கித் தொழிற்சாலை ஒரு ஷிப்ட் மட்டும் வேலை செய்கையில் மூவாயிரத்து ஐந்நூறு பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

அவசியமானால் இத்தொழிலகத்தில் டாங்கிகளைத் தயாரிக்கும் வேகத்தை அதிகரித்துக் கொள்ளலாம். மேலும் டாங்கிகளைத் தவிர புல்டோஸர் போன்ற ராணுவத்துக்குத் தேவையான இதர கனரக வாகனங்களையும் லாரிகளையும் கவச மோட்டார்கள் போன்றவற்றையும் உருவாக்கலாம். இன்னும் சமாதானக் காலங்களில் உற்பத்தியைப் பொது மக்களுக்குத் தேவையான வாகனங்கள் துறையில் திருப்பி விடவும் செய்யலாம். ஆனால் நாம் வரவேற்கத்தக்க இந்த நிலைக்குச் செல்லச் சீனாவும் பாகிஸ்தானும் நம்மை அனுமதிக்கும் என்று தோன்றவில்லை!

ஆவடி டாங்கித் தொழிற்சாலையில் தயாராகும் முதல் டாங்கி இந்த மாதம் வெளிவரவிருக்கிறது. பதினாறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் தொழிலகத்தில் உருவாகும் டாங்கிகள் நம் இந்திய நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் கோட்டையாக அமைந்து தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்டும்.

என்றால் அட்டை ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வீரர்களுக்கு உணவு முதலானவை கொண்டு போக முடியவில்லை. புயல் மழை காரணமாக விமானங்கள் மூலமும் உணவுப் பொட்டலங்களைப் போட இயலவில்லை. நாலைந்து நாட்களுக்கு அந்த வீரர்கள் தாமரைத் தண்டுகளை உண்டு ஜீவித்தார்கள்!

நேபா பகுதியில் கூடாரங்களுக்குள் மழைநீர் சுரம் கசிந்து எங்கு பார்த்தாலும் சொத சொத வென்று இருக்கும். படுக்கை சில்லிட்டுப் போகும். மறுபக்கம் ராஜஸ்தான் பாலைவனத்திலோ சமீபத்திய போரில் நமது சென்னை ரெஜிமெண்டு 40 அடி 60 அடி ஆழம் வரை பூமியைக் குடைந்தால்தான் குடிநீரேனும் கிடைக்கும் என்றால் அவர்கள் குளிப்பது எப்படி? தமிழர்கள் நாளைக்கு இரண்டு வேளை குளித்துப் பழகியவர்களாயிற்றே!

யுத்தம் நடப்பது இடையே சற்று நேரம் தடைபட்டால் அல்லது நிறுத்தி வைக்கப்பட்டால் அந்தச் சமயத்தில் ஜவான்கள் அக்கடாவென்று படுத்துவிட முடியாது. பூமியைக் குடைந்து நில மட்டத்துக்குக் கீழே அறைகள் உருவாக்க வேண்டும். இந்தப் 'பங்கர்'களுக்குக் கூரையாகத் துத்தநாகத் தகடுகளைப் பரப்பி அதன்மீது செடி கொடிகளைப் போட்டு எதிரியின் கண்களில் படாமல் மூடி மறைக்க வேண்டும். மிக நவீனமான யுத்த சாதனங்களின் துணைகொண்டு நடத்தப்படும் இன்றைய யுத்தத்தில் யாரேனும் ஒருவர் ஒரு சிறு தவறு செய்துவிட்டாலும் போதும். அதன் விளைவாக நூற்றுக்கணக்கானவர் நம் தரப்பிலேயே கூட மடிந்துவிடக் கூடும்!

இதுபோன்ற கஷ்டங்களை யெல்லாம் முகம் கோணாமல் அநுபவிக்கும் வீரர்கள் விரும்புவதும் ஆசைப்படுவதும் இவை. அவை, நாட்டு மக்கள் அவர்கள் படும் சிரமத்தை உணர வேண்டும். அனுதாபத்துடன் நோக்க வேண்டும். அவர்களுக்குப் பக்கபலமாக நிற்க வேண்டும். உறுதுணையாக உழைக்க வேண்டும் என்பவைதான்.



சமாதானப் பணியில் பாரத வீரர்கள்



மேலே: இந்திய ராணுவத்தில் உள்ள வைத்தியப் பகுதி உதவியாளர் ஒருவர் லாவோஸின் ஒரு குழந்தையின் புண்ணுனைக்கு மருத்துவப் பணி புரிகிறார்.

ராணுவம் என்று இருந்தால் அது போரில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. சண்டை போட்டுக் கொண்டிருப்பவர்களிடையே அமைதி நிலவச் செய்யும் பணியிலும் ஈடுபடலாம். இந்தச் சமாதானப் பணியைச் செய்யும் வாய்ப்பு, நமது சுதந்திர இந்திய ராணுவத்துக்குப் பல தடவைகளில் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது யுத்தத்துக்குப் பிறகு வல்லரசுகளுக்குள் ஏற்பட்ட மிகப் பெரிய தகராறு கொரியாவைப் பற்றியதாகும். யுத்த முடிவில் கொரியா தேசம் வட கொரியா தென் கொரியா என்று பிரிக்கப்பட்டது. வடகொரியா ரஷ்யர்கள் ஆதிக்கத்திலும், தென் கொரியா அமெரிக்கர் ஆதிக்கத்திலும் இருந்தது. 38வது அக்ஷரேகைக்கு மேலே வடகொரியா நாளடைவில் கம்யூனிஸ்ட் நாடாகி விட்டது. வடகொரியர்கள், சில பக்க பலத்துடன் அந்த 38வது எல்லைக் கோட்டைத் தாண்டித் தென் கொரியாவுக்குள் படையெடுத்தார்கள்.

உடனே ஐக்கிய நாடுகள் சங்கம் இந்தத் தகராறில் தலையிட்டது. சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை வடகொரியா ஏற்கவில்லையாகையால் ஐ. நா. ஒரு சர்வதேசப் படையைக் கொரியாவுக்கு அனுப்பியது. மூன்று வருட கால இடைவிடாத போருக்குப் பின்னர் தாற்காலிக சமாதானம் ஏற்பட்டது. இதையொட்டி, யுத்தக் கைதிகள் சம்பந்தமான பொறுப்பை ஏற்கவும், மற்றும் சில சமாதானப் பணிகள் செய்யவும் ஒரு கமிஷன் ஏற்பட்டது. இந்தக் கமிஷனின் தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் திம்மையா பொறுப்பேற்றார்.

கிட்டத்தட்ட இருபத்தி மூவாயிரம் கைதிகளைக் கவனித்து அவர்களை அவரவர் நாட்டுக்கு அனுப்பும் பொறுப்பு இந்தியாவுக்கு ஏற்பட்டது. இதற்காகச் சுமார் 250 அதிகாரிகளும், 5000 வீரர்களும் கொண்ட சமாதானப்படை கொரியாவுக்குச் சென்றது.

வட, தென் கொரியா பகுதிகளுக்கு இடையே கிழக்கு மேற்காக 200 மைல் உள்ள பிரிவினைக் கோட்டின் இலக்கத்திலுள்ள குறுகிய பிரதேசத்தில் இந்தியத் துருப்புக்கள் இருந்தன. அவர்கள் முகாமிட்டிருந்த இடத்துக்கு 'ஹிந்த் நகர்' என்று பெயர். யுத்தத்தினால் பாழடைந்த பிரதேசத்தில், இன்னும் போர் நிலை மறையாத சூழலில் பல கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு நமது படையினர் இராப் பகலாக உழைத்து வந்தனர். கைதிகளில் முரடர்களாயிருந்த பலரைச் சாமர்த்தியமாகத் தகுந்த முறைகளைக் கையாண்டு அடக்கியாண்டனர். அவர்கள் விருப்பு வெறுப்பின்றியும், பாரபட்சமின்றி



கீழே: கொரியாவில் சமாதானப் பணி புரிந்து திரும்பிய இந்திய ஆம்புலன்ஸ் படையினருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு.



யும், இராணுவத்தினராயிருந்தும் சவு இரக்கத்துடனும், மனிதத் தன்மையுடனும்நடந்து கொண்டதை இரு சாராரும் பாராட்டினர். ராணுவத்தின் மருத்துவப் பகுதியும் சுகாதாரப் பகுதியும் சிறப்பாகச் செயலாற்றின. இந்திய ரெட்கிராஸும் கைதிகளின் சௌகரியங்களைக் கவனித்துக் கொண்டது. சுமார் ஒரு வருஷகாலத்துக்குப் பிறகு நமது படை தாய்நாடு திரும்பியது. சமாதானப் பணியில் சிறப்பான சேவை செய்ததற்காகத் திம்மையா பத்மவிபூஷண் பட்டம் பெற்றார்.

இந்தோ சீனாவில் பிரஞ்சு ஆதிக்கம் முடிந்ததை யொட்டி, வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய மூன்று தேசங்களும் சுதந்திரம் பெற்றன. அதே சமயத்தில் இந்நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் தேசிய ஜனநாயக சக்திகளுக்கும் இடையே உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது. பிறகு ஜெனிவாவில் சமாதான உடன்படிக்கையும் போர் நிறுத்த ஒப்பந்தமும் கையெழுத்தாயின. பிரஞ்சு ஆதிக்கத்துக்கும் முடிவு ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைகளின் விளைவாக மூன்று சர்வதேசக் கமிஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் தலைமையை இந்தியா ஏற்றது. போலந்து, கனடா ஆகிய இரண்டு நாடுகளும் அங்கத்தினர்களாயின. போர் நிறுத்தத்தை அமுல் செய்து சமாதானத்தை நிலைநாட்டவும் மீண்டும் போர்ப் படைகள் திரட்டப்படாமல் கண்காணிக்கவும் ஒன்றாக இணைவது பற்றி மக்களின் அபிப்பிராயத்தை அறிய தேர்தல்கள் நடத்துவதும் இந்தக் கமிஷன்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சிறந்த அரசியல்வாதிகளுக்கு இணையாக அறிவாற்றலையும் தீர்க்கதரிசனத்தையும் காட்டி நமது ராணுவத்தினர் புகழ்பெற்றனர்.

எகிப்து, சூயெஸ் கால்வாயைத் தேசியமயமாக்கிய போது பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய மூன்று தேசங்களும் அதற்குள் படையெடுத்துச் சென்றன. ஐ. நா.வின் பாதுகாப்புச் சபை யுத்தத்தை உடனே நிறுத்தும்படியாகக் கூறியதை அவர்கள் லட்சியம் செய்யவில்லை. ரஷ்யா மறைமுகமாகத் தலையிட்டுப் பிரிட்டனுக்கு இறுதி எச்சரிக்கை விடவே யுத்தம் நின்றது.

படையெடுத்து வந்த துருப்புக்கள் பின்வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், தகராறைச் சமாதான முறையில் தீர்ப்பதற்காகவும் 'சர்வதேசப் போலீஸ் படை' என்று ஒன்றை ஐ. நா. ஏற்படுத்தியது. இந்தப் படைக்கு இந்தியா தன் இராணுவ வீரர்களை அனுப்பியது.

காஸா பகுதியில், நமது படைகள் மற்றும் ஆறு தேசத்துப் படைகளுடன் சேர்ந்து சமாதானப் பணி ஆற்றி வருகிறது.


இங்கே சமாதான எல்லைக்கோடு என்பது, மூன்று அடி அகலமும் மூன்று அடி ஆழமும் உள்ள நீண்ட பள்ளமாகும். இராணுவம் காவல் காப்பதற்காக ஏற்பட்டுள்ள கட்டடம் மணல் மூட்டைகளாலானது. நாலு பக்கமும் மணல் மூட்டைகளை அடுக்கி, மேலே தார்ப்பாயோ அல்லது துத்தநாகத் தகடுகளோ போட்டிருப்பார்கள். பகலில் தாங்க முடியாத பாலைவன உஷ்ணம், இரவில் தாங்க முடியாத குளிர். மணலை வாரி அடிக்கும் பயங்கரமான காற்று. சாலைகளோ ஏதும் கிடையாது. பாலைவன மணலில் ஆங்காங்கே போரின் போது வைக்கப்பட்ட நிலக் கண்ணிகள் இப்போது திடீர் திடீரென்று வெடித்து உயிர்ப் பலி வாங்கின.

தண்ணீர் கிடைப்பது அரிது. போக்குவரத்து வசதிகள் அதிகமில்லை. இத்தனையும் போதாதென்று ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் அவ்வப்போது கொடுக்கும் தொல்லை வேறு. முன்பின் தெரியாத இடத்தில் இத்தனை கஷ்டங்களையும் அனுபவித்துக்



மேலே: காங்கோவில் சமாதானப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்திய ராணுவத்தினரின் முகாம்.

கீழே: எகிப்தில் ராபா என்ற இடத்தில் இந்திய ராணுவத்தினர் தம் பணிக்காகத் தங்கியுள்ளனர்.



எகிப்தில் - சமாதானப் பணி முகாமில் பிரேஸில் நாட்டு மேஜர் ஜெனரல் ஸார்மெண்டோவுடன் இந்திய மேஜர் வி. எம். ராமநாதன்

கொண்டு நமது வீரர்கள் இராப் பகலாகப் பணி புரிந்தார்கள். தங்கள் கடமையை நிறை வேற்றினார்கள்.

இந்தியத் துருப்புக்கள், நான்காவது முறை சென்றது லெபனான் தேசத்துக்கு. இங்கே, 1958ல் அரசாங்கத்துக்கும், கலகக்காரர்களுக்குமிடையே உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது.

கலகக்காரர்களைக் கிளப்பி விட்டது எகிப்து (ஐக்கிய அரபுக் குடியரசு)தான் என்று லெபனான் அரசு குற்றம் சாட்டியது. எகிப்தோ பாக்தாத் ஒப்பந்தத்துக்கு லெபனான் மக்களின் சம்மதமின்றி லெபனான் அரசாங்கம் ஆதரவு அளித்ததே அங்கு உள்நாட்டுக் கலவரம் ஏற்படக் காரணம் என்றது. தலைநகர் பீருட்டைச் சுற்றிலும் துவந்த யுத்தம் நிகழ்ந்தது. இந்நிலையில் சமாதானம் ஏற்படுத்த இதில் ஐ. நா. தலையிட்டது. தேசத்துக்கு வெளியிலிருந்து திருட்டுத்தனமாக ஆட்கள் வருகின்றனரா, யுத்த தளவாடங்கள் வருகின்றனவா என்று கண்காணித்துத் தடுக்க ஒரு கோஷ்டியை நியமிக்கத் தீர்மானித்தது. லெபனானில் அரசாங்கத் தரப்பிலும் சரி கலகக்காரர்கள் தரப்பிலும் சரி ஐ. நா.வின் இந்தத் திட்டத்துக்கு ஆதரவில்லை. பிறகு இந்தியாவும் இந்தப் பார்வையாளர் கோஷ்டியில் இடம் பெற வேண்டும் என்ற நிபந்தனையின் மீது ஐ. நா. தீர்மானத்தை ஒப்புக்கொண்டது. இந்திய ராணுவத்தினரின் கண்ணியமான, நியாயமான, பாரபட்சமற்ற போக்கைப் பற்றி, அயல்நாட்டினர் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரியவரும். நமது ராணுவத்தினர் ஐ. நா. தீர்மானம் ஒழுங்காகச் செயல்படும்படி பார்த்துக் கொண்டு, தகராறுகள் முற்ற விடாமல் உழைத்து வந்தனர். இந்தச் சமாதானப் பணிகளின் போதெல்லாம் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலும் தற்காப்புக்கு ஆயுதம் தாங்கியிருந்த போதும் அவற்றைப் பயன்படுத்தாமல் வற்புறுத்தியும் கண்டிப்புடன் நடந்தும் இணங்க வைப்பதிலேயே கருத்துக் கொண்டும் சிக்கலான நிலைமைகளைத் திறமையாகச் சமாளித்தனர் நமது ராணுவத்தினர்.

சைப்ரஸிலுள்ள ஐ. நா. படையிலும் நமது துருப்புக்கள் பணி புரிகின்றனர். லாவோஸில் பிரதமர் நேருவின் விருப்பத்துக்கிணங்க இந்திய ராணுவத்தினரின் மருத்துவப் பிரிவினர் நோய் தீர்க்கும் புனிதப் பணியில் ஈடுபட்டனர்.

காங்கோ 1960ம் வருஷம் சுதந்திரம்பெற்றது. விடுதலை பெற்ற ஒரு வாரத்துக்கெல்லாம் காங்கோலிய சைனியம் கலகம் செய்தது. அந்தத் தேசம் ஏற்கனவே பெல்ஜியத்தின் வசமிருந்தது. கலகம் நிகழ்வது கண்டு காங்கோவிலிருந்த பெல்ஜியர்களின் பாதுகாப்புக்காக பெல்ஜிய அரசாங்கம் விமானங்களில் துருப்புக்களைக் கொணர்ந்து இறக்கியது. தேசத்தில் ஒரே குழப்பமேற்பட்டது. அங்கே நிர்வாகமே சீர்குலைந்துவிடும் போல் இருந்தது. காங்கோவில் உள்ள கடாங்கா என்ற மாகாணத்தில் வைரங்கள், இரும்பு, யுரேனியம் முதலிய தாதுப் பொருள்கள் ஏராளமாக உள்ளன. காங்கோ சுதந்திரம் பெற்ற பதினோராம் நாள் கடாங்கா தனியே பிரிந்து போவதாகக் கூற அதனால் புதிய பிரச்னைகளும் பூசல்களும் உள்நாட்டு யுத்தங்களும் உருவாயின.

சுதந்திரம் பெற்ற பதினைந்து நாட்களுக்குள் காங்கோ ஐ. நா. சபையின் உதவியை நாடவேண்டி வந்தது. தேசத்தில் அமைதியை நிலைநாட்ட அந்த சபை ஐ. நா. படையினர் சுமார் 20,000 பேரை அனுப்பி வைக்க வேண்டியதாயிற்று.

இந்தப் படையினரில் ஒரு பகுதி நமது ராணுவத்தினர், 6000 பேர். இந்தியா சில விமானங்களையும் கொடுத்து உதவியது.

எனினும் மற்ற பல சமாதானப் பணிகளைக் காட்டிலும் காங்கோவில்தான் நமது துருப்பினருக்குக் கடுமையான சோதனைகள் ஏற்பட்டன. நம் வீரர்களில் அங்கு உயிரிழந்தவர்களும் கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளானோரும் அநேகர். ஆனாலும் அமைதியை நிலைநாட்டி, நாட்டில் ஒற்றுமையை வளர்க்கவும், அந்நியரின் வஞ்சகத் தலையீடுகளை ஒழிக்கவும் பொருளாதார முன்னேற்றங்களுக்கு உதவவுமே தாங்கள் அங்கு சென்றிருப்பதை நமது ராணுவத்தினர் கணப் பொழுதும் மறக்கவில்லை. மிகவும் அத்தியாவசியமான சூழ்நிலைகளில் மட்டுமே ஆயுதம் பிரயோகம் செய்தனர். தற்காப்புக்காகக்கூடத் தங்களிடமுள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் பல சந்தர்ப்பங்களில் அசாதாரண வீரம் காட்டினார்கள். எதிரியைத் தாக்க வீரம் வேண்டுமென்றால் தன்னைக் கொல்லவரும் எதிரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யாதிருக்க அதைவிட அதிகத் துணிச்சல் வேண்டுமல்லவா? நமது ராணுவ என்ஜினியர்களுக்குக் காங்கோவில் நிறைய வேலைகள் இருந்தன. எதிரிகளால் தகர்க்கப்பட்ட பாலங்களுக்குப் பதில் ஏதோ மந்திர ஜாலம் போல் தாற்காலிகப் பாலங்களை அமைத்தார்கள்.

காங்கோ சென்று திரும்பிய பிரிகேடியர் ராஜாவை நமது ஜனாதிபதி பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார். அந்தக் கௌரவமும் பெருமையும் உலகின் பல பாகங்களில் சமாதானப் பணி புரிந்த நமது ராணுவத்தினர் அனைவருக்குமே சேர்ந்ததுதான்.



புது டயரா? அல்லது புதுப்பித்த டயரா?

வேற்றுமை காண்பது கடினம்

உங்களுடைய கார் டயர்களை ரீடிரெட் செய்து, எவ்வளவு காலம் உபயோகிக்கலாமோ, அவ்வளவு காலம் உபயோகிக்கவே விரும்புவீர்கள். செலவு மிச்சம் ஒரு புறம்; தோற்றத்திலும் கவர்ச்சியாக இருக்கும் டிவிஎஸ் ரீடிரெட். ஏனென்றால், பயிற்சி பெற்ற நிபுணர்கள் டிவிஎஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றுகிறார்கள் அவர்கள் உழைப்பு, உங்கள் சேவைக்கு.


டிவிஎஸ் — ரீடிரெடிங் செய்வதில்
இந்தியாவிலேயே மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் TVS

(டிவிஎஸ் ஸ்தாபனம்) பங்களூர். கோயமுத்தூர். சென்னை புதுக்கோட்டை
செகந்திராபாத் திருநெல்வேலி

'ஐ.என்.ஏ. வீரர்களின் அற்புத சாதனை







[கோலாலம்பூர் சென்று "ஜெய மணி" என்ற புகழ் பெற்ற தினசரியின் ஆசிரியராக இருந்து, மக்களின் மதிப்பில் உயர்ந்தவர் ஸ்ரீ சுப்பிரமணியம். சுபாஷ் சந்திர போஸுடன் நெருங்கிப் பழகி இந்திய விடுதலை விஷயத்தில் முக்கியப் பொறுப்பேற்றுப் பணி புரிந்தவர். இந்திய தேசிய ராணுவத்தினைப் பற்றிச் சுவைபட எழுதுகிறார்.]


புல்வெட்டிக் கொண்டும், ரப்பர் மரங்களிலிருந்து பால் வெட்டிக் கொண்டும், ஓய்ந்த நேரங்களில் வெற்றிலை, பாக்கு, புகையிலை போட்டுக் கொண்டும் அப்பாவிகளாக இருந்த தமிழ்த் தொழிலாளர்கள், துயில் கொண்டிருந்த சிங்கம் பிடரி மயிரைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்திருப்பது போல் வீறு கொண்டு எழுந்தனர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஒளி வீசும் முகமும், தேசபக்தி ததும்பும் பிரசங்கங்களும் அவர்களைத் தட்டி எழுப்பி, புது மனிதர்களாக்கி விட்டன. அரிவாளைப் பிடித்திருந்த அவர்களுடைய கைகள் யந்திரத் துப்பாக்கிகளைப் பிடிக்கத் தொடங்கின. அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த தாய் நாட்டை விடுவிப்பதற்காகப் போர்முனைக்குச் செல்ல அவர்கள் துடித்தனர். சோர்ந்திருந்த அவர்களுடைய உள்ளமும், நலிந்திருந்த அவர்களுடைய உடலும் புதிய சக்தி பெற்று விளங்கின.

பிரிட்டிஷாரின் பக்தர்களாக இருந்து, பிரிட்டிஷாருக்காகப் போர் புரிந்து ஜப்பானியர்களால் கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் இந்திய ராணுவ வீரர்கள் கூட, நேதாஜி போஸின் அரிய சொற்பொழிவுகளைக்



ஜெயமணி சுப்ரமணியம்










இடது பக்கம்: சிங்கப்பூரில் திரளான ராணுவ மக்கள் கூட்டத்தில் ஆஸாத் ஹிந்த் சர்க்காரை நிறுவி இந்திய விடுதலைக்குப் போராடுவதாக நேதாஜி அறிவித்த சரித்திரப் பிரசித்திபெற்ற சம்பவம்.

ரங்கூனில் ஐ.என்.ஏ. படையினருக்கு நேதாஜி வீர உரையாற்றுகிறார்.

இந்தப் பக்கத்தில்: நேதாஜி ஜப்பானிய அந்நிய உறவு மந்திரியுடன் கை குலுக்கி மகிழ்கிறார்.

ராணி ஜான்சி ரெஜிமெண்டைச் சேர்ந்த வீராங்கனைகள்.

நேதாஜியின் வீர வணக்கம்.





கேட்டு மனம் மாறி இந்திய தேசிய ராணுவத்தில் (ஐ. என். ஏ.) சேர்ந்ததுடன், ஜான்ஸி ராணிப் படையினர் உள்பட எல்லாருக்கும் ராணுவப் பயிற்சி அளிக்கவும் முன்வந்தனர். அவர்களுடைய ஆர்வமும், முயற்சியும் வீணாகிவிடவில்லை என்பது போர்முனையில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து வெளியாயின.

ஃ ஃ ஃ

போர்முனையில் ஐ. என். ஏ. வீரர்கள் புரிந்த சாகசச் செயல்களுக்கு எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

பர்மாப் போர்முனையில் மௌங்டாகா–புதிடாங் பகுதியில் கோரமாக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் ஐ. என். ஏ. வீரர்களுடன் ஜப்பானியப் படைப் பிரிவு ஒன்றும் சேர்ந்து கொண்டது. அங்கிருந்த பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உதவியாக மேலும் தகுந்த ஆயுத வகைகளுடன் ஏராளமான துருப்புகள் வந்து கொண்டிருப்பதை ஜப்பானிய ஒற்றர் மூலம் அறிந்த ஜப்பானியத் தளபதி, அந்நிலையில் பின்வாங்கிச் செல்லுவதே புத்திசாலித்தனமாகும் என்று ஐ. என் ஏ. தளபதி மேஜர் ரதுசாரியிடம் கூறினார். மேஜர் ரதுசாரி அவ்விஷயமாகத் தமது ராணுவ அதிகாரிகளைக் கலந்தாலோசித்தார். ஆனால் அதிகாரிகள் அதற்கு இணங்கவில்லை. எனினும் ஜப்பானியத் தளபதி தமது படைகளுடன் பின்வாங்கி விட்டார். தங்கள் படைகளைக் காட்டிலும் மூன்று, நான்கு மடங்கு அதிகப் படைகளுடனும், அதிகப் போர்த் தளவாடங்களுடனும் வரும் பிரிட்டிஷ் பகைவர்களை எதிர்த்து நிற்பது தற்கொலைக்கு ஒப்பாகும் என்று ஜப்பானியத் தளபதி கருதியதில் தவறு இல்லை.

''ஜப்பானியர்கள் பின்வாங்கலாம்.... டோக்கியோ அவர்கள் பின்வாங்கிச் செல்லும் திசையில்தான் இருக்கிறது. ஆனால் நாம் பின் வாங்க முடியாது. நமது லட்சியம் டில்லிக்குச் செல்வதுதான். டில்லி முன் பக்கத்தில் இருக்கிறது. ஆகையால் முன்னேறிச் செல்லுவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை.''

இவ்வாறு ஐ. என். ஏ. அதிகாரிகள் 'கண்மூடித்தனமாக'க் கூறியதைக் கேட்டு ஜப்பானியத் தளபதிக்கு ஒருபுறம் நகைப்பு உண்டாயிற்று; மற்றொருபுறம் ஆத்திரம் பொங்கியது. யுத்த தந்திரத்தைக் கையாளாமல் எல்லோரும் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகப் பகைவர்களின் டாங்கிகளுக்கும் பீரங்கிகளுக்கும் பலியாகப் போகிறார்கள் என்பதே அவரது நகைப்புக்குக் காரணம்; தளபதியான தமது கட்டளைக்கு அவர்கள் செவிசாய்க்க மறுத்து விட்டார்கள் என்பதே அவரது ஆத்திரத்துக்குக் காரணமாகும்.

அந்தப் பகுதியில் மூங்கில் தோப்புகள் அதிகம். மறைந்து கொள்வதற்கு அவற்றைக் காட்டிலும் சிறந்த இடம் கிடைப்பதரிது. எனவே, நமது வீரர்கள் சிறு சிறு கோஷ்டியாகப் பிரிந்து அவற்றில் மறைந்துகொண்டனர்.

சில மணி நேரத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் துருப்புகளும் சாரி சாரியாக வரத்தொடங்கின. ஏற்கனவே ஜப்பானியப் படைகள் பின்வாங்கிச் சென்றதை பிரிட்டிஷ் விமானம் வேவு பார்த்துச் சென்றதால், ஜப்பானிய சிப்பாய்களும் ஐ. என். ஏ. வீரர்களும் பின்வாங்கிச் சென்று விட்டார்கள் என்றே பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் நினைத்தனர். எனவே அவர்கள் வசதியான ஒரு இடத்தில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு இரவை அமைதியாகக் கழிக்க முற்பட்டார்கள். தாங்கள் அதிக பலத்துடனும் தளவாடங்களுடனும் வந்திருப்பதால், தங்களுடைய பகைவர்கள் வெகுதூரத்துக்கு அப்பால் பின்வாங்கிச் சென்றிருக்க வேண்டும் என்றும் அவர்கள் நிச்சயமாக எண்ணினர். எனவே, அவர்கள் நடுநிசி வரையில் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்துவிட்டு, அதன் பின் அயர்ந்து உறங்கினர். ஐ. என். ஏ. வீரர்கள் பொறுமையாகக் காத்திருந்தனர்.

இரவு மணி இரண்டு இருக்கும். ஐ. என். ஏ. வீரர்கள் பிரிட்டிஷாரின் கூடாரங்களைச் சூழ்ந்து கொண்டு திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டார்கள். சிறிதும் எதிர்பாராத அந்தத் தாக்குதலில் ஏராளமான பிரிட்டிஷ் சிப்பாய்கள் உயிரிழந்தனர். எஞ்சியிருந்தவர்களுக்கு நள்ளிருளில் தட்டுத் தடுமாறிக் கொண்டு ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறாக, நமது வீரர்களுக்கு மிகவும் தேவையாக இருந்த தளவாடங்களும், நெய், பிஸ்கட், ஜாம், ஆட்டா மாவு, சர்க்கரை டின்களும் ஏராளமாகக் கிடைத்தன.

அந்த வெற்றியின் காரணமாக மற்றொரு மகத்தான பலனும் கிடைத்தது. இருநூறு ஆண்டுகளாக அன்னியரின் ஆதிக்கத்துக்கு இலக்காகி வந்துள்ள இந்தியர்களின் ரத்தத்தில் பிரிட்டிஷாரிடம் பக்தி ஊறிப்போயிருக்குமென்றும், எனவே அவர்கள் சிறந்த தேசிய வீரர்களாகவோ, கலப்பற்ற தேச பக்தர்களாகவோ இருக்க முடியாது என்றும் ஜப்பானியர்களின் மனத்தில் ஓர் எண்ணம் வேரூன்றியிருந்தது. அதை அவர்கள் சிற்சில சமயங்களில் பகிரங்கமாகக் கூறவும் தயங்கியதில்லை! ஆனால், ஐ. என். ஏ. வீரர்களின் மேற்கண்ட வெற்றி, ஜப்பானியர்களின் அந்த எண்ணத்தை நிரந்தரமாகத் தகர்த்து விட்டது.


தங்களால் எதிர்த்து நிற்க இயலாது என்று ஜப்பானியர் பின் வாங்கிய இடத்தில் ஐ. என். ஏ. வீரர்கள் தங்களைக் காட்டிலும் அதிகமான ஆள் பலமும், தளவாட பலமும் வாய்ந்த பகைவர்களை எதிர்த்து வெற்றி பெற்றதைக் கண்டு ஜப்பானியர் பேராச்சரியம் அடைந்தனர்.

ஐ. என். ஏ. அதிகாரிகளின் தலைமையில் ஜப்பானியச் சிப்பாய்கள் போர் புரிவது, தங்களுடைய மதிப்புக் குறைவு என்று அவர்கள் எண்ணி வந்தனர். ஐ. என். ஏ. பிரிவுகளுக்கு இந்திய அதிகாரிகளே தலைமை வகிப்பதற்கு ஜப்பானியர் வேண்டா வெறுப்புடன் இசைந்தனர்.

ஆனால் மேலே குறிப்பிட்ட சம்பவம் அவர்களுடைய கண்களைத் திறந்தது. போர்முனையில் ஐ. என். ஏ. வீரர்களின் சாதனைகளை நேரில் பார்த்த ஜப்பானியர், வீர தீர

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

கார் சவாரியில்
ஒரு புது அனுபவம்



கீழ்க்கண்ட போற்றத்தக்க வசதிகளுடன் கூடியது

- 25 அடி வட்டத்திற்குள் திருப்ப முடியும்
- ஒவ்வொரு சக்கரத்திற்கும் தனித்தனி சஸ்பென்ஷன் (Suspension) இணைப்பு இருக்கிறது (சுலபமாக அபாயமின்றி திருப்பலாம். ரஸ்தாவில் நல்ல பிடிப்பு உண்டு. முன் சக்கரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சி முன் சக்கரத்தின் ஸ்ப்ரிங்கிலேயே தாங்கிக்கொள்ளப்படுவதால், வண்டியின் பின்புறம் அதிர்ச்சியோ, ஆட்டமோ அடையாது.)
- எ:கு கர்டரினாலான சாஸிஸ் (Chassis) (மிக உறுதியான கார் அமைப்பு)
- 93% வெளிப்பார்வை வசதி.

STANDARD herald

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

உறுதியான, *எழில் மிகுந்த* கார்

தயாரிப்பாளர்கள் :

ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
சென்னை . 2

STANDARD

விநியோகஸ்தர்கள் :

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை — உதகை
யுனிகார் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்

பராக்கிரமச் செயல்களிலும், தேச பக்தியி லும் இந்திய வீரர்கள் தங்களுக்கு எவ்விதத்தி லும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நன்கு உணர்ந்து கொண்டனர்.

பர்மாப் போர்முனையில் இருந்த ஜப்பானிய தளபதி ஒரு நாள் நேதாஜியின் முகாமுக்கு நேரில் வந்து, கண்களில் நீர் ததும்ப, தலை வணங்கி, "மேன்மை தங்கிய தலைவர் அவர் களே, எங்களுடைய தவற்றை மன்னிக்க வேண்டும். ஐ. என். ஏ. சிப்பாய்களைப் பற்றி நாங்கள் சரிவர அறிந்து கொள்ளத் தவறி விட்டோம். அவர்கள் வயிற்றுப் பிழைப்புக் காக ராணுவத்தில் சேர்ந்தவர்கள் என்று நாங்கள் நினைத்தது தவறு. அவர்கள் உண்மை யான தேசபக்தர்கள், தேசபக்த வீரர்கள்" என்று மனம் நெகிழ்ந்து கூறினார்.

ஃ ஃ ஃ

காப்டன் பக்ரியின் தலைமையில் சுமார் நூற்றைம்பது ஐ. என். ஏ. சிப்பாய்கள் ஒரு கிராமத்தில் முகாம் போட்டிருந்தனர். அது ஓர் ஒதுக்குப்புறமான இடமாதலின் அங்கே பிரிட்டிஷ் துருப்புகள் வருவதற்குக் காரணமே யில்லை. ஆனால் ஒரு பர்மியத் துரோகி அவர்கள் முகாம் போட்டிருக்கும் செய்தி யைப் பிரிட்டிஷாருக்கு அறிவித்து விட்டான். எனவே எதிர்பாராத விதமாகப் பிரிட்டிஷ் படைகள் பல டாங்கிகளுடனும், கவச மோட்டார்களுடனும் வந்து அந்தக் கிராமத் தைச் சூழ்ந்து கொண்டனர். பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி மூன்று யோசனைகள் கூறிக் காப்டன் பக்ரிக்குச் செய்தி அனுப்பினார்.

"1. நீங்கள் எங்கள் பக்கத்தில் சேர்ந்து கொண்டு விட்டால், உங்களை நாங்கள் மன்னிப்பதுடன், உங்கள் எல்லோருக்கும் எல்லா வசதிகளும் அளிக்கிறோம். 2. சரண் அடைந்தால் நீங்கள் எல்லோரும் உயிர் தப்பலாம். 3. எதிர்த்துப் போரிட்டால் உங்களில் ஒருவர்கூடப் பாக்கியின்றி எங்கள் டாங்கிகளுக்குப் பலியாக வேண்டியதுதான்."

இந்தச் செய்தியைக் கேட்டதும் காப்டன் பக்ரி தமது சிப்பாய்களை ஒன்று கூட்டி, நிலைமையை விளக்கிக் கூறினார். பிறகு, "என்னைப் பொறுத்த வரையில் யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லை. நான் இறுதி வரை போரிடப் போகிறேன்....." என்றார்.

இவ்விதம் காப்டன் பக்ரி கூறியதற்கு நூற்றைம்பது சிப்பாய்களும் அளித்த ஒரே பதில் 'ஜேய் ஹிந்த்' என்ற கோஷம்தான்! பிரிட்டிஷ் டாங்கிகளும் கவச மோட்டார் களும் மலை போல் உருண்டு வந்தன. ஐ. என். ஏ. வீரர்களின் பக்கத்தில் டாங்கி களோ, கவச மோட்டார்களோ, விமானங் களோ எதுவுமில்லை. இருந்தாலும் அதற்காக நமது வீரர்கள் மனம் கலங்கவில்லை. கை வெடிகுண்டுகளாலும், பீரங்கிகளாலும் ஒன் றிரண்டு டாங்கிகளைத் தகர்த்து விட்டு, போரிட்ட வண்ணம் எல்லோரும் பலியாகி வீர சொர்க்கம் அடைந்தனர்.

'சுதந்திரப் போரில் வெற்றி அல்லது மரணம்' என்று நேதாஜி விடுத்த கட்டளை யைப் பெரும்பாலோர் அப்படியே எழுத் துக்கு எழுத்து நிறைவேற்றி விட்டார்கள்!

"நமது சிப்பாய்கள் எப்படி இருக் கிறார்கள்?" என்று நேதாஜி போஸ் ஒரு சமயம் ஐ. என். ஏ. தளபதியைக் கேட்ட போது, "அவர்கள் தங்கள் கடமைகளை அப்பழுக்கின்றி நிறைவேற்றி வருகிறார்கள். ஆனால் அவர்களைப் பின்வாங்கும்படி செய் வதுதான் கடினமாக இருக்கிறது" என்று பதிலளித்தார் தளபதி.

போரின் இறுதிக் கட்டத்தில் ஐ. என். ஏ. வீரர்கள் மிக மிகக் கஷ்டமான நிலைமை யைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அப் போது ஜெர்மன் யுத்தம் முடிந்து விட்டது. ஜப்பானும் தோல்வியடைவதற்கான அறி குறிகள் தோன்றலாயின. எனவே, ஐ. என். ஏ. வீரர்களை அறவே ஒழித்துவிட வேண்டும் என்பதற்காக நூற்றுக்கணக்கான அமெரிக்க விமானங்கள் இம்பாலை அடுத்துள்ள பிரதேசங் களில் வெடிகுண்டுமாரி பொழியத் தொடங் கின. மழைக்காலமும் நெருங்கிக் கொண்டிருந் தது. உலகிலேயே மிகவும் பயங்கரமான மழை பெய்யும் இடம் அஸ்ஸாம்தான் என்பது எல் லோரும் அறிந்ததே. அந்த மழையில் மலைப் பிரதேசத்தில் அகப்பட்டுக் கொண்டவர்கள் உயிர் தப்புவது முடியாத காரியம்.

அச்சந்தர்ப்பத்தில், மிகவும் தந்திரசாலி களான பிரிட்டிஷார் விமானங்களில் சென்று ஐ. என். ஏ. வீரர்கள் இருக்குமிடத்தில் ஏராளமான துண்டுப் பிரசுரங்களை வீச லாயினர். துண்டுப் பிரசுரத்தில் அடங்கி யிருந்த விவரம் இதுதான் :

"ஐ. என். ஏ. சிப்பாய்களே! உங்களிடம் போர்த் தளவாடங்கள் இல்லை, நோயுற்றவர் களுக்கு மருந்து இல்லை, நல்ல உணவுக்கு வழியில்லை. எங்கள் பக்கம் வந்து விடுங்கள். உங்களுக்கு நாங்கள் சிறந்த உணவும், உடை களும், மருந்துகளும், தாராளமான சம்பள மும், வெகுமதிகளும் கொடுக்கிறோம்."

இந்தத் துண்டுப் பிரசுரத்துக்கு ஐ.என்.ஏ. வீரர்கள் அளித்த ஏகோபித்த பதில் என்ன தெரியுமா ? "பிரிட்டிஷாரின் அடிமைகளாக இருந்து கொண்டு சுகபோக வாழ்க்கை நடத்து வதைக் காட்டிலும், காடுகளில் புற்களை உட்கொண்டு சுதந்திரர்களாக வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம்" என்பதுதான்.

அத்தகைய வீரர்களுக்குச் சிங்கப்பூர் கடற்கரையில் கம்பீரமாக எழுப்பப்பட் டிருந்த நினைவுச் சின்னத்தை மலேயாவை மீண்டும் 1945ல் ஆக்கிரமித்துக் கொண்ட பிரிட்டிஷ் ராணுவ சர்க்கார் தகர்த்து விட்டது. என்றாலும் 1946ம் ஆண்டில் இந்த நாட்டுக்கு விஜயம் செய்த பண்டித ஜவாஹர்லால், ஐ. என். ஏ. வீரர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்த அந்த இடத்துக்குச் சென்று பூ வளையங்கள் சூட்டி, தலை வணங்கி மரியாதை செய்தார். அப் போது லார்டு மவுண்ட் பாட்டனும் நேருஜி யுடன் சென்று போர்முனையில் உயிர்த் தியாகம் செய்த ஐ. என். ஏ.வீரர்களுக்கு மரியாதை செய்தார். இம்பாலில் நடந்த போரில் ஐ. என். ஏ. வீரர்கள் புரிந்த அற் புதச் செயல்களை லார்டு மவுண்ட்பாட்டன் நேரில் கண்டு அநுபவித்தவர் அல்லவா!

முற்போக்குள்ள காரியாலயங்களில்
கீரா ஆபீஸ் ஃபர்னிச்சர்களையே உபயோகிக்கிறார்கள்


Khira



எக்ஸிக்யூடிவ் டெஸ்க்
இது, வேலைகவர்ச்சியான லாமினேடட் டீக் அல்லது ஸார்டுபோர்டு பதிக்கப்பட்டு கிடைக்கிறது. இதற்கு பால்-பேரிங்குகள் அமைந்த மூன்று டிராயர்களும் இரு பக்கங்களிலும் வெளியே இழுக்கக்கூடிய ட்ரேயும் உள்ளன. இதற்கு ஒத்த மாதிரியில், சாய்க்கக்கூடிய சுழலும் நாற்காலியும் கிடைக்கிறது.

'ஆபீஸுக்கு வசீகரத் தோற்றமும், ஊழியர்களுக்கு ஊக்கமும் அளிக்க கீரா ஃபர்னிச்சர்களையே உபயோகியுங்கள். வேலையை விருவாகத் தெம்புடன் செய்வதற்கேற்றபடி நவீன மாதிரிகளில் கிடைக்கும் கீரா ஆபீஸ் ஃபர்னிச்சர்கள் பல வருஷ கடும் உழைப்புக்குப் பின்னும் புத்தம்புதிதாகவே காட்சியளிப்பன.





ஜூனியர் எக்ஸிக்யூடிவ்களுக்கும், அலிக டெஸ்க்குகளுக்கும் ஏற்ற கவர்ச்சியான கீரா டெஸ்க்குகளும் கிடைக்கும். இவற்றிற்கும் ஏற்ற மாதிரியில் நாற்காலிகள் உண்டு.

கே-பிளான்
ஃபர்னிச்சர்

கீரா ஸ்டீல் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
ஸ்வாமி விவேகானந்தா ரோடு,
சாந்தா க்ரூஸ், பம்பாய்-54

அங்கீகாரம்பெற்ற டீலர்களும், ஸ்டாக்கிஸ்டுகளும்:

சென்னை: வில்லியம் ஜாக்ஸ் & கம்பெனி லிமிடெட்
மஹமது இப்ராஹிம் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்
ஆம்சன் & கம்பெனி
இந்தியா ரேடியோ ஹவுஸ்
கோட்டயம்: பீமா ஸ்டேஷனரி ஸ்டோர்ஸ் & ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்
பாண்டிச்சேரி: இந்தியா ரேடியோ ஹவுஸ்
கள்ளிக்கோட்டை: K. M. பார்த்தசாரதி & சன்ஸ்
விஜயவாடா, ராஜமந்திரி: ஸ்ரீ ராமா கார்ப்பொரேஷன்

எர்ணாகுளம்: 'சரோஜம்'
திருச்சூர்: C. P. வேலப்பன் & சன்ஸ்
கோயமுத்தூர், ஈரோடு, சேலம்: ராயல் டிரேடிங் கம்பெனி
ஆலப்புழை: வாசன் & கம்பெனி
கும்பகோணம், மதுரை, திருச்சிராப்பள்ளி: ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ்
விசாகப்பட்டினம்: லெவிஸ் ஏஜென்ஸீஸ்
திருநெல்வேலி, நாகர்கோவில்: AR. A. சண்முக நாடார், P. V. P. பால சுப்பிரமணிய நாடார் & கம்பெனி

மற்றும் பெங்களூர், மங்களூர், மைசூர் & கொல்லம்

போர் நிகழாத போது....

நாட்டைக் காப்பது ராணுவத்தின் முதற் கடமை. சில தருணங்களில் சட்டத்தையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்ட உதவுவது மட்டுமின்றி இயற்கை உற்பாதங்களால் மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தீர்க்கவும் முப்படைகளும் உதவுகின்றன.

இவ்வருஷ மத்தியில் நமக்கு வடகிழக்கே உள்ள மக்கள் வெள்ளத்தால் பெருமளவு அவதியுற்றபோது ராணுவம் அவர்களுக்கு உதவியது. நாலாபுறமும் வெள்ளக்காடு சூழ்ந்திருக்க மையத்தில் அகப்பட்டுக்கொண்டோரை ராணுவப் படகுகள் மீட்டு வந்தன. உணவும் உடையும் விநியோகித்து உதவியது ராணுவம்.

ஏறக்குறைய இதே சமயத்தில் கோவா துறைமுகத்திலிருந்து சற்றுத் தூரத்தில் லைபீரிய நாட்டுக் கப்பலொன்று கடலில் மூழ்கிக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியில் சென்றுகொண்டிருந்த நமது கப்பற் படையைச் சேர்ந்த சிறு கலம் தரிணி உடனே அவ்விடத்துக்கு விரைந்து போய் நண்பகல் முதல் இரவு கவியும் வரை விறுவிடப் பொழுதும் விலக்காது லைபீரிய நாட்டுக் கப்பல் மாலுமிகள், அதிகாரிகள் அனைவரையும் காப்பாற்றிப் புகழ் பெற்றது.

பஞ்சாபில் கான்ஜெறலி என்று ஒரு கிராமம். சுற்றுப்புறங்களை விட ஓரளவு தாழ்வான மட்டத்தில் அமைந்திருந்தது. வருஷா வருஷம் மழை காலத்தில் நீரெல்லாம் இந்தக் கிராமப் பகுதியிலேயே வடிந்து ஒரே வெள்ளக்காடாகிவிட, மக்கள் சொல்லி முடியாத துன்பத்தை அனுபவித்தனர். வடிகாலை அகழ்ந்து ஆழமாக்குவதுடன் கிராமத்தை அடுத்துப் பாதுகாப்பாக இருந்த மண் மேட்டை உறுதிப்படுத்தவும் முன் வந்தவர்கள் அறுநூறு என். ஸி. ஸி. படையினர்.

தனுஷ்கோடியில் சமீபத்தில் இயற்கையின் சீற்றத்தை அனுபவித்த மக்கள் அப்போது உதவிக்கு ஓடோடியும் வந்த முப்படையினரையும் எந்நாளும் மறக்க மாட்டார்கள். வானிலிருந்து உணவு, உடைப் பொட்டலங்களைப் போட்டும், மருத்துவ உதவி அளித்தும் நீரின் மத்தியில் ஆங்காங்கே இருந்த மண் திட்டுக்களில் அகப்பட்டுக் கொண்டவர்களைக் காப்பாற்றியும் பெரும் பணியாற்றினார்கள். மிகப் பெரிய சப்ளை விமானங்களும் ஹெலிகாப்டர்களும் விபத்தில் சிக்கிய மக்களுக்குச் செய்த உதவியை மறக்க இயலாது. கப்பல் படையினரின் கலங்கள் உடனடியாக மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க ஏற்பாடுகளை மேற்கொண்டன. கப்பல்களில் இருந்த 'லைஃப் போட்டு'கள் மக்களைப் பத்திரமான இடங்களில் கரை சேர்க்கப் பயன்பட்டன.

பாக்ராநங்கல் திட்டத்தில் அணைக்கட்டின் அடிவாரத்தில் இருநூற்றி முப்பது அடி ஆழம் நீரில் மூழ்கிச் சென்று ஒரு வேலையைச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. கடற்படை கைகொடுத்து உதவியது. ஆறு மாலுமிகள் நீரில் மூழ்கி இக் காரியத்தைத் திறம்பட முடித்துக் கொடுத்தார்கள்.


வீட்டுக்கு மேலே கூரைக்குக் கான்கிரீட் கலவை போடப்படுவதைப் பார்த்திருக்கிறோம். பாக்ரா திட்டத்திலோ நீருக்கு அடியில் நாற்பது அடி ஆழத்தில், அடிவாரத்தில் நூற்றுக்கணக்கான கன அடி அளவுள்ள கான்கிரீட் கலவை போடப்பட வேண்டியிருந்தது. இந்தக் கடினமான காரியத்தையும் மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்து வைத்தவர்கள் நமது கடற்படை மாலுமிகளே.

1957ல், ஸிலோனில் பெருத்த வெள்ளப் பெருக்கெடுத்துச் சேதமேற்பட்ட போது நமது விமானப் படையினரும், ராணுவத்தினரும், ஐந்தாறு விமானங்களிலும், ஹெலிகாப்டர்களிலும் விரைந்து சென்று உதவினர்.

இந்திய ராணுவ இஞ்ஜினீயர் படையினர், நேபாளத்தில் மலைப் பிராந்தியத்தில் 72 மைல் நீளமுள்ள முதல்தரமான நெடுஞ்சாலையை அமைத்துக் கொடுத்தனர். அந்தத் தேசத்தில் முதன் முதலாகப் பொதுத் தேர்தல் நடைபெற்ற போது, இந்திய ராணுவ ஸிக்னல் படையினர், கம்பியில்லாத் தந்தி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

அம்பாலாவில் உள்ள ஒரு ராணுவப் பகுதியின் ஜவான்களும் அதிகாரிகளுமாகச் சேர்ந்து தாங்களாகவே தாங்கள் வசிப்பதற்காக 1450 வீடுகளைக் கட்டி முடித்தனர்.

இப்படிப் போர் நிகழாத போதும் நமது ராணுவம் செய்து வரும் பணிகள் அநேகம்.



இருந்த இடம் தெரியாமல் அழிந்த இராமேசுவரம் போர்டு ஹைஸ்கூல். இதுபோன்ற தருணங்களில் ராணுவத்தினர் அளிக்கும் உதவி மகத்தானது.



பின்னியின் D318

பள்ளிக்கு அணிந்து செல்லவே தயாரானது

பின்னியின் D318 நீடித்து உழைக்கும் துணி. பள்ளிக்கூடச் சீருடைகளுக்கு மிகவும் ஏற்றது. கவர்ச்சியான வண்ணங்களில், பல்வேறு பள்ளிகளின் தேவைக்கு ஏற்பக் கிடைக்கிறது. இதை உங்கள் குழந்தைகள் விரும்பி அணிவார்கள்; இதன் உழைப்பு உங்களுக்குத் திருப்தியளிக்கும்.


BINNY'S FABRICS

BINNY & CO. LIMITED, MADRAS

உங்களுக்குத் தேவையான பின்னி துணியின் இந்த அடையாளம் காணும் அனுமதிபெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்டபோல் விலக்கு வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்.

பின்னி & கம்பெனி லிமிடெட், மதுராஸ்: ஸ்தாபனத்தின் ஒரு கிளை



கி.ராஜேந்திரன்

நாட்டின் தலைவன் ரொம்பவும் திறமைசாலியாக இருந்தால் மக்கள் அசிரத்தை மிக்கவர்களாகவும் சிந்திக்கும் திறனையே இழந்தவர்களாகவும் ஆகிவிடுவார்கள். எல்லாவற்றையும் தலைவன் கவனித்துக் கொள்வான், நமக்கென்ன வந்தது என்கிற ஒரு மதமதப்பு நிலையை அடைந்துவிடுவார்கள். ஆகவே தலைவன் பேரறிஞனாகவும் செயல்திறன் மிகுந்தவனாகவும் இல்லாமலிருப்பதே நல்லது. அப்போது தான் மக்கள் விழிப்புடன் இருப்பார்கள். — இவ்விதம் ஒரு சிந்தனையாளர் கூறியுள்ளதை மிருணாளினிக்கு எடுத்துக் காட்டினான் தங்கப்பன் ஒரு நாள்.

''இதனை ஒரு பொன்மொழி என்ற முறையில் படித்துப் போற்றலாம். இது போன்ற பல பொன்மொழிகளைத் தொகுத்துப் புத்தகம் போடலாம். ஆனால் நடைமுறைக்கு இதெல்லாம் ஒத்து வராது. இன்றைய நமது நாட்டின் நிலவரத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே உணவுப் பஞ்சத்தை விடக் கொடுமையான நேர்மைப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஒழுக்கக் குறைவானவன் நன்றாக வாழலாம்; சத்தியத்தில் நம்பிக்கை வைப்பவன் சிரமப்படலாம், தாழ்வுறலாம். ஏன் உங்கள் வாழ்க்கையே இதற்கு எடுத்துக் காட்டு. இன்று மூலைக்கு மூலை இண்டு இடுக்குகளிலெல்லாம் பரவியிருக்கிற பயங்கர வியாதிகளை - லஞ்ச ஊழல், பதவி மோகம் போன்றவற்றை - ஒழித்துக் கட்ட சர்வ வல்லமை பொருந்திய தலைமைதான் தேவைப்படுகிறது. அது சர்வாதிகாரமாக இருந்தாலும் நல்லது தான். அப்போது தான் இந்நாடு சீர்திருந்தும்.''- இப்படி மிருணாளினி பேசினான்.

அத்தியாயம் 7

போலீஸை அழைப்பதா?

''சட்டம் இருக்குதே'' என்றான் தங்கப்பன் சந்தேகத்துடன்.

''சட்டம் உங்களுக்கு எந்த விதத்தில் எந்த அளவுக்கு உதவியது?'' என்று திருப்பிக் கேட்டாள் அவள். 'சட்டம் ஒரு கழுதை' என்று எதற்காகச் சொன்னார்களோ தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சட்டம் கழுதையைப் போல் மிக மிக நிதானமாகத்தான் செயல்படும். 'சட்டம் ஒரு நத்தை' என்று கூடச் சொல்வேன் நான். சட்டரீதியாகச் சுற்றி வளைத்து ஒவ்வொரு குற்றமாகக் கண்டு பிடித்துச் சாட்சிகளை வரவழைத்து ருசுப்பித்து அரசியல் தலையீடுகளையும் சமாளித்துத் தீர்ப்பு வழங்கி இந்த நாட்டைச் சீர்திருத்துவதென்றால் அது இந்த யுகத்தில் நடக்கப் போகிற காரியமில்லை. இன்று பண விஷயத்திலும் பிற விஷயங்களிலும் பெரிய தவறுகளைச் செய்பவர்கள் கூடச் சட்டத்தின் கண்ணோட்டத்திலிருந்து நாம் தப்பிவிடலாம் என்றோ அல்லது சட்டத்தின் பார்வையில் பட்டாலும் செல்வாக்கைப் பயன்படுத்திச் சமாளித்துவிடலாம் என்றோ பயமின்றித் திரிகிறார்கள். அச்சத்தை இவர்களிடத்தில் ஊட்ட வேண்டும். அதற்கு அதிகார பலம் ஆள்பவனுக்கு இருக்க வேண்டும்.''

''அப்படி ஓர் அதிர்ச்சி வைத்தியம் பலனளிக்கலாம் தான். ஆனால் இன்று வியாதியிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிற மக்கள் நாளை வைத்தியரிடம் அடிமையாகி விடுவார்களே? வைத்தியர், டாக்டர் 'ஜெகை'லாக இல்லாமல் சர்வாதிகார போதை தலைக்கேறி மிஸ்டர் 'ஹைடா'கிவிட்டால்? கொடுங்கோன்மைக்கும், அடிமை வாழ்வுக்குமா, ஆளாகச் சொல்கிறீங்க மக்களை?''

''தலைவர் மிஸ்டர் 'ஹைடா'க மாற நாம் இடம் தரமாட்டோம்; நாளாவட்டத்தில் அப்படி மாறப் போகிறார் என்பதற்கான அறிகுறிகள் தோன்றினால் சட்டென்று அவரை நீக்கிவிட்டு மீண்டும் மக்களாட்சியையே ஸ்தாபித்து விடலாம்!''



தங்கப்பன் சிரித்தான். நடக்கிற காரியமா? என்பது போல. ''யாரை ஏய்க்கப் பார்க்கிறீங்க? அது சரி, இந்தச் சமரச சித்தாந்தத்தை நீங்க எதற்காகக் கற்றுக்கிட்டீங்க? காரியார்த்தமாகவா? இந்தத் தேசம் குட்டிச்சுவராகப் போவதற்கு முக்கிய காரணம் என்ன தெரியுமா? எல்லாத்துக்கும் இறுதிவரை போராடாமே இடைஇடையே சமரசத்துக்கு வருவதாலேதான். தேர்தலில் நின்ற என் சகா ராமபத்திரன் சமரசமாகப் போக நினைத்ததால்தான் தன்னையும் தாழ்த்திக்கிட்டு, என்னையும் தாழ்த்தி விட்டான். எதிலுமே நாம் உறுதியாக நிற்கிறதில்லே. நீங்களும்தான் தர்க்கத்திலே எனக்காக விட்டுக் கொடுத்துப் போகிறீங்க.''

''நீங்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது'' என்றாள் மிருணாளினி. ''நாம் ஒப்படைக்கும் எல்லா அதிகாரங்களையும் ஏற்கும் அந்தத் தலைவர் நிலைகளைக் கண்டு பொங்கி எழும் உறுதியான நெஞ்சம் உள்ளவராயும் மக்களின் சுதந்திரத்தை மதித்து அன்பு காட்டுகிறவராயும் இருக்குமாறு நாம் பார்த்துக் கொண்டு விட்டால்? ஆரம்பத்திலேயே இதில் கவனம் செலுத்துவோமானால் அப்புறம் கவலையில்லை யல்லவா? சுருக்கமாகச் சொல்கிறேனே, உங்களைப் போன்ற ஒருவரைப் பிடித்துப் போட்டு விட்டால் போயிற்று!''

"ஏது! அடுத்தாற்போல் என்னையே இந்த நாட்டின் சர்வாதிகாரியாக்கிவிடலாம் என்பீங்க போலிருக்கே?"

"ஏன்? சற்று முன்னால் நான் கூறிய அந்தத் தகுதிகள் இல்லையா உங்களுக்கு?"

"சரிதான், இந்த நாட்டின் தலைமையை உருவாக்குவதோ அல்லது அந்தத் தலைமை உருக்குலையுமாறு செய்வதோ உங்களுடைய உள்ளங் கையிலேயா அடங்கிக் கிடக்கிறது?"

"நம்மிடம் அந்தச் சக்தி இல்லை என்பது தான் என்ன நிச்சயம்?" என்று கேட்டாள் மிருணாளினி. "உலக சரித்திரத்தில் மக்களைத் தூண்டிவிடும் பல புரட்சித் திட்டங்களும் ஆட்சியைக் கவிழ்க்க முயலும் பல சதித் திட்டங்களும் ஏதோ ஒரு மூலையில் வாழ்ந்த யாரோ ஒருத்தருடைய மூளையில்தான் சிறு கருத்தாக முளைவிட்டுத் தோன்றியிருக்கின்றன. அந்தச் சிறு கருத்துத்தான் பின்னால் வளர்ந்து வளர்ந்து தன்னை வளர்த்தவர்களையே ஆட்கொண்டு ஆட்டிப் படைத்து அற்புதங்களைச் சாதித்திருக்கிறது. அதன் பிறகுதான் அவர்களும் புகழடைந்திருக்கிறார்கள். யார் கண்டது? புத்தர் ஞானோதயம் பெற்ற போதி மரமும் ஷேக்ஸ்பியர் பிறந்த குடிசையும் இவை போன்ற இன்னும் பலவும் பிரசித்தி பெற்றிருப்பது போல் சுதந்திர பாரத நாட்டில் ஒரு புதிய சமுதாயப் புரட்சியை உருவாக்கிய மாமேதை தங்கப்பன் ஆரம்ப நாட்களில் சிந்தனையில் ஆழ்ந்திருந்த இடம் இதுதான் என்று இந்தச் சிறிய அறை உலகப் பிரசித்தி பெறலாம் வருங்காலத்தில்!" இப்படிக் கூறியபடி அந்த அறையைச் சுற்றுமுற்றும் நோக்கி விட்டுத் தங்கப்பனை ஏறிட்டுப் பார்த்தாள்.

தங்கப்பன் புன்னகையுடன், "மக்களிடையே பிரசாரம் செய்து கம்யூனிஸத்தைப் பரப்பலாம் என்ற நம்பிக்கை தளர்ந்து போக இப்போ ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டங்கள் பற்றி யோசிக்க ஆரம்பிச்சுட்டீங்களா?" என்றான்.

"கம்யூனிஸம் ஊடுருவ ஒரு வழிதானா உண்டு?" என்றாள் மிருணாளினி. "நேரடியான பிரசாரத்தில் ஈடுபட்டுத் தேர்தல்களில் நின்று வெற்றி பெற முயலலாம். சமூக சேவை செய்வதுபோல் கம்யூனிஸ சித்தாந்தத்தைப் பரப்பலாம். கம்யூனிஸம் என்ற வார்த்தையைக் கேட்டாலே காத தூரம் ஓடுகிறவர்கள்கூட அவர்களுடைய சுக துக்கங்களில் பங்கு கொள்வது போல் நாம் ஆதரவாகப் பேசும்போது வழிக்கு வருவார்கள். அவர்களுடைய துன்பத்துக்கு மருந்து இதோ என்றால் ரொம்ப ரொம்பப் பெரிய விஷயத்தைச் சுலபத்தில் புரிந்துகொண்டு விட்டது போல் பலமாகத் தலையாட்டுவார்கள். கல்வி அறிவு அதிகமில்லாதவர்களிடம் இம்முறை அதிகமாகப் பயன் தரும். அறிவாளிகளிடமோ நண்பர்களாக உறவாடுவது போலப் பேசி மனமாற்றத்தை உண்டாக்கலாம்."

"அதாவது என்னை நீங்கள் வளைத்துப் போட முயலுவது போல! அது கிடக்கட்டும். ஒன்றை நீங்க மறந்து விட்டீங்களே?"

"என்ன அது?"



"கம்யூனிஸ ஆட்சி நடைபெறும் அண்டை நாடொன்றின் ஊடுருவல்!"

மிருணாளினி சற்று யோசித்தாள். "ஊடுருவல் வேறு, படையெடுப்பு வேறு. வியட்நாமில் நடப்பது போல் சாதாரண மக்களைப் போலவே அண்டை நாட்டவர் ஊடுருவி வந்து மக்களுக்கு ஆசை காட்டியும் பயமுறுத்தியும் பலவாறாக அவர்களை வழிக்குக் கொணரலாம். வெடிகுண்டுகளை வைத்து முக்கியமான நிறுவனங்களை அழிப்பதுபோன்ற ஐந்தாம் படை வேலைகளில் இறங்கலாம். மக்களோடு மக்களாக இவர்கள் வித்தியாசமின்றி, ஒன்றி இருப்பதால் இவர்கள்மீது' நடவடிக்கை எடுப்பதே அரசாங்கத்துக்குக் கஷ்டம். அப்படியே நடவடிக்கை எடுத்தாலும் அந்தச் சர்க்கார் தன் மக்களையே துன்புறுத்துவதாகக் கூக்குரல் எழுப்பலாம்."

"அது சரி, நான் படையெடுப்பைத்தான் குறிப்பிட்டேன். அதுவும் நம் நாட்டை மனத்தில் வைத்துக் கொண்டே பேசினேன்."

"உண்மையில் சீனாவுக்கு நம் தேசத்தின் மீது படையெடுத்து வந்து இதனை முழுமையாகச் சீன ஆதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள் மிருணாளினி. "டில்லி, பம்பாய், சென்னை, கல்கத்தா என்று பல நகரங்களில் குண்டு மழை பொழிய வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்? அல்லது புதுதில்லி ராஷ்டிரபதி மாளிகையில் சீனப் பிரதிநிதி ஒருவர் வந்திருந்துகொண்டு நாடாள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? இல்லை! இன்றைய உலக அரசியல் உள்ள சூழ்நிலையில் இவையெல்லாம் நடக்க முடியாதவை, அப்படி நடப்பதென்றால் அடுத்து உலகமே அழிய வேண்டியது தான் என்று உணர இயலாத அளவுக்கு அசடர்கள் இல்லை அவர்கள்."

"பிறகு அவர்கள் நோக்கம் என்னவென்கிறீர்கள்?"

"யுத்தத்தில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது போர்முனை மட்டுமல்ல; நாட்டின் பொருளாதாரம் பலமாக இருந்தாலே யுத்தத்தில் எதிரியை வெல்ல முடியும். எல்லையில் சீனர்கள் அடிக்கடி தொல்லை தருவார்கள். அதன் விளைவாக மக்களின் முயற்சிகளெல்லாம் ராணுவ முஸ்தீபுகளில் செலவாக நேரிடும். ஆக்க வேலைகள் தடைப்படும். அந்நியக்

கடன்கள் பெருகி உள்நாட்டில் பணவீக்கமும் பொருளாதாரச் சீர்குலைவும் உண்டாகும். வரிக் கொடுமையும் விலைவாசி உயர்வும் வறுமையும் மிகுதியாகி மக்கள் அவதிப்பட நேரிடும். அந்த நிலையில் மக்களை நம் பக்கமாகத் திருப்புவது மிகச் சுலபம். அப்புறம் ஆட்சியைத் தக்க தருணத்தில் கைப்பற்றவும் நாம் தயாராக இருப்போம். செஞ்சீனவின் இறுதி நோக்கமும் இங்கு கம்யூனிஸ ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்பதேதான். பெருவாரியான படையெடுப்பு இன்றியே அந்த லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள அது முயலுகிறது. இந்தச் சூழ்ச்சியை முறியடிக்கத் தீர்க்கதரிசனத்துடன் நடவடிக்கை எடுக்க இங்கு ஆளில்லாதவரையில் நமக்குக் கொண்டாட்டம்தான்!''

அவளுடைய உற்சாகத்தைக் கண்டு ஏற்பட்ட திகைப்பிலிருந்து மீளத் தங்கப்பனுக்குச் சற்று நேரமாயிற்று. முழுமையாக அதிலிருந்து விடுபடாத முன்னமேயே அவன் வியப்பால் விரிந்த கண்களுடன் மிருணாளினியை நோக்கியபடி, ''சற்று நிதானியுங்கள்!'' என்றான். ''நாம் நாமென்று என்னையும் சேர்த்துப் பேசுகிறீர்களே? உங்களைப் போலீஸில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு இப்போது தோன்றுவதாகச் சொன்னால் என்ன செய்வீர்கள்?''

ஏதோ ஒரு மந்திர சக்தியால் அவனைக் கட்டுப்படுத்துவதுபோல் மிருணாளினியின் அகன்ற வசீகர விழிகள் அவனை உன்னிப்பாய் நோக்கின. மெல்ல அவள் உதடுகளை அசைத்தாள். நிதானமாகப் பேசினாள். ''தாமரைத் தொழிலகத்தின் பெயரால் இங்கேயும்தான் ஒரு டெலிபோனை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே? கண்ணெதிரே தானே இருக்கிறது? போலீஸாரை அழைக்க வேண்டிய நம்பர் தெரியுமில்லையா உங்களுக்கு?..... ஏன் தயங்குகிறீர்கள்?'' என்ற மிருணாளினி சற்றுப் பொறுத்தும், அவன் செயலற்று இருப்பதைப் பார்த்து ஆர்வத்துடன் அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். ''எப்படியும் என்னைக் காட்டிக் கொடுக்க உங்களுக்கு மனம் வராதென்று எனக்குத் தெரியும்!''

''என்னதானிருந்தாலும் நீங்க ஒரு பெண்!'' என்றான் தங்கப்பன்.

சரேலென்று எழுந்து நின்றாள் அவள். ''நான் ஒரு பெண் என்பதற்காக நீங்கள் எனக்கு லவலேசமும் கருணை காட்ட வேண்டாம்'' என்று விறைப்பாக நின்று கூறியவள் அடுத்தாற்போல் மீண்டும் புன்னகையுடன் அவனை நோக்கிக் குனிந்து குழைந்தாள். ''போலீஸுக்கு நீங்கள் ஃபோன் செய்யாததற்கு வேறு ஏதேனும் காரணமிருக்குமோ என்று ஆசையோடு நினைத்தேன்'' என்றாள்.

''என்ன காரணம் அது?''

''அது நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?'' என்று கேட்டாள் மிருணாளினி, நாணம் தொனிக்கும் குரலில்.

தங்கப்பன் நெஞ்சம் படபடக்க மெல்ல எழுந்து நின்றான். அவள் வலது கரத்தைத்

பத்திரிகை செய்த உதவி

1944 நவம்பர் 22ந்தேதி. பர்மிய அரக்கான் மலைப் பகுதிகளுக்கிடையில் ஒரு செங்குத்தான சரிவில் ஏற முயன்று கொண்டிருந்தது இந்தியப் பட்டாளம் ஒன்று. மேலே இருந்து ஜப்பானிய மிஷின்கன் நிறுவனம் இவர்கள் மீது குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தது. இந்திய வீரர்களின் முன்னேற்றம் இதனால் தடைப்பட்டது. சிப்பாய் பண்டாரிராம் சரமாரியான அந்தக் குண்டு மழையினைப் பொருட்படுத்தாமல் முன்னேறினான். அவன் முகத்திலும், நெஞ்சிலும், காலிலும் குண்டுகள் பாய்ந்து வேதனை கொடுத்தன. அவற்றைப் பொருட்படுத்தாமல் பண்டாரிராம் தொடர்ந்து மேலே ஏறிப்போய்த் தன்னந்தனியாக அந்த மிஷின்கன் நிறுவனத்தையே அழித்தான். அதன் பின் அந்தப் பட்டாளம் தங்கு தடையின்றி முன்னேற முடிந்தது.

சிப்பாய் பண்டாரிராம் இதற்காக மிக உயர்ந்த வீரப்பதக்கமான விக்டோரியா கிராஸைப் பெற்றான். அவனைப் போலவே இன்னும் பலப்பல பாரத வீரர்கள் உயிரைத் திருணமாக மதித்து அசகாய சூரத்தனங்களைச் செய்திருக்கிறார்கள் உலக யுத்தத்தின் போது. விக்டோரியா கிராஸ் பதக்கத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன் விக்டோரியா கிராஸ் பதக்கம் பெற்றுள்ள அனைவரும் லண்டனில் ஒன்றாகக் கூடி அணிவகுத்துச் செல்வதென்று தீர்மானித்து அந்த விசேஷ நிகழ்ச்சியில் பங்கு பெற அழைப்புக்கள் அனுப்பினார்கள்.

நமது பாரதப் பாதுகாப்பு மந்திரி சபையில் யாருக்கோ இது அநாவசிய அந்நியச் செலாவணி என்று தோன்றி விட்டது. சுதந்திர பாரதத்தில் இருக்கும் நாம் பிரிட்டிஷாரின் விக்டோரியா கிராஸுக்கு ஏன் அத்தனை மதிப்புத் தர வேண்டும் என்று நினைத்தாரோ என்னமோ? ஃபைலைக் கட்டிக் 'கிடப்பி'லே போட்டு வைத்து விட்டார்.


பாதுகாப்பு மந்திரிசபையை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள முடியாத ராணுவத்தில் பலருக்கு இது தர்மசங்கடமான நிலையாகிவிட்டது. அவர்களில் சிலர் ஒரு தந்திரம் செய்தார்கள். மெல்லப் பேச்சோடு பேச்சாக இந்தத் தகவலை ஒரு பத்திரிகை நிருபரிடம் சொல்லி வைத்தார்கள். அந்தப் பிரபல பத்திரிகையை மறுநாள் காலை பிரித்த பிரதமர் நேருவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பாதுகாப்பு மந்திரி சபைக்கு உடனே ஒரு குறிப்பு அனுப்பி வைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த அழைப்பை ஏற்பது நமக்கு நிரம்பக் கௌரவமாகும் என்று.

அடுத்த சில நாட்களுக்குள் நமது விக்டோரியா கிராஸ் வீரர்கள் லண்டன் நகர வீதிகளில் 'ஜாம் ஜாம்' என்று ஏறுநடை போட்டார்கள்.

தன் உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு, ''நீங்க சொல்லாமலே எனக்குத் தெரிவது போலத் தான் தோன்றுகிறது, மிருணாளினி. ஆனால் வாய் விட்டுச் சொல்லத்தான் தயக்கமாக இருக்கிறது'' என்றான்.

''இதிலென்ன தயக்கம்? உங்கள் மனம் கம்யூனிஸக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு விட்டது என்று கூற இவ்வளவு தூரம் யோசிப்பானேன்?'' என்றாள் மிருணாளினி. தங்கப்பன் அதிர்ச்சியும் ஏமாற்றமும் உற்றவனாகக் கட்டிலில் சரிந்தான். ஒரு விநாடிகளுக்கு முன்னால் அவன் நினைத்தது என்ன? இவள் கூறுவது என்ன?

வெளியே நின்று இந்தச் சம்பாஷணைகளை முழுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த செல்லம் அங்கிருந்து நழுவிச் சென்றாள். (தொடரும்)



எழடா எழு: முனைந்தெழுடு:
எதிர்ப்போர் தலை மடியடா!
இடராகிய வருமே புயல்
கிளர்ந்தே பகை முடிடா!

பெறவே மிக வரிதாகிய
பெரும் பேறிது சமயம்
மறவேல்: உயிரினுமே மிக
மதிப்பாய் நிலம் அமையும்!

நமையீன்றவள் உயிர் மானமும்
நமதே பெறு மலவோ?
'சுமையீன்றவள்!' எனவே பிறர்
கடுசொல் நமைச் சொலவே

அணுவாம் படைத்திரள் மோதினும்
அயரோம் என நடடா!
கணுவாம் வெறுங் கரும்பைத் தினும்
களிறே எனப் படடா!

கொலைப்பேட்டனும் பல சாப்பரும்
குறியாய் வரட் டுமடா:
நிலைப்பேயலை பெறுமோ? பிடி
நிருமூலமிங் கமைடா!

'எதிராயெவர் எழுகேனினும்
இதுதான் கதி! எனடா!'
உதிராயவர் பொடியாகிட
உடனே கணம் முனைடா!

வெறியானவம் உலைக் குறிலெவன்?
விரைந்தே புறப் படடா!
நெறி ராணுவப் படை வீரனும்
நீயல்லவோ? அடடா!

திறமாகவே வரலாறு முன்
திறல் போற்றிடும்: கொளடா!
அறமாகவே உனதாண்மையும்
அழியாதுறும்: எழடா!

— தமிழழகன்

போர் ஆயுதங்கள்



போருக்குத் தேவையான கருவிகள், தளவாடங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம்.

போர் ஆயுதங்களின் அடிப்படையான அம்சம், தீயின் உஷ்ண சக்தியைப் பயன்படுத்திக் குண்டு களை வெளியேறச் செய்வதும், அவை வெடிக்கச் செய்வதுமாகும். மனிதன், விஞ்ஞான அறிவையும், வசதிகளையும் உபயோகித்து விதம் விதமான பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும் கண்டுபிடித்தான். சாதாரணமாகச் சின்ன விஷயமாக ஆரம்பிப்பதுதான் பெரிதாக வளர்க்கப்படுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் போர்க் கருவிகளில் மட்டும் இதற்கு நேர்மாறாகப் பெரிய பீரங்கிகள் முதலிலும் அப்புறம் அதிலிருந்து படிப்படியாகக் கையிலேந்திச் செல்லும் துப்பாக்கிகளும் உருவாயின. அப்படியும், அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இந்தப் பீரங்கித் துப்பாக்கிகளால் சில நிமிஷ நேரங்களில் சில நூற்றுக்கணக்கான போர்களையே கொல்ல முடியும். இன்று அவன், சில நிமிஷங்களில் சில லட்சக்கணக்கான போர்களை மடியச் செய்யும் அணுகுண்டுகளைக் கண்டுபிடித்திருக்கிறான். இவற்றை உபயோகிக்கப் போர்முனைக்குச் செல்ல வேண்டிய தொந்தரவுகூட இல்லை. இருந்த இடத்திலிருந்து ஒரு மின்சாரப் பொத்தானை அமுக்கினால் போதும். இப்படியாக மனித குலத்தை அழிக்கும் விதம் ஓர் உன்னதமான, பரிபூரணமடைந்துள்ள கலையாகப் போய் விட்டிருக்கிறது.


ஃ ஃ ஃ

தரைப் படை வீரர்கள் பெரிதும் உபயோகிக்கும் ஆயுதம் ரைபிள் (Rifle) என்ற துப்பாக்கி. இதை ஒரு ஜவான் எளிதில் தூக்கிச் சென்று, சிரமமின்றிச் சுடலாம். குண்டு வெளியாகும் குழாயின் குறுக்களவு .003 அங்குலமாகும். இதை மில்லிமீட்டர் கணக்கிலும் சொல்வதுண்டு. இதிலிருந்து வெளியாகும் குண்டுகள் சுமார் 500 கஜ தூரம் வரை நன்றாகச் செல்லும். ஒவ்வொரு குண்டாகப் பத்து குண்டுகள்வரை சேர்த்துப் போடலாம். ஒரு குத்துவாளைப் (Bayonet) பொருத்திக் கொள்ள இதில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. பண்டைய வாளின் வாரிசு இது. நேருக்கு நேர் கைகலந்து சண்டை செய்யும்போது இதை உபயோகிப்பார்கள். மற்றும், எதிரிகளின் வேவுகாரர்கள், காவற்காரர்கள் முதலியவர்களைச் சப்தப்படாமல் தீர்த்துக் கட்ட உபயோகிக்கிறார்கள்.

ரைபிள்தான் ஜவானின் அடிப்படையான ஆயுதமாகும். கார்பைன் என்ற வகைத் துப்பாக்கியின் குழல் சிறியது. இது பல திசைகளிலும் திருப்பிச் சுடுவதற்கு வாகானது. இதை ஸ்டென் கன், டாமி கன் என்றெல்லாம் சொல்வதுண்டு. குண்டுகள் வெளிப்படும் போது சத்தம் ஏற்படாமலிருக்கச் செய்ய முடியும். காவல் காப்பதற்கும், புதர்களிலும், இரவு வேளைகளிலும் சண்டை போடவும் உபயோகமானது.

ஒரு வீரர், துப்பாக்கியை உபயோகிக்காமல், தமது கையினாலேயே உபயோகிக்கும் ஆயுதம் கிரனேட் என்ற வெடிகுண்டு. ஒன்றரைப் பவுண்டு கனமுள்ள இதைச் சுமார் 25 கஜதூரம் வரை போகும்படி வீசி எறியலாம். எஃகினால் அமைக்கப்பட்ட இதற்குள் வெடிமருந்து நிரப்பப்பட்டிருக்கும். இது தான் போய் விழுமிடத்தில் வெடிக்கும்போது

பீரங்கிகள் போன்ற போர் ஆயுதங்களை நம் ராணுவ வீரர்கள் கையாளும் திறமை பாகிஸ் தான் போரில் நன்கு நிரூபணமாகியது.






போர்முனைக்குப் போவதற்கு முன்னால் ஒவ்வொரு டாங்கியும் எலெக்ட்ரோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவினரால் சரியாக இயங்குகின்றதா என்று பரீட்சிக்கப்படுகிறது.

மேல் பாகம் சிதறுண்டு பறக்கும். எதிரியை நேருக்கு நேர் சந்தித்தால் துப்பாக்கியால் சுடலாம். ஆனால் சுவர்கள் பாறை மேடுகள் இவை பின்னே ஒளிந்து கொண்டிருக்கும் எதிரிகள் மீது கைக்குண்டுகளை எறிவார்கள். சமீபத்திய போரில் நமது வீரர்கள் பாட்டன் டாங்கிகளுக்கருகே தீரத்துடன் பாய்ந்து சென்று அவற்றினுள்ளே கைக்குண்டுகளை வீசி அவற்றை செய விழந்து நிற்கச் செய்து கைப்பற்றியிருக்கிறார்கள். கைக்குண்டுகளில் புகை மட்டும் கிளம்பச் செய்யும் புகைக் குண்டுகளும் உண்டு. எதிரி விமானங்களும், எதிரிகளும் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பார்க்க விடாமல் மறைக்கவேண்டிவரும்போது இதை உபயோகிப்பர்.

* * *

மோர்ட்டார் என்ற சிறு பீரங்கியை உபயோகிக்க இரண்டு வீரர்கள் தேவை. இதை ஒரு மறைவான இடத்துக்குப் பின்னும், தரையில் உள்ள ஒரு குழியிலோ, துவாரத்திலோ வைத்துக் குண்டுகள் போடலாம். குண்டுகள் எதிரேயுள்ள குன்றுகள், மரங்கள் மேலாகச் சென்று அப்பால் போய் விழும். இது குறி பார்த்துத் தாக்கும் ஆயுதமல்ல. மறைவில் அப்பாலுள்ள எதிரியைக் காபரா அடையச் செய்வதே முக்கிய நோக்கமாகும்.

இராணுவப்படையில் எலெக்ட்ரோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவு செய்யும் தொண்டு மகத்தானது. அவர்கள் தளவாடங்களைச் செப்பனிட்டு இயங்கும்படி செய்கிறார்கள்.



பெரிய துப்பாக்கிகள், பீரங்கிகள் இவற்றிலிருந்து குண்டுகளைப் போடும்போது உஷ்ண வாயு பின்பக்கமாக வந்து தாக்கும். அப்போது அதிர்ச்சி ஏற்படும். ஆனால், இந்த அதிர்ச்சியேற்படாமல், ஆனால் அதேசமயத்தில் சிறிய பீரங்கிகளைப் போல் ஓரளவு பெரிய குண்டுகளை வெடிக்கக்கூடிய துப்பாக்கிகளுக்கு 'ரிகாயில்லெஸ் கன்' என்று பெயர். மிகுந்த சக்தி வாய்ந்த இந்தச் சிறு பீரங்கிகள் இயக்கப்படும்போதுபின் பாய்ச்சலும் அதிர்ச்சியும் உண்டாகாதாகையால் இந்த ரிகாயில்-லெஸ் கன்களை ஜீப்களில் ஏற்றிச் சென்று அந்த வாகனத்திலிருந்தபடியே சுடலாம். தரையில் பொருத்தி வைக்கப்பட வேண்டியதில்லை. எளிதாக நினைத்த இடத்துக்கு எடுத்துப் போய் நினைத்த திக்கில் சுடலாம். இதை உபயோகிக்க இரண்டே வீரர்கள் போதும். நேபாவில் சீனர்கள் இந்த ரகப் போர்க் கருவியை உபயோகப்படுத்தினார்கள். அப்போது நமது ஜவான்களிடம் இது ஒன்றுகூட இல்லை. ஆனால் சமீபத்திய பாகிஸ்தான் ஆக்ரமிப்பின் போது பாட்டன் டாங்கிகளைத் தகர்க்க நம் ஜவான்களுக்கு இவை பெரிதும் பயன்பட்டன.

பஸூக்கா என்ற ஆயுதம் டாங்கிகளைத் தாக்குவதற்கென்றே ஏற்பட்டது. இது ஓர் ஐந்தடி நீளமுள்ள குழாய். அதன் இரண்டு பக்கங்களின் வாயும் திறந்திருக்கும். ஒரு வீரர் இதற்குள் குண்டைப் போட்டுக் கொடுக்க, மற்றொருவர் அதை ஒரு தோளின் மீது நீட்டி வைத்துக் கொண்டு சுடுவார். குழாயின் இரண்டு பக்கங்களும் திறந்திருப்பதால் வெடிக்கும்போது ஏற்படும் அதிர்ச்சி தோளைப் பாதிக்காது. சுமார் இருநூறு கஜ தூரத்தில் உள்ள டாங்கியின்மீது சுட்டால், குண்டு அதன் ஐந்து அங்குல கவசத்தையும் ஊடுருவிக் கொண்டு செல்லும். பஸூக்கா கோஷ்டியினரிடம் அகப்பட்டால் டாங்கிகளின் கதி அதோகதிதான்! டாங்கிகளின் துவாரங்கள் மூடப்பட்டிருக்குமாதலால், டாங்கிகளுக்குள் இருப்பவர்கள் வெளியில் மறைந்து நிற்பவர்களை எளிதில் கண்டு பிடிக்கவும் முடியாது. அமெரிக்க ரேடியோ ஹாஸ்ய நடிகரான பாப் பர்ன்ஸ் உபயோகிக்கும் ஒரு கொம்பு வாத்தியத்தின் பெயர் 'பஸூக்கா'. தோளில் ஏந்திச் செல்லப்படும் இப்போர்க் கருவியும் பார்வைக்கு அதைப்போலவே இருப்பதால் இதற்கும் அப் பெயரே தரப்பட்டது.

இயந்திரப் பீரங்கிகளில் இலேசானது, கனமானது, நடுத்தரமானது என்று மூன்று வகை உண்டு. இலேசானதை இரண்டு பேர்கள் சேர்ந்து உபயோகிப்பார்கள். ஒருவர் அரும்பு தொடுத்தது போன்ற குண்டுகளைப் பீரங்கியி னுள் செலுத்திக் கொண்டிருக்க மற்றவர் சுடுவார். குண்டுகள் வெளியேறும் முன்பக்கம் 'டிரைப்பாட்' என்ற தாங்கியின்மீது பதிந் திருக்கும். இயந்திரப் பீரங்கிகள் உபயோகத் துக்கு வருவதற்கு முன்னால் ஒரு வீரர் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களையே கொல்ல முடிந்தது. பிரௌனிங், மாக்ஸிம் என்ற இருவர் இயந்திரப் பீரங்கியை நன்றாக அமைத்த பிறகு ஒரு மனிதனே நூற்றுக் கணக்கான பேரைக் கொல்லும் வசதி ஏற் பட்டது. பிரிட்டிஷ் — ஜூலு வகுப்பினர் போரில், ஐம்பது பிரிட்டிஷ் வீரர்கள் நான்கு இயந்திரப் பீரங்கிகளை மட்டுமே வைத்துக் கொண்டு 4000 ஜூலுக்களை இறக்கச் செய்தனர். இந்தப் பீரங்கிகளிலிருந்து நிமிஷமொன்றுக்கு ஐந்நூறு குண்டுகளுக்கு மேல் புறப்படும்.

ஃ ஃ ஃ

டாங்கிகளை டாங்கிகளைக் கொண்டே அழிக்க முயல்வார்கள். பீரங்கிப் படையில் டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகள் உண்டு. இவற் றைக் கவசந் தரித்த வண்டிகளில் ஏற்றி வந்து டாங்கிகளின் கவசத்துக்குள் ஊடுருவிச் செல்லக் கூடிய குண்டுகளை வெடிப்பார்கள். விமானங்களிலிருந்து ராக்கெட்டு குண்டுகளை வீசுவார்கள். டாங்கிகளிலிருந்து வெளியே பார்ப்பதற்காகச் சிறு பிளவுகளும், பெரிஸ் கோப், டெலிஸ்கோப் முதலியவும் பொருத் தப்பட்டிருக்கும். இவற்றுக்கான துவா ரங்கள் வழியாகவும் கைக்குண்டுகள் வீசித் தாக்கலாம்.

டாங்கி ஒரு மைல் தூரம் செல்ல மூன்று காலன் பெட்ரோல் தேவைப்படும்.

டாங்கிகளுக்குள் இருப்பவர்கள் நல்ல பலசாலிகளா யிருப்பார்கள். ஆனாலும் ஒரு சிறியஇடத்தில் அடைபட்டுக் கிடப்பதனாலும், வெளியே எதையும் பார்க்க முடியாததனா லும் ஏற்படக்கூடிய மனச் சோர்வுக்குள்ளாகி யிருப்பார்கள். சமீபத்திய யுத்தத்தில் பாகிஸ் தான் டாங்கிப் படையினர் மன நிலை இத்தகையதாக இருந்திருக்கலாம். இல்லா மலா அப்படி மகத்தான தோல்வி பெற் றார்கள்? அத்துடன் மிக நவீன எலெக்டிரா னிக் சாதனங்களுடன் கூடிய பாட்டன் டாங்கி களைச் சரியானபடி இயக்கவே அவர்கள் கற்க வில்லை என்றும் கண்டோம்.

ஃ ஃ ஃ

தரைப்படையினர் முன்னேறிச் செல்ல வும், அவர்களுக்குப் பாதுகாப்புகள் அளிக்க வும் டாங்கிப் படையினர் உதவி செய் கின்றனர். இவர்கள் இரண்டு பேருக்கும் உதவி செய்வது 'ஆர்ட்டிலரி' எனப்படும் பீரங்கிப் படை.

பீரங்கிகளிலிருந்து 1000 பவுண்டுக்கு மேற்பட்ட குண்டுகளை 14,000 அடி தூரம் வரையில் போய் விழும்படி சுட முடியும். 'ஹௌவிட்ஸர்' என்பதும் ஒரு வகை பீரங்கி. இதன் குண்டுவீச்சு அதிகக் கடுமை யானது. பீரங்கிகளை ஒரு குறிப்பிட்ட இடத் தில் வைத்துத்தான் சுட முடியும்; அதற்காக வசதியான இடத்தையும் தேடிக் கொண் டிருக்க வேண்டும். 'ஹௌவிட்ஸர்'களைக் கட்டடங்களுக்குப் பின்னாலோ, தோப்புகளுக் குப் பின்னாலோ மற்றும் மறைவான இடங் களில் வைத்துக் கொண்டு குண்டுகளைப் போட லாம். குண்டுகள் மேலெழுந்து உயரே சென்று அப்புறம் தொலைதூரம் பறந்து போய் விழுவதால் இப்படி மறைவான இடங்களில் இவற்றை வைத்து உபயோகிப்பது சாத்திய மாகிறது.

விமான எதிர்ப்புப் பீரங்கிகள் எதிரியின் விமானங்கள் கீழே வரவிடாமல் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கும். இந்தப் பீரங்கிப் படைதான், தரைப் படையையும், சாதாரண பீரங்கிப் படையையும், டாங்கிப் படையை யும் எதிரியின் விமானங்கள் தாக்கவிடாமல் பாதுகாப்பளிக்கிறது.

ஃ ஃ ஃ

தரைப் படை, டாங்கிப் படை, பீரங்கிப் படை ஆகிய மூன்றுக்கும் பாதுகாப்பளித்து, அவை போர்முனையில் முன்னேறவும் உதவி செய்வது விமானப் படையாகும். போர் விமானங்களுள், போரிடும் விமானம், குண்டு போடும் விமானம் என்று இரண்டு வகை உண்டு.

போரிடும் விமானம் எதிரியின் போரிடும் விமானத்தோடு சண்டை போடும். இது மிகவும் வேகமாகச் செல்லக் கூடியது; எந்தக் கோணத்திலும் விரைந்து திரும்பும். வெகு சீக்கிரத்தில் உயரே ஏறவும், கீழே இறங்கி வரவும் இதனால் முடியும். ஆகவே எளிதில் தப்பிச் செல்ல முடியும். ஆனால் விமானி சாமர்த்தியமாகச் செயல்பட வேண்டும். விமானப் போரில் ஈடுபட்டுள்ள இரண்டு விமானங்களுள் மேலாகப் பறந்து கொண் டிருப்பதற்குத்தான் தாக்கும் வசதி அதிகம்.

மணிக்குச் சுமார் நாலாயிரம் மைல் வேகத் தில் பறந்து செல்லக்கூடிய இப் போர் விமானங்களில் சாதாரணமாக இரண்டு பீரங்கிகளும், நான்கு இயந்திரப் பீரங்கிகளும் பொருத்தப்பட்டிருக்கும். குண்டு வீசும் விமானங்கள், எதிரிகளின் படைகள், தளங்கள், இராணுவத் தளவாட உற்பத்தி செய்யும் இடங்கள் முதலியவற்றின் மீது வீசும் குண்டுகள் ஒவ்வொன்றும் எடையில் 2000 பவுண்டு வரையில் இருக்கும். ஆனால் பாகிஸ்தான் அமெரிக்கப் போர் விமானங் களை உபயோகித்து ஸிவிலியன் மக்கள் மீது அல்லவா குண்டு பொழிந்தது? சண்டை போட, குண்டு வீச இரண்டுக்குமே உப

யோகிக்கக் கூடிய பிரத்தியேக விமானங்களும் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

ராணுவத்தின் எல்லாப் பகுதிகளும் சேர்ந்து அமைக்கப்படும் படைக்கு 'ஆர்மோர்ட் டிவிஷன்' அதாவது கவசந்தரித்த இராணுவப் பகுதி என்று பெயர். இதில் டாங்கிப் படை, பீரங்கிப் படை, விமான எதிர்ப்பு, டாங்கி எதிர்ப்புப் பீரங்கிப் படைகள், தரைப் படைகள் முதலியவை சேர்ந்திருக்கும். தரைப் படை உள்பட எல்லோரும் லாரிகளிலும், கவசம் தரித்த வண்டிகளிலும் செல்வார்கள்.

சாதாரணமாக இந்தப் பகுதியை எதிரியை வலுவிலே தாக்க உபயோகிப்பதில்லை. மற்றத் தாக்குதல்களில் எதிரியின் படைகள் சீர்குலைய ஆரம்பிக்கும்போது அவற்றை ஆர்மோர்டு டிவிஷன் அடியோடு அழிப்பதற்கு முற்படும்.

ஃ ஃ ஃ

அமெரிக்கா வியட்நாமில் போட்டு வந்த நாபாம் குண்டுகளைப் பாகிஸ்தானத்துக்கும் கொடுத்திருக்கிறது. அதை எதிரிகள் ஜம்முவில் கஞ்சவான் என்ற கிராமத்தில் போட்டார்கள். அந்தக் கிராமம் இப்போது இல்லை. பெட்ரோலில் ஸோப் போன்றதைக் கலந்து கெட்டியாக்கிக் குண்டுகளை நிரப்புகிறார்கள். ஒவ்வொரு குண்டிலும் சுமார் 680 காலன் இந்தப் பெட்ரோல் கலவை இருக்கும். இது விமானத்திலிருந்து போடப்பட்டதும் வெடித்து எரியும். தார் போன்றிருக்கும் பெட்ரோல் கலவை எரிந்து கொண்டே பல இடங்களிலும் சிதறும். அது எதன்மீது பட்டாலும் பலமாகப் பிடித்துக் கொண்டு எரியும். அதை எதாலும் அணைப்பதற்கில்லை. குண்டு வெடிக்குமிடத்திலிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ள மனிதன் எரிந்து சாம்பலாகிப் போய் விடுவான்.

இன்னும் எத்தனையோ சிறியனவும், பெரியனவுமான போர் ஆயுதங்கள் இருக்கின்றன. கடற்படையில் யுத்தக் கப்பல்கள், நாசகாரிகள், டார்பிடோக்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் முதலியவை இருக்கின்றன. இராணுவம் நடைமுறையில் இயங்கச் செய்வதற்கு உதவியான ஸிக்னல் படை இருக்கிறது. இன்னும் எஞ்சினீயரிங் படை, வைத்தியப் படை முதலியன இருக்கின்றன.

ஆனால், யுத்தம், இராணுவம் என்றதும் பொதுமக்கள் மனத்தில் விமானப் படையோ, டாங்கிப் படையோ, கடற்படையோ தோன்றுவதில்லை. போர்வீரன், சிப்பாய், ஜவான்தான் மனக் கண் முன் தோன்றுகிறான்.

மனிதன், மனிதன்தான், மனிதனேதான் அடிப்படையான, முக்கியமான போர் ஆயுதம்!

கார்த்திகைக்கு ஒரு கைங்கரியம்

இந்த இதழ் வெளியாகிச் சில தினங்களில் திருக் கார்த்திகைத் திருவிழா நிகழ்கிறது. கார்த்திகைத் தீபம் என்றவுடனேயே திருவண்ணாமலையின் நினைவும், திருவண்ணாமலை என்றவுடனேயே அங்கு ஞான ஜோதியாக எழுந்தருளியிருந்த பகவான் ரமணரிஷிகளின் நினைவும் எழும். இக்கார்த்திகையின் போது ஸ்ரீ ரமணமஹரிஷிகளின் கைங்கரியத்தில் ஈடுபடும் ஒரு வாய்ப்பினை நமது வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

பதினைந்தாண்டுகளுக்கு முன் ஸ்ரீ ரமண முனிவர் மகா சமாதி எய்திய திவ்விய பூமியில் ஆலயமும் பிரார்த்தனை மண்டபமும் எழுப்ப வேண்டுமென நீண்ட காலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும் மகா புருஷரின் நினைவுச் சின்னம் இன்னமும் பூர்த்தி பெறவில்லை. இப்போது மண்டப நிர்மாணத்தில் தீவிர ஊக்கம் எடுக்கப்பட்டுள்ளது. மஹரிஷிகளின் மகா பக்தையான ஸ்ரீமதி தாலியார்கான் அம்மையின் முக்கியமான பொறுப்பில் இத்திருப்பணி விடப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.



மகரிஷிகள் ஆரம்ப காலத்தில் தனித்துத் தவமிருந்த பாதாளலிங்க ஆலயத்தைத் தனியொருவராக முன் நின்று புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்துவதில் வெற்றி கண்டு வரும் தாலியார்கான் அம்மையிடமே மகரிஷிகளின் சமாதி மண்டப நிர்மாணப் பொறுப்பையும் தர்மகர்த்தர்கள் அளித்திருப்பது மிகவும் பொருத்தமானதே. ஸ்ரீ மொரார்ஜி தேசாய், மாண்டி மகாராணி, ஸ்ரீமான்கள் வி. எஸ். லோகநாதன், டி. எம். பி. மகாதேவன், டி. வி. சுப்பிரமணியம், கே. ஸ்ரீநிவாஸாச்சாரி, டி. என். வேங்கடராமன், முத்தையா செட்டியார், டி.என். கிருஷ்ணஸ்வாமி, கே. பத்மநாபன் ஆகியோர் அடங்கியுள்ள செல்வாக்கு பொருந்திய திருப்பணிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. சமீப காலத்தில் நாம் கண்ட ஜீவன் முக்தர்களின் திவ்விய நினைவுக்குகந்த இப்பணிக்குத் தாராளமாக திரவிய உதவி புரிவது ஆஸ்திகர் கடமை. பொருளனுப்பி வைக்க வேண்டிய முகவரி: ஸ்ரீமதி தாலியார்கான், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி சமாதி மண்டப நிர்மாணக் கமிட்டி, திருவண்ணாமலை.


Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!


மக்ளீன்ஸ் பற்பசையின் புதிய புல்லரிக்கும்
ருசியே சொல்லும் உங்களுக்கு,
அது செயலாற்றுகிறதென்று!
சுத்தமாக்க
–உங்கள் பற்களிலிருந்து அந்த மங்கிய மஞ்சள் திரையைப் போக்குகிறது
வெண்மையாக்க
–அவைகளுக்கு அந்த அதிகமான வெண்மையைத் தருகிறது
காக்க
Macleans
tooth paste
மக்ளீன்ஸ்–அதிவெண்மையான பற்களுக்கு

காதல் இல்லையேல் காதல்



சோ

காட்சி – 23

சபேசன் வீட்டில் ஓர் அறை

(சபேசன், கனகசபை, இருவரும் காப்பி அருந்திக் கொண்டே பேசிக் கொண்டிருக்கின்றனர்.)

சபே: அப்போ நீ மெட்ராஸ் கிளம்பறதுன்னு தீர்மானம் பண்ணிட்டியா?

கன: உனக்கு எத்தனையுமே முப்பது தடவை சொன்னாலும் புரியாது. நான்தான் நீ மீட்டிங்கிலேயிருந்து வந்த உடனேயே சொல்லிப்புட்டேனே! இன்னிக்கு ராத்திரி வண்டியிலே நானும் மாலதியும் புறப்பட்டுட வேண்டியதுதான்.

சபே: இந்த மாதிரி ஏன் கத்தறே? உனக்கு என்ன பிளட்பிரஷரா? என் தலைவிதி! இங்கே வந்து சேர்றதெல்லாம் ரத்தக் கொதிப்பும், சித்தப் பிரமையுமாவே இருக்குது...... ஆமாம், மாலதி மெட்ராஸ் வர முடியாதுன்னு சொல்லிக்கிட்டிருந்தாளே.... இப்ப சம்மதிச்சுட்டாளா.......?

கன: இல்லே, சபேசன்! நீதான் அவளுக்குக் கொஞ்சம் புத்திமதி சொல்லேன்.

சபே: இதோ பார் கனகசபை, நான் சொன்னா அவ கேப்பாளா?..... அவளுக்குத் தனக்காவும் தெரியாது. சொன்னாலும் கேக்க மாட்டா. என்ன பண்றது? உங்கிட்ட வளர்ந்துட்டா. வேறே எப்படி இருப்பா!

கன: என்னப்பா இது. நீ ஒண்ணு கும்மா விளையாடிக்கிட்டு. அவ என்னடான்னு அந்தப் பையன் தியாகராஜனைச் சந்திக்கப் பேசப் போறளாம். அதுக்கப்புறம் பம்பாயிலே கொஞ்ச நாள் இருந்துட்டுத்தான் வருவாளாம்!

சபே: பாவம் அந்தப் பொண்ணு. எங்கிட்ட எல்லாம் சொல்லி அழுதாப்பா அவ! கனகசபை! நீ செய்தது ரொம்பத் தப்பு. அவ இஷ்டப்படி அந்த நாகராஜனுக்கே அவளைக் கல்யாணம் செய்து வைக்காதது ரொம்ப ரொம்பத் தப்பு.

கன: எனக்கென்னய்யா தெரியும்? நிஜமாச் சொல்றேன்– அவளுக்கு அந்த நாகராஜன் மேலே இவ்வளவு அன்புன்னு எனக்குத் தெரியாதுய்யா...... அவன் செத்துப் போனது தெரிஞ்ச உடனே, அவ என்னமா துடிச்சுப் போயிட்டா தெரியுமா?

சபே: இவ்வளவு அன்பு இருக்குதுன்னு உனக்குத் தெரிஞ்சிருந்தால் கல்யாணத்தை முடிச்சிருப்பியா?

கன: அது எப்படி...? அவனுக்குச் சம்பாதிக்க யோக்கியதை இருக்குதான்னு தெரிஞ்சுக்கிட்டுத்தான், கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டிருப்பேன். இப்பவும் அதையேதான் நான் செய்தேன்......

சபே: அதான் தெரியுமே.... மாலதி எல்லாம் சொன்னா..... பாவம் இரண்டே மாசத்திலே பத்தாயிரம் ரூபா கொண்டான்னு சொன்னியாமே..... அது முடியாத காரியம்னு தெரிஞ்ச உடனே தாங்க முடியாமல் போய் மாரடைப்பிலேயே அவன் ஆனே குளோஸ் ஆயிட்டான் !

கன: இந்த மாதிரி ஆகும்னு நான் கண்டேனா...?

சபே: கண்டயோ, இல்லையோ, இப்ப அவன் செத்ததுக்கு நீதான் காரணம். நியாயமா போலீஸ் உன்னே அரஸ்ட் பண்ணிக்கிட்டுப் போய் மர்டர் சார்ஜ் போட்டுப் பதினாலு வருஷங்கள் தீட்டிப்புடணும்...

கன: சரி......சரி...... அதோ மாலதி வரா, அவகிட்ட நீயும் கொஞ்சம் சொல்லிப் பாரு. மனசை மாத்திக்கிட்டு மெட்ராஸ் வராளா, பார்ப்போம்.

(மாலதி மாடிப்படி இறங்கி வருகிறாள். கையில் ஒரு பெரிய காகித உறை இருக்கிறது.)

சபே: என்னம்மா மாலதி, என்ன தீர்மானம் செய்தே...?

மாலதி: எதைப் பத்தி மாமா?

சபே: அதான்..... அதாவது நீ இன்னிக்கு மெட்ராஸ் போயிடறியா?

மாலதி: ஏன்? நான் இங்கே தங்கறது உங்களுக்குப் பிடிக்கலியா?

சபே: சே! சே!

மாலதி: நான் இங்கே இருக்கிறது உங்களுக்குக் கஷ்டமா இருந்தா சொல்லிடுங்க.. நான் மெட்ராஸுக்கே போயிடறேன்......

(அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறாள்.)

சபே: ஐய்யய்யோ! நான் அப்படிச் சொல்லலே..... வந்து..... ஏய் கனகசபை ! எல்லாம் உன்னாலே வந்தது. என் வாயைக்

கிளறி விட்டுட்டு, இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்துட்டியே!...இதோ பாரும்மா மாலதி! நீ எத்தனை நாள் வேணுமோ இங்கேயே இரு!

மால: நிஜம்மா சொல்றீங்களா....?

சபே: என்னம்மா இது. அப்படிக் கேக்கறே......? மாலதி...... நீ இங்கே இருந்தா எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும், தெரியுமா? இவ்வளவு பெரிய வீட்டிலே தனியா இருக்கேனே..... எனக்கு எப்படியிருக்கும்னு நினைச்சுப் பார்த்திருக்கியா? ஜெயில்லே இருக்கிற மாதிரிதான் இருக்குது. வீட்டுக்குள்ளே வரதுன்னாலே எனக்குப் பிடிக்கிறதில்லே. அதனாலேதான் ஊர் வம்பெல்லாம் பிடிச்சு இழுத்துத் தலை மேலே போட்டுக்கறேன்..... மாலதி..... நீ இங்கேயே இருந்துட்டாலும் எனக்கு சந்தோஷம்..... இந்தப் பய கனகசபை அவன் பிஸினஸைப் பார்த்துக்கிட்டு பெட்ரோல்லேயே கிடக்கட்டும்! நம்ப அவனைப் பத்திக் கவலைப்படவே வேண்டாம்! டோண்ட் கேர்! என்ன சொல்லறே?

கன: நீ புத்தி சொல்ற லட்சணம் ரொம்ப நல்லாயிருக்கு. இந்தச் சமயத்துலே, நான் எவ்வளவு சொன்னாலும் மாலதி கேக்கப் போறதில்லே..... மாலதி, நீ ஒரு பத்து, பதினைஞ்சு நாட்கள் வேணுமானா இங்கே இருந்துட்டு வாம்மா!..... மனசுக்கும் ஒரு மாறுதல் இருக்கும்! நீ இருந்துட்டே வா..... எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லே!

சபே: உன்னை யார் இப்ப அனுமதி கேட்டாங்க! மாலதி தீர்மானம் பண்ணிப்பிட்டா – நான் 'யெஸ்'னு சொல்லிட்டேன்! உனக்கு ஆட்சேபணை இருக்கா இல்லையான்னு யார் கேட்டாங்க.....?

கன: சபேசா.....!

சபே: குறுக்கே பேசாதே! நேரம் ஆகிறது. சீக்கிரம் பெட்ரோல் கிளம்பற வேலையைப் பாரு......பெட்டி, படுக்கை யெல்லாம் இப்பவே கட்டி வெச்சுக்கப்பிடு. அப்புறம் கடைசி நிமிஷத்திலே எல்லாத்தையும் பண்ணிக்கிட்டு, ரயிலைக் கோட்டை விட்டுட்டு, இங்கே திரும்பி வந்து என் கழுத்தை அறுக்காதே!

கன: உன்னை மாதிரி மனசு யாருக்கு வரும்!

சபே (சிரித்துக்கொண்டே மாலதியைப் பார்க்கிறார். அவளும் சிரிப்பை அடக்கப் பார்த்து): சிரிக்கிறேன்!.... பலே! இங்கே வந்து இப்பத்தான் உன் முகத்திலே சிரிப்பைப் பார்க்கிறேன்!...... மாலதி இதோ பாரும்மா... மனசிலே எவ்வளவோ துக்கம் இருக்கும்...ஆனா அதுக்காக முகத்தை 'உம்'னு வெச்சுக்காதேம்மா. எனக்குப் பார்க்கவே கஷ்டமா இருக்கு! எப்பவும் சந்தோஷமா யிருக்கணும்.

மால: சரி, மாமா!

சபே: வெரிகுட்! பார்த்தியா கனகசபை!

கன: சபேசா...... உன் குழந்தை மனசுக்கு, கடவுள் உனக்குத் துரோகம் பண்ணிட்டாருப்பா! குடியும் குடித்தனமுமா இருக்க வேண்டியவன்...... பெண்டாட்டியையும் பறி கொடுத்துட்டு, தன்னந்தனியா வாழ்க்கை நடத்தறே!..... உம்!

சபே: ஓய்! பெரிய ஆள் மாதிரி பேசறியே....... இப்ப எனக்கு என்ன குறைச்சல்? இட் ஈஸ் ஆல் ரைட்...! மாலதி (அவள் கையில் இருக்கும் காகித உறையைப் பார்க்கிறார்) அது என்னம்மா கையிலே ?

மால: நான்தான் உங்ககிட்டே சொன்னேனே.....

சபே: என்ன சொன்னே?

மால: என்ன மாமா இது! நேத்திக்கே நான் சொல்லலே......?

கன: அவனுக்கு இன்னிக்குச் சொன்னதே ஞாபகம் இருக்காது. நேத்திக்குச் சொன்னது எப்படி ஞாபகம் இருக்கும்?

சபே: கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு சும்மா இரேன்.

மால: அவர்...... நாகராஜன்... பம்பாய்க்குப் புறப்படறதுக்கு முன்னாலே இதை எங்கிட்டே கொடுத்துட்டுப் போனார்....



சித்தப்பா கேட்டபடி இரண்டு மாசத்திலே பத்தாயிரம் ரூபா சம்பாதிக்க அவர் போட்ட திட்டத்தை விவரிச்சு இதுலே எழுதியிருக்கார்...... அவரும் அவர் நண்பர் சுரேஷும் இந்தத் திட்டப்படி பம்பாயிலே பணம் சம்பாதிக்க வந்தாங்க...(துக்கம் தொண்டையை அடைக்க) இங்கே....இங்கே...இந்த மாதிரி ஆயிடுத்து. (அழுகிறாள்.)

சபே: உஸ்! அழக் கூடாது..... நான் அழறேனு பார்த்தியா?...... அழக் கூடாது!

கன: மாலதி..... நானும் மெட்ராஸ்லே யிருந்து சொல்லிக்கிட்டிருக்கிறேன்....... அந்தக் கவரைப் பிரிக்க மாட்டேங்கிறே.... இப்பவாவது பிரியேன். என்னதான் எழுதியிருந்தான்னு பார்ப்போமே!

மால: வேண்டாம், சித்தப்பா! அவர் இரண்டு மாசத்துக்கப்புறம்தான் இதைப் பிரிச்சுப் பார்க்கலாம்னு சொன்னர்......

சபே (கெஞ்சும் குரலில்): அதைப் பிரிச்சுப் பார்க்கலாமே!....சுரேஷ் ரொம்பப் புத்திசாலிப் பய...... அவனும், இந்த நாகராஜனும் போட்ட திட்டம்னு ரொம்ப இன்டரஸ்டிங்கா இருக்குமே! என்னதான் எழுதியிருக்கு, பார்க்கலாமே!


மால: வேண்டாம்.... அவர் சொன்ன மாதிரி......

கன: என்னம்மா இது. பைத்தியமா இருக்கே. அவனே போய்ச் சேர்ந்துட்டான். இரண்டு மாசம் நான் கொடுத்த தவணை. அவன் அதுக்குள்ளே விஷயம் அவுட் ஆகக் கூடாதுன்னு நினைச்சு, உன்னே ரெண்டு மாசம் பொறுத்துப் பிரிச்சுப் பார்க்கச் சொல்லியிருக்கான். இப்பத்தான் அதெல்லாம் ஒண்ணுமில்லேயே? அவன் திட்டத்தைத் தெரிஞ்சுக்கிட்டா என்ன தப்பு?

சபே: ஆமாம்மா! மாலதி..... எனக்குக் கூட ஆசையா இருக்கும்மா..... பார்க்கலாம்மா.... ப்ளீஸ்!...... ப்ளீஸ்!

மால: சரி மாமா! நாளைக்குப் பார்த்துடலாம்........

சபே: ஏன்? அதென்ன நாளைக்கு.... இப்பவே பார்க்கலாமே !



மால: இல்லே...நாளைக்குத் திங்கட்கிழமை....மண்டே...... அவர் கவிதை ஒண்ணுலே அந்தக் கிழமை பேர் வரும்... எனக்கு ரொம்பப் பிடிச்ச கவிதை அது...அதுவும் இல்லாமல் அவர் காலேஜ் கவிதைப் போட்டியிலே பிரைஸ் வாங்கினதும் ஒரு திங்கட்கிழமையிலேதான்.....அதே திங்கள் கிழமையிலே அவரை மீட் பண்ணினேன்! அதனாலே.... பார்க்கறதுதான், பார்க்கிறோம்...ஒரு நாள் பொறுத்துக்குங்க. என்ன எழுதி வெச்சிருக்கார்னு நாளைக்குப் பார்த்துடலாம் !

சபே (பரிதாபமாக): நாளே வரைக்குமா காத்துக்கிட்டிருக்கணும்?

கன: நான் இன்னிக்கு ராத்திரியே போறேனே......நாளைக்கு அந்தக் கவரைப் பிரிச்சா, நான் பார்க்க முடியாதே!

சபே: அப்ப நாளைக்குத்தான் கவரைப் பிரிக்கணும்..... இவனுக்கு நல்லா வேணும். (கனகசபையிடம்) பார்த்தியா! (சின்னப் பையன் பேசும் முறையில் தம்மையும் அறியாமல்) கவர் பிரிச்ச உடனே நான்தானே பார்க்கப் போறேன்...... நீ பார்க்க முடியாதே! ஹய்யா!

கன: உனக்கு வயசுதான் ஆகிறது!...... சரி.... சரி! எப்படியோ தொலேஞ்சு போங்க. நான் போய் ஊருக்குக் கிளம்பற ஏற்பாடெல்லாம் பார்க்கிறேன்.....

(உள்ளே போகிறார்)

சபே (மாலதியிடம்): மாலதி..... கனகசபைதான் போயிட்டானே..... நம்ப அந்தக் கவரை நைஸா இப்பவே பிரிச்சுப் பார்த்துடலாமே!

மால: ஒரு நாள் கழிச்சுப் பார்த்துடப் போறோம்! அதுக்குள்ளே இப்படி அவசரப் படறீங்களே!......

சபே: சரி.... சரி..... உன் இஷ்டம்..... நீ நாளைக்குப் பார்க்கலாம்கிறே! அதுவும் சரிதான்! மாலதி.....! நான் என்ன சொல்றேன்..... இன்னிக்குப் பார்த்துட்டா என்ன

மால: என்ன மாமா இது? சின்னக் குழந்தை மாதிரி!

சபே: ஐ ஆம் ஸாரி..... நீ இந்த விஷயத்தை என்கிட்டே சொல்லியிருக்கக்கூடாது. ....சொன்னப்புறம் அதைத் தெரிஞ்சுக்காம இருந்தா எனக்கு ரொம்பக் கஷ்டமா யிருக்கும்.... பரவாயில்லே..... இட் ஸ்... ஆல் ரைட்!...... ஆறு ஒண்ணு! நீயும் இன்னிக்கு அதைப் பிரிச்சுப் பார்க்கக் கூடாது!

மால: உங்களைச் சொல்லிட்டு நான் பார்த்துடுவேனு?

சபே: ஏமாத்த மாட்டியே?

மால (சிரித்து): கண்டிப்பா மாட்டேன்!

சபே: சரி..... அந்தப் பய தியாகராஜனை நாளைக்கு இங்கே வரச் சொல்லியிருக்கேன். சுரேஷும்கூட வருவான்..... அவனை வெச்சுக்கிட்டுத்தான் அந்தத் தியாகராஜனைச் சமாளிக்கணும்!

மால: அவ்வளவு பைத்தியமா அவர்!

சபே: திடீர் திடீர்னு வந்துடறது!

மால: பாவம்!

சபே: நாம என்ன பண்ண முடியும்? ஏதோ அவன் குடும்பத்துக்கு உதவி பண்றதா சொல்லியிருக்கேன்!....இதோ பாரும்மா.... அந்தப் பயகிட்டே ஜாக்கிரதையாவே இருக்கணும்....... திடீர்னு கன்னாபின்னான்னு பேச ஆரம்பிச்சுப்புடுவான்!......

மால: சரி.... மாமா....! நாகராஜன் என்கிட்டே தன் தம்பியைப் பத்தி ரொம்ப நாள் வரை ஒண்ணும் சொன்னதே இல்லே. அப்புறம் பம்பாய்க்குப் புறப்பட்ற அன்னிக்குத்தான் தம்பியைப் பத்தி ஏதோ சொல்ல ஆரம்பிச்சார்..... நிறுத்திட்டார்!

சபே: ஐ ஸீ...... ஏன்?

மால: எனக்கே புரியலே.... தம்பியைப் பத்தி ஒரு கவிதைகூடச் சொன்னர்.....

சபே: என்ன அது?

மால:

பம்பாயிலே நான் தம்பி
மாட்டிக்கிட்டா என்னுவேன் கம்பி!
அம்பலிலோ இதுபெரிய வம்பே!
நான் போகிறேன் நம்பி பாம்பே!

சபே: இது என்ன கவிதை!

மால (கோபமாக): மாமா! அவர் எவ்வளவு உயர்ந்த கவிஞர்...... நீங்க என்னடான்னு......

சபே: யெஸ்! யெஸ்! நல்ல கவிதை!..... பியூட்டிபுல்!..... அர்த்தம்தான் புரியலே.

மால: நமக்கெல்லாம் சட்டுனு புரிஞ்சுடுமா......தம்பியைப் பத்தித்தான் ஏதோ சொல்லியிருக்கார். அது என்னன்னுதான் புரியலே!

சபே: எல்லாம் நாளைக்குப் புரிஞ்சுடும்.... அந்தக் கவரைப் பிரிச்சுப் பார்த்தா தன்னுலே தெரிகிறது!....

(தொடரும்)

சபாஷ், இந்திய ராணுவம்!

தனது வரலாற்றிலேயே சிக்கல் மிகுந்ததும் பயங்கரமுமான "அமைதி காக்கும் பணியை" ஐ. நா. ஸ்தாபனம் மத்திய ஆப்பிரிக்காவில் இப்போது வெற்றிகரமாக முடித்திருக்கிறது. அங்கே (காங்கோவில்) உள்நாட்டுக் கலகம் தவிர்க்கப்பட்டது; வல்லரசு மோதல்கள் தவிர்க்கப்பட்டன; பயங்கர விளைவுகள் ஏற்படாது அமைதி நிலவ வகை செய்யப்பட்டது. இந்தப் புனிதப் பணியில் இந்திய ராணுவத்தின் பங்கைப்பற்றி விசேஷமாகப் பாராட்டிச் சொல்ல வேண்டும். ஐ. நா. படைகளுக்கு இந்திய ராணுவம் ஜவான்களை அனுப்பி வைத்ததுமின்றித் தனது ஒப்பற்ற தளபதி (பிரிகேடியர் ராஜா) வையும் கொடுத்து உதவிற்று. அவருடைய அபார சாமர்த்தியத்தையும் சமயோசித நடவடிக்கைகளையும், ஸ்தலத்தில் அவர் நடந்துகொண்ட விதத்தையும் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். தனது நாட்டிலேயே கம்யூனிஸ்ட் சீனாவின் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டும், காங்கோ பிரதேசத்தில் அமைதியைக் காக்க விரைந்து வந்த இந்திய ராணுவத்தின் பரந்த மனப்பான்மை மதிப்புக்குரியது.

ஆட்லாய் ஈ. ஸ்டீவன்ஸன்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி.


"ஒரு
அழகு வாய்ந்த
வஸ்து
எக்காலத்திலும்
ஆனந்தம் தரும்."
ஹகோபா
எம்ப்ராய்டரி வேலைப்பாடு
அமைந்த துணிகள்
பான்லி கார்ப்பரேஷன் லிமிடெட்,



உயிர் கொடுங்கள்!

டாக்டர் வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி
மத்திய மருந்து ஆராய்ச்சி மன்றம், லக்னோ

[ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் போராடும் நமது இராணுவ வீரர்களுக்கு நாம் எவ்விதங்களில் உதவலாம்? அவரவர் கடமையைச் செவ்வனே செய்து கடினமாக உழைப்பது, பணச் செலவு, உணவு, உடை முதலியவற்றில் சிக்கனமா யிருப்பது இப்படிப் பல வழிகளில் உதவலாம். எல்லாவற்றையும் விட இரத்த தானம் கொடுப்பதன் மூலம் நமது ஜவான்கள் பலருக்கு உயிர் கொடுத்தவர்களாகவே ஆவோம்.]




மேலே: அம்ருதசரஸ் ராணுவ ஆஸ்பத்திரியில் வீரப் போர் புரிந்து காயமுற்ற ஜவான்களுக்கு ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆறுதல்மொழி கூறுகிறார்.

கீழே: மிகுந்த மகிழ்ச்சியோடு ராணுவ வீரர்களுக்கு இரத்த தானம் புரிய முன்வந்துள்ள பெண்மணி.

உடலுடன் உயிரைப் பிணைந்து இயங்கச் செய்வதுதான் இரத்தத்தின் தொழில். தடுக்கப்படாமல் உடலிலிருந்து இரத்தம் பெருவாரியாக வடிந்தால் உயிருக்கு அபாயம் நேருகிறது. போர்க்களத்தில் பலமான அதிர்ச்சி ஏற்பட்டு உயிருடன் மன்றும் வீரர்களுக்கும், கார், ரயில், நெருப்பு விபத்துக்களுக்கு இரையாகும் மனிதர்களுக்கும், ரண சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் பிரஸவ காலத்தில் தேவையானால் ஸ்திரீகளுக்கும் இரத்தம் அளிக்கப்படுகிறது. சமாதான காலத்தைவிடப் போர் நெருக்கடி காலத்தில் தான் இரத்தம் அதிகமாக உபயோகப்படுகிறது. சமீப காலத்தில் நிகழ்ந்த நெருக்கடியில் தலைவர்களின் கோரிக்கைக்கு இணங்கி லட்சோப லட்சம் ஜனங்கள் இரத்த தானம் செய்ய முன்வந்தார்கள்.

உடலின் ஒவ்வோர் அணுவிலும் பரவியிருக்கும் தமனி — சமனி எனும் இருவகைப் பட்ட நாடிகளுக்குள்ளே ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது இரத்தம். அணைக் கட்டிலிருந்து கால்வாய்களூடே ஓழுகிப் பயிர் நிலங்களுக்கு உயிர்ச் சத்தளிக்கும் தண்ணீர்ப் பாசனத் திட்டத்தோடு ஒப்பிடலாம், இரத்தத்தின் ஓய்வில்லாத ஓட்டத்தை. உடலிலிருந்து வெளியே சிந்தியதும் சில விநாடிகளுக்குள் இரத்தம் உறைந்து போய்

விடுகிறது. வெளியே எடுக்கப்பட்ட இரத்தம் புட்டியில் உறையாமல் இருப்பதற்கு 'ஸைட்ரேட்' (Citrate) என்னும் உப்பை இரத்தத்துடன் கரைக்க வேண்டும். ஹஸ்டின் எனும் விஞ்ஞானி இதை 1914ல் கண்டு பிடித்தார். 1914 – 1918ல் நிகழ்ந்த முதல் மகாயுத்தத்தின் இறுதியில் இரத்தச் சேமிப்புத் திட்டம் முதலில் அமுலுக்கு வந்தது. 1939 முதல் 1945 வரை நிகழ்ந்த இரண்டாவது மகாயுத்த காலத்தில் இரத்தத்தின் குணங்களையொட்டிய ஆராய்ச்சிகள் முன்னேறின. இரத்த ப்ளாஸ்மாவை உலர்த்தும் வழியும் கண்டுபிடிக்கப்பட்டது. இரத்த ப்ளாஸ்மாவிலிருந்து பிரித்தெடுத்த மருந்துகளின் நலன்களும் தெளிவாயின.



இரத்தத்தின் சில குணங்கள்

பூரண வளர்ச்சியடைந்த ஓர் ஆடவன் உடலில் 5–6, ஸ்திரீ உடலில் 4–5 லிட்டர் இரத்தம் நிலவ வேண்டும். இதன் ஐந்தில் ஒரு பாகம் உடல் உறுப்புக்களிலும், எஞ்சிய நான்கு பாகம் இருதயப் பையோடு பிணைந்த பெரும் குழாய்களிலும் ஓடுகின்றது. நம் இருதயம் ஓர் அதிசயமான 'பம்பு'. இருபதினாயிரம் கோடிக்கு மேற்பட்ட உயிர்ஸெல்கள் ஒவ்வொன்றுக்கும் பிராணவாயுவை எடுத்துச் செல்ல மனித இருதயம் ஒரு மணி நேரத்துக்குள் நாலாயிரம் தடவை துடிக்கின்றது. கீழே குறித்த முக்கிய செயல்களில் இரத்தம் பங்கு எடுத்துக் கொள்கிறது:

1. சுவாஸித்தல்: பிராணவாயுவை உட்கொண்டு கரிவாயுவை 'லங்ஸ்' வழியாக வெளியேற்றுவது.

2. உணவு: ஸெல்கள் உயிர் வாழுவதற்கு இன்றியமையாததான க்ளூகோஸ், அமைனோ அமிலங்கள், விட்டமின்கள், உப்புச் சத்துக்களை ஏந்திச் செல்லும் போக்குவரத்துக் கருவி.

3. கழிவு: உணவு ஸெல்களில் எரிந்தபின் தோன்றும் கரிவாயுவை லங்ஸுக்கும், புரோட்டீன் பொருள்கள் சிதைந்து தோன்றும் யூரியா போன்ற கழிவுப் பொருள்களைச் சிறுநீர்க் கோசங்களுக்கும் வேர்வைக் கோசங்களுக்கும் எடுத்துச் செல்வது.

4. உடலின் சீதோஷ்ண நிலையைப் பாதுகாத்தல்: நம் உடல் சமமான உஷ்ண நிலையில் (37 ஸெண்டிக்ரேடு – 98.6 பாரன்ஹீட்) நிலைப்பதற்கு இரத்தத்தின் சலனந்தான் அடிப்படை.

5. ஆரோக்கியப் பாதுகாப்பு: பல வகையான கிருமிகள், வைரஸ்கள் உட்பட, நம் உடலுக்குள் புகுந்து நோயுண்டாக்காமல் தடுப்பது.

1. டெல்லி கண்டோன்மெண்ட் ஆஸ்பத்திரியில் ராணுவ வீரருக்கு அநுதாப வார்த்தைகள் சொல்கிறார் ராணுவ மந்திரி சவான்.

2. நேருஜியும் அந்தக் காலத்தில் போரில் படுகாயமடைந்த வீரருக்குத் தேறுதல் மொழி கூறினார்.



நீர் அம்சம், செல் அம்சம் எனும் இரண்டு பாகங்களாக இரத்தத்தைப் பிரிக்கலாம். செல் அம்சத்தில் மூன்று பிரிவினைகள் உள்ளன: 'கார்ப்பஸல்ஸ்' எனும் செந்நிற செல்கள், லூக்கஸைட்ஸ் என்னும் வெண்மை செல்கள், 'ப்ளாட்டலட்ஸ்' எனும் தட்டை செல்கள். நீர் அம்சமான ப்ளாஸ்மாவில் மிதந்து கொண்டிருக்கின்றன. செல்லினங்களை பிளாஸ்மாவிலிருந்து 'சென்ட் ரிப்யூஜ்' என்ற மெஷினில் சுழற்றிப் பிரிக்கலாம்.

பதினாயிரம் மகாகோடி

ஐந்து லிட்டர் இரத்தம் ஓடும் ஓர் உடலில் 2.5 டிரில்லியன் (பதினாயிரம் மஹாகோடி) சிவப்பு செல்கள் இருக்க வேண்டும். பிராண வாயுவை உடல் செல்களுக்கு எடுத்துச் செல்வதுதான் சிவப்பு செல்களின் முக்கியமான பொறுப்பு. நம் உடலில் காணும் இரும்புச் சத்தின் 75 சதமானம் சிவப்பு செல்லில் பொருந்தி யிருக்கின்றது. சோகை, ஹீமோபீலியா போன்ற 'அநீமியா' வியாதிகளில் சிவப்பு செல்களின் எண்ணிக்கையும் தோற்றமும் மாறுபடுகின்றன. நம் இரத்தத்தில் 3.5 கோடி வெண்மை செல்கள் (லூகஸைட்ஸ்) இருப்பதாகக் காண்கிறோம். வியாதிகளை எதிர்த்துப் போராடுவதில் வெண்மை செல்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு. 'ப்ளாட்டலட்ஸ்' எனும் தட்டை இன செல்களில் ஏற்படும் மாறுதல்கள் இருதய நோயின் தோற்றத்துக்குக் காரணமா யிருக்கின்றன என்று ஆராயப்பட்டிருக்கிறது.

இரத்தத்தின் நீர் அம்சமான 'ப்ளாஸ்மா' மெல்லிய மஞ்சள் நிறமுடையது. 6—7 சதமானம் அளவுக்கு ப்ளாஸ்மாவில், ப்ரோடீன் பொருள்கள் கலந்திருப்பதால் ப்ளாஸ்மா ஒப்பற்ற போஷாக்குச் சக்தியைப் பெற்றிருக்கிறது. ஆல்புமின், க்ளாபுலின், பைப்ரிநோஜன் போன்ற பல ப்ரோடீன் சத்துக்கள் ப்ளாஸ்மாவில் உள்ளன. நம் உடல் தோற்றத்தில் 70 சதமானம் தண்ணீரால் ஆக்கப்பட்டது என்று நாமறிவோம்.

பிளாஸ்மாவின் பொறுப்பு

இந்த அளவில் தண்ணீர் இல்லாவிடில் செல்கள் தத்தம் தொழில்களைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. உடல் நீரின் அளவைச் சமநிலையில் பாதுகாப்பதுதான் பிளாஸ்மாவின் பொறுப்பு. இந்தப் பணியைச் செய்வதில் ஆல்புமின் எனும் ப்ரோடீன் இனம் மிகச் சிறந்தது. 'க்ளாபுலின்' இனத்தைச் சேர்ந்த புரோடீன் கிருமிகளை எதிர்ப்பதில் சக்தியுடையது. உடலுக்குள் பாயும் போது இரத்தம் உறையாமல் நிலைப்பதற்குக் காரணம் 'பைப்ரிநோஜன்' எனும் ப்ளாஸ்மா ப்ரோடீன் இருப்பதினால்தான்.

இரத்தத்திலிருந்து செல் அம்சத்தை அப்புறப்படுத்தியபின் எஞ்சும் ப்ளாஸ்மாவை வெப்பத்தின் துணையில்லாமல் 'ப்ரீஸ் ட்ரையிங்' (Freeze Drying) எனும் முறைப்படி மாவு போல் உலரச் செய்யலாம். இவ்வாறு உலர்ந்த ப்ளாஸ்மாவைக் கெடாமல் பல்லாண்டுகள் வைத்திருக்கலாம்; தூரமான இடங்களுக்கு அனுப்புவதற்கு அநுகூலமாகவும் இருக்கின்றது. ஐந்து வருஷ காலத்துக்குள் உபயோகமாகாத பிளாஸ்மாவை (out dated Plasma) இரசாயன முறையில் பிரித்து ஆல்புமின், பைப்ரிநோஜன், க்ளாபுலின், ப்ளாஸ்மின் போன்ற மருந்துகளைத் தயாரிக்கலாம். அதிர்ச்சியினாலும் தீப்புண்ணினாலும் காயமேற்படுவதிலும் நஷ்டமான இரத்த அளவை ஈடு செய்வதற்கும், லிவர் வியாதிக்கும், உடல் வீக்கம் போன்ற நோய்களைத் தீர்ப்பதற்கும் ஆல்புமின் உதவுகிறது. பிரஸவ காலத்தில் அளவுக்கு மிஞ்சி இரத்தம் வடிந்து நெருக்கடி நேரும் போது, 'பைப்ரி நோஜன்' அளிக்கப்படுகிறது. காமாலை, மீஸல்ஸ், போலியோ போன்ற வைரஸ் நோய்கள் வராமல் தடுப்பதற்கு க்ளாபுலின் உதவுகிறது. சில இருதய நோய்களுக்கு 'ப்ளாஸ்மின்' கொடுக்கப்படுகிறது. இவ்வாறு ப்ளாஸ்மாவிலிருந்து பெரும் சக்திவாய்ந்த பல மருந்துகளைத் தயார் செய்ய வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டில் இரத்தச் சேமிப்புத் திட்டங்கள்


நம் நாட்டு முக்கிய நகரங்களில் இரத்த பாங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. வேண்டுகோளின்றித் தாமாகவே முன் வந்து இரத்த தானம் செய்யும் பண்பாடு நம்மவரிடம் சமாதான காலத்தில் காண்பது அரிது. 1962ல் ஏற்பட்ட சீன ஆக்கிரமிப்பின்போதும் தற்போது நிகழ்ந்துள்ள பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போதும் நாட்டுமக்கள் இரத்த தானம் செய்ய முன்வந்தார்கள். ஆனால் சமாதான காலத்தில் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு இரத்தம் தேவைப்படும்போது இருபது முப்பது ரூபாய்வரை ஒரு புட்டிக்கு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது.

1962லும் 1965லும் தோன்றிய போர் நெருக்கடியின் விளைவாக இரத்தச் சேமிப்புத் திட்டத்துக்காக அயல் நாட்டாரை நம்பி இருக்காமல் நாமாகவே சுயமுயற்சியில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஊக்கம் நம்மிடையே பிறந்திருப்பது மெச்சத் தக்கது. இரத்த ப்ளாஸ்மாவிலிருந்து மேலே கூறிய மருந்துகளைத் தயாரிக்க லக்னோ மருந்து ஆராய்ச்சி மன்றத்தில் ஓர் உற்பத்தி ஸ்தாபனம் நிறுவப் பட்டிருக்கிறது. இங்கு அயல் நாட்டு உதவி ஏதும் இல்லாமல் நாளொன்றுக்கு 7.5 லிட்டர் அளவுக்கு ப்ளாஸ்மாவைக் கையாளக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரத்த தானம் செய்வது உடல் நலனுக்குக் கெடுதல் என்று ஒரு நம்பிக்கை படித்த மக்களிடையே கூட நிலைத்திருப்பது வருந்தத் தக்கது. சராசரி ஆரோக்கியநிலையில் உள்ள ஒரு மனிதன் ஒரு வருஷத்தில் 400 ஸி. ஸி. அளவுக்கு இரண்டு தடவை இரத்தம் அளிக்கலாம். இவ்வாறு பெரும்பாலான மக்கள் தூண்டுதலின்றி இரத்த தானம் செய்ய முன்வந்தால், நமது ஜவான்களுக்கு உதவியதுடன் பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் புனிதப் பணியிலும் பங்கு பற்றியவர்களாவோம்.

காவலர்களைக் கண்ட கலைஞர்கள்





நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டும் ஆக்கிரமிப்புக்காரர்களை எதிர்த்தும் நம் போர்க் காவலர்கள் நடத்தி வரும் அறப்போருக்கு ஆதரவு தரும் வகையில் வாரி வாரி நிதி வழங்கிப் பெருதவி புரிந்து வரும் சினிமாக் கலைஞர்கள், ஊர் ஊராகச் சென்று பல சுவையான கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருந் தொகை திரட்டிப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்திருக்கின்றனர்.

இதிலெல்லாம் கலைஞர்களுக்குக் கிடைத்த நல்ல பெயரைவிட அவர்கள் போர்முனைக்குச் சென்று நாட்டின் காவலர்களுக்கு எதிரில் கலை நிகழ்ச்சிகளை நடத்த முன்வந்ததில்தான் அதிகம் கிடைத்தது.

சதா போர் விமானங்களின் ஒலியும், வெடிகுண்டுகளின் இடிமுழக்கமும், பூமி அதிரச் செல்லும் டாங்கிகளின் பயங்கரச் சத்தமும், ஹெலிகாப்டர் விமானங்களின் ஓசையும் கேட்டுக் கேட்டுப் போர் வீரர்களுக்கும் 'போர்' அடிக்கும் அல்லவா? அதைப் போக்கி அவர்களை உற்சாகப் படுத்துவதற்காகத்தான் போர்முனையில் நம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். ராணுவ முகாம்களைச் சேர்ந்த ஆஸ்பத்திரிகளில் கையிழந்தும், கால் இழந்தும், இடுப்பு ஒடிந்தும், முதுகுகள் முறிந்தும் ஊனமுற்றுக் கிடக்கும் உத்தம வீரர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில்தான் நம் கலைஞர்கள் போர் முனைக்குச் சென்றனர்.

நடிகர்களும், நடிகையர்களும், பின்னணிப் பாடகர், பாடகிகளும், ஆர்கெஸ்ட்ரா குழுவினர்களுமாக முப்பத்தாறு பேர்கள் அடங்கிய மாபெரும் கலைத் தூதுகோஷ்டி தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின்



தலைவர் ஸ்ரீ ஏ.எல்.எஸ். அவர்களின் தலைமையில் சென்ற அக்டோபர் மாத இறுதியில் புறப்பட்டுச் சென்றது.

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சந்திரபாபு, பத்மினி, சாவித்திரி, தேவிகா, ஜெயலலிதா, சந்தியா, ராஜசுலோசனா, — பின்னணிப் பாடகி சுசீலா, பின்னணிப் பாடகர் ஏ. எல். ராகவன், இசையமைப்பாளர் விசுவநாதன் ஆகியவர்கள் போர்முனைக்குச் சென்றார்கள்—பின்னணி வாத்தியக்காரர்களையும் சேர்த்து மொத்தம் முப்பத்தாறு பேர்கள். கலை நிகழ்ச்சிகளுக்குத் தேவையான ஆடை — ஆபரணங்கள், மேக்கப் சாதனங்கள், பின்னணி இசை வாத்தியங்கள் எல்லாம் உடன் சென்றன.

இங்கிருந்து புறப்பட்டு டில்லிக்குச் சென்ற கலைஞர்களுக்கு அங்கிருந்து எங்கே போக வேண்டும் என்பது தெரியாது. அவர்களுடைய பிரயாணத் திட்டங்கள் யாவும் ராணுவ அதிகாரிகள் கையில் ஒப்படைக்கப் பட்டிருந்தன. டில்லி விமான நிலையத்தில் இறங்கியதும் நடிக, நடிகையர்களை ருஷியாவில் தயாரிக்கப்பட்ட நமது ராணுவ விமானம் ஒன்று ஏற்றிக் கொண்டு எங்கேயோ சென்றது.

சிவாஜி கணேசனைச் சந்தித்துப் போர்முனைக்குச் சென்று திரும்பிய அநுபவங்களைக் கேட்டேன்.

''நம் இந்திய ராணுவ அதிகாரிகள், ஜவான்கள் ஆகியவர்களின் வீர உணர்ச்சியைப் பாராட்ட வேண்டும். 'ஆக்கிரமிப்பு நடத்த முயலும் பாகிஸ்தானின் கொட்டத்தை அடக்க வேண்டும்' என்னும் எண்ணம் அனைவருக்கும் இருக்கிறது. பொங்கி வரும் பெரும் வெள்ளத்தை அணை கட்டித் தேக்கி வைத்திருப்பது போல் சர்க்காரின் போர் நிறுத்த உத்தரவு ஜவான்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து சென்ற எங்களைக் கண்டதும் அவர்களுடைய மகிழ்ச்சி எல்லை கடந்து பொங்கியது; ஆரவாரம் செய்து வரவேற்றனர். நாங்கள் முதன் முதலில் சென்று இறங்கிய பிரதேசத்துக்குப் பெயர் ஹல்வாரா. அங்கு கலை நிகழ்ச்சிகளை உற்சாகமாக நடத்தினோம்.





பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய இளம் விமானி கீலரைப் பார்த்தோம். (படத்தில் இரண்டு கணேசன்களுக்கும் இடையில் இருப் வர்.) அச்சம் என்பதையே அறியாத அவரைச் சந்தித்ததை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாத சம்பவம் என்று நான் சொல்ல வேண்டும். ரசிகர்களின் பாராட்டை நிறையப் பெற்றிருக்கிறேன். ஆயினும், போர்முனையில் ''கட்டபொம்மன்'' படத்தின் ஒரு முக்கிய கட்டத்தையும், ''நவராத்திரி'' படத்தின் தெருக்கூத்துக் காட்சியையும் நான் நடித்துக் காட்டிய போது அடைந்த ஆனந்தத்தை முன்னெப்போதுமே அடைந்ததில்லை. நமக்காக உயிரையே தியாகம் செய்யத் தயாராகப் போர் புரியும் வீரர்களை எங்கள் கலை நிகழ்ச்சிகளால் உற்சாகப் படுத்த முடிந்ததே, அது பெரிய பாக்கியம் இல்லையா?'' என்றார் சிவாஜி கணேசன்.

சந்தியாவிடம் போர்முனையில் நடந்த கலை நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டபோது அவருக்கு உற்சாகம் பிடிபடவில்லை.

''ஏதோ படப்பிடிப்பு உண்டு, நாங்கள் உண்டு என்றிருந்த எங்களுக்கு இந்தப் பிரயாணம் அளவுகடந்த மகிழ்ச்சியைத் தந்தது. ஹல்வாராவில், திறந்த வெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் அதியற்புதமாக நடைபெற்றன. புதிதாகப் பட உலகில் புகுந்திருக்கும் ஜயலலிதாவுக்குப் போர்முனையில் நம் வீரர்களுக்கெதிரில் நடித்துக் காட்டும் 'சான்ஸ்' கிடைத்ததில் எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்றார்.

அப்பொழுது ஜயலலிதா அம்மாவின் பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

''போர்முனையில் நீங்கள் என்ன பாட்டுக்கு அபிநயம் பிடித்தீர்கள்?'' என்று ஜயலலிதாவைக் கேட்டேன்.

''எனது முதல் படமான 'வெண்ணிற ஆடை'யில் வரும் 'அம்மம்மா காற்று வந்து ஆடை தொட்டுப் பாடும்' என்ற பாட்டுக்கும், 'கண்ணன் என்னும் மன்னன் பேரைச் சொல்லச் சொல்ல' என்னும் பாட்டுக்கும் ஏற்ப நடனம் ஆடினேன்.......'' என்றார்.

சேவா ஸ்டேஜ் மூலம் மேடைப் புகழ் பெற்று, பட உலகிலும் புகுந்து பிரசித்தி அடைந்து வரும் வி. கோபாலகிருஷ்ணனைப் பார்த்த போது அவரே ஒரு போர் வீரராக மாறிவிட்டார். ''ஆதம்பூர், ஹல்வாராப் பகுதிகளுக்குப் போய்ப் பார்த்த பிறகுதான் யுத்தம் என்றால் எவ்வளவு கொடுமையானது என்று தெரிந்து கொள்ள முடிகிறது. பாகிஸ்தானின் அயோக்கியத்தனமான புளுகுப் பிரசாரங்கள் அம்பலமாகி விட்டன. ஆதம்பூரைப் பாகிஸ்தானியர் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதாகப் பாகிஸ்தான் ரேடியோ பிரசாரம் செய்தது. ஆனால் ஆதம்பூர் முழுக்க முழுக்க நம் வசம்தான் இருக்கிறது. இம்மாதிரி எத்தனையோ பொய்கள்.''

''கலை நிகழ்ச்சியில் நீங்கள் என்ன வேடம் தாங்கினீர்கள்?'' என்று கேட்டேன்.

''நான் சிவாஜியுடன் 'கட்டபொம்மன்' நாடகத்தில் வெள்ளைக்கார தளபதி பானர்மென்னாக நடித்தேன்'' என்றார்.

ஜெமினி கணேசனைச் சந்தித்த போது அவர் ஒரு கல்லூரி மாணவனின் உற்சாகத்துடன் போர்முனையில் தாம் கண்டவைகளை விவரித்தார். நடிகையர் திலகம் சாவித்திரியும் மகிழ்ச்சியுடன் பேச்சில் கலந்து கொண்டார்.

''எங்கள் முதல் கலை நிகழ்ச்சி ஹல்வாராவில் நடந்தது. இந்த இடம் பாகிஸ்தானுக்கு மிகவும் அருகில் உள்ளது. எப்பொழுதும் எதிரியின் விமானம் வந்து குண்டு வீசக் கூடும் என்ற அபாயநிலை. எங்களைக் கண்ட வீரர்களுக்கு ஒரே உற்சாகம். விமானப் படையில் தென்னாட்டு வீரர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். தமிழில் கலை நிகழ்ச்சிகள் நடத்தினோம். நானும் தேவிகாவும் ''நவீன சகுந்தலை'' என்ற ஹாஸ்ய நாடகத்தை நடத்தினோம். சாவித்திரி சிவாஜியுடன், ''நவராத்திரி'' — தெருக்கூத்தில் நடித்தாள். வடஇந்திய வீரர்களுக்கு உற்சாகமூட்ட மன்மோகன் தாகூர் என்ற வடஇந்தியப் பாடகரின் இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். ஆதம்பூரில் பாகிஸ்தானியர் குண்டு வீசிய இடத்தைப் பார்த்தோம். சுமார் முப்பது அடி ஆழத்துக்கு ஒரு பெரிய குழி. குண்டு அவ்வளவு தூரம் துளைத்துக் கொண்டு போயிருக்கிறது. பாகிஸ்தானியருக்குக் குறி பார்த்துச் சுடத் தெரியாதது நமக்குச் சௌகரியமாயிருக்கிறது.''

''சந்திரபாபுவின் தமாஷ்களை நம் வீரர்கள் ரொம்ப ரசித்திருப்பார்களே!'' என்றேன்.

''ஆமாம். சந்திரபாபு இங்கு புறப்பட்டதிலிருந்து போர்முனைகளுக்குச் சென்று திரும்பியவரையில் ஒரே தமாஷ்தான்; வேடிக்கைதான். அவர் எங்களுடன் வந்ததனால் பிரயாண அலுப்பே தெரியாமல் இருந்தது. சந்திரபாபு தமக்கே உரிய சேஷ்டைகளுடன் ''கவலையில்லாத மனிதன்'', ''அலோ, மைடியர் ராமி, உங்கள் அம்மா எனக்கு மாமி'', ''பிறக்கும்போதும் அழுகின்றான்'' என்ற பாடல்களைப் பாடினார். நம் வீரர்கள் ஆரவாரத்துடன் கைதட்டி மகிழ்ந்தனர்.''

இப்பொழுது சாவித்திரி குறுக்கிட்டு, ''சுசீலாவும், ஏ. எல். ராகவனும் பல சினிமாப் பாடல்களைப் பாடி எல்லாரையும் மகிழ்வித்தார்கள். பத்மினியும், ராஜசுலோசனாவும் பஞ்சாபி நடனமும், குறவன் குறத்தி நடனமும் ஆடினார்கள்'' என்றார்.

''பல சுவையான வீர சாகஸங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே!'' என்றேன் ஜெமினி கணேசனிடம்.

''நமது வீரர்கள் எத்தனையோ வீர சாகஸங்களைச் செய்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லுகிறேன். பாகிஸ்தான் பிரதேசத்தில் புகுந்த ஓர் இந்திய விமான வீரரை இரண்டு பாகிஸ்தானிய விமானிகள் விரட்டிச் சென்று, 'விமானத்தைக் கீழே இறக்கு. இல்லாவிட்டால் சுட்டு விடுவோம்' என்று ரேடியோக் கருவி மூலம் பேசிப் பயமுறுத்தினர். உடனே நமது விமானி கிடுகிடு வென்று கீழே இறங்க ஆரம்பித்தார். பாகிஸ்தானியர்களுக்கு ஒரே ஆனந்தம். ஆனால் நமது விமானி உண்மையில் பாகிஸ்தானியர்களுக்குப் பயந்து கீழே இறங்க

வில்லை. இறங்குவது போல் பாசாங்கு செய்து திடீரென்று வேகத்தை அதிகப் படுத்திக் கொண்டு போய்ப் பாகிஸ்தான் ஆயுதக் கிடங்கின் மீது குண்டுகளை வீசி விட்டு, பத்திரமாகத் திரும்பி வந்து சேர்ந் தார். அந்த விமான வீரரை நாங்கள் சந் தித்துப் பாராட்டினோம். அதற்கு அவர் 'உயிர் ஒரு முறைதான் போகும். அது தேசத்துக்காகப் போகட்டுமே!' என்றார் வீரம் பொங்கும் குரலில். பஞ்சாபிப் பெண் களின் தீரச் செயல்கள் அபாரமாயிருக் கின்றன. எதிரிகளை எங்கே கண்டாலும் அவர்கள் விடுவதில்லை. ஆதம்பூர்ப் பகுதியில் தண்ணீர் எடுக்கச் சென்ற ஒரு பெண்மணி பாரசூட்டிலிருந்து இறங்கிய எதிரி ஒருவ னுடன் தண்ணீர் எடுக்கும் வாளியையே ஆயுதமாகக் கொண்டு போராடி எமனுல குக்கு அனுப்பியிருக்கிறாள்....'' என்று ஜெமினி கணேசன் கூறிய தும் எனக்கு மெய்சிலிர்த்தது.

''இன்னும் சில சுவையான விஷ யங்கள்...'' என்று ஜெமினி கணே சன் ஆரம்பித்ததும் நான் ஆவ லோடு கேட்கலானேன்.

''போர்முனைக்கு நாங்கள் விமா னத்தில் சென்றோம் என்று பத்திரி கைகளின் மூலம் அறிந்ததும் நாங்கள் ஆனந்தமாகப் பறந்து சென்றிருப்போம் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். நாங்கள் சென்ற விமானம் ராணுவ விமா னம். சுகாசனங்கள், பெஞ்சுகள் எதுவும் இல்லை. விமானத்தின் இருமருங்கிலும் வெறும் பலகையா லான ஆசனங்கள். பஸ் பிரயா ணிகள் மாதிரி மூட்டை முடிச்சுக் களுடன் ஒருவர் மீது ஒருவர் மோதியடித்துக் கொண்டு பிரயா ணம் செய்தோம். அப்பொழுது நான், ''சீட்டு ஆடலாமா?'' என்று கேட்டேன். உடனே சின்ன அண்ணாமலை, ''இது என்ன கேள்வி! விமானத்தில்தான் சீட்டு ஆடிக் கொண்டிருக்கிறதே!'' என் றார். எங்களுக்குச் சிரிப்புத் தாங்க வில்லை. உண்மையிலேயே விமா னத்தின் சீட்டுகள்! ஆடிக் கொண்டுதான் இருந்தன. பிறகு இறங்க வேண்டிய இடம் வந்ததும் மணி ஒலித்தது. ஒருவர் மீது ஒரு வர் மோதித் தள்ளிக் கொண்டு கீழே ஏணி வழியாக இறங்கினோம். ஹல்வாரா, ஆதம் பூர், ஜலந்தர் ஆகிய எல்லா ஊர்களுக்கும் இந்த மாதிரி விமானத்தின் மூலம்தான் போனோம். இரண்டு ரயில் வண்டித் தொடர்கள் சேர்ந்து போகிற மாதிரி இரண்டு விமானங்கள் சேர்ந்து போனது அதிசயமா யிருந்தது.''

''ஜலந்தரில் நீங்கள் பார்த்த முக்கிய மான இடம் என்ன?'' என்று கேட்டேன்.

''ஜலந்தரில் ராணுவ ஆஸ்பத்திரி மிகவும் முக்கியமான இடம். அந்த ஆஸ்பத்திரியில் கையிழந்தவர்களும், கால் இழந்தவர்களும் பயங்கரமான கட்டுகளுடன் படுத்துக் கிடந்த காட்சி எங்கள் நெஞ்சை யெல்லாம் நெகிழ்த்தி விட்டது. ஜலந்தர் வந்ததும் கலைஞர் குழுவி னருக்கு இட்டிலி, தோசையைக் காண மாட் டோமா என்றாகி விட்டது. அங்கு ஒரு தமிழர் ஹோட்டல் வைத்திருக்கிறார். அங்கிருந்து இட்டிலி, தோசை வந்தது. அந்த ஹோட்டல் காரர் நான் பிறந்த ஊராகிய புதுக்கோட் டையைச் சேர்ந்தவர் என்று தெரியவந்ததும் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அங்கு கலை நிகழ்ச்சிகள் நடத்தினோம். அங்கிருந்து டில்லி திரும்பி ராஷ்டிரபதி பவனுக்குச் சென்று ஜனாதிபதியைக் கண்டோம். அவர் தமிழ் நாட்டுப் பழைய தெருக்கூத்துப் பாடல் களைப் பாடிக் காண்பித்தார். ஜனாதிபதி எங்களையெல்லாம் பெருமகிழ்ச்சியுடன் வர வேற்று அன்போடு உபசரித்தார். அவரெதி ரேயும் சில கலை நிகழ்ச்சிகள் நடந்தன''





என்று கூறி ஜெமினி கணேசன் பரவசம் அடைந்தார்.


பின்னணிப் பாடகர் ஏ. எல். ராகவன் (நடிகை எம். என். ராஜத்தின் கணவர்) ''ஜனாதிபதிக்கு எதிரில், 'பகைவனுக்கு அருள்வாய்' என்ற பாரதியார் பாடலைப் பாடினேன். அதில் எனக்கு அளவுகடந்த சந்தோஷம்'' என்றார்.

இந்தக் கட்டுரையில் வெளியாகியிருக்கும் படங்களெல்லாம் அவர் எடுத்தவைதாம். எம். என். ராஜம் போர்முனைக்குச் செல்லா விட்டாலும் தம் கணவர் சென்றதையே தாம் சென்றதாகக் கருதி மகிழ்ச்சியோடு பேச்சில் கலந்து கொண்டார்.

நாட்டின் காவலர்களுக்குக் களிப்பூட்டும் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்த முன்வந்த கலை ஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். **—காந்தன்**

வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் பன்னிரண்டு

லட்சுமியின் இளவரசன்!

சாளுவ நரசிம்மர் விஜயநகரத்தின் சார்பில் சோழ நாட்டின் மேலதிகாரியாகச் சில ஆண்டுகள் தஞ்சையில் குடும்பத்தோடு தங்கியிருந்தவர். முன்பு அவர் விஜயநகரத்தில் தங்கியிருந்தபோது லட்சுமி சிறுமியாக இருந்தாள். தஞ்சையிலிருந்து லட்சுமி திரும்பியவுடன், அவளை முதன்முதலாக என்றைக்கு விசுவநாதன் கண்டானோ அன்றிலிருந்தே அவளை அவன் தன் உள்ளத்தில் சிறை வைத்து விட்டான்.

ஆம், அவனாக அவளைச் சிறையிலிட்டானே தவிர, அவள் தானாக அதில் வந்து குடியேறவில்லை. விசுவநாதனின் எண்ணத்தை உணர்ந்து கொள்வதற்கே அவளுக்குச் சில மாதங்கள் சென்றன. உணர்ந்து கொண்டபோதும் அதை அவள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

கட்டிளம் காளையருக்கும் காதலிளம் கன்னியருக்கும் விஜயநகரம் ஒரு கந்தர்வ லோகமாகவே அப்போது காட்சியளித்தது. சோலைகளும், சாலைகளும், குன்றுகளும், ஆற்றங்கரையும் அவர்களுக்காக அங்கு நிறைந்திருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆடல், பாடல், விழா, வீர விளையாட்டென்று ஒவ்வோர் ஆண் மகனும் தனது திறத்தை வெளிக் காட்டிக் கன்னியரின் கவனத்தைக் கவர்வதற்கு அங்கே வாய்ப்புக்கள் இருந்தன. அவற்றிலிருந்தெல்லாம் விசுவநாதன் ஒதுங்கியிருந்ததால் அவனைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டு விட்டாள் லட்சுமி.

சக்கரவர்த்தியே அவனை அவ்வாறு வெளி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விடாமல் தடுத்திருந்தார் என்பது அவளுக்குத் தெரியாது. அழகில் நிகரற்று விளங்கும் பெண்களுக்கு எவ்வாறு ஆண்களிடமிருந்து தொல்லைகளுண்டோ அவ்வாறே வீரத்தில் நிகரற்று விளங்கும் இளைஞர்களுக்கும் அங்கே ஆபத்துக்கள் இருந்தன! விசுவநாதனைச் சக்கரவர்த்தி பேணிக் காக்க விரும்பியதாலேயே அவனுக்கு விழாக் காலங்களில் வேறு கடமைகளைக் கொடுத்திருந்தார்.

லட்சுமியின் மனத்தில் திடீரென்று ஏற்பட்டிருந்த மனமாறுதலைக் கண்ட விசுவநாதன், நெடுநாட்கள் முற்றுகையிட்டிருந்த நகரத்தைக் கைப்பற்றிய வீரத் தலைவன் எப்படி மனமகிழ்வானோ, அத்தகைய மகிழ்ச்சியில் திளைத்திருந்தான். அவனுடைய அலட்சியம், செருக்கு, புறக்கணிப்பு எல்லாமே இப்போது அவனுக்கு மறந்து போய்விட்டன.

அவனை வரவேற்பதற்கென்றே தன்னை அலங்கரித்துக் கொண்டு அருகில் வந்து அமர்ந்தவளை அவன் பூரிப்போடு உற்று நோக்கினான்.

''என்னால் ஏற்பட்ட மனப் புண்ணை விழுப்புண் என்கிறீர்களா?'' என்று கேட்டாள் லட்சுமி.

''உன் அன்பைப் பெறுவதற்காக நான் நடத்திய போரில் பெற்ற புண் விழுப்புண் அது. என்னுடைய வெற்றி உன்னுடைய விழிகளின் புத்தொளியில் மின்னுகிறது. உன் இதழ்களின் புன்னகை



யில் அது மலர்ந்து மணம் வீசுகிறது. உன்னுடைய நாணத்தில் அதன் ரோஜா நிறம் புலப்படுகிறது. கடைசியில் நான் எப்படியோ வெற்றி பெற்று விட்டேன்!'' என்று தன்னை மறந்து பேசினான்.

''இவ்வளவு நன்றாகப் பேசத் தெரிகிறதே உங்களுக்கு!'' என்று மிகுந்த வியப்போடு கூறினாள் லட்சுமி.

''நீதான் எனக்குப் பேசக் கற்றுக் கொடுத்து விட்டாய்!'' என்றான் விசுவநாதன்.

நான்கு விழிகள் ஒருகணம் ஒன்றுகிக் கிறங்கி நின்றன.

''நான் கண்ட அந்த ஒரு காட்சி அப்படியே என்னுள் பசுமையாகப் பதிந்து விட்டது. ஏனோ அந்த ஒரு காட்சி அடிக்கடி என் நினைவில் வந்து கொண்டேயிருக்கிறது. அன்றைக்கு நீங்கள் வேகமாகக் குதிரையில் சென்றீர்களல்லவா? அந்தக் குழந்தையைக் காப்பாற்றினீர்கள் அல்லவா? அது குதிரையின் காலில் அடிபட்டு இறந்து போகுமென்றே நான் நடுங்கி விட்டேன்.''

''நல்லவேளை, ஓர் உயிரைக் காப்பாற்றும் போது நீ என்னைக் கண்டிருக்கிறாய். போர்க்களத்தில் பகைவரை வெட்டி வீழ்த்தும் போது கண்டிருந்தால் என்னைக் கொலை வெறியன் என்றுகூட வெறுத்திருப்பாய்.''

''அப்படி ஒன்றுமில்லை'' என்று சொல்லி விட்டு, ''எப்படி உங்களால் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முடிந்தது?'' என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

''விஜயநகரத்து வீரனுக்கு வேண்டிய முதல் தகுதி அவன் குதிரைகளை அடக்கிப் பழக்கத் தெரிந்தவனாக இருக்க வேண்டுமென்பதுதான். கோவாத் துறைமுகத்தில் வந்து இறங்கும் அரபு நாட்டுக் குதிரைகளில் ஒன்றைக்கூட மற்றவர்களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்று போர்த்துக்கீசியரிடம் நம் சக்கரவர்த்திகள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். குதிரைகளாகிய மிருகங்களை அடக்கிப் பழக்கத் தெரிந்தவர்களே மிருக வெறி கொண்டு குடிமக்கள் மீது பாயும் பகைவர்களையும் அடக்குவார்கள் என்பது சக்கரவர்த்திகளின் நம்பிக்கை. அந்தக் குழந்தையின் உயிர் வருங்காலக் குடிமகனின் உயிரல்லவா?''

''என்றால் அதை மறக்கவே முடியாது; இப்போது நினைத்தாலும் எனக்கு மெய் சிலிர்க்கிறது!''

விசுவநாதனுக்கு அது அப்படி ஒன்றும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சியாகத் தோன்றவில்லை. அதை அவன் அப்போதே மறந்து போய் விட்டான். என்றாலும் அந்தச் சின்னஞ்சிறு நிகழ்ச்சியால் லட்சுமியின் உள்ளத்தில் தனக்கு விசாலமான இடம் கிடைத்தது அவனுக்குப் பெருமையாகவே இருந்தது.

''அரண்மனையில் நடந்ததை யெல்லாம் அப்பா வந்து கூறினார்கள். உங்கள் அப்பா தமிழ்நாட்டுக்குப் படையெடுத்துச் செல்லப் போகிறார்களாம். நீங்கள் தளகர்த்தியாக்கப் பட்டதால் உங்களுக்கு மிகப் பெரிய அதிர்ஷ்டம் வந்திருக்கிறதாம். இந்த வயதில் யாருக்குமே கொடுக்கப்படாத பதவி என்று அப்பா கூறினார்கள்.''

''அதை நினைக்கும்போதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றான் விசுவநாதன்; ''அப்பா இங்கிருந்தாலாவது அவர்களிடம் அவ்வப்போது கேட்டுக் கொண்டு பணிகளைச் செய்யலாம்; அவர்களும் ஊரில் இருக்கப் போவதில்லை.''

''உங்கள் அப்பா இல்லாவிட்டால் என்ன? என் அப்பாவிடம் கேட்டால் அவர்கள் சொல்ல மாட்டார்களா? சக்கரவர்த்திகளுக்கு ஆலோசனை கூறுவதில் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்களோ, அதே மகிழ்ச்சியுடன் உங்களுக்கும் உதவுவார்கள்.''

''முதலில் இந்த ஆலோசனையைக் கூறியதற்கு நீ என் நன்றியை ஏற்றுக் கொள்'' என்று பெரும் சுமையொன்று நீங்கப் பெற்றவன் போல் கூறினான் விசுவநாதன். அவனுடைய தந்தை நாகமநாயக்கரே சிக்கலான கடமைகளின்போது சாளுவ நரசிம்மரின் ஆலோசனையைத்தான் நாடுவார். அமைச்சரின் மாளிகைக்கு ஆலோசனைக்கு வருவதில் அவனுக்கு இரு வகை நன்மைகள் இருந்தன. கடமைக்குக் கடமை; காதலுக்குக் காதல்!

''அப்படியானால் அடிக்கடி நீங்கள் இங்கு வருவீர்கள்'' என்றாள் லட்சுமி. பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''மற்றொரு முக்கியமான விஷயம் உங்களிடம் கேட்க வேண்டும் என்று தோன்றியது'' என்றாள்.

''என்ன?''

''உங்களை இனிமேல் 'இளவரசே' என்று அழைக்கலாம் என்று நினைக்கிறேன்.''

''நீயும் மற்றவர்களைப் போல் பரிகசிக்கிறாய் போலிருக்கிறது. என்னைச் சக்கரவர்த்திகளின் செல்லப் பிள்ளை என்று சொல்கிறாயா? உன் அப்பாவைக்கூடத்தான் அவர்கள் 'செல்லப்பா' என்று செல்லமாக அழைக்கிறார்கள். சாம்ராஜ்யமே ஒரு குடும்பமாக உறவு கொண்டிருக்க வேண்டுமென்பது சக்கரவர்த்திகளின் ஆவல். அந்த முறையில் தான் அவர்கள் என்னைத் தமது குமாரனைப் போல் நடத்துகிறார்கள்.''


''நான் அதைச் சொல்லவில்லை. நீங்கள் இப்போது பாண்டிய நாட்டின் இளவரசர் ஆகி விட்டீர்களல்லவா?''

திடுக்கிட்டான் விசுவநாதன்.

''எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைக்காதீர்கள். எல்லாவற்றையும் அப்பா என்னிடம் கூறி விட்டார்.''

''எனக்கு ஒன்றுமே தெரியாது, லட்சுமி! என்ன கூறினார் உன் அப்பா?''

நாகமநாயக்கரைப் படையுடன் பாண்டிய நாட்டுக்குப் புறப்படச் செய்து, அங்கு ஆட்சியை நிலைநாட்டச் சொல்லியிருப்பதால், இனி நாகமநாயக்கரே பாண்டிய நாட்டின் தலைவர் என்று அமைச்சர் கூறினாராம். பாண்டியர் சந்திரசேகருக்கும் மேலாக இருந்து அவரே இனி அங்கு அரசாளப் போகிறாராம். ஆகவே, தந்தை பாண்டியர் என்றால் குமாரன் இளவரசன்தானே என்று விவாதித்தாள் லட்சுமி.


சக்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
சத்துப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச்சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

''லட்சுமி! தயவுசெய்து இனி என்னை அப்படி அழைக்காதே!'' என்று கேட்டுக் கொண்டான் விசுவநாதன்.

''ஏன், அழைத்தால் என்ன?''

''இப்போதே தந்தையும் மாமாவும் தங்கள் தங்கள் நாடுகளுக்குச் சிற்றரசர்களாகத்தான் இருக்கிறார்கள். அரண்மனையில் அவர்கள் பணியாற்றினாலும் அவரவர்களுக்கென்று தனி நாடுகளும் தனிப் படைகளும் இருக்கின்றன. அந்த முறையில் பார்த்தால் நீயும் ஓர் இளவரசி; நானும் ஓர் இளவரசன். என்றாலும் சிற்றரசர் என்ற அந்தப் பெயரைவிட அரண்மனையில் பணி செய்யும் பாக்கியத்தாலேயே உன் தந்தையும் என் தந்தையும் உயர்ந்திருக்கிறார்கள். வேண்டாம், என்னை அப்படி அழைக்க வேண்டாம்!'' என்றான்.

''நான் அப்படித்தான் அழைப்பேன்: எனக்கு அதுதான் பிடித்திருக்கிறது!'' என்று செருக்கோடு கூறிவிட்டுச் சிறுநகை செய்தாள் லட்சுமி.

பரிதாபமாக அவளை விழித்துப் பார்த்தான் விசுவநாதன். அப்படிக் கூப்பிடுவதால் அவளுக்கு என்னதான் இன்பமென்று அவனுக்குத் தெரியவில்லை.

''சரி, மற்றவர்களுக்கு முன்னால் நான் உங்களை அப்படிக் கூப்பிடவில்லை. தனியாக இருக்கும்போது மட்டும் காதோடு காதாக அழைக்கிறேன். சரிதானா?''

''உன் விருப்பம்!'' என்று அவளுக்காக விட்டுக் கொடுத்தான் விசுவநாதன்.

''இளவரசே!'' என்று உடனடியாக அவன் காதருகில் கூவினாள் லட்சுமி.

அந்தச் சொல்லால் அவள் குழந்தையைப் போல் குதூகலமடைந்தாள் என்பது அவனுக்குத் தெரிந்தது. அவளுடைய சின்னஞ் சிறு ஆனந்தத்தில் அவன் முழுப் பங்கு கொள்ளாவிட்டாலும், அவளுடைய மகிழ்ச்சியைத் தடுக்க அவன் துணியவில்லை.

வெளிவாயிலில் சிவிகை தூக்குவோரின் சத்தம் கேட்டது. இருவரும் எழுந்து சென்றார்கள். விருந்துக்காக அவனுடைய தந்தையும் தாயாரும் அங்கு வந்து இறங்கினார்கள். லட்சுமி கமலாதேவியின் கரங்களைப் பற்றி அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். நாகம நாயக்கருக்கு அவர்கள் இருவரையும் ஒன்றாகக் கண்டதில் எல்லையற்ற பூரிப்பு ஏற்பட்டது. தம்மைப் போலவே தளகர்த்தராகி விட்ட தமது குமாரனைப் பெருமையோடு பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தார் அவர்.

அத்தியாயம் பதின்மூன்று

இரகசிய உடன்பாடுகள்

விருந்துக்கான ஏற்பாடுகளை உள்ளே பெண்கள் கவனித்துக் கொண்டிருக்க, மேல் மாடத்தில் சாளுவ நரசிம்மரும் நாகம நாயக்கரும் அடுத்து நடக்க வேண்டியவைகளைப் பற்றி ஆலோசனை செய்தனர். விசுவநாதன் அவர்களுக்கிடையில் அமர்ந்து அவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

நாகம நாயக்கருக்குச் சக்கரவர்த்தியின் கட்டளையில் ஒரு பாதி மட்டிலுமே மகிழ்ச்சியைத் தந்தது. விசுவநாதனுக்குக் கிடைத்த வாய்ப்பை மட்டும் அவர் பெரிதாக மதித்தாரே தவிர, பாண்டிய நாட்டுக்கு அவரைப் புறப்படும்படி கூறியதை அவர் அவ்வளவாக விரும்பவில்லை. கட்டளையை மறுக்கக் கூடாது என்ற அளவில்தான் அவர் அதற்கு இணங்கினார் என்று தெரிந்தது.

''தெற்குக் கோடிக்குப் படையெடுத்துப் போய் அங்கே திரும்பவும் ஓர் ஆட்சியை நிலைநாட்டுவதென்றால் அதில் உள்ள சிரமங்கள் உங்களுக்குத் தெரியும்'' என்று முணுமுணுத்தார் நாகம நாயக்கர்.

''சிரமங்களா! அதிர்ஷ்ட தேவதையாகிய மதுரை மீனாட்சியே உங்களை நாடி வந்திருக்கிறாள், நாகமரே!'' என்று பெருமையோடு கூறினார் சாளுவ நரசிம்மர். ''தமிழ்நாட்டைப் பற்றி விவரம் தெரிந்தவர்கள் என்ற முறையில் நம் இருவரில் ஒருவர்தான் அங்கு போக முடியும்; நானோ புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்; அதனால்தான் உங்களை அனுப்பியிருக்கிறார் சக்கரவர்த்தி.''

''சக்கரவர்த்தி கூறியபிறகு இனித் தயங்கிப் பயனில்லை; ஆனால் எனக்கு என்னவோ.........''

''அதிர்ஷ்டம் தேடி வந்தாலும் வேண்டாம் என்று சொல்வீர்கள் போலிருக்கிறதே! என்ன தயக்கம் உங்களுக்கு?''

''படையெடுத்துச் செல்வதென்றால் எவ்வளவு பொருள் செலவாகும் தெரியுமா? எல்லாவற்றுக்கும் என்னுடைய படைகளையும் என்னுடைய பொருளையும்தான் கொண்டு செல்ல வேண்டும்'' என்று சலித்துக் கொண்டார் நாகம நாயக்கர்.

விழுந்து விழுந்து சிரித்தார் சாளுவநரசிம்மர். ''நாகமரே! பொன்னையும் பொருளையும் பொறுத்தமட்டில் நீங்கள் மிகவும் பொல்லாத மனிதர்! தெரியாமலா சக்கரவர்த்தி உங்களிடம் பொக்கிஷத்தின் திறவுகோலைக் கொடுத்திருக்கிறார்? கட்டளை பிறந்தவுடன் கணக்குப் பார்க்கத் தொடங்கி விட்டீர்களே!''


''கணக்குப் பார்க்காமல் இருந்தால் தெரியுமா? அரண்மனைப் பொக்கிஷத்துக்கே ஒருவராகள் விடாமல் நான் கணக்குப் பார்ப்பவன். இப்போது என்னுடைய பொக்கிஷத்திலிருந்தல்லவா நான் பொருளை எடுத்துக் கொண்டு போய்ப் பாண்டிய நாட்டில் கொட்ட வேண்டியிருக்கிறது......?''

விஜயநகரத்து நிர்வாகமுறை சிற்றரசர்கள் பலரைக் கொண்ட நிர்வாக முறையாகும். சிற்றரசர்களுக்குத் தனி நாடும், தனிப் படையும், தனியான ஆட்சிப் பொறுப்பும் உண்டு. சாம்ராஜ்யத்துக்குத் தேவை

யான போது அவர்கள் படை வீரர்களையும் அவர்களுக்காகும் செலவுகளையும் கொடுத்து உதவ வேண்டும். அதே முறையை யொட்டித்தான் நாகமநாயக்கரை அவருடைய படைகளுடன் பாண்டிய நாட்டுக்குப் புறப்படச் செய்தார் சக்கரவர்த்தி.

''பொக்கிஷத்தைக் காக்கும் வேலைக்கு வந்த பிறகு பொருளே உங்களுக்குப் பெரிதாகத் தோன்றுகிறது!'' என்றார் சாளுவ நரசிம்மர்.

''அரண்மனையிலிருந்து ஒரு வராகன்கூட எனக்கு வேண்டாம்; அதேபோல் என் வராகனை இழப்பதென்றாலும் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது.''



நாகம நாயக்கர் பரம்பரைச் சிற்றரசர் குடும்பத்தில் பிறந்தவர். செல்வக் குவியலுக்கும் அவரிடம் குறைவில்லை. என்றாலும் அவருக்குப் பேராசையோ, பிறர் பொருளைக் கவரும் எண்ணமோ என்றுமே ஏற்பட்டதில்லை. அவருடைய நேர்மைத் திறனும், சிக்கனமும் கண்டிப்புமே அவரிடம் சக்கரவர்த்தியைத் தனாதிகாரிப் பொறுப்பைக் கொடுக்கச் செய்தன. நாகம நாயக்கர் தம்முடைய ஆட்சிப் பொறுப்பிலிருந்த நாட்டின் நிர்வாகத்தையும் அதே சமயம் தமது அதிகாரிகளைக் கொண்டு திறம்பட நடத்தி வந்தார். அதன் செழிப்பைப் பெருக்கிப் பொருள் வளம் கொழிக்கச் செய்தார். இறை வசூலிப்பதில் கண்டிப்பும் செலவுகளில் சிக்கனமுமாக இருந்தார். தமது அதிகாரிகளுக்கும் படைவீரர்களுக்கும் உரிய காலத்தில் கொடுக்க வேண்டியதைக் கொடுத்ததோடு, பேரரசுக்குச் சேர வேண்டிய இறைப் பொருளையும் காலந் தவறாது சேர்ப்பித்தார். இவ்வளவுக்குப் பிறகும் அவரிடம் ஏராளமான பொருள் சேர்ந்தது.

இந்தப் பண்புகள் அவரிடம் இருந்ததாலேயே பாண்டிய நாட்டுக்கு அவரை அனுப்பத் துணிந்தார் சக்கரவர்த்தி.

நாகம நாயக்கர் நரசிம்மரிடம் மனம் திறந்து தமது நிலையை விளக்கினார்:

''பகைவர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்வதென்றால் உற்சாகத்துடன் செல்வேன். போரில் இழந்த பொருள்களையெல்லாம் பகைவர்களிடமிருந்தே மீட்டுக் கொள்ள முடியும். இது சந்திரசேகர பாண்டியருக்காக நடத்தும் போர். அந்தப் பாண்டியரிடம் பேசிப் பார்த்ததில் அவரிடம் ஆட்களோ, ஆயுதங்களோ, கைப்பொருளோ இல்லை என்று தோன்றுகிறது.''

''அப்படியானால் இதைவிடச் சிறந்த வாய்ப்பு உங்கள் வாழ்விலேயே உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை!'' என்று குதூகலத்துடன் கூறினார் அமைச்சர்.

''இதையா வாய்ப்பென்கிறீர்கள்?''

''ஆமாம்; நாட்டை அவருக்கு மீட்டுக் கொடுப்பதற்காக நாம் நம் கைப்பொருளை இழக்கவேண்டுமென்பதில்லை. பாண்டியநாடும் பாலைவனமல்ல. முத்துக் கொழிக்கும் நாடு. உங்களுடைய பொருளைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பாண்டியர் கடமைப்பட்டிருக்கிறார். ஆகவே அங்கு சிறிது காலம் தங்கிப் பாண்டியரிடமே பொருளைப் பெற்றுக் கொண்டு நீங்கள் திரும்பி வரலாம்.''

''நல்ல யோசனைதான்'' என்றார் நாகம நாயக்கர்.

''நாகமரே! உங்களுடைய அதிர்ஷ்டம் எதுவென்றே இன்னும் நீங்கள் உணரவில்லை. இந்த வாய்ப்பை மட்டும் சக்கரவர்த்தி எனக்குக் கொடுப்பதானால் நான் இந்த அமைச்சர் பதவியைக்கூட இதற்காக விட்டுவிடத் தயங்க மாட்டேன். பொருள் எங்கே போய்விடப் போகிறது? பாண்டிய நாடே உங்களுடைய அதிகாரத்தின்கீழ் வரும்போது, கைப் பொருளுக்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்?''

இதுவரையில் அமைதியாக இருந்த விசுவநாதன் பெரியவர்களுக்கிடையில் குறுக்கிட்டுப் பேசத் தயங்கிக் கொண்டிருந்தான். என்றாலும் அவன் கருத்தையும் அங்கே கூற வேண்டும் போல் தோன்றியது.


''அப்பா! நமக்குச் சொந்தமாக உள்ள நாடு, நம்முடைய செல்வம், படைகள் எல்லாமே நமக்கு விஜயநகரத்தில் பணிசெய்வதற்காகக் கிடைத்தவைதானே? அதன் சார்பில் பாண்டிய நாட்டுக்காகச் செலவு செய்தால், மீண்டும் நாம் இங்கேயே அதைத் தேடிக் கொள்ளலாமே?'' என்றான்.


''பார்த்தீர்களா, உங்கள் குமாரனை! சக்கரவர்த்தியிடம் பழகிப் பழகி அவர் எப்படிப் பேசுவாரோ, அப்படியே பேசக் கற்றுக் கொண்டிருக்கிறான்!'' என்றார் சாளுவ நரசிம்மர். ஆனால் அவனுடைய கேள்விகளுக்கு அவர்களில் யாருமே அவனுக்கு மறுமொழி கூற முன்வரவில்லை.

சாளுவ நரசிம்மருக்கு அப்போதுதான் விசுவநாதனை அருகில் வைத்துக் கொண்டு பேசுவது அவ்வளவு உசிதமல்ல என்று தோன்றியிருக்க வேண்டும். பேச்சை நிறுத்திவிட்டு உள்ளே எழுந்து சென்றார்.

(தொடரும்)

சீரிய திட்டமே வெற்றிக்கு வழி





இராணுவத்தில் பணி புரியும் பெண்

சர்ச்சில் பதில்!

மேற்கு ஜெர்மனி இராணுவத்தில் ஒரே ஒரு பெண் கார்ப்பொரல் பதவி வகிக்கிறாள். இவ்வளவுக்கும் அந்தப் பெண், இலங்கையில் பிறந்தவள். ஆனால் ஆல்பர்ட் என்று ஆணின் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறாள். தென் மேற்கு ஜெர்மனியில் பாரசூட் படையில் இந்தப் பெண் பணியாற்றி வருகிறாள்.

பெண் என்பதால் மற்ற இராணுவ வீரர்கள் விழுந்து விழுந்து கவனிக்கிறார்கள். இதனால் ஆல்பர்ட் ஊறிப் போய் விட்டாள். கூடாரத்தில் மற்ற வீரர்களுடன் படுத்துத் தூங்கும் இப்பெண், அணிவகுப்பின் போது சார்ஜென்ட் மேஜர் ஓட்டிச் செல்லும் காரில் ஜம்மென்று அமர்ந்து கொள்வாள். விமானங்களில் பல முறை பறந்திருந்தும், பாரசூட்டில் குதிக்க ஒரே பயம்! இராணுவ வீரர்களைத் தவிர மற்றவர்களைக் காண இவளுக்கு அதிகமாகப் பிடிக்காது. ஆகாரத்தைப் பற்றியும் கவலையில்லை. பழங்கள், காய் கறிகள், பால், தேன் என்று உள்ளே தள்ளிக் கொண்டேயிருப்பாள்.

செலவுக்குப் பணம் வேண்டுமே! டெலிவிஷனிலும், சினிமாக்களிலும் அவ்வப் போது நடித்து பாங்கில் பணத்தைப் போட்டு வைத்துக் கொள்கிறாள். ஒரேயடியாக நடிக்க ஆரம்பித்து விடாமல், இராணுவ முகாமுக்குத் திரும்பி வந்து தங்கி விடுவாள்.

ஒன்று சொல்ல மறந்து விட்டோம். இந்தப் பெண் ஒரு கரடி. ஆமாம்! கரடியே தான்!

ஆறு மாதக் குட்டியாக இருந்தபோது இக் கரடியை சார்ஜென்ட் மேஜர் வர்னர் புருன்ட் ஒரு கடையில் வாங்கித் தமது முகாமுக்குக் கொண்டு வந்தார். அதுமுதல் இக்கரடி, இராணுவத்திலேயே இருந்து வருகிறது.

—யூ. பி. எல்.

★

அடிமை வாழ்வுக்கு அமெரிக்காவில் முடிவு கட்டி நீக்ரோக்களுக்கு விடுதலை தேடித்தர முற்பட்ட ஆபிரகாம் லிங்கன் உள்நாட்டு யுத்தங்களைச் சமாளிக்க நேர்ந்தது. அப்போது ஒரு தளபதி தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்றவில்லை என்று கேள்வியுற்றதும் ஜனாதிபதி லிங்கன் இதனை விசாரிக்கத் தாமே நேரில் ஸ்தலத்துக்கு விரைந்து விட்டார். கூடாரத்துக்குள் நுழைந்து தளபதியைத் தமது தீட்சண்யமான கண்களால் ஊடுருவினார். எடுத்த எடுப்பில் அவர் கேட்ட கேள்வி: ''தளபதி அவர்களே! உமது பட்டாளத்தை எனக்குக் கொஞ்ச நாட்களுக்குக் கடனாகக் கொடுத்து உதவமுடியுமா ?''

ஒரு நாள் தலைமைப் பதவியைப் பற்றிப் பேச வந்த போது ஐஸன்ஹோவர் ஒரு சிறு கம்பித் துண்டை எடுத்து மேஜையின் மீது வைத்து விட்டுத் தமது உதவியாளரிடம் கூறினார்: ''நான் இதைத் தள்ளவே முயன்று கொண்டிருந்தால் இதனை எந்த இடத்துக்கும் என்னால் எடுத்துக் கொண்டு போக முடியாது. ஆனால் நான் இதை என் பக்கமாக இழுத்தால், இதை எடுத்துக் கொண்டு நான் நினைத்த இடத்துக்குச் செல்ல முடியும் !''

★

புதிதாக ராணுவத்தில் சேர்ந்தோரின் அணிப் பயிற்சி நடந்தது. ஆரம்பப் பயிற்சிக்காக எல்லோரையும் இடது காலைத் தூக்கச் சொன்னார் சார்ஜென்ட். ஒருவன் தவறுதலாக வலது காலைத் தூக்கினான். அவனுக்கு அடுத்தவன் சரியாக இடது காலைத் தூக்கினான். இரண்டு பேருடைய தூக்கிய கால்களும் அடுத்து அடுத்து இருந்தன.

அவர்கள் நின்றிருந்த வரிசையின் முனைக்குச் சென்று பார்த்த சார்ஜென்ட், 'இரண்டு கால்களையும் தூக்கிக் கொண்டிருக்கும் புத்திசாலி யாரப்பா?' என்று கத்தினார்.

★

ராணுவ வீரன் ஒருவன் முகத்தில் ரத்தம் வழிய முகாமுக்கு ஓடி வந்து சார்ஜென்டிடம் கூறியது கவர்ச்சிகரமாக இருந்தது: ''சார்! விரோதி ஒருவன் என்னைப் பிடிக்க வந்தான். அவன் என்னை அணுகியதும் அவனுடைய பற்களுக்கிடையே என் மூக்கைக் கொடுத்து, அவனைப் பலமாக என் மேல் தள்ளிக் கொண்டு கீழே விழுந்தேன்!''

★

அதிகாலை நேரத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் காண்டர்பரிக்குச் சென்று அங்குள்ள மாதா கோயிலின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார். பிறகு ஆர்ச் பிஷப்பிடம், ''மாதாகோயிலையொட்டியும், வழியிலும் சுற்று வட்டாரத்திலும் மண் மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கிறோம். மனிதனுக்குத் தெரிந்த எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அருகிலுள்ள இடங்களுக்கு நாஜிகளின் குண்டு வீச்சுக்களால் சேதம் விளைந்தாலும் மாதா கோயில் நிச்சயம் சேதப்படாமல் நிற்கும்!'' என்று கூறினார் தீர்மானமாக.

''ஒஹோ! அப்படியா! ஆனால் அவர்கள் வீசும் குண்டு நேரிடையாக மாதா கோயிலின் மீதே விழுந்து விட்டால்?'' என்று சந்தேகத்துடன் கேட்டார் ஆர்ச் பிஷப்.

''அந்த மாதிரி நிகழ்ந்தால், அதைச் சொர்க்கத்திலிருந்து வந்த அழைப்பாகக் கொள்ள வேண்டியதுதான் !'' என்றார் சர்ச்சில்.














சீன ஆக்கிரமிப்பு தொடங்கியபோது ராணுவ மந்திரி ஸ்ரீ கிருஷ்ண மேனன். இந்திய தரைப்படையின் பிரதம தளபதி திம்மையா. வடக் கெல்லையில் இந்தியப் போர்வீரர்கள் கடும் குளிரிலும், பனியிலும் கரடு முரடான மலைப் பகுதிகளிலும் பல கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்தன.







ரித்திரம் கண்ட போர்த்திறம்



[2]

பெருக்கெடுத்தோடும் ஆறுகளைக் கடக்கக் கயிறுகளைப் பற்றியபடி பயங்கரப் பயணம் செய்தனர். நம் ஹெலிகாப்டர்கள் சரியான பாதைகள் கூட இல்லாத மலைப்பகுதிகளுக்கு ராணுவத்தினரை ஏற்றிச் சென்றன. அந்தக் கடும் குளிரில் சில சமயங்களில் துப்பாக்கிகள் வெடிக்காமலே போகும்! எல்லை காத்த இந்திய வீரர்கள் அவ்வப் போது தம் துப்பாக்கிகளைத் துடைத்துச் சரி பார்த்துக் கொண்டனர். இந்தியாவுக்குச் சமயத்தில் போர்க் கருவிகள் வழங்கி உதவி செய்ய அமெரிக்கா முன்வந்தது. அமெரிக்க விமானிகள், திபெத்திய பாணி தலைப்பாகைகளை அணிந்து மகிழ்ந்தனர். அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் போர்முனையில் அமெரிக்கத் தூதுவர் கால்பிரேய்த் பார்வையிட்டார். சீனப் படையெடுப்புக்குப் பிறகு ராணுவ மந்திரியான சவான் இந்திய விமானப் படைக்கென பெங்களூரில் தயாரான விமானங்களைப் பார்வையிட்டுப் பாராட்டினார். பாரத வீரர் மலிந்த நன்னாட்டின் சரித்திரம் நமது இளைஞர்களின் அற்புத சாதனைகளை மறவாது.







சேவைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன்
—அருந்தமா

அம்முக்குட்டியின் தகப்பனார் கூறியதைக் கேட்கக் கேட்க விசாலாட்சிக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. "மற்றப் பல இளம் விதவைகளைவிட இவளுக்கு இன்னல்கள் அதிகம்." என்றார் அவர். "ஒரு சிறு பெண் குழந்தை இருக்கிறது. இவளுடைய மாமனார், மாமியார் குழந்தையைப் பராமரித்து வளர்ப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இவளுடைய கணவன் இறந்துவிட்டபடியால் இவளால் இனி தங்களுக்குப் பயனில்லை என்று என்னிடம் இவளைத் திரும்ப அனுப்பி விட்டார்கள். உங்களுக்குத் தான் தெரியுமே — நானோ ஓர் ஏழை. பெண்ணின் வரதட்சணைக்காக நான் என் சக்திக்கு மீறிக் கடன் வாங்க நேரிட்டது. அந்தக் கடனே இன்னும் தீர்ந்தபாடில்லை. இவளை வைத்துக் காப்பாற்றவும் எனக்கு வசதியில்லை. ஆகவே உங்கள் வீட்டில் இவளுக்கு ஏதேனும் வேலை தருவீர்களோ என்ற ஆசையில் நான் உங்களிடம் இவளை அழைத்து வந்திருக்கிறேன். இவளுக்கு வீட்டுக் காரியங்களில் நல்ல பயிற்சி உண்டு. உங்கள் வீட்டில் இவளைச் சமையல்காரியாக வைத்துக் கொண்டீர்களானால் பெரிய உபகாரமாக இருக்கும்" என்றார்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததும் விசாலாட்சிக்குப் பச்சாத்தாபம் மிகுந்தது. அவள் அளிக்கக் கூடிய பதில் ஒன்றே ஒன்றுதான். தான் 'சரி' என்று சொன்னதைத் தன் கணவர் கல்லூரியிலிருந்து திரும்பி வந்ததும் ஆமோதிப்பார் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ஒரு வாரம் கழித்து அவள் அம்முக்குட்டியைச் சென்னைக்கு அழைத்துச் சென்றாள். அப்பொழுது அப்பெண் ரவிக்கை அணிந்து கொண்டிருந்தாள். தலை நன்றாக வாரி முடியப்பட்டிருந்தது. உடல்கூடக் கொஞ்சம் பூசினாற் போல் ஆகிவிட்டது. அவள் மிகவும் புத்திசாலி என்பது கண்கூடாகத் தெரிந்தது. அதனால் வாழ்நாள் முழுவதையும் சமையல்காரியாக இருந்து காலத்தை ஓட்டுவது என்பதாகச் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அவள் படித்துக் கொண்டே சித்திக்கும் சகாயம் செய்ய வேண்டும் என்று தீர்மானமாயிற்று. படிப்பில் அபிவிருத்தி தெரிந்தால், முடிவில் ஆசிரியையாக விளங்கவும் பயிற்சி அளிக்கப்படலாம்.

சுப்புலக்ஷ்மி பி. ஏ. கடைசி வருஷப் பரீட்சைக்காகச் சிரமப்பட்டு உழைத்துக் கொண்டிருந்தாள். அவள் கொஞ்சமும் பயப்படவில்லை. கட்டாயம் நன்றாகப் பரீட்சை எழுதுவோம் என்ற உறுதியுடன் இருந்தாள். ஆனால் இத்தனை சிறப்புப் பெறுவோம் என்று அவளே எதிர்பார்க்கவில்லை. 1911ம்-வருஷம் மே மாதம் இந்தியா முழுவ

திலும் உள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் அவள் பெயர் அடிபட்டது. சென்னையில் ஒரு பிராமண விதவை முதல் வகுப்பு ஆனர்ஸ் கிடைக்கப் பெற்று அந்த வருஷத்தில் அவளுடன் பரீட்சை எழுதிய சக ஆண்கள் எல்லோரையும்விட மிகச் சிறந்த முறையில் வெற்றி பெற்றிருப்பதாகச் செய்திகள் பிரசுரமாயின. தாற்காலிகமாகத்தான் என்றாலும் அந்தச் சமயத்தில் வெகு பிரசித்தி பெற்றாள் சுப்புலக்ஷ்மி. அவளுக்கு ஒரே ஆச்சரியம்!

அவளுக்கு வழிகாட்டிகளாக விளங்கிய அவளுடைய பெற்றோர்கள் இது வரை யாரும் செய்யத் துணியாத காரியங்களை அவளுக்காகச் செய்து ஒரு நற்பணியைத் தொடங்கியிருந்தார்கள். இதுபோன்ற கடுமையான ஆரம்ப காலப் பணியை தொடர்ந்து வேறு இடங்களில் நடத்திக் கொண்டு போக சுப்புலக்ஷ்மி இப்போது அழைக்கப்பட்டாள். திருவாங்கூர் மகாராஜா தம் சமஸ்தானத்தில் பெண் கல்வி வசதிகள் வளர்ச்சி பெற உதவி செய்யுமாறு அவளை அழைத்தார். அதேபோல் மைசூர் மகாராஜாவிடமிருந்தும் அழைப்பு வந்தது. இலங்கை அரசாங்கம் அவள் அங்கு வந்து உபாத்தியாயினி வேலை செய்தால் மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் (அவள் தந்தை சம்பாதிப்பதைப் போன்று மூன்று மடங்கு) தருவதாகக் கூறி முன் வந்தது.

சென்னையில் கிடைக்கக் கூடிய எந்த உத்தியோகத்தையும் விடப் பெரிய பெரிய வாய்ப்புகளை இந்த அழைப்புகள் அளிப்பதாகத் தோன்றியது. அவளுக்கோ பிரயாணம் செய்யப் பிடிக்கும். புது இடங்களைப் பார்க்கவும், தன் வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட மனிதர்களைப் பார்க்கவும் அவள் விரும்பினாள். தன் தலைமுறையைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளிடம் தவிர மற்றவர்களிடம் அவளுக்கு அதிகம் சங்கோஜம் இருக்கவில்லை. இந்தச் சங்கோஜத்தையும் அதிகப் பிரயாசையில்லாமல் சமாளித்துவிடலாம் என்று தெளிந்தாள்.

இருந்தாலும் இந்த எல்லா அழைப்புக்களையும் அவள் மறுத்து விட்டாள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் பகவத் கீதையிலிருந்து சுலோகங்களை மனனம் செய்யும்போதெல்லாம் தன்னால் சென்னையை விட்டுச் செல்ல முடியாது என்பதை அவள் உணர்ந்தாள். பகவான் கிருஷ்ணர் வீரன் அர்ஜுனனிடம் கூறியிருந்தார்: ''மனிதன் தன் கடமையைச் செய்வதுதான் மிகவும் நல்லது. அதைத் திருப்திகரமாகச் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை. திருப்திகரமாக இன்னொருவனுடைய கடமையைச் செய்வதைவிடத் தன் கடமையைச் சுமாராகச் செய்வது மேலானது. தன்னுடைய கடமையை நிறைவேற்றும்போது சாவு வருமாயின் அது கூட மிக உன்னதமானது.''

அவளுக்குத் தன்னுடைய கடமை தெளிவாகத் தெரிந்தது. எந்த ஓர் ஆசைக்காகவும் அந்தக் கடமையிலிருந்து தான் பிறழக் கூடாது என்று அவள் உறுதி பூண்டாள்.

சுப்புலக்ஷ்மியை வீட்டோடு இருக்குமாறு வற்புறுத்திச் சம்மதிக்க வைக்க இன்னமும் அவள் தாயார் ஆசைப்பட்டாள். அவள் சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும் சொல்லப் போனால் பணம் ஈட்டுவது இளம் பெண்கள் செய்யாத காரியம். வீடோ தாராளமாக இருந்தது. இன்னும் இரண்டு மூன்று இளம் விதவைகளுக்கு இடம் அளிக்கலாம். அந்த வீட்டுக்கு முக்கிய வாயில் பக்கவாட்டில், அதுவும் செடி கொடிகளினால் மறைக்கப்பட்டிருந்தது. வேலைக்காரர்கள் வரும் வழியோ வீட்டுக்குப் பின்புறம் ஒரு சந்துப் பக்கமாக இருந்தது. பெண்கள் தனித்து மறைவாக இருக்க வசதியான இடம். தவிரவும் சகோதரியே பிறகு சொன்னது போல், ஆண்களே இல்லாத இடத்தில் சில இளம் விதவைகள் இருப்பதை யாரும் கண்டிக்க முடியாது.

அம்முக்குட்டிக்குத் துணையாக அவளோடு சேர்ந்திருக்கப் பெற்றோரின் அனுமதி பெற்று வரக்கூடிய பெண்கள் வேறு யாரேனும் உண்டா என்று பார்ப்பதில் சுப்புலக்ஷ்மி ஆவலாக இருந்தாள். சித்தி வீட்டிலேயே இருப்பதினால் அப்பெண்களைக் கவனித்துக் கொள்ளத் தானும் வீட்டிலேயே இருக்கக் காரணமில்லை. தான் ஆசிரியப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவள் உணர்ந்திருந்தாள்.

செகண்டரி ஸ்கூல் ஆசிரியப் பயிற்சி அளிக்கக் கூடிய கல்லூரி ஒன்றே ஒன்று தான் சென்னையில் இருந்தது. மாநிலக் கல்லூரியைப் போலவே அங்கும் பெரும்பாலோர் ஆண்களே. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பட்ட துன்பத்துக்குப் பிறகு மறுபடியும் ஆண்களிடையே படிப்பதற்குச் சுப்புலக்ஷ்மிக்குத் துணிவு வரவில்லை.

மேலும் ஆசிரியப் பயிற்சியை மேற்கொள்ளுகிறவர்கள் பயிற்சிக்காகப் பாடங்கள் சொல்லித் தரவும் வேண்

டும். தான் சகித்துக் கொள்ளும்படி நேரக்கூடிய குறும்புத்தனமும், கேலிப் பேச்சும், விஷமச் செய்கைகளும் மாதிலக் கல்லூரியைவிட மிக மோசமான முறையில் இருக்கும் என்று அவள் அறிவாள். ஆகவே, ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெறுவதற்கு வேறு வழிதான் அவள் தேடியாக வேண்டும்.

அவள் பி. டி. பள்ளிக்கூடத்துக்குச் சென்றாள். அவளுடைய பழைய தலைமை ஆசிரியை மிஸ் பாட்டர்ஸன் தன் பள்ளிக்கூடத்தில் மகிழ்ச்சியுடன் அவளுக்கு ஒரு வேலை தந்தாள். சம்பளம் சொற்பம்தான். மாதம் ஐம்பது ரூபாய். ஆனால் அங்கு வேலையிலிருந்து கொண்டே அவள் தன் ஓய்வு நேரங்களில் எல். டி. பரீட்சைக்குப் படித்துப் பரீட்சை எழுதவும் முயலலாம். அதிகாரிகள் ஒரே ஒரு தடவை சட்டங்களையெல்லாம் தளர்த்தி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லாமலேயே சொந்தமாகப் படித்த மாணவியாக அவளைக் கருதி வருஷ இறுதியில் பரீட்சை எழுத அனுமதிப்பார்கள் என்று தலைமை ஆசிரியை தீர்மானமாக நம்பினாள்.

தலைசிறந்த ஓர் ஆசிரியையாகத் திகழ்வதற்குச் சுப்புலக்ஷ்மிக்கு வெறும் காகிதங்களில் எழுதப்பட்ட தகுதிகள், பட்டம் பெற்றதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஏதும் தேவைப்படவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், பட்டங்கள் லௌகிகத்தில் பயன்பட்டன. மனோதத்துவப் புத்தகங்களும் படிக்கச் சுவாரசியமாக இருந்தன. அவள் தான் கற்கவேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன என்பதை உணர்ந்து, பாடம் சொல்லித் தராத சமயங்களில் ஆழ்ந்து படிப்பதில் சுறுசுறுப்பாக இருந்தாள்.

இந்தச் சமயத்தில்தான் அவள் தன் பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள். அவள் ஒருநாள் பள்ளிக்கூடத்து மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தபோது ஆந்திராவிலிருந்து வந்திருந்த இரண்டு ஸ்திரீகளைக் கடக்க நேர்ந்தது. அவர்கள் தன்னைக் குரூரமாக உன்னிப் பார்த்ததையும், தான் அருகில் சென்றதும், ஒதுங்கிக் கொண்டதையும் அவள் கவனித்தாள். அவள் ஓரடி அப்பால் நகர்ந்ததும் அவ்விருவரில் ஒருத்தி மற்றவளிடம் குத்தலான குரலில், "சரி—, இவளைப் பார்த்தது சுப சூசகமாக இருக்கும் என்று நம்புவோம்" என்று கூறினாள்.

அவ்வாறு 'சுப' என்று உச்சரித்து அவள் கேட்டது அதுதான் முதல் தடவை. வீட்டில் எல்லோரும் கூப்

●—●—●—●—●—●—●—●—●—●—●

ஆரோக்கியம் எப்படி?

இரண்டாம் உலகப் போர் தீவிர கட்டத்தை அடைந்திருந்த சமயம். சர்ச்சில் யுத்தகளத்தின் பல்வேறு முனைகளுக்கும் திடீர் விஜயம் செய்து கொண்டிருந்தார். ஓரிடத்தில் மாண்ட்கோமரி தமக்கு இயல்பான விதத்தில் பயங்கர யுத்தத்தின் மத்தியிலும் அமைதி இழக்காமல் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கக் கண்டார் சர்ச்சில்.

"என்ன மிஸ்டர், மாண்ட்கோமரி! உடம்பெல்லாம் சரியாக இருக்கிறதா?" என்று கேட்டார் சர்ச்சில். ராணுவத்தில் உள்ளோருக்குத் தேக ஆரோக்கியம் தானே அதிமுக்கியம்?

"ஆகா! நான் குடிப்பதில்லை, அபூர்வமாகத்தான் சிகரெட் பிடிப்பேன். நாளைக்கும் பத்துப் பன்னிரண்டு மணி நேரத்துக்குக் குறையாமல் தூங்குவேன். சரியான வேளையில் அளவாகச் சாப்பிடுவேன். தேகாப்பியாசங்கள் செய்வேன். இதனாலெல்லாம் நூறு சதவிகிதம் தேக ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்" என்றார் மாண்டி பெருமிதத்துடன்.

சர்ச்சில் புன்னகையுடன் சுருட்டுப் புகையை ஊதினார். "மாண்டி! நான் குடிக்கிறேன், அடிக்கடி சுருட்டுப் பிடிக்கிறேன், வேளை கெட்ட வேளையில் சாப்பிடுகிறேன், ஏதோ நேரம் கிடைக்கும்போது கண்ணயருகிறேன், தேகாப்பியாசங்கள் ஏதும் செய்வதில்லை. இருந்தாலும் இருநூறு சதவிகிதம் தேக ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்!" என்றார்.

●—●—●—●—●—●—●—●—●—●—●

பிடும்போது 'சுப்பு' என்பதற்கு ஒன்றும் அர்த்தமே இல்லை. சுபம் என்பது நல்லதையோ, அதிருஷ்டத்தையோ குறிக்கிறது என்பதை வெகு நாட்களாகவே அவள் அறிந்திருந்தாள். ஒரு விதவையைப் பார்த்தால் அது அசுபம் என்றும், யாராவது காலையில் வெளியே கிளம்பும்போது ஒரு விதவையைப் பார்க்க நேரிட்டால், மீண்டும் வீட்டுக்குள் சென்றுவிட்டு வருவதையும் அவள் அறிவாள்.

அந்த இரண்டு ஸ்திரீகளும் அப்படியே படிக்கட்டில் பாதி வழியில் நிலையாக நின்று திரும்பி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு தன்னை அவர்கள் வெறித்துப் பார்ப்பது அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதுவும் அவ்வாறு முறைத்துப் பார்க்கும்போது அவள் பள்ளிக்கூடத்தின் ஆங்கிலப் பகுதியில் பாடம் போதிக்கும் ஒரே இந்தியப் பெண் என்பதற்காகவோ, பள்ளிக்கூடத்திலேயே வயதில் மிகச் சிறிய ஆசிரியை என்பதற்காகவோ வியப்புடன் விழித்துப் பார்த்தார்களா என்றால் இல்லை! தான் ஒரு விதவை என்பதினால்தானே? இதனை அறிய அவளுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதே சமயத்தில் ஐசுவரிய தேவதையினைக் குறிப்பிடும் 'லக்ஷ்மி' என்னும் தனது பெயர் அதன் முன்னால் சேர்க்கப்பட்டுள்ள இரண்டு எழுத்துக்களினால் மேலும் லக்ஷ்மீகரமாக்கப்பட்

டதை நினைத்து அவள் பூரித்தாள். பெருமிதப் பூரிப்படைந்த நெஞ்சத்துடன் தலை நிமிர்ந்து நடந்தாள். இத்தகைய நல்ல பெயர் தனக்குச் சூட்டப்பட்டதன் அர்த்தமே தன்னால் பிறருக்குப் பல நன்மைகள் உண்டாகும் என்பதாகத்தானிருக்கும் என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். அவள் தனக்கென்று ஒன்றும் கோரவில்லை. தான் தொடங்கியிருக்கும் பணியைத் தொடர முடிந்தால் போதும்.

இன்னும் மூன்று விதவைகள் அரசமரத்து வீட்டுக்கு வந்து வசிக்கலாயினர். இருவர் பெரிய பெண்கள். எல்லோரையும் விடச் சிறியவளுக்குப் பதினொரு வயதுதான். அவள் ஏற்கனவே பி. டி. ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தாள்.

அவள் பெயர் பார்வதி. அவள் தந்தை பெயர் டி. எஸ். முத்துசாமி ஐயர். சேலத்தில் பள்ளி ஆசிரியராக இருந்தார். சேலத்துப் பிராமணர்கள் மிகவும் ஆசாரப் பற்றுள்ளவர்கள் என்று பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களிடையே புரட்சிக்காரர்களும் இருந்தார்கள். சம்பிரதாயங்களை எதிர்த்துப் புதிய விஷயங்களைப் புகுத்தி வந்த இளைஞர்கள் இருந்தார்கள். இத்தகைய சமூகச் சீர்திருத்தவாதிகளுள் முன் நின்றவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். சிறந்த வழக்கறிஞரான அவரும் அவருடைய நண்பர்களும் ஆசாரமிக்க இந்துக்களின் கருத்துக்களைத் தகர்த்தெறிந்து, தங்கள் வீட்டில் தீண்டாதாரை அழைத்து அவர்களுடன் கூட உணவு அருந்தினர். பெரும்பாலோர்க்குப் பிடிக்காத துணிகரமான புதுமைகளாகிய விதவை மறுமணம், கலப்பு மணம் போன்றவைகளுக்கு ஆதரவு தந்தனர்.

அந்த நண்பர்களில் சேஷய்யர் என்ற ஓர் இளம் ரசாயனப் போதகர் இருந்தார். ரொம்பவும் புத்திசாலிக் குழந்தையான பார்வதியை உள்ளூரிலேயே பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டும் என்று அபிப்பிராயம் கூறினதே இந்தச் சேஷய்யர்தான். பார்வதியின் ஒன்பதாவது பிறந்த நாள் முடிந்ததும் அவளுக்குக் கல்யாணமும் நடந்து விட்டது. அவளுடைய பெற்றோரான முத்துசாமி ஐயரிடமும் அவர் மனைவியிடமும் மகளின் திருமணத்தை ஒத்திப் போடுமாறு சேஷய்யர் யோசனை கூறவில்லை. எனினும் அவள் புக்ககம் போகும்வரையில் பள்ளியில் சேர்ந்து படிக்கட்டும் என்று கூறி அவர்களை அதற்கு இணங்க வைத்தார்.

பார்வதிக்குப் பள்ளிக்கூடம் என்றால் உயிர். மற்றப் பெண்களெல்லாம் நடுநடுவே ஜலதோஷம், கல்யாணம், கார்த்திகை என்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி அடிக்கடி பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போடுவார்கள். பார்வதி அவ்வாறில்லை. அவளுக்கு எல்லா இடங்களையும் விடப் பள்ளிக்கூடம்தான் கவர்ச்சி மிக்கதாகத் தோன்றியது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவளைப் பள்ளிக்கூடம் போகாமல் தடுத்து நிறுத்த முடியாது.

இதனால், கல்யாணமான சில மாதங்களுக்கெல்லாம் ஒரு நாள் காலை அவள், "நான் இன்று பள்ளிக்கூடம் போகப் போவதில்லை" என்று கூறினதும் அவள் பெற்றோருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

"ஏன்?" என்று அவள் தாயார் கேட்டாள். பார்வதிக்குப் பதில் சொல்ல முடியவில்லை. தனக்கு ஏன் அவ்வாறு தோன்றியது என்று அவளாலேயே சொல்ல முடியவில்லை. ஜுரமோ, தலைவலியோ ஒன்றுமில்லை. நன்றாகவே இருந்தாள். என்னமோ இன்றைக்கு வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று அவளுக்குப் பட்டது.

சிரித்த முகமும், சாதுத்தன்மையும் சொன்ன பேச்சைக் கேட்கும் சுபாவமும் படைத்தவள் அவள். வீட்டின் கடைசிக் குழந்தை. அவள் விருப்பப்படி செய்ய விடுவது வழக்கமாக இருந்தது. அவள் விருப்பத்துக்கு மாறாக அவள் கண்டிப்பாகப் பள்ளிக்குப்போய்த் தானாகவேண்டும் என்று சொல்ல அவள் பெற்றோர் எத்தனிக்கவில்லை. அவள் தன் இஷ்டப்படி வீட்டிலேயே இருந்தாள்.

அந்தத் தினத்தைப் பார்வதியால் என்றும் மறக்க முடியாது. அன்று பிற்பகலில் தன் பெற்றோர்களுக்குக் கிடைத்த செய்தி சம்பந்தமாகக் காலையிலேயே தன் உடலில் ஏதோ ஓர் உள்ளுணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று பின்னால் அவளுக்குத் தோன்றியது.

சிறுவனான அவளுடைய கணவன் இறந்து விட்டான் என்று அந்தக் குழந்தை பார்வதியிடம் கூறுகையில் அவள் தாயார் கதறிவிட்டாள். பார்வதியும் அழுதாள். அவள் அந்தப் பிள்ளையுடன் பேசிப் பழகி விளையாடியதில்லை. அவனுக்கோ தனக்கோ நேர்ந்த கதியைக் குறித்து அவளுக்கு வருத்தம் தோன்றவில்லை. எல்லோரும் சோகத்தில் ஆழ்ந்து அழுது கொண்டிருந்தபடியால் அவர்கள் பொருட்டுத் தானும் அழுதாள்.

(தொடரும்)

மயிர்க்கூச்செறியச் செய்யும் சம்பவங்கள் நிறைந்த

களவுபோன முத்து மாலை



பகட்டான
பல வர்ணங்களில்—
வேதாளனும்,
விலங்கு ராஜாவும்
தோன்றும் அம்சம்

அழகி டயானுவை சிறைமீட்கும் வேதாளன் தானே சிறைப் பட்டுவிடுகிறன். ஆனல் விரைவில் 'விலங்கு ராஜா'வினுல் குரங்கு மூலம் அனுப்பப்பட்ட சிறைச்சாலைச் சாவிகளின் உதவியால் வேதாளனும் டயானுவும் தப்பிவிடுகின்றனர். போகும் வழியில் அவர்கள் ஒரு அதிசயமான காட்சியைக் காண்கிறர்கள் — யானைக்கூட்டம் ஒன்று, ஒரு கிராமத்தைச் சின்னபின்னமாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த நாச வேலைக்குக் காரணமாக இருப்பது 'விலங்கு ராஜா'தான். வேதாளன் 'விலங்கு ராஜா'வை எட்டிப் பிடிப்பதற்கு முன், ஒரு சிங்கத்தினுல் தாக்கப்பட்டு நினைவிழக்கிறன். சிங்கம் அவனை கண்காணுத ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்கிறது. இதற்குப் பிறகு நிகழும் சம்பவம் உங்களை மயிர்க்கூச்செறியச் செய்யும்.

மேலும்:

குஞ்சப் பின்னே: பிரான்ஸில் தனது பயணத்தைத் தொடர்ந்து, இத்தாலிக்குச் செல்கிறர்... எல்லாம் கண்கவர் வர்ணப் படங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

விஞ்ஞான யுகம்: படங்களின் மூலம், டெலிவிஷனின் இயக்கத்தைப்பற்றிய விவாதமும் விளக்கமும்

குருஜீயின் க்னப்: சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு—கண்கவர் வர்ணப் படங்களில்.

மனிதக்குலத்தின் கதை: இந்தியக் கடற்படையைப் பற்றிய ருசிகரமான, வர்ணச் சித்திர விளக்கம்.

இவற்றையெல்லாம் உங்களுக்கு அளிப்பது

இந்திரஜால் காமிக்ஸ்

(மாத வெளியீடு)

விலை: 60 பைசா

- இந்தியாவின் முதன் முதலான, ஒரே காமிக் இணுக்குப் பத்திரிகை
- முழுவதும் பல வர்ணங்களில் தீட்டப்பட்ட 28 பக்கங்கள் கொண்டது!

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு

பென்னெட்கோல்மன்
& கோ. லிட்.,
42, வைட்ஸ் ரோடு,
ராயப்பேட்டை, மதறுஸ் 14.

JWT-BC-4344

57. "வேற்படை என்ன செய்யும்?"

சுவாமியுடன் சமர் புரிவது என்றே சூரன் சங்கற்பித்து விட்டான். எனினும் வேலாயுதனின் விசுவரூப தரிசனம் பெற்றது பற்றி அகமகிழ்ச்சியும் உற்றான். தான் தேவர்களை யெல்லாம் சிறை வைத்தது தவறு என்று அனைவரும் இடித்துரைத்தனரே! அவர்கள் பேச்சைத் தான் கேளாததும் நன்மைக்குத்தான். இல்லாவிடில் தன்னுடன் போரிடப் பரமன் வருவானா, அகிலாண்ட ரூப அமுத தரிசனம் தருவானா என்று எண்ணினான் சூரபன்மன்.



ஏதமில் அமரர் தம்மை
  யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர்
  அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை
  விண்ணவர் பலரும் காணா
நாதன்இங் கணுகப் பெற்றேன்
  நன்றதே ஆன தன்றே

அசுரர் தலைவனான சூரபன்மன் அமரர்களுக்குச் செய்த தீங்கு இப்பொழுது நன்மையாகி விட்டது.

"தனிமுதல் தலைவராகிய முருகப் பெருமானுடன் இதுகாறும் போர் செய்தேன். இனி நெஞ்சம் தளரமாட்டேன். முருகப் பெருமானுடன் போர் செய்தேன் என்ற பொன்றாப் புகழ் எனக்கு என்றும் இருக்கும்" என்று எண்ணினான் சூரபன்மன். ஆதலால் அவன் எம்பெருமானை வணங்கவில்லை.

ஒன்றொரு முதல்வ னாகி
  உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள்
  நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன்
  வீரனும் நானே யானேன்
என்றும் இப்புகழே நிற்கும்
  இவ்வுடல் நிற்பதுண்டோ?

சூரன் சுவாமியை வணங்காததற்கு மற்றொரு காரணமும் உண்டு. தான் முருகனின் கொடியான சேவலும் வாகனமான மயிலுமாக வேண்டும் என்று முன்பிறப்பில் தவம் செய்தவன் சூரபன்மன். ஆகவே, அவன் எம்பெருமானை வணங்கி விட்டால் அவனை எம்பிரான் இரு கூறுக்கி — சேவலும் மயிலும் ஆக்கி — அவன் செய்த தவத்தின் நோக்கத்தை ஈடேற்ற இயலாது.

முன்பு சூரபன்மன் செய்த தவத்தின் நோக்கத்தை நிறைவேற்றக் கருதிய முருகப் பெருமான், அவனை நடுங்க வைத்த பரகமேசுவர வடிவத்தை நீக்கி, மயில் வாகனத்திலிருந்த பழைய திருவுருவங் கொண்டார். சூரபன்ம

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

னுக்குக் கொடுத்திருந்த ஞானக் கண்ணையும் நீக்கினார். அவன் பழைய படியே அகம்பாவம் கொண்டான்.

காரண னாகித் தானே
  கருணையால் எவையுநல்கி
ஆருயிர் முழுது மேவி
  அனைத்தையும் இயற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன்
  போதம தளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யும்
  சூழ்ச்சியோ அரியதன்றே

சூரபன்மனின் ஞானம் நீங்கியதும் பழைய பகையும் சினமும் பொங்கின. மயில் வாகனத்திலிருந்த முருக வேளைக் கண்டான். தணிக்க முடியாத கோபம் கொண்டான்; போர் செய்வதிலே ஊக்கம் கொண்டான். ''என் வலிமை அழகிது'' என்று கையொடு கைதட்டிச் சிரித்தான். ''இப்பாலகனாகிய கள்வன் என்னுடன் போர் செய்வதற்கு அஞ்சித் தான் கற்ற மாயத்தைக் காட்டி என்னை ஏமாற்றி விட்டான். ஆயினும் அந்த மாயத்தை உணர்ந்து நான் அழித்து விட்டேன். அவனை வணங்க வில்லை. மற்ற அமரரை யெல்லாம் நான் வென்றது ஒருபுறமிருக்க இவனுடைய மாயத்தையும் அழித்ததால் எனக்கு நிகரானவர்கள் எவரும் இல்லை. நான் என்றும் அழியாத உடல் மட்டும் பெற்றவன் அல்ல போலும். என் அறிவும் கருத்தும்கூட அழியாமலே இருக்கும் எனக் கண்டு கொண்டேன். இனி இந்தப் பாலகனுடன் போர் செய்து வெல்வேன். அதற்கு முன்னதாக இச்சிறுவனை அழைத்து வந்து இந்தப் பெரும் போரை மூட்டிவிட்ட தேவர்களின் உயிரை யெல்லாம் உண்டு என் சினத்தைத் தணித்துக் கொள்வேன்'' என்று எண்ணினான் சூரபன்மன். அரிஅயனாதி தேவர்களுடன் போர் செய்ய முடிவு செய்தான்.

சூரபன்மன் ஒரு மாயமந்திரம் ஜபித்து விண்ணும் மண்ணுமாகப் பெரியதோர் இருள் வடிவத்தை எடுத்தான். அவ்வடிவத்தைக் கண்டு கதிரவனும் மயங்கினான். தேவர்கள், ''இது சூரபன்மன் செய்துள்ள மாயம்'' என்று கலங்கினார்கள். மாய வடிவத்துள் மறைந்து நின்று ஆரவாரம் செய்த சூரபன்மன் பல தலைகளும், அளவற்ற கரங்களும் கூடிய உருவத்துடன் தேவர்களைக் கொல்லப் பாய்ந்து சென்றான். தேவர்கள், அந்தக் கனத்த காரத்தில் திக்குத்திசை தெரியாமல் சிதறி ஓடினார்கள்; அரற்றினார்கள்; அலறினார்கள். இருளில் தேவர்களின் குரல் கேட்டது; முகம் தெரியவில்லை.

''நண்ணினர்க் கினியாய் ஓலம்!
  ஞானநா யகனே ஓலம்!
பண்ணவர்க் கிறையே ஓலம்!
  பரஞ்சுடர் முதலே ஓலம்!
எண்ணுதற் கரியாய் ஓலம்!
  யாவையும் படைத்தாய் ஓலம்!
கண்ணுதற் பெருமான் நல்கும்
  கடவுளே ஓலம்! ஓலம்!
தேவர்கள் தேவே ஓலம்!
  சிறந்த சிற்பரனே ஓலம்!
மேவலர்க் கிடியே ஓலம்!
  வேற்படை விமலா ஓலம்!
பாவலர்க் கெளியாய் ஓலம்!
  பன்னிரு புயத்தாய் ஓலம்!
மூவரும் ஆகி நின்ற
  மூர்த்தியே ஓலம்! ஓலம்!

''சுவாமி! சூரபன்மன் இருள் உருவில் மறைந்து வந்து எங்களைக் கொல்ல முயலுகின்றான். அவனிடமிருந்து தப்பியோடவும் நாங்கள் வலிமையற்றவர்களாக இருக்கிறோம். சுவாமி! இனி நாங்கள் எங்கே உய்வோம்? கணப் பொழுதும் தாமதம் செய்யாது அவனைக் கொன்று எங்களைக் காத்தருளும்'' என்று தேவர்கள் வேண்டிக் கொண்டனர். ''என் ஐயனே, இனியும் தாமதிக்கலாகாது. சூரனை இப்போதே கொன்று எங்களை ஆண்டருள வேண்டும்'' என்று மயிலுருக் கொண்டு முருகவேளைத் தாங்கி நின்ற மகபதியும் முறையிட்டுக் கொண்டான்.

முருகக் கடவுள் தேவர்களின் முறையீட்டையும், சூரபன்மன் மாயையின் ஆற்றலையும் திருவுள்ளத்தில் எண்ணினார். தருணம் வாய்த்துவிட்டது என்று மனம் கொண்டு விட்டார் முருகப் பெருமானார். தம்முடைய திருக்கரத்தில் இருக்கும் வேற்படையை நோக்கி, ''விரைவில் சூரபன்மனின் மார்பைப் பிளந்து வருவாய்'' என்று மங்கல ஆக்ஞையிட்டு ஏவினார்.

ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை ஆயிரங்கோடி சூரியர்களைப் போல் ஒளி விட்டுத் தீ ஜ்வாலைகளை உமிழ்ந்து சென்று சூரபன்மனின் இருள் வடிவத்தை அழித்தது. தன் மாயை அழிந்ததையும் வேற்படை எதிரே வருவதையும் நோக்கிய சூரபன்மன், ''அழியாத மேன்மையுடைய என்னை இந்தப் பாலகன் ஏவிய வேற்படை என்ன செய்யும்?'' என்று ஏளனமாகச் சிரித்தான். மிகுந்த கோபம் கொண்டு, ''நிலவுலகையும், திக்குக்களையும், மேல் கீழ் உலகங்களையும்

அழிப்பேன்'' என்று ஆரவாரித்தான். உடனே அவன் கடலின் நடுவில் சென்று அக்கினி போன்ற தளிர்களையும், புகை போன்ற இலைகளையும், மரகதம் போன்ற காய்களையும், மாணிக்க மணி போன்ற பழங்களையும், முகில்கள் போன்ற கிளைகளையும் ஈன்று அண்டகூடம் வரையிலும் பரவிய பெரியதொரு தருவாக உயர்ந்து நின்றான். திகந்தம் வரை சிறு கிளைகளை நீட்டியும், பூமியைத் தாங்கும் ஆதி கூர்மம் வரை தேவர்களை ஓட்டியும், மண்ணிலும் விண்ணிலும் நிழலைப் பரப்பினான். சூரிய சந்திரர்களும், அட்ட திக்குப் பாலகர்களும், தேவர்களும் அஞ்சும்படியாக இலக்கம் யோசனை அகன்று நின்ற சூரன் என்ற மாபெரும் மாமரம் மேருமலை அசைந்தாற்போல் கிளைகளை அசைத்தது. அந்த அசைவினால் நிலவுலகங்கள் இடிந்தன; தேவர்கள் அஞ்சி ஓடிக் கயிலை மலையிலும் மேருகிரியிலும் புகுந்தனர்.

ஆயினும் இதொன்றையும் பொருட்படுத்தாமல் ஐயனின் வேற்படை ஆயிரங்கோடித் தேயு அண்டங்களிலுள்ள அக்கினிகளும் ஒருங்கு சேர்ந்தாற்போல் வெம்மையுடன் சென்றது; சர்வ சங்காரகால உத்திர மூர்த்தி போலவும், ஆதியந்தமில்லா அருணாசல அக்கினி போன்றும் சென்றது. விண்ணும் மண்ணும் கடலும் பிறவுமுள்ள இடங்களில் தீப்பிழம்பை வீசியது. இவ்வாறு சென்ற வேற்படை சூரபன்மனாகிய அந்தக் கொடிய மாமரத்தைச் சங்கரித்தது. மரமும் பற்றி எரிந்தது. சூரவிருட்சத்தை வேல் அழித்தாலும் சூரபன்மன் அழியவில்லை. மரவடிவம் மரித்த பின்னரும் அமரரின் எதிரியான பழைய வடிவமும், வச்சிர சரீரமும் பெற்றான் சூரபன்மன். ''இவ் வேலையும் வேலை எய்தவனையும் வெல்வேன்' என்று வெஞ்சினம் கூறி வாளை உருவி எதிர்த்துச் சீறினான். (தொடரும்)

விநோத ஆபரேஷன் !

வியட்நாம் யுத்தத்தில் எத்தனையோ விநோதங்கள் என்றாலும் எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதாக இருக்கிறது அந்தச் செய்தி:

தென்வியட்நாமியக் குடியானவன் வான்சின் இரவில் தன் குடிசையை விட்டு வெளியே வந்தான். அவன் முதுகு திரும்பியதும் மறைந்திருந்த வியட்காங் கொரில்லா ஒருவன் கைக் குண்டை அவன் மீது பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டே வீசிவிட்டு ஓடி மறைந்தான். கைக் குண்டு வெடிக்கக் குறைந்த பட்சம் பன்னிரண்டு கஜ தூரம் வீசப்பட வேண்டும். ஆனால் அதற்கும் குறைந்த தொலைவிலிருந்து வீசப்பட்ட அந்தக் குண்டு வான்சினுடைய முதுகில் பதிந்து கொண்டது. வெடிக்கவில்லை !

அவனைத் தலைநகர் ஸைகானுக்கு அவசரம் அவசரமாக அழைத்துப் போனார்கள். பரிசோதித்துப் பார்த்த அமெரிக்க ராணுவ டாக்டர்கள் குண்டு வெடித்தால் அது, ஓரங்குல நீளமுள்ள இரும்பு ஊசிகளை செகண்டுக்கு 4,800 அடி வேகத்தில் பாயுமாறு வாரி இறைக்கும் என்று உணர்ந்தார்கள். அந்நிலையில் எப்படி ஆபரேஷன் செய்து அதனை வெளியே எடுப்பது?

மணல் மூட்டைகளைக் கொண்டு பத்தடி உயரமுள்ள சுவர் எழுப்பினார்கள், டாக்டர்களுடைய தற்காப்புக்காக. அதில் கட்டிலின் உயரத்தில் பத்து அங்குலத்துக்கு ஓர் இடைவெளி இருந்தது. ஜெனரல் தம்பி என்ற அமெரிக்க டாக்டர் ஆப்பரேஷன் செய்ய முன்வந்தார். ஆறு அடி நீளமுள்ள கழியின் நுனியில் ஆப்பரேஷன் கத்தியைப் பொருத்தி அதனை இயக்குவது எப்படி என்று இரவு முழுதும் கண் விழித்துப் பழக்கிக் கொண்டார். மறு நாள் காலையில் மணல் மூட்டைச் சுவரின் இந்தப் பக்கம் இருந்து கொண்டு மறுபுறம் குண்டு புதைபுண்டு கிடந்த நோயாளியின் முதுகில் கழி நுனிக் கத்தியால் ஆப்பரேஷன் செய்தார் டாக்டர். கைக் குண்டைச் சுற்றிலும் மெல்ல நிதானமாகக் கீறினார். பிறகு மிக நீளமான ஒரு சாமணத்தைக் கொண்டு மிக ஜாக்கிரதையாகக் குண்டைப் பற்றி மெல்ல அதனை விடுவித்து எடுத்தார். நல்ல வேளையாகக் குண்டுக்கு உயிர் இருந்தும் அது வெடிக்கவில்லை. லவலேசம் பிசகு நேர்ந்து கழி நுனிக்கத்தி படக்கூடாத இடத்தில் பட்டிருந்தால் வெடிகுண்டு வெடித்து விட்டிருக்கும். ஆனால் டாக்டரின் திறமையும் குடியானவன் வான்சின்னின் அதிர்ஷ்டமும் சேர்ந்து அவனைக் காப்பாற்றி விட்டன. குண்டை மணல் நிறைந்த ஒரு பெட்டியில் வைத்துப் பத்திரமாய் எடுத்துப் போய் நகர்ப்புறத்துக்கு வெளியே அதனை அழித்தார்கள், அத்துறையில் நிபுணர்கள்! குண்டு நீக்கப்பட்ட பின்னர் சௌக்கியமாக நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினான் வான்சின்.





களம் கண்டேன்



அதோ லாகூர்!



பாகிஸ்தானுக்குத் தாயகமென்று சொல்ல ஏதாவது ஓர் ஊர் உண்டென்று சொன்னால் அதை லாகூர் என்று கூறுவார்கள் விஷயமறிந்தவர்கள். 'பாகிஸ்தானம்' என்ற சொல் பிறந்ததே இந்த ஊரில்தான்.

1940-ல் காலஞ்சென்ற முகமதலி ஜின்னா, லாகூர் லீக் மகாநாட்டில் பேசினார். 'அடைந்தால் பாகிஸ்தான் — இல்லையேல் கபர்ஸ்தான்' என்று பேசினார். இந்த லட்சியத்தை அடைய 'வெள்ளித் தோட்டாக்கள்' தேவை என்றும் கேட்டார். உடனே பணம் ஏராளமாகக் குவிந்தது.

1942-ல் ஜின்னாவின் வலக் கரமெனக் கருதப்பட்ட லியாகத் அலிகான், ''பாகிஸ்தானத்தின் தலைநகரம் லாகூர்தான்'' என்று பேசினார். அதோடு தாம் லாகூரிலேயே இனி வசிக்கப் போவதாகவும் அறிவித்தார். பிறகு அப்படியே செய்தாரா என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

இத்தகைய சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர் லாகூர். இந்த ஊரின் தெற்கே ரவி நதியின் கால்வாய் ஒன்று ஓடுகிறது. இக் கால்வாய்க்கு இச்சோகில் கால்வாய் என்று பெயர். இந்தக் கால்வாயின் தென் பகுதிக் கரையின் மேல் டோக்ராய் என்ற நகரம் இருக்கிறது.

டோக்ராய் என்ற இடத்தை நகரம் என்று மற்றவர்கள் கூறினாலும் என்னால் அதை ஏற்க முடியவில்லை. தமிழகத்திலுள்ள ஒரு மேஜர் பஞ்சாயத்துக் கிராமம் போலவே எனக்கு டோக்ராய் பட்டது. பெயர் எப்படியோ போகட்டும். கிராமத்தின் அமைப்பு கவர்ச்சியாக இருந்தது. ஊருக்கு முக்கியத் தேவையான தண்ணீரைக் கொடுக்கக் கூப்பிடு தூரத்தில் கால்வாய். நவீன வசதிக்கு மின்சாரம். சுகாதாரமும் இங்கு உண்டென்பதை எடுத்தோத அகண்ட வீதிகள்—சுமாரான வீடுகள். நாகரிகச் சின்னங்களாகத் தபாலாபீஸ், டெலிபோன், முடியலங்காரக் கடைகள், காதைச் செவிடாக்கும் ரேடியோக் கடைகள், தெம்பு ஊட்ட எண்ணற்ற சாயாக் கடைகள்—இப்படியாகத் திரும்பிய பக்கமெல்லாம் கடை கண்ணிகள்.

இந்த ஊருக்கும் லாகூருக்கும் உள்ள தூரம் சுமார் ஏழு மைல்கள். ஏழு மைல் என்று கூறுவது கூட மிகை என்று கருதுகிறேன். ஏனெனில், மேலான இடமொன்றிலிருந்து பார்த்தால் லாகூர்ப் பட்டண ரேடியோ நிலையத்தின் ஏரியல் கோபுரம் தெரிகிறது. பார்வையைச் சிறிது மேற்குப் புறமாகத் திருப்பினால் பிரசித்தி பெற்ற பாட்டா கம்பெனியின் தொழிற்சாலையும் அதன் புகைக் கூண்டும் பளிச்சிடுகின்றன. புகைக் கூண்டு கம்பீரமாக நிற்கிறது. ஆனால் புகை மட்டும் வரவில்லை.

இந்த இடத்தைப் பிடிக்க நடந்திருக்கும் போர் எல்லாப் போர்களிலும் முதலிடம் பெறத் தக்கது. அங்குலத்துக்கு அங்குலம் பாகிஸ்தானியர் போராடியிருக்கிறார்கள். நமது ஜவான்கள் இதற்குச் சளைக்கவில்லை.

பெரிய பெரிய பீரங்கிகளுடனும் விமானக் குடையுடனும் பாகிஸ்தானியர் நின்றிருக்கி றார்கள். முன்னேறி வரும் இந்திய ஜவான் களைக் கண்டதும் அவர்களுக்கு எப்படிப்பட் டதோ தெரியவில்லை. தளபதி ஒருவர் போர்க் குரல் எழுப்புவார். உடனே நம் தளபதியும் தம் பின்னாலுள்ள படைகளைப் பார்த்துப் போர் முழக்கம் செய்வார். 'ஜே' என்ற கோஷத்தோடு நமது பாரத வீரர்கள் பாய் வார்கள். அடுத்த கணம் ரண களரி.

மேற்கொண்டு ஓர் எதிரிப் படை 'பாகிஸ் தான்' எனக் கத்தும். எதிர்த் தரப்பு துருப்புகள் 'ஜிந்தாபாத்' எனக் கோஷமிட்டுத் தாக்குவார்கள்.

நமது படை 'ஹிந்துஸ்தான்' என முழங் கும். 'ஜிந்தாபாத்' என நமது மாவீரர்கள் மோதுவார்கள்.

இப்படியாக ஆளுக்கு ஆள், கைக்குக் கை, படைக்குப் படை, வாகனத்துக்கு வாகனம், விமானத்துக்கு விமானம் பொருதியிருக் கின்றனர்.

இந்திய வீரர்களின் தாக்குதலைப் பாகிஸ் தான் என்ன செய்தும் தடுக்க முடியவில்லை. நிலைமை மோசமாகிறது என்றதும்தான் அவர்கள் கால்வாயைத் தாண்டி ஓடியிருக் கிறார்கள். ஓடும்போது கால்வாய் மீது உள்ள இரும்புப் பாலத்தைத் தகர்த்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

'என்ன பாவம் நான் பண்ணினேன்' என்று கேட்பது போல அந்த இரும்புப் பாலம் உடலை நூற்றி எட்டுக் கோணலாக வளைத்துக் கொண்டு கரையில் கிடக்கிறது.

கால்வாயின் இருமருங்கிலும் ஜவான்கள் துப்பாக்கி சகிதம் நிற்கிறார்கள். நமது ஜவான் எதிரே யிருக்கும் பாகிஸ்தான் ஜவானைவிட ராஜ கம்பீரமாய் நிற்கிறார். எதிரே உள்ள எதிரி ஜவான் முகம் எனக்குச் சரிவரத் தெரியவில்லை. காரணம் அவர் தலை நிமிர்ந்தாலல்லவா பார்க்க முடியும்? இரு தரப்பினருக்கும் ஆறு அடி தூரத்தில் கால் வாயின் கரைகள். கால்வாயின் அகலமோ நூறு அடி. ஆக மொத்தம் 112 அடி தூரத்தில் இருதரப்புப் படைகளும் இருக்கின்றன.

கால்வாயில் ஓடும் நீரைப் பார்க்கவேண்டு மானால் ஒரு மேட்டில் ஏறி நிற்க வேண் டும். 'ப' வடிவத்தில் இந்த மேட்டை அமைத்து ஏறிச் செல்ல ஜாதிக்காய்ப் பெட்டிகள் இரண்டை நமது ஜவான்கள் வைத்திருக்கிறார்கள். இதில் ஏறி நிற்கச் சென் றேன். உடன் வந்த அதிகாரி, "சார்!" என்றார். ஏறும் போது, 'சார் போடுகிறாரே' என்று நினைத்த போது அவர் சொன்னார்: "அதிகமாகத் தலையைத் தூக்கிப் பார்க்கா தீர்கள். அதே போல ரொம்ப நேரமும் நிற்க வேண்டாம்......"

"ஏன்?"


"எதிர்க் கரையில் உள்ள பாகிஸ்தானி யரை என்ன சொல்வது என்றே தெரிய வில்லை. ஒரு நிமிஷம் இருக்கிற புத்தி அடுத்த நிமிஷம் இருப்பதில்லை. திடீரென ஒரு குண்டை (புல்லட்டை) இப்பக்கம் விட்டா லும் விடுவார்கள்......"

"அப்படியா?" என்ற நான் ஜாக்கிரதை யாகத்தான் மேட்டில் ஏறினேன். ஆனால்

ஸ். எஸ். மாரிசாமி. எம். பி







- டோக்ராய் வெற்றிக்குப் பிறகு, மூவர்ணக் கொடியைப் படையினர் பறக்கவிட்டனர்.
- பாகிஸ்தானிய முதியவர்களிடம் இந்திய ஜவான்கள் பண்போடு நடந்துகொண்டனர்.
- ஓர் இந்திய ஜவான் பெருமிதத்தோடு பாகிஸ்தானியப் பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் தின்பண்டங்கள் வழங்குகிறார்.

எதிரே நிற்கிற ஜவான் தலையைத் தூக்க வில்லை. இது கொஞ்சம் தெம்பு அளித்த போது இடது கைப்புறமாக இருந்து ஒரு வெள்ளை மோட்டார் ஓடி வருவது தெரிந்தது. அதை உற்றுப் பார்த்த போது யூ. என். என்று எழுதியிருப்பதும் தெரிந்தது. 'ஐக்கிய நாட்டு சபை பார்வையாளர் வருகிறார்' என்றார் அதிகாரி. அந்த நடுநிலையாளர் முன் அக்கிரமம் நடக்காது என்ற தைரியத்தில் மேட்டிலிருந்து எவ்வளவு தூரம் தலையை உயர்த்திப் பார்க்க முடியுமோ அவ்வளவு தூரம் உயர்த்திப் பார்த்தேன். கால்வாயில் ஓடிய தெளிந்த நீர் என்னைக் கண்டுதானோ என்னவோ கழித்துக் கொண்டு ஓடியது.

கீழே இறங்கி வந்ததும் அதிகாரி சொன்னார்: "கால்வாயின் கரையைப் பார்த்தீர்களா? செங்கல்லாலும் கான்கிரீட்டாலும் கட்டியிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? இது ஓர் அரணாக விளங்க வேண்டுமென்றுதான் இந்த ஏற்பாடு. இந்தக் கால்வாய் நூற்றுக் கணக்கான மைல் ஓடுகிறது. ஒவ்வொரு பட்டணத்தின் அருகிலும் இப்படிச் செங்கல் கான்கிரீட் கரை அமைப்பு. மற்ற இடங்களில் மண் கரை. போருக்குப் பாகிஸ்தான் ஆயத்தமாக இருந்திருக்கிறது என்பதற்கு இது ஓர் அடையாளம். இன்னோர் அடையாளம் இருக்கிறது. காட்டுகிறேன்....."

சிறிது தூரம் புழுதியிலும் வயலிலும் நடந்த போது ஒரு சதுரக் கட்டடம் தெரிந்தது. தரைக்கு மேல் எட்டு அடி உயரத்தில் இந்தக் கட்டடம் நின்றது.

'பில்பாக்ஸ்' என்று தினப் பத்திரிகையில் படித்தோமே அதுதான் இது. கட்டடம் என்று கூறுவதைவிட இதைக் 'குட்டிக் கோட்டை' என்று கூறலாம். சுமார் 12 அடி நீளத்துக்கு 12 அடி அகலத்தில் சதுரமாக இதைக் கான்கிரீட்டால் கட்டியிருக்கிறார்கள். சுவரின் கனம் என்ன தெரியுமா? மயங்கி விடாதீர்கள், 4 அடி கனம்! இரண்டடி தூரத்துக்கு ஒன்று வீதம் கனத்த இரும்புக் கதவுகள் அமைந்த ஜன்னல்கள் உள்ளே உள்ளன. ரகவாரியான துப்பாக்கிகளையும் சிறு பீரங்கிகளையும் பொருத்திச் சுடுவதற்கான துவாரங்களாகும் இவை.

இக்கோட்டைக்குள் நுழைய ஒரு வாயில் உண்டு. குண்டுகள் துளைக்க முடியாத இரும்புத் தகட்டுக் கதவு இதற்கு இருக்கிறது. உள்ளே எட்டிலிருந்து பத்து பேர் வரை இருக்கலாம். அவர்களுக்கு உணவும் தண்ணீரும் இருந்து விட்டால் போதும். பல நாட்கள்வரை கூட இருப்பார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியே பார்க்க முடியும்; சுட முடியும். டாங்கிகளைத் தகர்க்கிற பீரங்கிகளிலிருந்து குருவி சுடுகிற துப்பாக்கி வரை உள்ளே வைத்திருக்கிறார்கள். இந்த ரகசியம் சண்டை தொடங்கி டோக்ராவை நெருங்குகிற வரை தெரியாது. வயல்களில் நீர் இறைக்க 'பம்பு செட்' இருக்கிறதல்லவா? இதற்கு ஒரு சிறு கட்டடம் கட்டி விளக்கொன்றையும் எரிய விடுகிற வழக்கம் நம் பகுதிகளில் உண்டு. அது போன்ற 'பம்பு செட் கட்டடம்' என்று இதைப் பார்ப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால் இது கட்டடமா? கோட்டை, அதிலும் இரும்புக் கோட்டை!

டோக்ராவில் நம் ஜவான்கள் எடுத்த பெரும் முயற்சி இந்தக் கோட்டைகளைத் தகர்ப்பதுதான். முதலில் பீரங்கியால் சுட்டிருக்கிறார்கள். ஊஹூம், ஒரு குண்டு கூடச் சுவரைப் பிளக்க வில்லை. பிறகு புல்டோஸர் போன்ற பெரிய வாகனங்களால் மோதியிருக்கிறார்கள். அதற்கும் கோட்டை அசையவில்லை. பிறகுதான் தந்திர முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள்.


அதாவது இக்கோட்டைகளுக்கு வெளியே மறைவாக இருந்து சுட்டுக் கொண்டேயிருந்திருக்கிறார்கள். பயங்கர சத்தத்தைக் கிளப்பும் குண்டுகளும் போடப் பட்டன. இந்தச் சப்தம் இரண்டொரு தினங்கள் வரை உள்ளே இருப்பவர்களை அசைக்க வில்லை. மூன்றும் நாளன்று உள்ளே இருப்பவர்களுக்கு என்னவோ போலிருந்திருக்கிறது. துவாரங்கள் வழியாக வெளியே பார்க்க முயன்றிருக்கின்றனர். ஆனால் வெளியே இருந்த புழுதி மயத்தில் ஒன்றும் தெரியவில்லை. பிறகு கதவு இலேசாகத் திறக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டே பதுங்கிப் படுத்திருந்த நமது ஜவான் கவனித்துக் கொண்டாரே தவிர, எதுவும் செய்யவில்லை. மெள்ள மெள்ளக் கதவு விரியத் திறந்தது. சரியான சமயமாகப் பார்த்து நமது ஜவான்கள் கைக் குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் பயங்கரக் கூச்சல் போட்டுப் பாய்ந்திருக்கிறார்கள். பாகிஸ்தான் துருப்புகள் 'சரணாகதி' அடைவதைத் தவிர வேறு வழி இருந்திருக்க வில்லை. இப்படியாக இந்தக் கோட்டைகள் நம் வசப்பட்டன. இக் கோட்டையைப் பிடிக்க நமது ஜவான்கள் உபயோகித்த ஆயுதங்களில் மிகப் பெரியது "பொறுமை". எதிரிகளுக்கு இருந்த பெரிய பலவீனம் "பொறுமை இன்மை". பொறுத்தார் பூமியாள்வார் என்பது, டோக்ராவை நம்மவர்கள் இன்று ஆள்வதிலிருந்து உண்மையான மொழி என்ற முடிவுக்கு வந்தேன்.

டோக்ராவில் திரும்பிய பக்கமெல்லாம் கடைகள் என்றேனல்லவா? இன்றுங்கூட இக்கடைகளில் சாமான்கள் அப்படியே இருக்கின்றன. நம் ஜவான்கள் இவற்றில் ஒன்றைக் கூடத் தொடவில்லை.

டோக்ராவின் மத்தியில் ஒரு பெரிய கம்பம். அக்கம்பத்தில் பாரதத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. அதில் தெரியும் சக்கரம் தர்மச் சக்கரம் என்பதை விளக்கக் கடைகளில் பரவிக் கிடக்கும் சாமான்களும் அவற்றுக்குக் காவலாக இருக்கும் நமது ஜவான்களும் மெய்ப்பிப்பது போலிருந்தன.


டோக்ராவில் பாகிஸ்தானியர் அதிகம் இல்லை. சண்டையின் போதே அவர்கள் வாபசாகிச் சென்று விட்டார்கள். ஆனால் போகும் போது நடக்க முடியாத சில கிழவர்களையும் பாட்டிமார்களையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது ஜவான்கள் வேளா வேளைக்கு ரொட்டியும் சாப்பாடும் தருகிறார்கள். சாயாகூட நாளொன்றுக்கு மும்முறை தருகிறார்கள்.

திரும்ப லாரியில் ஏறும் போது ஒரு மாடும் கன்றும் ஓடி விளையாடுவதைக் கண்டேன். அவை மகிழ்ந்து விளையாடுவது பாகிஸ்தான் போர் வெறியைக் கண்டு எள்ளி நகையாடுவது போல் இருந்தது.


சுளுக்குகள்
வீக்கங்கள்
பிடிப்பு மற்றும்
தசை வலிகள்
IODEX
c METHYL SALICYL
தேய்த்து - வலியைப்போக்கி இதமளியுங்கள்
அயொடெக்ஸ்®
IODEX®
தேகாரோக்கியத்திற்கு மருந்து தயாரிப்பில் முன்னோடிகள்
ஸ்மித் க்ளைன் & பிரெஞ்சு (இந்தியா) லிட்., பம்பாய் - 1
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இங்கிலாந்தில் இணைப்பு)

செயற்கைக் கால்கள் இயற்கை வீரம்

திருவேரகத்தான்



போர் விமானிடக்ளஸ் பேடர் (Douglas Bader) இரண்டாவது உலகப் போரில் பிரிட்டிஷ் விமானப் படையில் பணியாற்றி இருபது எதிரி விமானங்களை வீழ்த்தி விமானப் போர் சகாப்தத்தில் தமக்கென்று ஒரு தனி இடத்தைத் தேடிக் கொண்டவராவார். 'இது என்ன பிரமாதம்?' என்று அலட்சியமாகக் கேட்பவர்களுக்கு, பேடர், ஏற்கனவே இரண்டு கால்களையும் இழந்து விட்டிருந்தவர் என்ற விஷயம் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும்!


1910ம் ஆண்டில் லண்டனில் பிறந்த பேடர் இளமையில் பல விளையாட்டுக்களிலும் சூரராக விளங்கினார். கிரிக்கெட், கால்பந்து, ரக்பி, முதலிய முரட்டு விளையாட்டுக்களில் அவருக்கு ஈடுபாடு அதிகம். பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்ட உடனேயே அவர் ராயல் விமானப் படையில் சேர்ந்தார்.

1931ம் ஆண்டில் ஒரு நாள். அவர் பரீட்சார்த்தமாக ஓட்டிச் சென்ற ஒரு விமானம் நடு வானத்தில் மக்கர் செய்தது. தரையை நோக்கிப் பாய்ந்து மோதி வெடித்தது. அதைப் பார்த்தவர்கள், விமானி நிச்சயம் பிழைத்திருக்க மாட்டான் என்று நினைத்துத்தான் நொறுங்கிய விமானத்தை நெருங்கினார்கள். ஆனால் பேடர் சாக மறுத்து விட்டார். அவருடைய நீண்ட மயக்கம் தெளிந்தபோது ஒரு காலை முழுதாகவும் மற்றொரு காலை முழங்காலுக்குக் கீழாகவும் இழந்து விட்டதை உணர்ந்தார். கால்களை டாக்டர்கள் வெட்டி எடுத்திருந்தார்கள்.

நீண்ட ஓய்வுக்குப் பிறகு அவர் உலோகக் கால்களை இணைத்துக் கொள்ளச் சம்மதித்தார். அவருக்கு மீண்டும் விமானப் படையில் தரை சம்பந்தப்பட்ட வேலைகளைக் கொடுக்க அதிகாரிகள் முன்வந்தார்கள். கால் இழந்தவர்களுக்கு விமானம் ஓட்ட அனுமதி கொடுப்பது நடைமுறை விதிகளுக்கு விரோதமானது என்று சுட்டிக் காட்டினர். ஆனால் பேடரோ, தம் விமானம் ஓட்டும் சாமர்த்தியம், இந்த விபத்தினால் குறைந்து விடவில்லை என்று வாதாடித் தரை சம்பந்தப்பட்ட வேலைகளை ஏற்க மறுத்தார். மேல் அதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்பினார். இடையே செயற்கைக் கால்களின் உதவி

[பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்து நமது விமானப் படையினரின் தீரச் செயல்கள் நமக்கு மெய்சிலிர்ப்பை ஏற்படுத்தியதைச் சமீபத்தில் உணர்ந்தோம். பயிற்சிக் காலத்தில் நம் விமானிகள் விமானமோட்டுவதில் தேர்ச்சி பெற்றிருக்கலாம். விமான இயந்திர நுணுக்கங்களைப் பற்றிய அறிவாற்றலையும் அடைந்திருக்கலாம். ஆனால் அந்த அசாதாரணமான வீரத்தை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? இக்கேள்விக்கு விடை 'வீரத்தைப் போற்றுவோரிடம் வீரம் விளையும்' என்பதுதான்.]







மூன்பக்கம்: 1. சிறு விமானங்கள் கூட பெரும்பணியாற்ற முடியும். முன்னணி ஸ்தலங்களுக்கு போர்த் தளவாடங்களையும் உணவுகளையும் ஏற்றி வரும் வகையில். மேலே : இந்தியப் போர் விமானங்கள் பறக்கின்றன. கீழே: 'நாட்'விமானப் படையினரோடு பிற நாட்டு ராணுவ ஆலோசகர்கள்

கொண்டே, டென்னிஸ், கிரிக்கெட் முதலிய ஆட்டங்களில் கொஞ்சம் கொஞ்சமாகப் பங்கு எடுத்துக் கொண்டு தம் மன வேதனையையும் ஏமாற்றத்தையும் மறக்க முனைந்தார்.


1939ல் இரண்டாவது உலகப்போருக்கு பிரிட்டன் ஆயத்தம் செய்ய ஆரம்பித்தபோது பேடர் மீண்டும் கோரிக்கைகளைச் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார். இவருடைய தீவிர ஆசையைத் தெரிந்து கொண்ட விமானப் படைத் தலைவர், சந்தேகத்துடன் அவரை வைத்தியப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பிறகு ஒரு விமானத்தை ஓட்டிப் பார்க்கவும் அனுமதித்தார். இரண்டு பரிசோதனைகளிலும் பேடருக்கு முழு வெற்றி. பேடர் போர் விமானியாகப் பதவி ஏற்றார். 'ஸ்பிட் ஃபைபர்' என்ற போர் விமானம்தான் அவருடைய வீர வாகனம். இயற்கைக் கால்களின் வாகவத்தைத் தம் செயற்கைக் கால்களிலும் பெற்றார்.

1940ம் ஆண்டு ஆகஸ்ட் முப்பதாம் தேதி ஜெர்மானிய விமானப் படையெடுப்பு இங்கிலாந்தின் மீது தீவிரமாயிற்று. அன்றுதான் எழுபது ஜெர்மானிய குண்டுவீச்சு விமானங்கள் முப்பது துணை விமானங்களுடன் இங்கிலாந்தை நோக்கி வந்தன. பேடர் தம் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஒன்பது விமானங்களின் துணை கொண்டு அத்தனை எதிரி விமானங்களையும் விரட்டி அடித்தார். அவைகளில் பலவற்றுக்குப் பலமான சேதம். ஒன்பது பிரிட்டிஷ் விமானங்களும் ஒரு துப்பாக்கித் தோட்டாவுக்குக்கூட இலக்காகாமல் திரும்பின.

அதே ஆண்டு செப்டம்பர் பதினைந்தாம் தேதியன்றும் இத்தகைய சாதனை ஒன்றைச் செய்து காட்டினார் பேடர்.

1941ம் ஆண்டு ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி. எதிரி விமானப் படையைத் துரத்திக் கொண்டு சென்ற பேடர் ''மீ 109 எப்'' என்ற விமானத்தைச் சுட்டு வீழ்த்தினார். மற்றொரு விமானம் பாய்ந்து வந்தது. அதைத் தவிர்க்க அவர் தம் விமானத்தைத் திருப்ப முயன்றபோது வேறு ஒரு விமானம் அவர் விமானத்தின் மீது மோதி விட்டது.

பழுதடைந்து கீழ் நோக்கிப் பாயும் தம் விமானத்திலிருந்து குதிக்கப்பாரசூட்டைச் சரி செய்து கொண்டு வெளியே தாவினார் பேடர். துரதிருஷ்டவசமாக உலோகத்தினாலான செயற்கைக் கால்களில் ஒன்று விமான கண்ட்ரோல் யந்திரங்களிடையே சிக்கிக் கொண்டது. வானவெளியில் தனித்துக்



> நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவன்தான் என்றாலும் ஏதாகிலும் ஒரு நோய் கண்ட மாத்திரத்தில் சிகிச்சை செய்து கொள்ளாமல் அலட்சியம் செய்வானாகில், பின்னர் மிக வருத்த முற்றுச் சாக நேரிடும். எதிரி விஷயத்திலும் இதுவே உண்மை.
>
> **— வடமொழி சுலோகம்**

குதிக்க முடியாத நிலையில் விமானத்துடன் தொங்கியவாறே சில கணங்கள் தரையை நோக்கி இறங்கினார். அவர் பக்கம் அதிருஷ்டம் இருந்தது.

மாட்டிக் கொண்ட அவருடைய வலது செயற்கைக் காலையும் அவருடைய உடலையும் இணைக்கும் தோல் கவசம் ஒன்று கனம் தாங்காமல் அந்தநேரம் பார்த்து 'பட்' என்று கிழிந்து வைத்தது. அவ்வளவுதான்; பேடர் விமானத்திலிருந்து விடுபட்டுப் பாராசூட் மூலம் தரைக்கு வந்து சேர்ந்தார் ஒற்றைக் காலுடன். கீழே வந்து மோதிய வேகத்தில் அவருடைய இரண்டு விலா எலும்புகளுக்கு வேறு சேதம். அவர் இறங்கிய செயின்ட் ஓமர் என்னும் பிரதேசம் ஜெர்மானியர்கள் வசத்தில் இருந்தது.

அவருக்கு மயக்கம் தெளிந்தபோது அவரைச் சுற்றி ஜெர்மானியர்கள் வியப்புடன் நின்று கொண்டிருந்தார்கள். தம்முடைய வலது கால் கீழே விழுந்து சேதமடைந்த தம் விமானத்திலோ அதன் பக்கத்திலோ இருக்கலாமென்றும் அதைத் தேடித் தருமாறும் கேட்டுக் கொண்டார். ஒருவேளை அது கிடைக்கா விட்டால் டாங் மீர் பிரிட்டிஷ் தளத்திலுள்ள தம் பெட்டியில் உபரிக் கால்கள் தயாராக இருப்பதாகவும் ரேடியோ மூலம் செய்தி அனுப்பினால் பிரிட்டிஷ் விமானிகள் அதை செயின்ட் ஓமர் அருகில் போட்டுவிடுவார்கள் என்றும் சொன்னார்.

அவர் கொஞ்சம்கூட எதிர்பாராத வகையில் ஜெர்மானியர்கள் இந்த இரண்டு காரியங்களையுமே செய்தார்கள்.

செயின்ட் ஓமரிலுள்ள அந்தச் சிறு ராணுவ ஆஸ்பத்திரியில் பேடர் தங்கவேண்டியிருந்தது. அவர் எப்படியாவது எதிரிகள் பிடியிலிருந்து தப்பத் திட்டமிட்டார்.

ஆஸ்பத்திரியில் உதவிக்காகச் சில பிரஞ்சுப் பெண்கள் சமையலறையில் வேலை பார்த்தார்கள். அவர்களில் ஒருத்தி பேடருக்கு உதவி செய்வதாக வாக்களித்தாள். செயின்ட் ஓமர் எல்லைக்கு அப்பால் வயோதிக பிரஞ்சுக் குடியானவத் தம்பதிகள் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் மூலம் பிரிட்டிஷ் ஏஜன்டுக்குச் செய்தி அனுப்பி அவரை மீட்கச் சொல்லுவதாகவும் சொன்னாள்.

திடீரென்று ஒரு நாள் ஜெர்மானிய அதிகாரிகள் மறு நாள் இரவு அவர் கைதிகள் முகாமுக்குப் புறப்படத் தயாராக இருக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். அன்று இரவு தப்பிக்காவிடில் அப்புறம் அவருக்கு அந்த வாய்ப்பே இருக்காது. தம்மிடம் அனுதாபம் காட்டிய அந்தப் பிரெஞ்சுப் பெண்ணிடம் இந்தத் தகவலைச் சொல்லி அன்றிரவு குடியானவத் தம்பதிகள் இருக்கும் இடத்துக்கு அழைத்துப் போக ஓர் ஆளை வரச் சொன்னார். அவர் கட்டிலோ அந்த ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் இரண்டாவது மாடியில் இருந்தது. மாடிப் படிகள் கீழ் வராந்தாக்களிலெல்லாம் பலத்த காவல். எப்படிக் கீழே வருவது என்பது பிரச்னை. நள்ளிரவுக்கு மேல் தம் பக்கத்துக் கட்டில்களில் படுத்திருந்தவர்களின் போர்வைகளையெல்லாம் ஒன்று சேர்த்து முடிந்தார். அந்த நீளம் கீழ்த் தளம் வரை எட்டுமா என்பது சந்தேகம். வந்தது வரட்டுமென்று நடுநிசியில் காவலர்கள் சற்று அயர்ந்திருக்கும் வேளையில் இருட்டு நிறைந்த ஒரு மூலையிலிருந்து அந்தப் போர்வைகளாலான கயிற்றின் உதவி கொண்டு கீழே இறங்கிக் காம்பவுண்டுச் சுவரையும் தாண்டி விட்டார். வெளியில் முன்னேற்பாட்டின்படி சிகரெட் நெருப்பை அடையாளம் காட்டிய ஆசாமி, எந்தவிதமான இடையூறுமில்லாமல் அவரைக் குடியானவத் தம்பதிகளின் தோட்ட வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டான்.

அவர்கள் பேடரிடம் அன்பும் கருணையும் காட்டினார்கள்.


ஆனால் மறுநாட்காலையில் வெளியே சாமான்கள் வாங்கப் போன அந்தக் குடியானவக் கிழவி காணமற்போன விமானியைத் தேட ஜெர்மானியர்கள் தீவிர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்னும் தகவலைக் கொண்டு வந்தாள்.

பேடர் உடனடியாக அந்தத் தோட்டத்தின் பின்பக்கமிருந்த வைக்கோல் படப்பின் உள்ளே மறைந்து கொண்டார். ஆயினும் பயனில்லை. ஜெர்மானியர்கள் அவரைப் பிடித்துச் சென்றார்கள். அந்தக் கிழத் தம்பதிகள், ஆஸ்பத்திரியில் உதவிசெய்த அந்தப் பெண், மூவரையும் ஜெர்மனியில் உள்ள உழைப்பு முகாமுக்குக் கொண்டு போனார்கள்.

அப்புறம் மூன்று வருட காலத்துக்கு மேலாகப் பல ஜெர்மானியக் கைதிகள் முகாம்களில் கட்டுக்காவலுடன் இருந்த பிரிட்டிஷ் விங் கமாண்டர், டக்ளஸ் பேடரை 1945ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமெரிக்கப் படை வீரர்கள் மீட்டு, உடனடியாகத் தாயகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

பேடர் தம் வீரத்தால் வீழ்த்திய விமானங்கள் இருபது அரை என்று துல்லியமாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அரை என்ற கணக்கு ஒரு விமானம் குண்டு பட்டுக் கீழே விழுந்தும் தப்பிவிட்ட காரணம்! அவருக்குக் கால்கள்தான் செயற்கையே ஒழிய வீரம் இயற்கையாகவே வளர்ந்திருந்தது.


ஆபீஸ் வேலை தலைக்குமேல் — தலைவலியோ
மண்டையைப் பிளக்கிறது!
தலைவலி தாள முடியலை. இத்தனை வேலையையும் எப்படி செய்யப் போறேனோ!
ஒரே ஒரு வில்லை ஸாரிடான் சாப்பிடு விஸ்வநாதா! தலைவலி ஓடிப்போகும் பார்!
விஸ்வநாதன் ஸாரிடான் சாப்பிடுகிறார்
பிறகு ...
பிரமாதம், பிரமாதம்! தலைவலி ஓடிப் போச்சே!





கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும்
வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
COLGATE DENTAL CREAM
ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.
கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு.
கால்கேட்டின் சிறந்திருக்கும், நூதன கமகமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்.
நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒருடப்பி பலமாதங்களுக்கு வரும்.
COLGATE TOOTH POWDER
COLGATE DENTAL CREAM
... உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டென்டல் க்ரீமையே வாங்குகிறார்கள்.



ஜெகசிற்பியன்

அத்தியாயம் நாற்பத்தொன்பது

எண்ணித் துணிந்தாள்!

பெங்களூரில் அன்று ஆரம்பமாகவிருந்த 'அசுவமேத யாகத்'துக்கு இன்னும் அரை மணி நேரமே இருந்தது.

'ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால்' என்பார்களே, அது போன்ற நிலையில் தமக்குள்ளாகவே அல்லாடிக் கொண்டிருந்த ஸ்ரீமான் மருதமுத்து கடைசியில் 'சேற்றிலே' வைத்திருந்த காலை எடுத்து 'ஆற்றிலே' இறங்கத் தீர்மானித்தார். ஆமாம்; ஹோட்டல் அறையிலேயே இருந்து கொட்டமடிக்கலாம் என்ற திட்டத்தை மாற்றிக் கொண்டு, குதிரைப் பந்தயத்துக்குப் போய் வருவது என்று முடிவு செய்தார். இந்த முடிவை முதலிலேயே அவர் மேற்கொள்ளாமல் தயங்கியதற்குக் காரணம், தாம் மட்டும் ரேஸுக்குப் போவதா, அல்லது தம்முடைய காரியதரிசிகளான செங்கோடனையும் கருப்பண்ணனையும் உடன் அழைத்துச் செல்வதா என்பதில் ஏற்பட்ட குழப்பம்தான். பணம் செலவாகுமே என்பதற்காக அவர் அஞ்சவில்லை !.........

மேலும், அவர்களைத் தம்மோடு அழைத்துச் சென்றால் அந்தப் பெண் வேதா அறையில் தனியாக இருப்பாள். அப்படி அவளைத் தனியாக விட்டுப் போகவும் அவருக்குப் பயமாக இருந்தது. மத்தியானம் இங்கு வந்தது முதல் இதுவரை அவர் அவளிடம் தமது பேச்சுத் திறமை, நடிப்புச் சாகஸங்கள் அவ்வளவையும் காட்டிப் பார்த்துவிட்டார். ஆனால் அவளோ அதற்கெல்லாம் கொஞ்சமும்

நெகிழ்ச்சியுறாமல், சித்த சுவாதீனமிழந்துவிட்டவள் மாதிரி அறையின் அந்த ஒரு மூலையில் நின்றபடியாகவே இருந்தாள். எவ்வளவோ வற்புறுத்தி வேண்டியும் அவள் இன்னமும் கீழே உட்காராதது மட்டுமல்ல, பச்சைத் தண்ணீர் பருகவும் அடியோடு மறுத்துக் கொண்டிருந்தாள். அவரது அநுபவத்தில் இது ஓர் அதிசயமாகவே அவருக்குத் தோன்றியது. ஆகவேதான் அவளைத் தனியாக விட்டு விட்டுச் செல்லத் தயங்கினார் அவர்.

''அப்படியானால் அந்தப் பெண்ணை உள்ளே விட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு போகலாமே?'' என்று யோசனை கூறினான் கருப்பண்ணன்.

''போடா, முட்டாள்! இது நம்ம வீடு அல்ல. ஹோட்டல்! விஷயம் வெளியே தெரிந்தால் விபரீதமாகிவிடும்!'' என்று சிடுசிடுத்த மருதமுத்து சிறிது நேரச் சிந்தனைக்குப் பின், ''சரி, செங்கோடன் என்னோடு வரட்டும். கருப்பண்ணன் இங்கே காவலாக இருக்கட்டும்'' என்றார். ''இங்கே என்றால் இந்த வராந்தாவில் என்று அர்த்தம். நாங்கள் வரும் வரையில் இவ்விடத்தை விட்டு அப்படி இப்படி நகரக் கூடாது; தெரிந்ததா?''

'அந்தப் பெண்ணிடம் தான் ஏதாவது அசட்டுத்தனமாகப் பேசிக் குட்டை உடைத்து விடுவேனோ எனத் தலைவர் பயப்படுகிறார்' என்று எண்ணிக் கொண்ட கருப்பண்ணன் ஆட்சேபம் ஒன்றும் செய்யாமல் ஒப்புக் கொண்டான். அவனுக்கு எப்போதுமே 'அசுவமேத யாகத்'தில் கலந்துகொள்வதிலே அதிக ஈடுபாடு கிடையாது. 'ஜலக்கிரீடை' செய்வதில் மட்டுமே விருப்பம் உள்ளவன்.

வராந்தாவில் நின்று மூவரும் இந்த இரகசிய முடிவுக்கு வந்த பின் மருதமுத்து அறைக்குள் சென்று அங்கே மூலையில் நின்றுகொண்டிருந்த வேதாவைப் பார்த்து, ''என்ன மிஸ் வேதா! உன் காரியமாக அந்த ஆபீஸ் வரை நேரிலேயே பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்படுகிறேன், போய் வரட்டுமா?'' என்றார் குழைவுப் புன்னகையுடன்.

கலவரத்தோடு அவரை ஏறிட்டுப் பார்த்த வேதா, மௌனமாகத் தலையசைத்தாள்.

''என்ன இப்படிப் பயந்து சாகிறே? உனக்காக நான் எவ்வளவு பணம் செலவழிச்சுக் கிட்டு வந்து எத்தனை யெத்தனை முயற்சிகள் எடுத்து வரேன்; நீ என்னடான்னா என்கிட்ட முகம் கொடுத்துப் பேசக்கூட மாட்டேங்கிறயே!'' என்று பொய்க் கோபப்பட்டுக் கொண்ட மருதமுத்து சட்டென்று ஒரு குலுக்குச் சிரிப்புச் சிரித்து, ''இங்கே பார், வேதா! இதெல்லாம் சகஜம். இதிலே உனக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. லாபம் தான்'' என்றார் குறும்பாகக் கண் சிமிட்டி.

வேதா திருதிருவென விழித்தாள். அவருடைய இந்தப் பேச்சை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அவளையறியாத ஓர் அவமான உணர்ச்சியால் தாக்கப்பட்டு இரத்த சேதாரத்துக்கு உள்ளானவள் போல் சோர்ந்து சுவரில் சாய்ந்தாள்.

''சரி; நான் வருவதற்குள் சீவிச் சிங்காரித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் சந்தோஷமாக இருக்கவேண்டும், என்ன?'' என்று கொஞ்சலாகக் கூறிக் கொண்டே அவள் கன்னத்தைத் தட்டப் போனார் மருதமுத்து. அப்பொழுது, ''என்னைக் கூப்பிட்டீங்களா சார்?'' என்று கேட்டவாறு திடுமென அறைக்குள் நுழைந்தான் சபேசன்.

திடுக்குற்றுப் பின்னால் திரும்பிய மருதமுத்து, ''உன்னை யாரடா கூப்பிட்டது?'' என்று அதட்டினார். ''இப்படி அநாவசியமாகத் தொந்தரவு பண்ணக்கூடாது. தெரிந்ததா?''

''மன்னிச்சுடுங்க, சார்!'' என்று தலையைச் சொறிந்துகொண்ட சபேசன், அங்கிருந்த மேசை நாற்காலிகளைத் துடைக்க ஆரம்பித்துவிட்டான்.

மருதமுத்துவும் செங்கோடனும் 'அசுவ தரிசன'த்துக்குப் புறப்பட்டனர். கருப்பண்ணன் எப்போதுமே கொஞ்சம் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவன். எனவே தன் தலைவரின் கட்டளைப்படி வராந்தாவிலேயே உட்கார்ந்து கொண்டான். மூன்றாம் நம்பர் அறையில் தங்கியிருந்த ஒரு வியாபாரியொருவர் அவனுக்குப் பேச்சுத் துணையாக வந்து கிடைத்தார். அவரிடமிருந்து அவ்வப்போது ஓசியாக சிகரெட்டுகளை வாங்கிப் புகைத்துக் கொண்டே தனது வீரப்பிரதாபங்களைப் பற்றிக் கதை கதையாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டான் அவன்.

மாலை ஐந்தரை மணி. மஞ்சள் வெயில் பளபளக்கும் நேரம். சீதளத் தென்றல் சிலுசிலுக்கும் சமயம். சாலைகள், சாலை விளக்குக் கம்பங்கள், வண்ண வண்ணப் பூக்களாகவே குடை விரித்து நிற்கும் மரங்கள், விதம் விதமான பூச்செண்டுகள், கொடிகள், பூங்காக்கள், சிலைகள், கட்டிடங்கள், வாகனங்கள் பெண்கள், குழந்தைகள் — எதுதான் அந்த நகரிலே அழகில்லை? எல்லாமே அழகுப் பொக்கிஷங்கள்! எழிற் காவியங்கள்! சௌந்தர்யக் கலைக் களஞ்சியங்கள்!

இந்த இனிய காட்சிகளில் ஆழ்ந்து நிற்பவன் போலத்தான் வராந்தா கைப்பிடிக் கிராதியண்டை வந்து நின்றுகொண்டிருந்தான் சபேசன். ஆனால் அவனுடைய சிந்தனை வேறு எதைப் பற்றியோ தீவிரமாகத் துருவித் துளைத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சிறுத்துக் கறுவடைந்திருந்த அவன் முகமே எடுத்துக் காட்டியது. அவ்வப்போது மெல்லப் பின்னால் திரும்பிச் சன்னல் வழியே அறையினுள்ளும் எட்டிப் பார்த்துக் கொண்டான்.

அந்த அறையின் ஒரு மூலையில் வேதா நின்றுகொண்டிருந்தாள். வெளியுலகின் அழகுக் கோலங்களுக்கெல்லாம் நேரெதிரான நிலையிலே — இன்னும் சொல்லப் போனால் ஒரு திருஷ்டிப் பரிகாரம் மாதிரி—காணப்பட்டாள். அவளைப் பார்த்துவிட்டு அதே கண்களால் அந்நேரத்து வெளிப்புற எழிற் காட்சியைக் கண்டால் அது பிணத்தைப் படுக்கவைத்து நன்கு அலங்கரித்துத் தூக்கிச் செல்லும் பூப்பல்லக்காகவே தோன்றும்!

அவளுக்குத் தன் அப்போதைய நிலைமை நன்றாகத் தெரிந்து விட்டது. வேலை வாங்கித் தருவதாக மருதமுத்து சொல்லி வரும் அத்தனை விஷயங்களும் பொய் என்பது அவ

ஆக்ஃபா


க்ளிக் III

அவளுடைய
முதல்
காமிரா

நீங்களும் அதை
உபயோகிக்க
விரும்புவீர்கள்!



கச்சிதமான இப் புதிய ஆக்ஃபா காமிராவைக் கையாளுவது மிக எளிது. கணக்குநுணுக்கம் பார்க்கவேண்டியதில்லை. எவ்விதத் தொல்லையும் கிடையாது. இலக்கு வைத்துச் சடக்கென்று எடுத்துவிடலாம். பளிச்சென்று, எடுத்த எடுப்பிலேயே பலன்... ஒவ்வொரு தடவையும் வெற்றி. 120 பிலிம் சுருள் ஒவ்வொன்றுக்கும் 12 ஆல்பம்-சைஸ் படங்கள். அருகிலுள்ள ஆக்ஃபா வியாபாரியிடம் சென்று பார்வையிடுங்கள்.



அம்சங்கள்: மெனிஸ்கஸ் லென்ஸ் • உடனடிப் படமெடுப்புக்கான ஆட்டோமேட் ஷட்டர் • மேகக் காட்சிகளுக்குரிய, உட்பொருத்திய மஞ்சள் பில்டர் • 'வெயில்' 'மூட்டம்' இரண்டுக்கும் ஏற்ற லென்ஸ் இணைப் பொருத்தங்கள் • ஃப்ளாஷ் இணைப்புகள் • காட்சி நோட்டம் காட்டும் பெரிய வியூஃபைண்டர் • முக்காலி மூலைப் பிணைப்பு (கழற்றாமலே படமெடுப்பதற்கான தோலுறைக்கும் ஏ1 ஃப்ளாஷ்லைட்டுக்கும் தனி விலை).

விலை ரூ. 35.00. பிரதேச வரிகள் தனி.

இந்தியாவிலே தயாரிப்போர்:
நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

பூரண விநியோகஸ்தர்கள்:

ஆக்ஃபா இந்தியா லிமிடெட்

பம்பாய் • புது டெல்லி • கல்கத்தா • சென்னை.

கேர்த்திமிக்க பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் ஆக்ஃபா போட்டோத் தாள்களே வேண்டுமெனக் குறிப்பிடுக.

CHAI-82/TH

ளுக்குப் புரிந்து விட்டது. அவர் போனில் பேசியது, கல்வி அதிகாரி அவ்வூருக்கு வந்திருப்பதாகச் சொல்வது, அவரை அழைத்து வந்து இன்டர்வ்யூ நடத்தி உபாத்தினிமை வேலைக்குரிய உத்தரவுக் கடிதத்தைக் கையிலேயே பெற்றுக் கொடுத்து விடுவதாகக் கூறுவது எல்லாமே வடித்தெடுத்த பொய்கள் என்பது விளங்கி விட்டது. இந்த மோசடியை இவ்வூருக்கு வந்த பிறகே அவள் தெரிந்து கொண்டாள் என்பதில்லை. அவளை அவளது வீட்டிலிருந்து அழைத்துச் சென்ற கார், ஓரிடத்தில் நின்று முன் ஏற்பாடாக அங்கு வந்து காத்திருந்த மருதமுத்துவை ஏற்றிக் கொண்டு, பிறகு எங்கும் நிற்காமல் சென்னை நகர எல்லையைத் தாண்டிப் பறந்தபோதே, தான் பயங்கரமாக ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதையும், தன்னை அவர்கள் அவ்வாறு கடத்திச் செல்வதன் நோக்கம் என்ன என்பதையும் உணர்ந்து கொண்டாள். பிறந்தது முதல் இன்றுவரை வறுமையின் கோரங்களை மட்டுமே அறிந்து, மௌடீகச் சூழ்நிலையிலே வளர்ந்து ஆளான அவளுக்கு இத்தனை கேவலமாகவும், கீழ்த்தரமாகவும் மிருகத் துணிவுடனும் நடந்து கொள்ளக் கூடிய 'பெரிய மனிதர்'களும் உலகில் இருக்கிறார்கள் என்று கற்பனை செய்தும் பார்த்திருக்க முடிந்திராதுதான். ஆகவே, அவள் அப்போதே தவியாய்த் தவிக்க ஆரம்பித்து விட்டாள். இந்த ஆபத்திலிருந்து எப்படி மீள்வது என்று பலமாதிரியாக யோசித்தும் அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மூளை குழம்பியதுதான் மிச்சம். இறுதியாக அவள் எதிர்பார்த்தபடியே இந்த ஹோட்டலில் வந்து அடைபட்டு விட்டாள். இங்கிருந்து எப்படித் தப்புவது? அப்படித் தப்பினாலும் எங்கே செல்வது?

அவளுக்குத் தெரிந்த ஒரே வழி கத்திக் கூச்சல் போடலாம்; நாலு பேரைக் கூட்டம் கூட்டி நடந்ததைச் சொல்லலாம். ஆனால் அதன் பின் விளைவு?... மருதமுத்துவுக்கு இருக்கும் செல்வாக்கைப் பற்றி அவள் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாள். இது அவருடைய ஜம்பம் சாயாத வேறு ராஜ்யத்தின் தலைநகர் என்றாலும், அதையும் அவர் சமாளிக்கக் கூடிய திறன் பெற்றவர். எதை எப்படிக் காட்ட வேண்டுமோ அதை அப்படி மாற்றிக் காட்டக் கூடிய ரஸவாதச் சித்தர் அவர். அவரால் அவரைக் காப்பாற்றிக்கொள்வது மிகவும் எளிது. ஆனால் வேதாவின் நிலை? ஏழை சொல் அம்பலம் ஏறின காலம் ஏது? அது இன்றும் வெகு தூரத்தில் அல்லவா இருக்கிறது? ...எப்படியோ அவரிடமிருந்து அவள் தப்பிவிட்டாலும், பிறகு அவளைப் பற்றி உலகம் என்ன நினைக்கும் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. அந்த மானக்கேட்டிலிருந்து மீள அவளால் இந்த ஜன்மம் முழுவதுமே முடியாது.

இத்தகைய இக்கட்டான நிலையில் அவளுக்கு ஏற்பட்ட இன்னோர் அதிர்ச்சி, சிறிதும் எதிர்பாராத விதமாக சபேசனை அந்த ஹோட்டலில் சந்தித்தது!

'அவன் எப்படி இங்கு வந்தான்?' — இதற்கு மேல் அவளால் கேள்வியும் கேட்டுக்கொள்ள

விரோதி சிறியவனானாலும், அறிவாளிகள் அலட்சியப்படுத்துவதில்லை. சிறிய தீப்பொறி, காற்றுடன் சேர்ந்து கொண்டால் ஒரு பெரிய கானகத்தையே அல்லவா எரித்து அழித்துவிடும்!

— வடமொழி சுலோகம்

முடியவில்லை; பதிலும் பெற இயலவில்லை. அவனைப் பார்த்தது முதல் அவமான உணர்ச்சியை — அவளது உடலின் ஒவ்வோர் அணுவையும் அக்கினி அஸ்திரங்கள் சூழ்ந்து கொண்டு குத்திக் துளைப்பது போன்ற சித்ர வதையை அனுபவிக்கலானாள். 'என்னைப் பற்றி அவர் என்ன நினைப்பார்? எத்தனை கேவலமாக எடை போட்டு விடுவார்! என்னிடம் அவர் கேட்ட முதல் கேள்வியே இதை எடுத்து விளக்கி விட்டதே!' — நெஞ்சக் கூட்டின் இரத்தமெல்லாம் சிந்திப் பெருக்கெடுத்து அதிலேயே தான் சவமாக மிதந்து செல்வது போன்ற ஒரு பயங்கரப் பிரமைக்கு உள்ளாகி விட்டாள் அவள்.

இந்த மரண வேதனையிலும் அவளது மனத்தின் ஒரு மூலையில் விந்தையான மகிழ்ச்சியொன்று பிறக்கியது. 'இனி பார்க்கவே முடியாது என எண்ணிக் கொண்டிருந்த நான் அவரைப் பார்த்து விட்டேனே!' — இது தான் அந்த மகிழ்ச்சி மினுக்கலுக்குக் காரணம். இதனால் அவளுக்கே விளங்காத ஓர் ஆறுதலும், அதனடியாகத் தோன்றிய ஒரு பலவீனமான நம்பிக்கையும் பிறந்து அவளைச் சற்றே பசபசப்புக் கொள்ளச் செய்தன. ஆனால் இதெல்லாம் கொஞ்ச நேரம்தான். சபேசன் அந்த ஹோட்டலில் ஒரு கடைத்தர ஊழியனாக இருக்கிறான் என்பதையும், தன்னை ஏமாற்றி அழைத்து வந்திருப்பவர்களுக்கே எடுபிடி வேலையாளாக அமர்த்தப் பட்டிருக்கிறான் என்பதையும் தெரிந்து கொண்ட பிறகு அந்தக் கடுகளவு ஆறுதலும் சிறிதளவு நம்பிக்கையும்கூட மறைந்து போயின. 'பாவம், அவரால் என்ன செய்ய முடியும்? புலிக் குகையில் அகப்பட்டுக் கொண்ட மானுக்குக் கேவலம் ஓர் ஆடால் என்ன உதவி செய்ய இயலும்?'

அவள் முற்றிலும் நம்பிக்கை இழந்து விட்டாள். 'இனி என்ன செய்வது?' என்ற கேள்வியை இப்போது அவள் கேட்டுக் கொள்ள வில்லை. 'மானமிழந்து உயிர் வாழ்வதா? அல்லது மானத்தோடு செத்து மடிவதா?' என்ற வினாவே அவளுடைய மனத்தில் இமயமாக எழுந்து நின்றது. அவள் பிறக்கும் போது ஏழையாகப் பிறந்தாளா, பணக்காரியின் வயிற்றில் பிறந்தாளா என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது; ஆனால் அநாதையாகப் பிறந்தவள் என்பது மட்டும் அவளுக்கே நன்றாகத் தெரியும். அதனால் அவள் வளர்ந்தது, வாழ்ந்தது எல்லாம் வறுமைப் படுகுழியிலும் ஏழைமைப் பெருஞ்சகதியிலும்தான். எனவே

அவளுக்கென்று அவளிடமிருப்பது எதுவுமில்லை... அந்த ஒன்றைத் தவிர! அதுதான் மானம். இறைவன் ஏழைகளிடம் கொடுத்து வைத்திருக்கும் சொத்து அது ஒன்றுதானே? அதை அவள் எப்படி இழக்கத் துணிவாள்?

வேதா திடமான ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். ஆமாம்; தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவே அது. அதற்குத்தானா அந்தப் பெரிய ஹோட்டலில் வசதி இல்லை? இரண்டாவது மாடியிலிருந்து கீழே குதித்து விடுவது. அவளுக்குத் தெரிந்த சுலப வழி இது!

டெலிபோன் மணி கணகணவென்று ஒலித்தது கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தாள் வேதா.

வராந்தாவில் உட்கார்ந்து 'மிதமான கதி'யில் லயித்தவனும் அந்தக் கிழ வியாபாரியிடம் குஷியாகப் பேசிக் கொண்டிருந்த கறுப்பண்ணன் டெலிபோன் மணிச் சத்தம் கேட்டு அவசரமாக எழுந்து அறைக்குள் வந்தான். அவனைக் கண்டு பயந்து நடுங்கிய வேதா, சன்னல் பக்கமாக வெளியே எட்டிப் பார்த்தாள். மாலைப்போது மங்கி இரவின் கருமை இலேசாக விரிந்திருந்தது. ஹோட்டல் பூங்காவில் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன. சற்று முன்வரை, 'விம்'தோய்ந்த கயிற்றுக் குஞ்சத்தால் வராந்தாவின் 'மொசாய்க்' தரையை அப்படியும் இப்படியுமாக அலைந்து வீசிச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த சபேசனை இப்போது காணோம். இந்தச் சமயம் பார்த்து அவன் எங்கே போனான்? வேதாவின் இதயம் பீதியால் படபடவெனத் துடித்தது.

அவளை ஓரக் கண்ணால் பார்த்து மன்மதப் புன்னகை பூத்துக் கொண்டே வந்த கறுப்பண்ணன் டெலிபோன் ரிஸீவரை எடுத்து, ''ஹலோ!'' என்றான். 'இந்தச் சமயம் இவ்விடத்தில் நம்மை யார் போனில் அழைப்பார்கள்' என்பது அவனுக்கே தெரியவில்லை. 'ராங் நம்பராக இருக்கும்' என்று எண்ணி வெகு அமர்த்தலாக மீண்டும், ''ஹலோ!'' என்றான். மறுகணம் அவன் முகம் வியப்பால் விரிந்தது. ''ஆமாண்ணே! நான்தான் பேசறேன்.... ஆ.... அப்படியா? அடி சக்கை! புருஸ்டாரா வின்னு?.... பத்தாயிரம் ரூபாயா? நிஜமாண்ணே?.... எனக்கு மயக்கம் போடறாப்பலே இருக்குதே. ஹஹாம்.... அதெல்லாம் இல்லே அண்ணே! நீங்க போனதிலிருந்து சுத்தமாதான் இருக்கேன்!.... நம்ம சிட்டா? இருக்குது!..... முந்தியைவிட இப்ப கொஞ்சம் பரவாயில்லே!... ராத்திரிக்குள்ளாற படிஞ்சுடும்!.. புதுசு இல்லே?.... அதான் பிராணுது!..... ஹிஹி!...... இன்னாது அண்ணே? நானு வரணுமா?...... எதுக்கு?..... அதுக்கா பயப்படறீங்க?....ரேஸ் கிளப்காரங்களே போலீஸ் பாதுகாப்புக் கொடுப்பாங்களே?...... ஓ. அதுவும் சரிதான்!...... அப்ப நான் நிஜமாவே வரணுமா?..... இங்கே யாரைக் காவலுக்குப் போடறது?... நம்ம ரூம் பையனையா? அதனாலே ஒண்ணும்?.... சரி சரி; நல்ல பையன்தான்!.... ஓட்டல் மானேஜர்கிட்டே வேறே சொல்லியிருக்கிறீங்களா? அது போதும்!.... அப்ப நான் வந்துடட்டுமா....? டாக்ஸியிலேயே நேரா ரேஸ் கோர்ஸுக்கு வந்துடறேன்!.... என் கையிலே பணம் ஏது? நீங்கதான் மீட்டர் சார்ஜைக் கொடுக்கணும். ....ஹிஹி!..... இல்லே அண்ணே.... நான் எப்பவும் போலத்தான் பேசறேன்!....உங்க குரல்தான் கொஞ்சம் வித்தியாசமா இருக்குது!..... வின் அடிச்ச குஷியா?..... இதோ, வந்துடறேன்..... பத்தே நிமிஷம்!'' — ரிஸீவரை வைத்து விட்டுத் திரும்பினான் கறுப்பண்ணன். ''இன்னு மச்சர், நம்ம தலைவர் போன் பண்ணினார். நான் கொஞ்சம் பிஸியா வெளியே போயிட்டு வரேன். பத்திரமா இருக்கிறயா?''

சட்டென்று நிமிர்ந்து அவனைக் கூர்ந்து நோக்கினாள் வேதா. அவளது பயமும் துயரமும் இப்போது சற்று நீங்கினாற்போல் தோன்றியது.

''இப்படி சோபாவிலே வந்து சுகமா சாய்ஞ்சுக்கிட்டு இரு, மச்சர்! நாங்க சீக்கிரமா வந்துடுவோம். வரும் போது புடவை சோளி, மாவலி காண்டீன் ஸ்வீட் எல்லாம் வாங்கிக்கிட்டு வர்றோம். இங்கே எதனாச்சும் வேணும்னு நம்ம ரூம் பையனைக் கூப்பிட்டு ஆர்டர் போடு. பில்லைப் பத்திக் கவலைப்படாதே; எல்லாம் தலைவர் கொடுத்துடுவார்.''

''ஆகட்டும், சார்!'' என்று இவ்வளவு நேரம் இல்லாத புன்முறுவலுடன் பதிலிறுத்தாள் வேதா. அவளா சிரித்தாள்? ஆமாம்; தனது திடமான முடிவைத் தடையேதும் இன்றி நிறைவேற்றிக் கொள்ள அருமையான சந்தர்ப்பம் கிடைத்து விட்டதே என்ற மகிழ்ச்சி அது!

உற்சாகமாகக் கிளம்ப ஆயத்தமான கறுப்பண்ணன், மருதமுத்துவின் அழுக்குப்பட்டு அங்கவஸ்திரம் ஒன்றை எடுத்துப் பெரிய மனிதத் தோரணையில் பிரித்துப் போர்த்திக் கொண்டு, ''எங்கே, நம்ம ரூம் பாய்?'' என்று கேட்டவாறு வராந்தாவுக்குப் போனான்.

அப்போதுதான் எங்கோ ஓடிச் சென்று விட்டுத் திரும்பியவன் போல் வேர்த்து விறுவிறுத்து மேல்மூச்சுடன் அங்கு வந்து நின்றான் சபேசன்.


''என்னடா பையா, எங்கே போயிட்டு இப்படி ஓடியாறே?''

''ஏழாம் நம்பர் அறைக்காரங்க சிகரெட் வாங்கி வர அனுப்பினாங்க சார்! அதுக்குள்ளே நீங்கள் கூப்பிடுவீங்களோன்னு.....'' என்று தலையைச் சொறிந்து கொண்டான் சபேசன்.

''சரி; நான் கீழே கொஞ்சம் போய் வரேன். இங்கே எஜமானியம்மாவுக்கு எதனாச்சும் வேணும்னு உடனே வாங்கியாந்து கொடு. இன்னா ?''

''அப்படியே, சார்!''


கறுப்பண்ணன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற சற்றைக்கெல்லாம் சபேசன் எங்கோ மறுபடியும் ஓடித் திரும்பி வந்தான். இப்போது அவன் அந்த ஹோட்டல் சீருடையைக் களைந்துவிட்டுத் தன் சொந்த ஆடைகளை அணிந்து கொண்டிருந்தான். சிறிது நேரம் அங்குமிங்குமாக நடமாடி விட்டுப் பிறகு பதினைந்தாம் நம்பர் அறைக்குள் தயங்கித் தயங்கி நுழைந்தான். **(தொடரும்)**




அடென்ஷன்!
படாலியன்! மார்ச் லெப்ட்! ரைட்!....
ஹாஸ்யப் பட்டாளம்
கொரில்லா யுத்தம்னு அடிக்கடி பத்திரிகைகளிலே வரச்சே நாங்களப்படிச் சும்மா இருக்கிறது!
சாமா



வீட்டுச் சமையலுக்குச் சுவை கூட்டுவது
அமுல் வெண்ணெய்





அமுல் வெண்ணெயினால் எத்தனை எத்தனை உணவு வகைகள் ஆக்கமுடியும் என்பதைக் கண்டு நீங்கள் வியந்து மகிழ்வீர்கள். கேக்கு, பிஸ்கட்டுகள்... ஹண்ட்வோ காரி தோக்ளா... ஆகிய எல்லாவற்றையும் அமுல் வெண்ணெயினால் தயாரித்து இனபுதயம் சுவையுங்கள். மறவாதீர்கள்: அமுல் வெண்ணெயினால் சமைத்த எந்தப் பண்டமும் கூடுதலான போஷாக்கை உமக்கு அளிக்கிறது. கடைந்தெடுத்த பண்ணைப் புதுமையோடு ஐந்தே மணி நேரத்தில் பால் பாண்டத்திலிருந்து வெண்ணெய்ப் பொட்டணத்திற்கு மாறும் தூய, புத்தம்புதிய பாலேடு செறிந்த அமுல் வெண்ணெய். தென்புதரும் சூரிய ஒளி வைட்டமின்களான ஏ. டி இரண்டும் வளப்பமாக அடங்கியது — ஆகவே வளரும் குழந்தைகளுக்கு இன்றியமையாதது.

பண்ணைப் புதுமை மாறாத
சுத்தமான பால்ஆடை...

அமுல்
வெண்ணெய்

அமுல் உங்கள் உணவுக்கு மதிப்பிட முடியாத உபரியான போஷாக்கின் பலனை அளிக்கிறது.

கெய்ரா கோ-ஆபரேட்டிவ் தயாரிப்பு—விலைமதிப்பற்றது
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் ப்ரட்யூஸர்ஸ் யூனியன் லிட்.,

CAS/KMP-32 TAM.



பார்த்தனுக்காக மட்டும் அன்று!

மு. சீ. ராஜு

அந்தப் பரந்த பொட்டல் வெளியில் பெரிய வெள்ளைத் துணி விரித்திருந்தது. அதன் நடுவே பளிச்சிட்டது செஞ்சிலுவை உருவம். வானத்தில் ஐந்நூறு அடி உயரத்திலிருந்து பார்த்தாலும் அந்தச் சிலுவை அடையாளம் தெளிவாகப் புலப்படும். அதற்குப் பக்கத்தில் ஒரு நீண்ட துணிக் கூடாரம். கூடாரத்துக்குள் போர்க்களத்தில் காயமுற்ற போர் வீரர்கள் தரையில்படுத்திருந்தார்கள். வெள்ளை உடை அணிந்த நர்ஸிங் சிப்பாய்கள் பரபரப்புடன் இங்குமங்கும் ஓடினர். ஒரு மூலையில் மண்ணெண்ணெய் ஸ்டவ் 'புஸ்' என்று எரிந்துகொண்டிருந்தது. ஒரு பீங்கான் பாத்திரத்திலுள் கொதிநீரில் ஊசிகளும், [illegible], குழாய்களும் வெந்தன. ஒரு தள்ளு வண்டியில் முதலுதவிச் சாதனங்கள் இருந்தன. சில நோயாளிகளுக்கு இலேசான புண்கள். ஆனால் அவர்கள் அதிர்ச்சியினால் மயக்கமுற்றிருந்தனர். மற்றும் சிலருக்குப் பலமான காயம். சில பேருக்கு எலும்பு முறிவு. சிலுவை அடையாளமிட்ட ஜப்பானிய வண்டிகளில் 'காஷுவல்டி'கள் வந்தவண்ணமிருந்தன. அவர்களைப் பரிசோதித்து, கேஸ் ஷீட்டுகள் தயாரித்து, அதே வேகத்தில் சிகிச்சைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் மேஜர் ஜான்ஸன். ஓய்வு இல்லாமல் எழுதி எழுதி அவருடைய கை விரல்கள் நடுங்கத் தொடங்கி விட்டன. காப்டன் வேணுகோபால் இறக்கை முளைத்த தேவதையைப் போலப் பறந்தார். ஒருவனுக்கு நெற்றியில் தையல், இன்னொருவனுக்கு முழங்கால் எலும்பு முறிவில் சிம்பு வைத்துக் கட்டுதல், காய்ச்சலினால் முனகும் நோயாளி ஒருவனுக்கு ஏ. பீ. ஸி.யை ஒரு கை எடுத்துக் கொடுத்தது. இடையிடையே இஞ்செக்ஷன் வேறு. பத்து டாக்டர்களும் இருபது நர்ஸ்'களும் சமாளிக்க வேண்டிய அத்தனை நோயாளிகளை இந்த இருவருமே கவனித்துக் கொண்டார்கள். என்றாலும் முகத்தில் துளி அலுப்புக் குறி இல்லை; சினம் இல்லை. சில நிமிஷங்களுக்கொரு தரம் நர்ஸிங் சிப்பாய் ராஜமாணிக்கம் வேணுகோபாலனுடைய நெற்றிப் பொட்டையும், கழுத்துப் பிடரியையும் வெள்ளைத் துண்டினால் துடைத்து விட்டான். சூடான தேநீரைக் கலந்து அவருடைய வாயருகில் கொண்டு போனான். அவருடைய இரண்டு கைகளுக்கும் அவ்வளவு ஒழிவில்லாத வேலை இருந்தது.

இரண்டு கால்களிலும் இடது கையிலும் பலத்த கட்டணிந்திருந்த ஹவால்தார் சொக்கலிங்கத்தின் கேஸ் காகிதத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு எழுந்தார் மேஜர் ஜான்ஸன். பரிவுடன் சொக்கலிங்கத்தை நோக்கினார். அவருடைய நெற்றிப் பொட்டைத் தடவிக் கொடுத்தார். 'ஆம்புலன்ஸ் வண்டி வருவதற்கு இன்னும் கொஞ்ச நேரம் பிடிக்கும். இங்கேயும் ஹெலிகாப்டர் ஸர்வீஸ் தொடங்குமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று கூறியவாறே கர்னல் ஜனார்த்தனம் தமது ஜீப்பை விட்டுக் கீழே இறங்கினார். 'குட்மார்னிங் டாக்' வலது கையிலிருந்த தமது பிரம்பை உயர்த்தினார்.

'மார்னிங், மார்னிங் ஸார்' தமது இரு கரங்களையும் பேஸினில் கழுவியவாறே பதிலிறுத்தார் ஜான்ஸன். கர்னல் நேராக ஹவால்தார் சொக்கலிங்கத்தை அணுகினார். அவருக்குப் பக்கத்தில் மண்டி போட்டு உட்கார்ந்தார். 'வளர வேதனிக்குன்னோ சொக்கலிங்கம்?' கண்கள் பனிக்கக் கேட்டார். சொக்கலிங்கம் தலையை நிமிர்ந்து பார்த்தார். நாக்குப் புரளவில்லை. உடலையும் அசைக்க முடியவில்லை. கண்கள் பேசின. ஆயிரம் சொற்கள் மௌனப் பூவாய்ச் சொரிந்தன.

'விசனிக்கண்டா சொக்கலிங்கம். நிங்கள் அறியாத்தது ஏதுமில்லே. இதெல்லாம் யுத்தத்திலே சகஜமானு. நிங்களோட தைரியம் ஸாஹஸம் இதொக்க எங்களுக்கு ஆதர்சம்.

காணிக்கை: கதையின் தலைப்பை எனக்குத் தந்துதவிய திரு பி. என். ராமையா அவர்களுக்கு.



தெய்வமுண்டு ஹவல்தார்ஜி. 'விஸ்வாஸம் பலதாயகம்'.

பட்டாலியன் கமாண்டரின் பரிவு மிக்க சொற்கள் சொக்கலிங்கத்தை நெகிழ வைத்தன. 'காம்ரேடியர்' என்று இதைத்தான் ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். போர்க்களத்தில் எதிரியின் படைக்கலத்தின் முன்பு ஏற்படும் சமத்துவ உணர்ச்சியும் அந்தத் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் துணிச்சலும் அங்கே மட்டும் கிடைக்கக் கூடிய அற்புதமான அனுபவமாகும்.

டாட்ஜ் ட்ரக் ஒன்று வெளியே வந்து நின்றது. அதனுடைய முன் ஆசனத்திலிருந்து சுபேதார் மேஜர் பரகநாத் போக்ரா கீழே இறங்கினார். மருதோன்றி தடவிய நரைத்த தலைமயிரிலிருந்துதான் அவர் வயதானவர் என்பது தெரிந்ததே தவிர, மற்றப்படி அவருடைய முகத்தில் சுருக்கமில்லை. உடலில் தொய்வு இல்லை. அவருடன் கூட அழகிய நாய் ஒன்றும் கீழே குதித்தது. பரகநாத்துக்கு முன்பு அது சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நோக்கித் தாவி வந்தது. மெல்லிய குரலில் கரைந்தது. சொக்கலிங்கத்தின் உடலையும் காலையும் நக்கிற்று. ஸ்ட்ரெச்சரைச் சுற்றிச் சுற்றி வந்து கூத்தாடத் தொடங்கிற்று. நாவு இருந்தால் அந்த நாய் பேசி அரற்றியிருக்கும்.

பரகநாத் கமாண்டரை நோக்கி ஸலாம் வைத்தார். ஸ்ட்ரெச்சரின் முன்பு மண்டி போட்டு உட்கார்ந்தார். ஹவல்தார் சொக்கலிங்கத்தின் முகத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பிச் சிறு குழந்தையைப்போல் அழுதார். அவருடைய முகத்தைக் கண்ணீரால் கழுவினார். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார். "சொக்கலிங்கம், நீ என் குரு, என் ஸ்வாமி. நான் உன்னை மறுபடியும் காணப் போகிறேனா?" என்று அவர் விம்மினார்.

சொக்கலிங்கத்தின் உதடுகள் துடித்தன. கண் இமைகள் படபடத்தன. உடல் அசைந்தது. அவரால் பேச முடியவில்லை. மகிழ்ச்சியும் துயரமும் தொத்து வியாதியைப் போன்றது. பரகநாத் அனுபவித்த மனத் துயரம் அங்கே நிழலைப் போலப் பரவத் தொடங்கியதும், கர்னல் ஜனார்த்தனம் சுபேதார் மேஜரைத் தனிமையில் அழைத்துக்கொண்டு போய்த் தேற்றினார். "பரகநாத் சாகிப்! நீங்கள் என்ன இப்போதுதான் போர்க்களத்தைப் பார்க்கிறீர்களா? டோப்ருக்கும் மலேயாவும் மறந்து போயிற்றா? ஜங்கட் போர் உங்களுக்கு நினைவில்லையா? உங்களுக்கு முன்னால் நாங்கள் அனைவரும் சிறுவர்கள். நீங்கள் இப்படி அழலாமா?" அவருடைய குரல் தழுதழுத்தது. கண் இமை ஓரங்கள் பனித்தன.

"மன்னிக்க வேண்டும் கர்னல் ஸாஹிப்!" பரகநாத் தலையைக் குனிந்து கொண்டார். பிறகு தணிந்த குரலில் பேசத் தொடங்கினார். "என்னுள் நிறைந்திருந்த மயக்கத்தை நீக்கி, சக்தியைத் தூண்டி, படையினரின் ஒரு புதிய சாதனையை என் மூலம் செய்தார் சொக்கலிங்கம். இந்த ஹில் போஸ்டை அவருடைய தூண்டுதல் இல்லாமல் என்னால் பிடித்திருக்க இயலாது. ஆனால் அந்த வெற்றியின் பயனை அனுபவிக்க முடியாமல் சொக்கலிங்கம் தமது இரு கால்களையும் இடது கையையும் இழந்து விட்டாரே! இதை என்னால் தாங்க முடியவில்லையே!"

விர்ரென்று தாழப் பறந்து வந்தது ஒரு விமானம். அதன் வால் புறத்திலிருந்த மூவண்ண வட்டம் வெயிலில் பளபளத்தது. எல்லோருடைய பார்வையும் வானத்துக்கு உயர்ந்தது. அது ஓர் இண்டர்ஸெப்டர் நாட். இந்தியாவில் செய்தது. எல்லைக்கோட்டை ஒட்டியிருந்த இந்தியச் சாவடி வரை சென்று கிழக்கு நோக்கித் திரும்பிற்று. நாட் விமானம் பறப்பதைக் காணும்போதெல்லாம் படை வீரரின் உதிர நாளங்கள் விம்மிப் புடைத்தன.

வெளிப்புறத்தில் நிஸ்ஸான் ஜீப் வந்து நின்றது. சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நலுங்காமல் ஜீப்பினுள் வைத்தார்கள் நால்வர். இன்னும் இரு நோயாளிகள் அதில் ஏறி உட்கார்ந்தனர். இருவரும் முதல் நாள் போரில் காயமடைந்த வீரர்கள்.

"இந்த ஜீப் 'தவ்வி' ஆற்றைக் கடந்து எப்படிப் போகும்?" என்று கர்னல் ஜனார்த்தனம் வினவினார்.

"நெஸ்ஸஸிடி—மதர் ஆஃப் இன்வென்ஷன் ஸார். நமது தொழிற்சாலையில் பெரிய பெரிய எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். நீரிலே நிற்கும் 'டக்' வண்டிக்கும் கரையோரத்துக்கும் ஓர் இணைப்பைத் தயாரித்து விட்டார்கள். இரவுக்கிரவே, ஜீப்பை 'டக்'கினுள் ஏற்றி விடுகிறார்கள். டக் ஜீப்புடன் எதிர்க் கரைக்குச் செல்லுகிறது. அந்தக் கரையிலும் ஒரு பாலம் இருக்கிறது. அதன் வழியாக ஜீப் இறங்கி விடுகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த ஆம்புலன்ஸ் ஜீப் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்து விடும்." மேஜர் ஜான்ஸன் பதிலிறுத்தார்.

"உண்மையில் ஜான்ஸன், தம்முடைய பையன்கள் இந்த நெருக்கடிக் காலத்தில் காட்டியிருக்கும் முன்யோசனை, செயல் திறமை இவற்றுக்கு ஈடு இணையே இல்லை.

ஒருவரையாவது இதைச் செய், அதைச் செய் என்று நாம் உத்தரவு தரவில்லை. இரவும் பகலும் தாங்களாகவே உழைத்து அவர்கள் வேலையை முடித்து விட்டார்கள். 'வி ஆர் மேக்கிங் ஹிஸ்டரி ஜானி, நாட் ரைட்டிங் இட்.'' (We are making history Johnny, not writing it) என்றாவது நமது நாட்டினர்கள் இதை உணரும் காலம் வரும்.'' உற்சாகத்துடன் கூறினார் கர்னல் ஜனார்த்தனன்.

'ஸ்டெரிலைஸ்' செய்த கொதி நீரில் டீத் தூளையும் சர்க்கரையும் போட்டு டப்பாப் பாலைக் கலந்து பீங்கான் மக்கில் கொண்டு வந்தான் நாயக் கோவிந்தன். அந்தத் தேநீரின் சில துளிகளைச் சொக்கலிங்கத்தின் வாயில் செலுத்தினார் பரகநாத். சொக்கலிங்கத்தின் கண்கள் பெருக்கெடுத்தன. இருவரையும் தனியே விட்டு மற்றவர்கள் விலகினர்.

சரளைக் கல் பாதையில் அலுங்காமல் நகர்ந்தது அந்த ஆம்புலன்ஸ் வண்டி! ''போலோ ஹவால்தார் சொக்கலிங்கம் கி!'' பரகநாத் டோக்ரா கையை உயர்த்தினார்.

'ஜே' கூடாரத்திலுள்ள படுக்கையில் இருந்த நோயாளிகள் உட்படப் பலர் பலத்த கோஷமிட்டனர்.

கியரை மாற்றி வேகத்தை அதிகப்படுத்தினான் ஆம்புலன்ஸ் டிரைவர். சுபேதார் மேஜரின் கையில் பிடித்திருந்த சங்கிலியைத் தறித்துக் கொண்டு ஒரேயடியாக அம்பைப் போல் பாய்ந்தது சொக்கலிங்கத்தின் நாய் நிம்மி. பந்து போல் உருண்டு அந்த ஜீப்பைப் பின்தொடர்ந்தது. ஒரு கணம் வேகத்தைத் தணித்தது ஜீப். பிறகு விரைவாகச் செல்லத் தொடங்கிற்று.

தொலைவில் இரண்டு புள்ளிகள் தெளிவாகத் தெரிந்தன. ஒன்று அந்த ஆம்புலன்ஸ் மற்றது—நிம்மி—சொக்கலிங்கத்தின் பைரவம்!

இராணுவ இரகசியத்தை முன்னிட்டு நாமும் அந்த இடத்தின் பெயரைக் குறிப்பிடப் போவதில்லை. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் போர்நிறுத்த எல்லைக் கோட்டுக்கு மேற்கே என்று மட்டும் குறிப்பிடுவோம். படைத் தலைமைக் காரியாலயத்தினரே தாங்கள் முதலில் போர்நிறுத்தக் கோட்டைத் தாண்டிய பிரதேசத்தை 'பாயின்ட் ஏ' என்றும் இரண்டாவதை 'ஸெக்டர் பீ' என்றும் கூறுகிறார்கள். 'அந்த ஸெக்டர் பீ' தான் நமது களம். உதிரத்தால் மெழுகிக் கைப்பற்றிய அந்தத் தளத்தை வியர்வையைக் கொட்டி வசிப்பதற்கு வசதியான இடமாகச் செய்திருந்தார்கள் படைவீரர்கள். ஹெலிகாப்டரில் அமர்ந்து தொலைநோக்கு ஆடியின் மூலம் அந்த ஸெக்டரைப் பார்வையிட்ட பாதுகாப்பு மந்திரி நமது வீரர்களின் தோளிலும் விரலிலும் இத்தனை வலிவும், கற்பனைத் திறனும் இருக்கின்றனவா என்று வியந்தார்.

மேற்பார்வைக்கு அது மரங்களும் புதர்களும் அடர்ந்த மலையடிவாரம் போலவே தோன்றியது என்றாலும் அந்த ஸெக்டரில் கம்பெனி முழுவதும் தங்கக் கூடிய வாசஸ்தலம் இருந்தது. மண்ணுக்கடியில் பண்டகசாலை, உணவுச்சாலை, அலுவலகங்கள், கார் பார்க், அதிகாரிகளுக்கும், ஜூனியர் அதிகாரிகளுக்கும் மெஸ், குளியலறை, கக்கூஸ் கேளிக்கை அறை இவ்வளவும் இருந்தன. அங்குலம் அங்குலமாக முன்னேறி, ஆள்காவு கொடுத்து அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றித் தங்கள் இருப்பிடத்தை வசதியாக அமைத்துப் பீரங்கித்தளத்தை நிறுவியபிறகு தான் கர்னல் ஜனார்த்தனம் தாங்கள் அந்தப் பாகிஸ்தான் போஸ்டைக் கைப்பற்றிய விவரத்தை மேலிடத்துக்குத் தெரியப்படுத்தினார். அரைகுறை வேலை செய்து விட்டுத் திரும்பி வர அவர் தயாராக இல்லை. படைவீரர்கள் வியர்வையைச் சிந்தி மண்ணை இளக்கி 'ஸெக்டர் பீ'யின் காவல்சாவடியைப் பூமிக்கடியில் செதுக்கினார்கள். இந்தியப் படைகள் அந்த ஸெக்டரைக் கைப்பற்றியதை ஒரு வீர காவியமாக வரைய வேண்டும்



என்று சொன்னால் அவர்கள் அமைத்த அழகு பாசறையை ஓவியமாகத்தான் எழுதிக் காட்ட வேண்டும்.

மணி இரவு ஏழரை. ஜுனியர் அதிகாரிகள் மெஸ். ஏழு பேர்கள் அங்கு அமர்ந்திருந்தனர். அனைவரும் பூட்ஸிலிருந்து ஹெல்மெட் வரையில் முழு இராணுவ உடை அணிந்திருந்தனர். இடது தோளிலிருந்து 'ஸ்டென் கன்' தொங்கிற்று. தலையில் வலை மூடிய இரும்புத் தொப்பி. முதுகுக்குப் பின்னால் கனசதுரக் கான்வாஸ் பை. எந்த நிமிஷமும் அவர்கள் புறப்பட்டு எதிரியைத் தாக்கத் தயார். குழியில் பதுங்கித் தங்கள் செக்டரைப் பாதுகாக்கவும் தயார். ஒவ்வொருவர் முன்னாலும் ஒரு சிறிய மண் மேடை. அதில் ஒரு கிளாஸில் சிவப்புத் திரவம் இருந்தது. மெஸ் ஆர்டர்லி ஒரு பீங்கான் தட்டில் ஈரல் துண்டுகள், பாதி வெந்த முட்டை, மிளகு வறுவல், முந்திரிப் பருப்பு அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொருவர் முன்பும் நின்றான். தங்களிடமிருந்த மெஸ் டின்னில் அவர்கள் சிறிதளவு எடுத்து இட்டுக் கொண்டார்கள்.

''ஈஷ்வர்சந்த்! என்னுடைய அறையில் கட்டிலின் மேல் ஒரு காகிதப் பொட்டலம் வைத்திருக்கிறேன். அதில் உள்ளதைப் பிரித்து எல்லோருக்கும் கொடு.'' ஜமேதார் கச்சானந்த் கூறினார். மற்ற ஆறு பேர்களும் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தனர்.

''இன்று நகரத்தில் ஒரே குதூகலம். இந்த 'செக்டர் பீ'யை நாம் கைப்பற்றிய விவரத்தை இன்றுதான் ரேடியோவில் சொல்லியிருக்கிறார்கள். மூலைக்கு மூலை ரேடியோவின் அருகில் மக்கள் நின்று மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள். எங்களுடைய ட்ரக் நெடுஞ்சாலை வழியாகச் சென்றபோது பொதுமக்கள் எங்களை ஆர்ப்பத்தால் மூழ்கடித்தார்கள். எங்கள் நெற்றியில் திலகமிட்டு மாலை போட்டு வாழ்த்தினார்கள். எல்லோருக்கும் மிட்டாய்ப் பொட்டலம். எங்கு பார்த்தாலும் 'ஜிந்தாபாத், பாரத் சைனிக் ஜிந்தாபாத்' 'யுத்விராம் ரேகா பார்கரோ!' ஒரே கோஷம்.

''நம்முடைய கௌரவம் தப்பிற்று கச்சானந்த். சுபேதார் லக்கிராம் கூறினார். ''1962ம் ஆண்டின் இறுதியில் நாங்கள் தேஜ்பூரிலிருந்து திரும்பி வந்த போது பொதுமக்களின் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருந்தது. ஹோட்டல்களிலும் பொது ஸ்தலங்களிலும், சினிமாக்களிலும் நம்மை ஜனங்கள் உற்றுப் பார்த்தாலே எனக்குத் தலையிறக்கமாக இருக்கும். இத்தனைக்கும் அவர்கள் வாய் திறந்து ஒன்றுமே கூறவில்லை!''

ஈஷ்வர்சந்த் பொட்டலத்தைப் பிரித்து எல்லோருக்கும் மிட்டாய் வழங்கினான். ''உனக்கும் கொஞ்சம் வைத்துக் கொள் ஈஷ்வர்!'' ஜமேதார் கச்சானந்த் கூறினார். ''இந்த மாதிரி சுத்தமான நெய்யில் செய்யப் பட்ட பத்திஸா இந்தியாவில் எங்குமே கிடைக்காது. தாவர நெய் இந்த மாநிலத்துக்குள்ளேயே வரக் கூடாது என்பது தெரியுமல்லவா?''

''நம்முடைய பாகிஸ்தானி நண்பர்கள் விட்டுச் சென்றிருக்கும் ரேஷன்தான் இன்னும் இரண்டு மாதங்களுக்குக் காணும் போலிருக்கிறதே! எத்தனை வருஷங்களுக்குப் பிறகு நான் இந்த பாஸ்மதி அரிசி சாப்பிடுகிறேன் தெரியுமா? சியால்கோட், மாண்ட்கோமரி ஆகிய பிரதேசங்களில் மட்டுமே விளையும் விசேஷ அரிசி இது.'' சுபேதார் வஜீர்சந்த் கூறினார். அவருடைய விழிகள் பளபளத்தன.

''பத்து டப்பா நிறையப் பாடம் செய்த புழுக்கள் இருந்ததாக ஹவால்தார் நிக்காசிங் சொன்னாரே, அது வாஸ்தவம்தானா?'' ஜமேதார் பக்ஷி க்வார்ட்டர் மாஸ்டரை வினவினார். அவர்தான் பண்டகசாலைப் பொறுப்பாளி.

''ஆமாம், ஆமாம். அனைத்தும் நீளமான மண்புழுக்கள். எல்லாம் சைனீஸ் ரேஷன். அவர்கள் தவளைக்கால், மண் புழு, பாம்பு எல்லாம் சாப்பிடுவார்கள் அல்லவா?'' என்று பதிலிறுத்தார் அவர்.

''அப்படியானால் இந்தப் போஸ்டுகளில் சீனர்களும் இருந்தார்களா?'' பக்ஷி ஆச்சரியத்துடன் வினவினார்.

''இதில் என்ன சந்தேகம் பக்ஷி சாஹப். அவர்களுடைய ரேஷனை சிகரெட், தீப் பெட்டி, உணவுப் பொட்டலம் அனைத்தையும் நாம் கைப்பற்றவில்லையா? அவர்களுடைய துணை இல்லாமலா பாகிஸ்தான் நம்மிடம் வாலாட்டுகிறது?''

சாராயம் இரண்டாவது ரௌண்ட் வழங்கப்பட்டது. ''இந்த லால்பானி (செந்திரவம்)

வெற்றியின் ரகசியம்

யுத்தத்தில் வெற்றி தேடித் தருபவை, டாங்கிகளோ, துப்பாக்கிகளோ, மற்ற ஆயுதங்களோ அல்ல. நமக்கு நல்ல டாங்கிகளும், நல்ல துப்பாக்கிகளும் தேவை என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் முக்கியமானது என்னவெனில் டாங்கைச் செலுத்தும் மனிதர்களும் துப்பாக்கிகளுக்குப் பின்னால் நின்று இயக்கும் மனிதர்களும்தாம். உலகில் கிடைத்தற்கரிய டாங்கி கிடைத்து, அதை இயக்க, நல்ல பயிற்சியும் நெஞ்சுறுதியும் பெற்ற வீரர்கள் இல்லையெனில் பயனில்லை. ஆகவே, போரில் வெற்றிக்கு முக்கியமான அம்சம் மனிதன்தான்!

—பீல்டுமார்ஷல் மாண்ட் கோமரி

லட்சியப் போர் நடத்துவதாகக் கூறி வீர முழக்கம் செய்வதெல்லாம் சரிதான். ஆனால் உண்மையிலேயே மனிதர்கள் ஒருவரையொருவர் கொன்று குவிப்பது அவசியம்தானா? ஓ. சா. ராஜு அவர்கள் ராணுவத்திலேயே பணி புரிபவர். யுத்தகளத்தின் மத்தியில் எங்கோ ஒரு பாசறைக் கூடாரத்துக்குள்ளிருந்து மண்ணெண்ணெய் விளக்கின் மஞ்சள் ஒளியில் இந்தக் கதையை எழுதிக் கல்கி வாசகர்களுக்காக அனுப்பி வைத்திருக்கிறார். கல்கி ராணுவ மலரில் இதனை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கூட அவர்கள் விட்டுச் சென்றதுதானா?'' கபேதார் தர்மராஜன் வினவினார்.

''இல்லை. இல்லை. இது அசல் ஜெய்ப்பூர் சரக்கு. ஆனால் பாதுகாப்பு மந்திரி தயவு செய்தாரானால் நாம் மர்ரிக்குக்கூடச் சென்று வரலாம். அங்கே எத்தனை சாராயக் கிடங்குகள் தெரியுமா?'' நாவினால் உதட்டைத் தடவி விட்டுக் கொண்டார் வஜீர் சந்த். ''மர்ரியில் பீர் ரொம்ப விசேஷம்.'' அவர் தொடர்ந்து கூறினார்.

''மேலே என்ன செய்ய வேண்டும் என்பது இராணுவ கமாண்டர்களின் பொறுப்பு என்று லோகசபையில் பிரதம மந்திரி சொல்லியிருக்கிறாரே. ஒரு வேளை நாம் மர்ரி வரையில் சென்றாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.'' கச்சானந்த் உரைத்தார்.

''இது என்றோ நடந்திருக்க வேண்டிய செயல். நாம் காலம் கடந்து விழித்துக் கொண்டிருக்கிறோம்.'' தர்மராஜன் சுத்தமான ஹிந்தியில் தெளிவாகப் பேசினார். மற்றவர்கள் அவர் கூறுவதைச் சிரத்தையுடன் கேட்டார்கள். அவர் அந்த ரெஜிமெண்டில் கல்வி போதகர் பொறுப்பை வகிப்பவர். நிறையப் படித்தவர். அதுவும் ஒன்றிரண்டு அவுன்ஸ் செந்திரவம் உள்ளே போனதும் அவருடைய பேச்சில் சூடு பிறக்கும். ஒளிவு மறைவு இல்லாமல் அப்பட்டமாகப் பேசித் தள்ளி விடுவார்.

''ஹம்ப்ரி இவான்ஸ் எழுதிய 'இந்தியாவின் திம்மையா' என்ற புஸ்தகத்தை உங்களில் யாராவது படித்ததுண்டா? ஜெனரல் திம்மையா, கணவாயைக் கைப்பற்ற அவர் பிரயோகித்த போர்த் தந்திரங்கள் குறித்து அவர் அற்புதமாக எழுதியிருக்கிறார். அத்தகைய போர் முறைகளைக் கைக் கொண்டு நமது தளபதிகள் சாகஸம் புரிந்திருக்கிறார்கள். 1948ல் அந்தப் படைத் தலைவர்களுக்கு இன்னும் ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருந்தால் சர்வதேச எல்லை வரை நமது படைகள் சென்றிருக்கும். ஆஜாத் காஷ்மீர் என்ற செயற்கைப் பிரதேசமே ஏற்பட்டிராது. பந்தோபஸ்து சபை குறிப்பிட்ட தேதிக்கு ஒரு நாள் முன்னதாகவே நாம் போர் நிறுத்தப் பிரகடனம் செய்தோம். நம்முடைய நல்ல தன்மையை உலகத்துக்கு வெளிக் காட்டிக் கொண்டோம். சமுதாயத்தில் நல்ல தன்மைக்குப் பலவீனம் என்பது மாறு பெயர், அது தெரியுமா?'' — தர்மராஜனின் கண்கள் சிவந்தன. அவர் தமது கிளாஸை ஒரேயடியாகக் காலி செய்துவிட்டு வறுவலை அள்ளி வாயில் போட்டுக் கொண்டார். ''இந்த 'பீ ஸெக்டரை' நாம் கைப்பற்றித் தளம் அமைத்துக் கொண்டதும் உள்ளூர்க் கிராமவாசிகள் நம்மிடம் வந்தார்கள். நமது வெற்றியில் பெருமகிழ்ச்சி தெரிவித்தார்கள். பல சிறுவர்கள் கையில் மூவண்ணக் கொடியும் இருந்தது. இந்தப் பிரதேச மக்களுக்கு நாம் மண்ணெண்ணெயும் சர்க்கரையும் விநியோகித்ததை உடனடியாகப் படம் பிடிக்கும்படி கூறினேன். இவர்கள் சர்க்கரையைக் கண்டு எவ்வளவு நாட்கள் ஆயிற்று தெரியுமா? இங்கே எடுத்த படங்களை உடனடியாக அமெரிக்க சஞ்சிகைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன். இந்த மாதிரி வேலையைத்தானே பாகிஸ்தான் இவ்வளவு நாட்கள் செய்து உலக அபிப்பிராயத்தை நம் நாட்டுக்கு எதிராக மாற்றியது? ஜபருல்லாகான் கொஞ்சப் பிரசாரமா செய்தார்?''

தம்முடைய கிளாஸில் இன்னும் ரம்மை வார்க்க வந்த ஈஸ்வர்சந்தை அவர் தடை செய்தார். ''போதும், தம்பி! இனி சாப்பிட மாட்டேன்'' என்று கூறிவிட்டு நண்பர்களை நோக்கி மறுபடியும் பேசினார். ''எப்போதுமே சுத்தத் தங்கம் எந்த வேலைக்கும் பயன்படாது. அதிலே செம்புப் பொடி வைக்க வேண்டும் என்பார்கள் பொன்னுசாரிகள். நமக்கு அசோகன் வேண்டியதுதான். ஆனால் கூடவே கௌடில்யரையும் மறக்கக் கூடாது.''

ஊதலின் ஓசை விட்டு விட்டு ஒலித்தது. அனைவரும் எழுந்திருந்து துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தபடி தங்களுடைய காவல் நிலையங்களுக்கு விரைந்தார்கள். கண்ணாடித் தம்ளர்கள் சிதறின.

மறுபடியும் அவர்கள் தங்களுடைய மெஸ்ஸில் வந்து அமர்ந்தபோது கச்சானந்த், ''கபேதார் மேஜர் ஸாஹிப் வரவில்லையே! அவர்தானே இன்றையப் பார்ட்டியின் ஹீரோ!''

''டோக்ரா ஸாஹிப் சாப்பாட்டுக்கு வர மாட்டாராம். உங்களை யெல்லாம் உண்ண வருந்தச் சொன்னான்'' என்றான் மெஸ் ஆர்டர்லி.

நடுவில் வைத்திருந்த உணவுக் கிண்ணங்களிலிருந்து தங்களுக்குத் தேவையானவற்றை எடுத்து அவர்கள் பரிமாறிக் கொண்டார்கள். ஈஸ்வர்சந்த் சூடான சப்பாத்திகளைக் கொண்டுவந்து வைத்தான். தாலமும் கரண்டியும் உரசி ஒலித்தன.

''ஹவால்தார் சொக்கலிங்கத்தை 'எவாக்குவேட்' செய்து விட்டார்களாம். ஏ. டி. எஸ். ஸி. யிலிருந்து வந்த நாயக் கோவிந்தன் எனக்குச் சொன்னான்.'' லக்கிராம் பேச்சைத் தொடங்கினார்.

''தெரியுமே! நமது கர்னல் ஸாஹிப், கபேதார் மேஜர் இருவருமே அங்கு சென்

திருந்தார்கள். டோக்ரா சாஹிப் கதறிக் கதறிக் கண்ணீர் விட்டாராமே!'' சுச்சானந்த் மெதுவாகக் கூறினார். ''பாவம், சொக்கலிங்கம் ஒரு மாவீரன். அவ்வளவு புத்திசாதுர்யமும் உடல் வலிமையும் அவனிடம் இருக்கும் என்று யாருமே எண்ணவில்லை.''

''புத்திசாதுரியத்துக்கும், உடல் வலிமைக்கும் என்றுமே நம்மிடம் குறைவு இருந்ததில்லை, தோழர்களே!'' சுபேதார் தர்மராஜன் பிரசங்கம் செய்வது போல் பேசத் தொடங்கினார். மற்றவர்கள் கவனமாகக் கேட்டனர். சுச்சானந்த் மட்டும் லக்கிராமின் காலை மிதித்துச் சைகை செய்தார்.'' ஒரு பெக் அதிகமாக ஊற்றி விட்டீர்களோ?'' என்று குறும்புத்தனம் கொப்புளிக்க வினவினார்.

''பொறு, பொறு, அவர் குடேறியிருக்கும் போது வெகு நன்றாகப் பேசுகிறார். அவர் படித்த நூல்களிலிருந்தெல்லாம் மேற்கோள்கள் வருகின்றன. நமக்கும் உபயோகமான பொழுதுபோக்கு.'' ரகசியமாகப் பதிலிறுத்தார் லக்கிராம்.

உணவுத் தாலங்கள் நீக்கப்பட்டுச் சிறுசிறு பீங்கான் தட்டுக்கள் வைக்கப்பட்டன. அதில் குளிர்ந்த கஸ்டர்ட் பரிமாறப்பட்டது. கஸ்டர்டில் மணி மணியாகச் சிறு பழங்கள் மிதந்தன. ''இது என்ன பழம் என்று தெரியவில்லையே..'' லக்கிராம் வினவினார். அதை அனுபவித்துச் சுவைத்தார்.



'' 'க்ளாஸ்' என்று சொல்கிறார்கள் இங்கெல்லாம். இப்போதுதான் இந்தப் பக்கத்தில் பழஸீஸன் ஆரம்பம். இன்னும் ஒரு மாதம் சென்றால் ஆப்பிள் கிலோ ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும். வாதுமையும், விக்ரோட்டும், பிஸ்தாவும் வேண்டிய அளவு சாப்பிடலாம்.'' வஜீர்சந்த் மொழிந்தார்.

'சுகவர்' மெஸ் ஆர்டர்லியை விளித்தார் தர்மராஜன். ''சுபேதார் மேஜர் ஸாஹிப்புக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்தாயா?'' கனிவுடன் வினவினார்.

''அவர் எதுவும் வேண்டாம் என்று மறுத்து விட்டார் சாஹிப்.'' ஈஸ்வர்சந்த் பதிலிறுத்தான்.

விருந்துச் சாப்பாட்டைச் சம்பிரமமாகச் சாப்பிட்ட பிறகு தர்மராஜனுக்குச் சுபேதார் மேஜர் பரகநாத் டோக்ராவைச் சந்திக்க ஆவல் உண்டாயிற்று. அவர்களுடைய மெஸ்ஸுக்குத் தலைவர் அவர்தான். அது மட்டுமல்ல. அன்றைய சிறு விருந்துக்குக் காரணமாயிருந்தவரும் அவரே. கடைசியில் சுபேதார் மேஜரே அதில் கலந்துகொள்ள முடியாமல் போனது குறித்து மெஸ்ஸின் எல்லா உறுப்பினர்களுமே வருத்தம் அடைந்தார்கள்.

ஜூனியர் கமிஷன்ட் அதிகாரிகள் மெஸ்ஸில் ஒரு வாரண்ட் ஆபீஸர் — அவர்தான் பாசறை போஸ்ட்மாஸ்டர் உள்படப் பதினெட்டுப் பேர் அமைத்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் ஹரியானாப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜாட், அஹீர் ஆகியோர். அவர்களுடைய பீரங்கிப் படையிலும் அவ்வண்ணமேதான். ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், சென்னை ஆகிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஓரிருவர் இருந்தனர். அவர்களுடைய மன இயல்பும் ஆசாரமும் வெவ்வேறானவை. என்றாலும் மணியிடை நூலிழை போல் அவர்களுக்குள் ஓர் ஒற்றுமை உணர்வு இருந்தது. ஒரே கையின் ஐந்து விரல்களைப் போல் அவர்கள் விளங்கினார்கள்.

இந்தியர்களை மாநில — இனம் வாரியாகப் பிரித்துத் தனித் தனிப் படைப் பகுதியாகச் செய்தது ஆங்கிலேயர்கள்தான். தி மெட்ராஸ், தி பஞ்சாப், தி ராஜ்புத், தி பஹாச், தி குமாவன் என்று நாட்டின் பல்வேறு பகுதியைப் பல பிரதேச இனங்களாகப் பிரித்து அவர்கள் இந்திய ராணுவத்தை அமைத்தார்கள். விடுதலை அடைவதற்கு முன்பு படையினரை இவ்வாறு பிரிப்பது தவறு. இது பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் என்றுதான் தேசிய நோக்குடையவர்கள் கருதினார்கள். செயல்களின் உள் நோக்கை ஆழ்ந்து கண்காணிக்கக் கூடிய சர்தார் படேலே இவ்வாறு உரை செய்தார். ஆனால் சிறிதுகால அனுபவத்துக்குப் பிறகு அவரே தமது எண்ணத்தை மாற்றிக்கொள்ளும்படி ஆயிற்று.

ஒரே மொழி பேசும் ஒரேவித ஆசாரமும் மன இயல்புமுள்ள இளைஞர்களைக் குறிப்பிட்ட பணிக்குச் சிறப்பாகத் தயார் செய்வது தேசிய நலனுக்கு நன்மை பயப்பதாகும் என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அத்தகைய படைப்பகுதியில் கட்டுப்பாட்டை அனுஷ்டிக்க வைப்பது எளிதான செயலாக இருந்தது. சீக்கியர்கள் நல்ல முன்னணிப் போர்வீரர்களாக விளங்கினார்கள். தட்சிணப் பிரதேசவாசிகள் பீரங்கிப் படையில் சிறந்தவர்களாக இருந்தனர். கடுவாலிகள் மலைப் பிராந்தியப் போரில் சகிப்புத்தன்மையைக் காட்டினார்கள். ஆகவே இராணுவத்தின் போரிடும் பகுதியில் ரெஜிமெண்டுகள் இனவாரியாகவே இருந்தன. அவர்களுக்கு உதவி செய்யும் சிக்னல், இன்ஜினீயரிங் — இவற்றை ஸர்வீஸஸ் என்று குறிப்பிடுவார்கள். — ஆகிய பகுதியில் பாரத நாட்டின் பல்வேறு பிராந்தியத்தினரும் இருந்தனர். படைப் பிரிவான ரெஜிமெண்டல் பகுதியிலும்கூட இந்தப் பிரதேசப் பிரிவுக் கொள்கையை நூறு சத விகிதம் பின்பற்ற முடியவில்லை. ஆகவே கல்வி போதனையாளர், கணக்கர்கள், செய்தி அனுப்புவோர், தபால் பிரிவினர் ஆகியோர் மற்றப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஆனால் இந்தியப் படையினர் உலகத்தின் எந்தப் பகுதியில் எத்தகைய பணி புரிந்து கொண்டிருந்தாலும் அவர்கள் ஒரே சாதி

யைச் சேர்ந்தவர்களாகத்தான் விளங்கினார்கள். அதுதான் ஏற்றமிகும் பாரத சாதி.

"எஸ். எம். ஸாஹிப்" என்று பணிவுடனும் கனிவுடனும் அழைத்துக் கொண்டே பரகநாத் டோக்ராவின் பங்கருக்குள் நுழைந்தார் தர்மராஜன். பரகநாத் ஒரே ஒரு பைஜாமாவும் குருத்தாவும் அணிந்து மண்மேடைக் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். எதிரே ஓர் ஆணியில் இராணுவ உடைகளும் இன்னோர் ஆணியில் உடைக்கு மேல் அணிந்து கொள்ள வேண்டிய கச்சை, குறுக்குவார், முதுகுப் பை, தண்ணீர் பாட்டில் ஆகியனவும் இருந்தன. அதற்குக் கீழே பளபளக்கும் கணுக்கால் பூட்ஸ், அதன்மேல் மேஜோடு மடித்து வைக்கப்பட்டிருந்தது.

அவருடைய பங்கருக்குள் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. ஒரு மடக்கு ஸ்டூலின் மேல் ஒரு சிறிய படம், அதற்குப் பக்கத்தில் பழுப்பு அட்டை போட்ட சிறிய கீதைப் புத்தகம். அதன் அருகில் ஒரு சாம்பிராணி மெழுகு புகைந்து கொண்டிருந்தது.

பரகநாத் இன்னொரு மடக்கு ஸ்டூலை எடுத்துப் போட்டு அதில் தர்மராஜனை உட்காரும்படி வேண்டினார். அவருடைய முகம் வாடியிருந்தது. தர்மராஜன் அமைதியாக உட்கார்ந்து கொண்டார். "உங்களுடைய தனிமைக்குப் பங்கம் விளைவித்து விட்டேன்." மன்னிப்பை வேண்டும் குரலில் பேசினார் தர்மராஜன். "அப்படி ஒன்றும் இல்லை கபேதார் சாஹிப். விருந்து நல்ல முறையில் நடந்ததா?" தணிந்த குரலில் வினவினார் பரகநாத் டோக்ரா.

"நடந்தது எஸ். எம். ஸாஹிப். இன்று ஜவான்களுடைய மெஸ்ஸிலும் பெருவிருந்து. நாம் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய டப்பா ரேஷன் அனைத்தையும் தீர்த்து விடும்படி க்வார்ட்டர் மாஸ்டர் உத்தரவிட்டார். கர்னல் ஸாஹிப் சாராயப் பீப்பாயைத் திறந்து விட்டுப் போனார். பிறகு உற்சாகத்துக்குக் கேட்பானேன்? பார்க்கப் போனால் இந்த பீ செக்டரைக் கைப்பற்றியதில் நாடே புதிய உற்சாகம் பெற்றிருக்கிறது. பாதுகாப்பு மந்திரி இந்த நிகழ்ச்சியை அறிவித்தபோது லோக சபையே அதிர்ந்துவிடும்போல் கரகோஷம் கேட்டதாம். இந்த அறிவிப்பை அவர் இரண்டு முறைகள் படிக்கும்படி நேரிட்டதாம்!"

"ஆனால்... ஆனால்..." — பரகநாத் தயங்கினார். "இதற்குக் காரணமாயிருந்த ஹவல்தார் சொக்கலிங்கம் படுகாயமடைந்துவிட்டார். இங்குள்ள டாக்டர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். அவர்கள் மேலும் தவறில்லை. அவர்களிடம் தேவையான உபகரணம் இல்லை. ஆறுதலியும் கிடையாது. பெரிய ஆஸ்பத்திரியில் அவர் குணமடைந்து விடுவார் என்று மேஜர் ஜான்ஸன் கூறினார். ஆனால் அவருடைய இரண்டு கால்களும் ஒரு கையும் போனதுதானே!"

டோக்ராவின் உரையாடலை வெல்லாம் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் தர்மராஜன்.

"கபேதார் சாஹிப், நண்பர் சொக்கலிங்கம் உங்களுடைய ஊருக்குப் பக்கத்தில் வசிக்கிறவரா? அவர்களுடைய குடும்பத்தைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

தர்மராஜன் உதட்டைப் பிதுக்கினார். "நான் வட சென்னையைச் சேர்ந்தவன்.. நாங்கள் எல்லாம் கடற் கரை ஜில்லாக்களிலிருந்து பிழைப்பை நாடிப் பட்டணத்துக்கு வந்தவர்கள். அவர் தெற்குச் சீமையைச் சேர்ந்தவர். எங்களுடைய மொழியிலும் சமயத்திலும் ஆழ்ந்த பற்றும் பக்தியுமுள்ளவர்கள். உண்மையான மனிதர்கள். சொக்கலிங்கத்தின் மனைவி இறந்து வெகு காலமாகிறது. அவருக்குக் குழந்தைகள் ஏதும் கிடையாது. வயதான தாயார் மட்டும் தான் இருப்பதாக நினைவு. பரம்பரை பரம்பரையாகக் கோயிலுக்குப் பணி செய்யும் குடும்பம் அவர்களுடையது. ஓதுவார்கள் என்று அவர்களை அழைப்பார்கள். சாதாரணமாக அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மிலிட்டரி போன்ற வேலைகளுக்கு வர மாட்டார்கள். புலால் உணவைப் பார்க்கவும் கூசுவார்கள்."

"இங்கேயும் அவர் இறைச்சியைத் தொட்டதே இல்லையே!" கபேதார் மேஜர் உரைத்தார். "லங்கரில் இறைச்சி உணவு ஆக்கும் நாளன்று அவர் சாப்பிடவே மாட்டாரே! நான் பல முறை பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் வெறும் பால் மட்டும் அருந்துவார். அதுவும் சர்க்கரை இல்லாத பால். தினம் அவர் உண்ணுகிற உணவும் மிகக் குறைவு. இவ்வளவு கொஞ்சமான ஆகாரத்தை உண்டு நீங்கள் எப்படி உயிர் வாழ்கிறீர்கள் என்று நான்கூடப் பலமுறை அவரைக் கேட்டதுண்டு. 'எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பது கணக்கில்லை சாஹிப், எப்படிச் சாப்பிடுகிறோம் என்பதுதான் முக்கியம்' என்று அவர் பதிலிறுப்பார். நிறுத்தி, நிதானமாக ஒவ்வொரு பருக்கையாக வாயிலிட்டு உணவை மென்று கூழ்ம்பாக்கி உண்பார். ரொட்டியின் ஒரு சிறு துணுக்கைக் கூட வீணாக்க மாட்டார். உணவை வீணாக்குவது பாவமான செயல் என்று கூறுவார். நமது லங்கரில் வீணாகும் உணவைக் கண்டு அவர் கண்களில் நீர் பெருகும்."

கன்னத்தில் கையைவைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார் தர்மராஜன். "எஸ். எம். ஸாஹிப்! நீங்கள் அவருடைய செய்கைகளைக் கூர்ந்து கவனித்திருக்கிறீர்கள். அவர் என் தாய்மொழியைப் பேசுபவராக இருந்தும் அவரை நான் சரியானபடி புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சொக்கலிங்கத்தைப் பற்றிக் கூறிய பிறகுதான் எனக்கு நினைவு வருகிறது. அவர் அதிகம் பேசமாட்டார். பேசுகிற சிற்சில சொற்களிலும் தத்துவக் கருத்து ஒளிரும். நிறுத்தி, நிதானமாகப் பேசுவார். தொலைவிலிருந்து பார்ப்பவர்களுக்கு அவர் ஏதோ வியாக்கியானம் செய்வது போலிருக்கும். பொதுவாகப் பலரும் அவரிடமிருந்து விலகியே நிற்பார்கள். ஆனால் எல்லோருடைய மதிப்பையும் பெற்றவர் என்பதில் ஐயமில்லை."

"ஒரு நாள் இரவு எனக்கு ஆர்டர்லி அதிகாரி ட்யூட்டி. உணவு விநியோகத்தைப் பார்வையிடும் பொருட்டு ஜவான்கள் சாப்பிடும் இடத்துக்குச் சென்றிருந்தேன். சிப்பாய் டிரைவர் இந்தர்லால் சப்பாத்தியின் மிருதுவான நடுப்பகுதியை மட்டும் உண்டுவிட்டு

மிகுதியை விலக்கிக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த ஹவல்தார் சொக்கலிங்கம் என்ன சொன்னார் தெரியுமா?''

டோக்ரா கவனமாகக் கேட்டார்.

'' 'சந்திரகுப்தனது ஆட்சியில் அவருடைய மந்திரியான சாணக்கியர் மாறுவேஷத்தில் நகர் வலம் வந்து கொண்டிருந்தாராம். ஒரு வீட்டில் வயதான கிழவி ஒருத்தி தன் மகனைக் கடிந்து கொண்டிருந்தாள். அந்தப் பையனும் ரொட்டியின் நடுப் பகுதியை மட்டும் உண்டுவிட்டு, மிகுதியை விலக்கி விடுகிறான். 'நீயும் நமது அரசன் சந்திரகுப்தனைப் போல்தான் இருக்கிறாய். எல்லைப் புறப் பகுதியை அலட்சியம் செய்கிறாய்' என்று கிழவி கூறினாள். சாணக்கியருக்குத் திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் தமது நாட்டின் எல்லைப்புறப் பகுதியை வலுப்படுத்தத் தொடங்கினாராம். இந்த நிகழ்ச்சியைச் சுவையோடு விவரித்தார் சொக்கலிங்கம்.''

தமது வலது கையைத் தர்மராஜனின் முன்பு நீட்டினார் டோக்ரா. புறங்கை ரோமங்கள் குத்திட்டு நின்றன. ''சுபேதார் ஸாஹிப், அவருடைய கூற்று எக்காலத்துக்கும் பொருந்தும் உண்மையாகி விட்டதே!'' என்று துயரம் நிறைந்த குரலில் கூறினார்.

விளக்கை அணைக்க நேரமாகிவிட்டதை ஹவல்தார்-மேஜரின் ஊதல் நினைவுபடுத்தியது. தர்மராஜன் விடைபெற்றுக் கொண்டு நடந்தார்.

சுபேதார் தர்மராஜன் எழுந்து சென்ற பிறகு டோக்ராவும் தம்முடைய அரிக்கன் விளக்கின் ஒளியைக் குறைத்தார். மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்தபோது அவருடைய மனம் கனத்தது. இருளில் எல்லா



உணர்ச்சிகளுமே பூதாகாரமாக உருவெடுக்கின்றன. வலி, துயரம், மகிழ்ச்சி, பாலுத்தல் அனைத்தும் இரட்டு வந்ததும் தனி வண்ணம் பெற்று விடுகின்றன. டோக்ராவுக்கு வயிறு பசித்தது. தாம் காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை என்ற விஷயம் அப்போது தான் அவருக்கு நினைவு வந்தது. கடந்த இரண்டு வாரங்களாகவே அவருக்குச் சரியான உணவு கிடையாது. கிடைத்த உணவை ஒரு கவளம் உண்டு, எடுத்த பணியைச் செய்து முடிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது. இடையிடையே ஒரு கோப்பைத் தேநீர் அருந்துவார். ஆனால் இன்றோ காலையிலிருந்தே பட்டினி. அதன் காரணமாகப் புலன்கள் தீவிரமாக விழித்துக்கொண்டன.

அண்மையிலிருந்த சிறிய புத்தகத்தைப் பிரித்தார் டோக்ரா. அது கோரக்பூரில் அச்சானது. கெட்டியான அட்டை. எதிர்ப் புறத்தில் நாவல்தார் சொக்கலிங்கம் தம் பாஷையில் ஏதோ எழுதியிருந்தார். அந்த நூலைப் பக்தியுடன் கண்ணில் ஒத்திக் கொண்டு அதனிடத்தில் வைத்தார். அந்தப் புத்தகம் சொக்கலிங்கத்தினுடையது. அதை அவருக்கு ரிஷிகேசத்தில் ஒரு சாமியார் கொடுத்தாராம். அதற்கு முன்பு சொக்கலிங்கத்துக்கு வடமொழி தெரியாது. அந்தப் புத்தகம் கிடைத்த பிறகு அதைப் படிக்கும் பொருட்டு அவர் ஸம்ஸ்கிருதம் கற்றார்– மந்திர் பூசாரியின் உதவியைக் கொண்டு.

அவர்களுடைய மீடியம் கன் ரெஜிமென்ட் டேராடூனில் முகாமிருந்தது. அப்போதெல்லாம் சொக்கலிங்கம் அடிக்கடி விடுமுறை எடுத்துக் கொண்டு வெளியூர் செல்வார். பின்னால்தான் தெரிந்தது அவர் ரிஷிகேசத்துக்கு ஓடுகிறார் என்று. டேராடூனிலிருந்து ஹரித்துவார் வெகு சமீபம். அங்கிருந்து ரிஷிகேசத்துக்குச் சொக்கலிங்கம் கால்நடையாகவே சென்றுவிடுவாராம். ஒரு தரம் இரண்டு மாதங்கள் விடுமுறை கிடைத்த போது பத்ரிநாத்துக்கு நடந்தே சென்று வந்ததாக அவர் கூறியிருக்கிறார்.

''சொக்கலிங்கம், என் குரு சொக்கலிங்கம்! உங்களை நான் மறக்கவே மாட்டேன் ஐயா!'' டோக்ரா வாய் விட்டுக் கூறிப் படுக்கையில் சாய்ந்து கொண்டார்.

டோக்ரா பணி புரிந்து கொண்டிருந்த மீடியம் கன் ரெஜிமென்ட் சமீபத்தில்தான் வடகிழக்கு எல்லையிலிருந்து திரும்பியிருந்தது. காஷ்மீரில் நிலைமை மோசமாகவே இரண்டே நாட்களில் அவர்கள் இந்த எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போதுதான் அவர் எதிரிப் படையைச் சேர்ந்த காப்டன் ரஷீத் அலியைச் சந்தித்தார். ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று பெரிய ஆஸ்பத்திரியில் காயமடைந்து கிடந்த தம்முடைய பாசறை வீரர்களைச் சந்தித்து இனிப்பு வழங்கும் பொருட்டு அவர் பட்டாலியன் கமாண்டரான கர்னல் ஜனார்த்தனனுடன் சென்றிருந்தார். தம்முடைய படைவீரர்களுக்கு மட்டும் அன்றி எதிரிப்படையைச் சேர்ந்த காயமடைந்த கைதி வீரர்களுக்கும் அவர் பத்தாசாவும் அம்ருதியும் வழங்கினார். காப்டன் ரஷீத் அலி தம்மிடமிருந்து மிட்டாய் பொட்டலத்தை வாங்கக் கைநீட்டியபோது அவர் திடுக்கிட்டார். அதில் உருது எழுத்துக்களில் 'சசி' என்று எழுதியிருந்தது. அவர் ரஷீதின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அதே பாவனையுடன் ரஷீதும் டோக்ராவின் கண்களை நோக்கினார். தம்மை அறியாமல் அந்தக் கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்தார் டோக்ரா.

''காப்டன் சாஹிப்!'' எதிரிப் படையைச் சேர்ந்த ரஷீத் அலியை மரியாதையுடன் விளித்தார் அவர். ''உங்களுடைய சொந்த ஊர் எது?''

ரஷீத் அலி பதிலிறுத்ததும் தீயைத் தீண்டியவரைப் போலத் திடுக்கிட்டார் அவர். ''நீங்கள் அந்த ஊரில் எத்தனை வருஷங்களாக வசிக்கிறீர்கள்?''

''ஏன், எங்கள் பாட்டனார் காலத்திலிருந்தே!''

''அந்த ஊரில் கேசவ்சந்த் டோக்ரா என்பவர் பெரிய துணிக் கடை வைத்திருந்தாரே, அவரைத் தெரியுமா?''

ரஷீத் அலி சிந்தனையில் ஆழ்ந்தார். சுபேதார் மேஜரை ஏறிட்டுப் பார்த்தார். ''தெரியும் என்று மட்டும் சொன்னால் போதாது. அவருடைய தம்பியின் மகள் சசிதான் என் மனைவி. அவளுக்கு இப்போது ரோஷனா என்று பெயர்.''

டோக்ராவின் கண் முன்பு உலகமே சுழன்றது. இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவி அழுதார். ''காப்டன் சாஹிப், சசி என் மகள், என் மகள் கேப்டன் சாஹிப்!'' கூடியிருந்த அனைவரும் திக்பிரமை பிடித்தவர்கள்போல் நின்றிருந்தனர். காப்டன் ரஷீத் அலி தாழப் பணிந்து பரசுநாத்தின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். ''எனக்குத் 'துவா' கொடுங்கள், மாமு!'' அவர் பணிவுடன் வேண்டினார். ''உங்கள் மகள் சௌக்கியமாக இருக்கிறாள். எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள். என் மனைவி தங்களையும், தங்கள் சகோதரரையும் மறக்கவேயில்லை.''

முகாமுக்குத் திரும்பும்போது முழு விவரத்தையும் கர்னலுக்கு விளக்கினார் டோக்ரா. ''கர்னல் ஸாஹிப், நான் ஓர் அகதி. என்னுடைய சொந்த ஊர் பீர்பாஞ்சால் மலைத் தொடரைத் தாண்டி ஓடும் நதியை அடுத்திருக்கிறது. அங்கே எங்களுக்குச் சொந்தமான மிகப் பெரிய ஜவுளிக் கடை இருந்தது. எனது தமையனும் நானும் ஒரே குடும்பமாக வாழ்ந்தோம். அவருக்கு நாலு பிள்ளைகள் இருந்தார்கள். எனக்கு மூன்று மகன். ஒரே ஒரு பெண். அவள் பெயர்தான் சசி. எங்கள் குடும்பத்தின் ஒரே பெண் குழந்தை அவள். பதினேழு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் வைகறைப்பொழுதில் அந்த நகரத்திலிருந்து விரட்டப்பட்டோம். அந்தக் கலவரத்தில் தூளியில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை சசியை மறந்துவிட்டு வந்தோம். அவளுக்கு அப்போது மூன்றே வயது. அதற்குப் பிறகு நான் இன்றுதான் அவளைக் குறித்துக் கேள்விப்படுகிறேன். அதுவும் எந்த நிலையில்?..

''எங்கள் குடும்பத்தில் பெண் குழந்தைகளே இல்லை, கர்னல் ஸாஹிப். என் தமைய

னுக்குப் பெண் குழந்தை கிடையாது. அந்தக் கலவரத்துக்குப் பிறகு என் மனைவிக்குக் குழந்தைகளே பிறக்கவில்லை. ரட்சா பந்தனத் திருநாள் வரும்போதெல்லாம் என் பிள்ளைகள் எல்லோரும் கண்ணீர் விடுவார்கள். அவர்கள் கையில் ரட்சையை அணிவிக்க ஒரு தங்கை இல்லையே என்று துயருறுவார்கள். எங்கேயாவது பெண் குழந்தையைக் கண்டுவிட்டால் மலைத்துப் போய் நின்று விடுவாள் என் மனைவி. அரசாங்கத்தின் மூலமாகவும் தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டும் என் குழந்தையைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ள எத்தனை முயற்சிகளைச் செய்திருக்கிறேன் தெரியுமா நான்? ஒரு தரம் பக்ஷி குலாம் முகம்மதைக் கூடப் போய்ப் பேட்டி கண்டேன். அவரும் தம்மால் ஆன உதவியைச் செய்வதாக வாக்களித்தார். ஒன்றும் பலன் கிட்டவில்லை. கடைசியில் உண்மை இவ்வளவு பயங்கரமாக உருவெடுத்து நிற்கிறதே! நான் மறுபடியும் என் குழந்தையை உயிரோடு பார்ப்பேனா, கர்னல் ஸாஹிப்!'' அவர் கதறினார்.

''போக்ரா ஸாஹிப்! அரசியலிலும் போரிலும் இதெல்லாம் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகள். பெரிய புயல் வீசும்போது எவ்வளவு பயிர்கள் நாசமடைகின்றன? இதுவும் வெள்ளத்தையும் புயலையும் போலத்தான் ஸாஹிப். உங்களுடைய மகள் உயிருடன் சுகமாக வாழ்கிறாள் என்று அறிந்து கொண்டதே நல்ல சூசகம் அல்லவா? இந்தப் பைத்தியக்கார யுத்தம் ஒரு நாள் நின்றுதான் போகும். அப்போது நீங்கள் அவளைக் காணலாம்.''

அவர்களுடைய ஜீப் முகாமை அடைந்ததுமே கர்னல் ஜனார்த்தனனுக்குப் புதிய உத்தரவு ஒன்று காத்திருந்தது. ரெஜிமெண்ட் முன்னேறிப் போக வேண்டும். ஒரு முக்கியமான எதிரித் தளத்தைக் கைப்பற்ற வேண்டும். லெஃப்டினெண்ட் கர்னல் ஜனார்த்தனம் ஆலோசனையின் பொருட்டுத் தமது துணை அதிகாரிகளை அழைத்தார். இரவு வெகு நேரம் வரையில் அவர்கள் போர் நிலை குறித்து விவாதித்தார்கள்.

பெரிய பெரிய லாரி வண்டிகள் உறுமியவாறு பீரங்கிகளை அநாயாசமாக இழுத்துச் சென்றன. படைப் பயிற்சிப் பள்ளியில் கற்றுக் கொடுத்த லாஜிஸ்டிக்ஸ், ஸ்ட்ராடஜி, மேப் ரீடிங் ஒன்றும் அங்கே பயன்படவில்லை. குறைந்த அளவு சேதத்துடன் துணைப் படைத் தலைவர்கள் எதிரியின் தளங்களைக் கைப்பற்ற வேண்டும். எப்படியும் கைப்பற்றியே தீரவேண்டும். திரும்பக் கூடாது. தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் அந்த இலட்சியத்தைத் தொடவேண்டியது மிக மிக முக்கியம்.

ரெஜிமெண்ட் பாட்டரியாகப் பிரிந்தது. பாட்டரி ட்ரூப்பாகக் கலைந்தது. ஒவ்வொரு ட்ரூப்பும் தமது பீரங்கிகளைக் குறிப்பிட்ட இலக்குகளில் நிறுத்தி அதை காமஃப்ளாஜ் செய்து சுற்றிலும் அரண் அமைத்துத் தங்குவதற்கு வசதியும் புரிந்துகொள்ள வேண்டும். டெலிபோன் இணைப்பை மறந்துவிடக் கூடாது.

இருட் கவசத்தைத் துணையாகக் கொண்டு ஏழு பேர்கள் முன்னால் நடந்தார்கள். இரண்டு பேர்கள் ஜங்கிள் பூட்ஸை அணிந்துகொண்டு மரமேறக் தயாராக இருந்தார்கள். அவர்களுக்கு ஓ. பி.க்கள் என்று பெயர். உயரமான இடத்தில் ஏறி நின்றுகொண்டு எதிரி இருக்கும் இடத்தைக் கண்காணித்து வயர்லெஸ் மூலம் தங்கள் படையினருக்குச் செய்தி அளிக்க வேண்டும். அவர்கள் தரும்



விவரத்தின் துணை கொண்டு பீரங்கித் தளபதிகள் குண்டு பாய வேண்டிய தூரம், கோணம் இவைகளைக் கணக்கிடுவார்கள். எதிரியின் இலக்கு நாசமானதும் காலாட் படையினர் முன்னேறி எதிரியின் காவல் நிலையங்களைக் கைப்பற்றுவார்கள். அது ஒரு விறுவிறுப்பான வீர விளையாட்டு.

அந்த மலைப் பிரதேசத்தின் வழியாக டிரக்கில் செல்லும்போது சுபேதார் மேஜருடைய உடல் படபடத்தது. அதை ஒட்டிய ஒற்றையடிப் பாதை வழியாகத்தான் பரசுநாத் டோக்ரா குதிரைகள்மேல் ஏறிச் சென்று தம்முடைய கடைக்குச் சரக்கு வாங்கி வருவார்; ராஜ்மாஷ் என்ற மொச்சைக் கொட்டையைச் சமவெளியில் கூடும் சந்தையில் கொடுத்துவிட்டு உப்பை வாங்கிக்கொண்டு வருவார். அவருடைய சொந்த ஊரான மலைப் பிராந்தியத்தில் உப்பு ஓர் அருமையான பண்டம்.

நான்கு கோவேறு கழுதைகள் அவருடைய குதிரையைப் பின் தொடர்ந்து வரும். அவற்றின் மேல் புதிய துணி மூட்டைகள் இருக்கும். தம் தலைமுறையுடைய குழந்தைகளுக்காக வாதுமையும், பிஸ்தாவும், அக்ரோட்டும், நிறைய வாங்கிவருவார் பரசுநாத்.

எதிர்ப்புறத்திலிருந்து வந்த ஒரு துப்பாக்கி ரவை அவரைத் தாண்டிச் சென்றது. 'உய்ய்' என்று அது விளைவித்த ஒலி மரங்களில் எதிரொலித்தது. டிரக்கிலிருந்து கீழே இறங்கிப் பதுங்கிக் கொண்டார் டோக்ரா.

இந்தியப் படையினரின் உற்சாகம் உச்ச நிலையில் இருந்தது. உலகத்தில் எந்தப் படையினருக்கும் அவர்கள் தரத்தில் குறைந்தவர்கள் அல்ல. போர்வீரனுக்கு முக்கியமாக வேண்டிய நெஞ்சுரம், சகிப்புத்தன்மை இவை இரண்டும் இந்திய ஜவானிடம் நிறைய இருந்தன. உதிரத்தின் காட்சி இரக்கமுடைய அவனையும் போர் வெறியில் ஊக்கிறது. செருக்களத்தில் அவன் பின்வாங்கியது என்பதே பழைய வரலாற்றில் இல்லை. உலகத்தில் மிகச் சிறந்த படை வீரர்கள் இந்தியர் என்று ஆங்கிலேயர்களே கூறிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

ஆனால் செயற்கையான காஷ்மீரின் எல்லையில் அவன் ஒரு விசித்திரமான நிலையில் இருந்தான். பாகிஸ்தானிப் படையினர் எல்லைக் கோட்டின் மறுபுறத்திலிருந்து மாறுவேடத்தில் உள்ளே புகுந்திருந்தார்கள். அங்கிருந்து நவீன போர்ச் சாதனங்களுடன் பாகிஸ்தானிகள் நமது நிலைகளில் குண்டு மாரி பெய்தனர். ஆனால் இவன் தக்க போர்த் தந்திரங்களை மேற்கொண்டு எதிரியை அடித்து விரட்டுவதற்கு டெல்லியின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியிருந்தது.

பாதுகாப்பு மந்திரியை ஹெலிகாப்டரில் அழைத்து வந்து போர்க்கள நிலையை அவருக்குத் தெளிவாகக் காட்டிய பிறகுதான் நமது பலவீனத்தை உணர்ந்தார் அவர். ஐக்கிய நாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஒன்றுமே செய்ய இயலாமல் இருந்தார்கள். 'எனக்கு விசேஷ அதிகாரம் எதும் இல்லை. நான் இரு தரப்பினரிடமும் நியாய உணர்ச்சியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முறையிடலாம். வேறு என்ன செய்வேன்?' என்று வெளிப்படையாகவே கூறினார் ஜெனரல் நிம்மோ. கையையும் காலையும் கட்டிப் போட்ட நிலையில் எங்கள் வீரர்கள் போரிட முடியாது என்று தெளிவாகக் கூறி விட்டனர் இந்தியப் படைத் தலைவர்கள். அப்போது தான் கையெழுத்திட்ட 'ப்ளாங் செக்'கை இந்தியப் படை வீரருக்கு அளித்தார் பாரதப் பிரதமர். ஆக்கிரமிப்பாளரைக் காஷ்மீருக்குள் நுழையாமல் தடை செய்யத் தேவையான போர் முறைகளைப் படைத் தலைவர்கள் மேற்கொள்ளலாம் என்று அவர் அறிவித்தார். இந்திய ஆட்சி வரலாற்றிலேயே பதினெட்டு ஆண்டுகள் சுதந்திர வாழ்வுக்குப் பிறகு இது முக்கியமான வரவேற்கத் தக்க திருப்பம். படையினரின் உற்சாகம் கரை கடந்து பெருகிற்று. 'பொறுத்தது போதும், பொங்கி எழு!' என்று அவர்கள் புறப்பட்டார்கள்.

கூடியவரையில் கன்வென்ஷனல் முறையையே பின்பற்றிப் போரிட வேண்டும் என்று அவர்கள் தொடங்கினார்கள். முதலில் எல்லைச் சாரணர்கள், அதற்குப் பின்னால் அம்பு வடிவ வியூகத்தில் காலாட் படைகள், அவர்களுக்குக் கவசமாகப் பீரங்கிப் படையினர் என்றுதான் அவர்கள் அணிவகுத்து முறைபோட்டு சென்றனர். ஆனால் அந்தக் காஷ்மீரப் பிரதேசத்தின் செங்குத்தான குன்றுகளும் வழுக்கும் பாறைகளும் கடுவேகம் நிறைந்த காட்டாறுகளும், வனப் பிரதேசங்களும் பாடப் புத்தகப் போர் முறைக்கு இடம் தரவில்லை. ஆகவே புத்திசாலிகளான படைத் தலைவர்கள் தங்கள் போர்த் தந்திரங்களைப் பிரதேசத்துக்குத் தக்கவாறு மாற்றிக் கொண்டார்கள். துணைப் படைத் தலைவர்களுக்கு இலக்குகள் தரப்பட்டன. நேரம் குறிக்கப்பட்டது. 'அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்ற வேண்டியது உங்கள் பணி. முறையைப் பற்றி நான் கவலைப்படவில்லை' என்று கூறிவிட்டார் செக்டர் கமாண்டர்.

அந்த வகையில் சுபேதார் மேஜர் டோக்ராவுடன் ஹவல்தார் சொக்கலிங்கம், நாயக் ரத்திராம், நாயக் பிரேம்சந்த், இன்னும் பொறுக்கி எடுத்த பன்னிருவர் சேர்ந்து கொண்டனர். வரைபடத்தில் அவர்கள் தாக்கிக் கைப்பற்றவேண்டிய இடம் தரப்பட்டது.

"எனக்கு இந்தப் பிரதேசம் முழுவதும் நன்றாகத் தெரியும், கண்ணைக் கட்டி விட்டால்கூட நான் அங்கு சென்று விடுவேன், நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று உடன் வந்தவர்களை உற்சாகப்படுத்தினார் டோக்ரா. அவர்களுடைய மீடியம் பீரங்கிகள் பன்னிரண்டும் காட்டினிடையே தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டன. அவற்றைப் பல இடங்களில் மேற்குத் திசையை நோக்கித் திருப்பி வைத்து, பச்சை வலை போட்டு மூடினர். இயந்திரப் பீரங்கிப் படை காலாட் படையாக மாறியது. இச்சாபூர் தொழிற்சாலையில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கிகள், மெஷின் கன், கைக் குண்டுகள், சுரங்க வெடி ஆகியவற்றுடன்

அவர்கள் புறப்பட்டார்கள் அவர்களிடையே இருந்த உற்சாகத்தைப் பார்த்தால் ஏதோ உல்லாசப் பயணம் புறப்படுகிறவர்களைப் போல் இருந்தது.

பரகநாத் டோக்ரா முழு இராணுவ உடையுடன் தோளில் துப்பாக்கியுடன் முன்னால் நடந்தார். அவருடன் சொக்கலிங்கம் இருந்தார். சற்றுப் பின்னால் அவருடைய போர்க் குழு சென்றது.

அன்றைய இரவுப் பொழுதை அவர்கள் குன்றின் சாரலிலேயே கழித்தார்கள். அதிகாலையில் இருள் பிரிவதற்குள் ஆற்றைக் கடக்க ஆயத்தமானார்கள். நதியின் ஆழம் இடுப்பளவுதான் இருந்தது. ஆனால் நீரின் விசை ஆளை உருட்டிக் கொண்டு போயிற்று. படைவீரர்கள் ஆயுதங்களையும், மற்ற உபகரணங்களையும் உணவுப் பொருள்களையும் தோளுயரம் உயர்த்திக் கச்சையினால் இறுக்கிக் கொண்டனர். "இந்த ஆற்றைத் தனியாகக் கடக்க முடியாது தோழர்களே, எல்லோரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொள்ளுங்கள். என்ன நேர்ந்தாலும் கைப் பிடியைத் தளரவிடாதீர்கள்" பரகநாத் கூறினார். சரளைக் கல் மேல் தளத்தையுடைய புதை மணலில் அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்தனர் அந்தப் பதினைந்து பேர்களும்.

"சுபேதார் மேஜர் சாஹிப்!" ஹவல்தார் சொக்கலிங்கம் பரகநாத்தை விளித்தார். "ஒருவரது கையை மற்றவர் பிடித்து இணைத்துக்கொண்டு ஒரே இலட்சியத்தை நோக்கி ஏழு தப்படிகள் நடந்து விட்டால் அவர்கள் ஆயுள் நண்பர்களாகி விடுவார்கள் என்று ஒரு வழக்கு உண்டு. அவ்வாறு சுக்ரீவனின் கையைப் பிடித்துக் கொண்டு இராமபிரான் நடந்ததாக மத்தியப் பிரதேசத்து ராம கதையில் வழங்குகிறது. அந்த முறைப்படி நாமெல்லாம் ஆயுள் நண்பர்களல்லவா?"

பரகநாத் நகைத்தார். "இராணுவத்தில் கிடைக்கிற ஆழ்ந்த நட்பு எங்கும் கிட்டுவதில்லை ஹவல்தார்ஜி. நீங்கள் சொல்வது நூறுசதம் உண்மை. மரணம் எதிர்நோக்கும் போது கிட்டுகிற வழித் துணை இருக்கிறதே, அதுதான் மற்றெல்லா நட்பையும் விட உறுதி மிக்கது!"

பலவண்ண நீர்ப் பறவைகள் பறக்கத் தொடங்கின. நீரின் வேகம் அவர்களை மேல் திசையை நோக்கி இழுக்கத் தொடங்கியது. பரகநாத் தமது கைப்பிடியை இறுக்கினார்.

அரை மணி நேரம் நடந்த பிறகு மரங்கள் அடர்ந்த எதிர்க் கரையை அடைந்தனர் வீரர்கள். ஊரைச் சுற்றி ஒரு பழைய உறுதியான மதிள் சுவர் இருந்தது. இரு சுவர்கள் இணைந்த பகுதியின் அருகில் இருந்த மண் மேட்டைக் கோடரியால் வெட்டினார் சொக்கலிங்கம். அது இரும்பு முனையை எதிர்த்தது. 'ஏ, அப்பா! மண் எவ்வளவு கெட்டி!' லான்ஸ் நாயக் விஷ்ணுமோகன் வியந்தான்.

"எங்களுக்கே பிறந்த மண்ணின் மீது பிடிப்பு அதிகம். அந்தத் தன்மையைத்தான் இந்தப் பூமியும் பிரதிபலிக்கிறது. நாங்கள் ரகசியங்களை எளிதில் வெளியிடவும் மாட்டோம். நம்பியவர்களைக் கைவிடுவதுமில்லை" என்று பரகநாத் டோக்ரா சிரித்துக் கொண்டே கூறினார்.

நண்பர்கள் முறை வைத்துக் குழி வெட்டினார்கள். 'எல்' வடிவப் பாதுகாப்புக் குழிகள் தயாராயின. குழியின் முன்பு புதர்களையும் மரக் கிளைகளையும் குவித்து எதிரியின் பார்வையிலிருந்து தப்பும் வழி செய்து கொண்டார்கள். தங்களுடைய உணவுப் பண்டத்தையும் மற்றப் பொருள்களையும் வைப்பதற்குத் தனியான 'ட்ரெஞ்ச்'ஒன்றைத் தயாரித்தார்கள். சுபேதார் மேஜர் அந்தப் பிரதேசத்தின் இயல்பைப் பற்றிச் சுவையுடன் விவரித்துக் கொண்டு வந்தார். இது பொன் விளையும் பூமி. ஆனால் பீர்பாஞ்சால மலைப் பகுதிக்கு மேற்புறத்தில் பாகிஸ்தானின் இரும்புப் பிடியில் சிக்கியிருக்கும் இந்த இடத்தைப் பாருங்கள். ஒரு நல்ல பாதை உண்டா? பாலம் இருக்கிறதா?



பள்ளிக்கூடங்களையே காணோம். தபாலாபீஸ் கூடத் தென்படவில்லை. இதுதான் குடியாட்சிக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு. மகாராஜாவின் ஆட்சியில்கூட இதைவிட அதிகமாக மக்கள் நலன் கவனிக்கப்பட்டது. மகாராஜா ஹரிசிங் ஸ்ரீநகரில் வாழ்ந்தாலும் ஆண்டுக்கொரு முறை இந்தப் பிரதேசத்துக்கு வருவார். மக்களுடைய குறைகளை நேரிடையாகக் கேட்பார். தம்மால் இயன்ற உதவிகளை உடனடியாகச் செய்வார். அப்படி ஒருமுறை இங்கு வந்தபோதுதான் நானும் அவருடைய ஸ்டேட் ராணுவத்தில் சேர்ந்தேன். மகாராஜா என்னுடைய தமையனாருடன் உரையாடினார். 'உங்கள் குடும்பத்தில் யாருமே படையில் சேரவில்லையே! உங்கள் தம்பியாவது ராணுவத்தில் பணி புரியட்டும்' என்றார். என் அண்ணனும் ஒத்துக்கொண்

டார். டோக்ரா குடும்பத்தில் வீட்டுக்கு ஒருவராவது இராணுவத்தில் பணி புரிய வேண்டும் என்ற எழுதாத நியதி இருந்தது. காஷ்மீர முஸ்லீம்கள் பெரும்பாலும் தொழில், வினைஞர்கள், நல்ல இரசிகர்கள், நுண்கலை புரிபவர்கள், சிறந்த வியாபாரிகள். ஆனால் படையில் பெரும்பாலும் டோக்ராக்கள்தான் இருந்தார்கள்..''

செவிகளில் இயர்போனை மாட்டிக்கொண்டிருந்த லட்சுமண் சிங் குதித்தார். சுபேதார் மேஜர் பேசுவதை நிறுத்தினார். சிக்னல் புத்தகத்தில் அவன் செய்தியை ரெக்கார்டு செய்தான். ''நமது ரெஜிமெண்டின் மத்திய கேந்திராலயம் அமைக்கப்பட்டு விட்டது. இந்த இடத்துக்கு இனிமேல் 'பி செக்டர்' என்று பெயர். செக்ஷன் கமாண்டர்கள் தாங்கள் இலக்கு நோக்கி வந்த விவரத்துக்குத் தகவல் கொடுக்க வேண்டும். உணவு வசதி, ஜவான்களின் உடல் நலம், உற்சாக நிலை இவை குறித்த விவரம் தேவை. நாளை முன்னேறுகிறோம். எதிர்ப்பு கடுமையாக இருக்கும். நள்ளிரவுக்கு மேல் எந்தெந்த செக்ஷன் எந்த இடத்தை இலக்காகக் கொண்டு முன்னேறவேண்டும் என்று உத்தரவு கிடைக்கும். ரிப்போர்ட் கம்ப்ளீஷன்-ஓவர்.''

படைப் பகுதியை ஜுர வேகம் பற்றியது. போரைப்பற்றிப் பேசுவது வேறு. அதில் நேரிடையாகப் பங்கு பெறுவது வேறு. உயிர் ஆசை எல்லோரையும் குலையைப் பிடித்து உலுக்கிற்று. நண்பர்களின் முக பாவத்திலிருந்து விவரம் தெரிந்துகொண்ட பரகநாத் தமது ரிஸர்வ் ரேஷனைத் திறந்தார். செந்திரவம் தொண்டை வழியே வயிற்றுக்குள் இறங்கியதும் அச்சமும் கவலையும் பறந்தோடின. வீரர்கள் தங்கள் ஆயுதங்களைச் சரி பார்த்தார்கள்...

நள்ளிரவில் பாட்டரி வெளிச்சத்தின் உதவியைக் கொண்டு செய்தியை ரெக்கார்டு செய்தார் பரகநாத். அவருக்குத் தரப்பட்டிருந்த வரைபடக் குறிப்புக்களையும், படத்தையும் தரையில் வைத்துச் சரிபார்த்தார். மதில் சுவரை ஒட்டி ஓர் ஒற்றையடிப் பாதை. அதைத் தாண்டி ஒரு பெரிய குடிதண்ணீர்க் கிணறு. அதை ஒட்டி ஒரு வண்டிப் பாதை. அதன் வழியாகப் பதுங்கிப் பதுங்கி முன்னேற வேண்டும். அரை மைல் சென்றதும் ஒரு மாடு அடைக்கும் பட்டி. மரச் செக்கு. அதற்குப் பின்னால் ஒரு ஈத்கா. சுபேதார் மேஜரின் மூச்சுத் திணறியது. தலை சுழன்றது. பாட்டரி விளக்கு கையிலிருந்து நழுவிற்று. எதிரே ஒரே இருள். கும்மிருட்டு. அதனிடையில் பல பயங்கர உருவங்கள் கையில் ஆயுதங்களுடன் நிற்பதைப் போல் தோன்றியது. அவர் அப்படியே குப்புறச் சாய்ந்தார்.

....பெட்டி நிறைய உலர்ந்த திராட்சையையும் வாதுமையையும் வாங்கிக் கொண்டு ஒட்டகத்தின் மேலேறி வீடு திரும்புகிறார் பரகநாத். அவர் அப்போது விடுமுறையில் வந்து கொண்டிருந்தார். சிவப்பு நிறப் பட்டுச் சட்டை — நிறைய ஜரிகைப் பூ வேலை செய்தது — அதை அணிந்து கொண்டிருந்த பெண் குழந்தை ஒன்று அந்தப் பெரியவர் வீட்டு வாசலில் நிற்கிறது. அவரைத் தொலைவிலேயே கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து ஆனந்தத்தினால் கும்மாளம் போடுகிறது. ஒட்டகத்தின் சேணதாவிலிருந்து கீழே குதித்துக் குழந்தையை வாரி எடுக்கிறார் பரகநாத். அதனுடைய பூப்போன்ற கன்னங்கள் நனைந்திருக்கின்றன. 'ஏன் அழுகிறாய் சசி!' அவர் அன்புடன் வினவுகிறார். மழலை மொழியில் விடையிறுக்கிறது குழந்தை: ''மேரி பப்பு, மேரே பியாரே பப்பு!'' குழந்தையைக் கொஞ்சுகிறார் பரகநாத்.

உள்ளே நுழைந்து தலைமயனின் காலடிகளைத் தொட்டு வணங்குகிறார். அண்ணி ரூபவதி ஒரு பெரிய முராதாபாத் கிளாஸ் நிறைய வெண்ணெய் மிதக்கும் குளிர்ந்த லஸ்ஸியைக் கொண்டு வருகிறாள். அது அவருடைய உள்ளத்தையே குளிர வைக்கிறது.

கன்னத்தில் ஜில்லென்று ஏதோ உறைக்கவே பதறி எழுந்தார் பரகநாத். அவருடைய ஸ்டென் துப்பாக்கியின் முனைதான் கன்னத்தில் பட்டிருக்கிறது. 'ஏ, அப்பா! இப்போதே இவ்வளவு குளிர் வந்துவிட்டதே! தோழர்கள் எழுந்து தங்களைத் தயார் செய்துகொண்டுவிட்டார்கள். வரைபடத்தைக் காட்டி அவர்கள் சென்று கைப்பற்ற வேண்டிய இலக்கை விவரிக்கிறார் பரகநாத்.

சுபேதார் மேஜரும், அவரது தோழர்களும் பதுங்கிப் பதுங்கி, குனிந்தும், தவழ்ந்தும், மார்பினால் ஊர்ந்தும் செல்லுகிறார்கள். தொழுகை நாளில் அமைதியுடன் மக்கள் கூடும் ஈத்காவின் உயரமான சுவர் தென்படுகிறது. அதுதான் தற்போது அவர்களுக்கு அரண். அதுவும் இலைமாகி நடுவில் விரிந்திருக்கிறது.

இதென்ன? சுபேதார் மேஜரின் கண்களில் நீர் பெருகுகிறது! மூச்சுத் திணறி உடல் நடுங்கத் தொடங்குகிறது. சொக்கலிங்கம் அவருடைய கையைப் பிடித்துப் பார்க்கிறார். உடம்பு சரியில்லையா சுபேதார் மேஜர் சாஹிப்?

பரிதாபமான தோற்றத்தோடு விளங்குகிறார் டோக்ரா. அந்தப் பெரிய சுவரிலிருந்த பிளவின் வழியாகத் தொலைவில் தெரியும் பெரிய மாடி வீட்டைச் சுட்டிக் காட்டுகிறார். செங்காவி பூசிய அந்தக் கட்டிடம் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கிறது. அவருடைய உதடுகள் துடிக்கின்றன. ''அந்தப் பெரிய வீட்டில் — அங்கேதான் எதிரிகளின் படைக் குழு ஒன்றிருக்கிறது. அதைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கும் உத்தரவு'' அவர் நடுங்கிய குரலில் கூறுகிறார்.

''அதற்கென்ன சுபேதார் மேஜர் சாஹிப், பிடித்துவிட்டால் போகிறது!'' 'மெஷின் கன்-பொஸிஷன்' — ஹவல்தார் சொக்கலிங்கம் உத்தரவு கொடுக்கிறார். 'டைட் சார் லென், பதினொரு மணி அளவில் நிற்கும் பெரிய புளிய மரத்துக்கும் கிணற்றுக்கும் இடையில் உள்ள பெரிய பங்களா' — சொக்கலிங்கத்தின் வாயை மூடுகிறார் பரகநாத். ''ஹவல்தார்ஜி! அது என் வீடு. அங்கே என் தகப்பனார் வசித்தார். அதன் பின் பக்கத்தில் எங்களுடைய பெரிய ஜவுளிக்

கடை) இருந்தது. தற்போது அங்கேதான்' காப்டன் ரஷீத்தின் மனைவி—என் மகள்'. —பரகநாத் டோக்ராவின் நாவு உலர்ந்து போகிறது. உடலிலுள்ள உதிரம் முழுவதும் சிந்திப்போனது போல் ஓய்ச்சல் ஏற்படுகிறது அவருக்கு.

பரகநாத் டோக்ராவின் நெற்றியில் துளித்த வியர்வையைத் துடைக்கிறார் சொக்கலிங்கம். "எனக்குப் புரிகிறது சுபேதார் மேஜர் சாகிப். இது ஒரு பைத்தியக்காரத்தனமான சண்டை. அண்ணன் தம்பியையும், தகப்பன் மகனையும், சீடன் குருவையும் கொல்ல வேண்டிய போர். ஆனால்....ஆனால்.. சுபேதார் மேஜர் சாகிப், அதைச் செய்ய நாம் சம்பளம் வாங்குகிறோம். அவ்வாறு செய்வதாக இந்தக் கொடியைத் தொட்டு நாம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்." சொக்கலிங்கம், தம் சட்டைப் பையிலிருந்து அந்தச் சிறிய புத்தகத்தை வெளியே எடுத்தார். அதன் இரண்டாவது பக்கத்தில் உள்ள படத்தை சுபேதார் மேஜரின் கண் முன் பிடித்துக் காட்டினார்.

வில்லையும் அம்பையும் விசிறி எறிந்து விட்ட அர்ஜுனன் தன் தேரிலிருந்து கீழே இறங்கிக் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். எதிரே தாமரை முகக் கோவிந்தன் நிற்கிறான்.. அவனைச் சுற்றிக் கோடி சூரிய ஒளி வீசுகிறது.

சுபேதார் மேஜர் பரகநாத் அந்தப் புத்தகத்தைக் கையில் வாங்கிப் பார்த்தார். உடலில் புதிய உதிரம் ஊடேறி ஓடத் தொடங்கியது.

உரத்த குரலில் சந்தத்துடன் கோஷிக்கத் தொடங்கினார் ஹவல்தார் சொக்கலிங்கம்.

தமுவாச ஹ்ருஷீகேச:
    ப்ரஹஸன்னிவ பாரத ।
ஸேனயோருபயோர் மத்யே
    விஷீதந்த மிதம் வச ॥
    ஸ்ரீ பகவானுவாச
அசோச் யானம் வசோசத்வம்
    ப்ரக்ஞா வாதாம்ஸ் பாஷஸே
கதாஸூன அகதாஸூம்ஸ
    நானுசோசந்தி பண்டிதஹ॥

ஸஞ்சயன் சொல்லுகிறான்: 'தேற திருதராஷ்டிரா, இரண்டு சேனைகளுக்குமிடையே இன்னற்படுகின்ற அர்ஜுனனுக்கு இளமுறுவல் பூத்தவராய் ஹ்ருஷீகேசர் — ஸ்ரீ கிருஷ்ணன் இம்மொழிகளை இயம்பினார்.

இறைவன் கூறினார்:

'துயரத்துக்குரியவரல்லார் பொருட்டுத் துயருறுகிறாய்; கூடவே ஞானியைப் போன்றும் பேசுகிறாய். இறந்தவர்களுக்கோ இருப்பவர்களுக்கோ பண்டிதர்கள் வருந்திப் புலம்பமாட்டார்கள். (கீதை: 2-10,11)

சுபேதார் மேஜர் பரகநாத் இடிபோன்ற குரலில் உத்தரவு கொடுத்தார். "பஹாதூர் ஸாதியோ! நிஷான் லகாகர் கோலி சலாவ், கோலி சலாவ், ஆகே படோ, ஆகே படோ!" அவர் தரையைக் காலால் உதைத்தார். (வீர நண்பர்களே! குறிவைத்துச் சுடுங்கள், மறுபடியும் சுடுங்கள், முன்னேறுங்கள், முன்னேறுங்கள்.)

'டட—டட—டட—டட—டட், டட—டட—டட—டட்'

நிசையக் கக்கிற்று 'இயந்திரப் பீரங்கி. "ஆகே படோ, ஆகே படோ!" சுபேதார் மேஜர் கூவிக்கொண்டே முன்னால் ஓடினார்.

"நைனம் சிந்தந்தி சஸ்த்ராணும், நைனம் தஹதி பாவக!" — பின்னால் மெஷின்கன்னின் குண்டொலியுடன் ஹவல்தார் சொக்கலிங்கத்தின் ஸ்வர சுத்தமான சுலோகமும் கேட்டது. கைக் குண்டு பறந்தது. ஓடியும் உருண்டும், தவழ்ந்தும் பாரத வீரர் இலக்கைத் தொட்டனர். எதிரிலிருந்து புறப்பட்ட தீயையும், புகையையும், ரவைகளையும் அவர்கள் இலட்சியமே செய்யவில்லை. ஒரே உதிரக் குளியல்.

'போலோ பாரத் மாதாகீ — ஜெய்'.

பரகநாத்தின் செக்ஷன் அவருடைய பெரிய வீட்டை நெருங்கியபோது அங்கு மயானத்தின் அமைதி நிலவிற்று. அந்தப் பங்களாவைப் பாசறையாகக் கொண்டு முப்பது பாகிஸ்தானியர் போரிட்டனர். சிதறிக் கிடந்த தீணமும், உதிரமும், எலும்புகளும் வெறியை ஊட்டின. அங்கே பதினொன்று பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். ஐவர் படுகாயம் அடைந்து குற்றுயிராய்க் கிடந்தனர். அவர்களுடைய தீனக் கதறல் நெஞ்சை உருக்கிற்று. மிகுந்தவர்கள் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

பரகநாத் வியப்பில் மூழ்கினார். மனிதன் மிகச் சிறந்ததாகக் கருதும் உயிரைப் பணயம் வைத்தானானால் அவனால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

'ஆஸ்சர்ய வத் பஸ்யதி கஸ்சிதேனம்'

உரத்த குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் சுபேதார் மேஜர். உடலெல்லாம் உதிரம் வழியத் தள்ளாடிக்கொண்டு வந்தார் ஹவல்தார் சொக்கலிங்கம். அவருடைய கண்களில் அத்தகைய ஒளி எப்படித் தோன்றியது!....

துப்பாக்கி ரவைகளால் துளைக்கப்பெற்ற வெளிச் சுவர்களைத் தாண்டிக்கொண்டு, மெள்ள வீட்டினுள் நுழைந்தார் பரகநாத். முன்னறையில் எத்தனை சுரங்க வெடிகள், துப்பாக்கி ரவைகள்! அடுத்த கூடம் முழுவதும் உணவுப் பண்டம், கம்பளி ஆடைகள். கலங்கிய மனத்துடன் தமது தந்தையின் தனியறையில் நுழைந்தார் பரகநாத். அதன் நடு அலமாரியில் ஒரு புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது. அதில் காப்டன் ரஷீத் அலி

பாக்கி நிற்கும் கடன்; பூரணமாக அணையாத நெருப்பு; முழுதும் தோற்கடிக்கப்படாத பகை— இவை மீண்டும் மீண்டும் கிளம்பித் தொல்லை கொடுக்கத்தான் செய்யும். ஆகவே, இவ்விஷயங்களில் அரைகுறை விவகாரமே கூடாது.

— வடமொழிக் கவி

இராணுவ உடையில் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் தன் உதிரத்தில் விளைந்த மகள் சசி, தனது இரண்டு குழந்தைகளுடன் நின்று கொண்டிருந்தாள். புகைப்படத்துக்கு அருகில் கிடந்த பொருளை ஜாக்கிரதையாக எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார் சுபேதார் மேஜர். அது ஒரு உடைந்த வளையலின் சிறு பகுதி. அந்தக் கண்ணாடித் துண்டில் தந்தை தம் மகளைக் கண்டார். அன்றையப் போர் நடவடிக்கை அத்துடன் முடிந்தது....

எங்கேயோ தொலைவில் ஒரு கார் செல்லும் சத்தம் கேட்டது. சுபேதார் மேஜர் கட்டிலை விட்டு எழுந்திருந்து வெளியே வந்தார். காவலன் யாரையோ நிறுத்தினான். அவன் 'பாஸ் வோர்ட்' சரியாகச் சொல்லாததினால் அவனைக் கடிந்துகொண்டான் செந்த்ரி.

''கார்டுஹோஷ்யார்! கார்டுஹோஷ்யார்!'' காவலன் உரக்கக் கூவினான். காவலர் தலைவன் வெளியே ஓடிவந்தான். மற்ற செந்த்ரிகள் தங்களுடைய பதுங்குக் குழிகளுக்குச் சென்றார்கள். துப்பாக்கியை 'காக்' செய்யும் ஒலி கேட்டது. காவலர் தலைவன் வந்தவனை அடையாளம் புரிந்து கொண்டு பாசறைக்குள் அனுமதித்தான். ரோந்துப் பணிக்குச் சென்றிருந்த காவலர்களில் ஒருவன் அவன்.

பரகநாத் வானத்தை உற்றுப் பார்த்தார். கரும் பட்டு வானத்தில் ஒளிப் புள்ளிகள் மின்னின. கிருஷ்ண பட்சத்துச் சந்திரன் இன்னும் உதயமாகவில்லை. எங்கேயோ சுவர்க் கோழி ஒன்று கிரீச்சிட்டது. பயந்த பறவை ஒன்று ஒலமிட்டுவிட்டு அடங்கிற்று. நிழல் சித்திரங்களைப் போலத் தொலைவில் வீடுகளும் மதில் சுவரும் தெரிந்தன. இந்தக் கிராமம் இனி இந்திய நாட்டின் ஒத்துழைப்பால் செழிக்கும். வளம் பெறும், மக்கள் நலம் பெறுவர். ஆனால் அவருடைய மகள் சசி, அவளுடைய குழந்தைகள்?

அமைதியை வேண்டித் தம் அறையினுள் வந்தார் பரகநாத். சொக்கலிங்கத்தின் கீதைப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். டார்ச் விளக்கைப் பிடித்தபடி` தயங்கித் தயங்கிச் சுபேதார் தர்மராஜனின் பங்கரை அணுகினார்.

''சுபேதார் சாஹிப்!'' – பதில் இல்லை. இன்னும் சற்று உரக்க குரல் கொடுத்தார் பரகநாத். ''சுபேதார் தர்மராஜன் சாஹிப்!''

துள்ளிக்கொண்டு கொசுவலையை நீக்கியவாறு எழுந்திருந்தார் தர்மராஜன். ''யாரது?'' அவருடைய குரல் நடுங்கிற்று. தம்முடைய பங்கரிலிருந்த அரிக்கன் விளக்கைப் பற்றவைக்க முற்பட்டார்.

''மன்னிக்க வேண்டும். நான்தான் பரகநாத். ஒரு முக்கிய காரியமாக வந்தேன்.'' அவருடைய குரல் தெளிவாக இருந்தது. டோக்ரா தர்மராஜனை அணுகினார்.

''சற்று இருங்கள், இந்த விளக்கைப் பற்ற வைக்கிறேன்.'' தீக்குச்சி உராயும் ஒலி. அறையில் மஞ்சள் இருள் சூழ்ந்தது.

பரகநாத் தம்மிடமிருந்த கீதைப் புத்தகத்தைப் புரட்டினார். அதனுடைய முதல் பக்கத்தைத் தர்மராஜனிடம் காட்டினார். ''இந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுக்கு முன்பு சொக்கலிங்கம் தம்முடைய பாஷையில் இதில் ஏதோ எழுதினார். அது என்னவென்று சொல்ல முடியுமா?''

தர்மராஜனுக்குச் சற்று வியப்பாக இருந்தது. ''இதற்காகவா இந்த நள்ளிரவில் வந்தீர்கள்?'' என்று கேட்க வாயெடுத்தவர் பரகநாத்தின் முக பாவத்தைக் கண்டு மேலே ஏதும் பேசாமல் அந்த நூலை வாங்கி விளக்கின் மஞ்சள் ஒளியில் பிடித்தார்.

அதைப் படித்ததும் அவருடைய உடம்பே புல்லரித்தது. தெளிவான எழுத்துக்களில் அதில் எழுதியிருந்தார் சொக்கலிங்கம்:

'பார்த்தனுக்காக மட்டும் அன்று!'

அதை மொழிபெயர்த்து ஹிந்தியில் விளக்கும்போது தர்மராஜனின் குரல் கமறியது.

''அப்படியா, அப்படியா?'' சுபேதார் மேஜர் தலையை ஆட்டிக் கொண்டே வியப்புடன் வினவினார். பிறகு தணிந்த குரலில் தமக்குத்தாமே பேசிக் கொள்வது போல் உரை செய்தார்.

''உண்மைதான் தர்மராஜன் சாஹிப்!- இந்த நூலில் அடங்கியுள்ளவை பார்த்தனுக்காக மட்டுமன்று. எனக்கும்தான். ஏன், உலகத்தில் எல்லோருக்கும்தான்!''

■ சுபேதார் மேஜரின் நிழல் விரிந்து விசுவரூபம் எடுத்து மறைந்தது.



அச்சத்தை அறியாத அணங்கு

உலகில் போர் முனைகள் பலவற்றிலும் முப்படை வீரர்கள் படும் துன்பம் சொல்லி முடியாது. அதைக் காட்டிலும் சிறிதும் குறைவற்ற துன்பத்தை யுத்த களத்தில் பணியாற்றும் பத்திரிகை நிருபர்கள் பலரும் அனுபவித்திருக்கிறார்கள். அவர்களில் டிக்கி சாப்பெல் முக்கியமான இடத்தைப் பெறுவதற்குக் காரணம் அவள் ஒரு பெண்!

ஆனால், தான் ஒரு பெண் என்பதற்காக எந்த ஒரு சலுகையும் காட்டக்கூடாது என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தாள் டிக்கி. இரண்டாம் உலக யுத்தத்தில் தன்னைச் சுற்றிலும் துப்பாக்கிக் குண்டுகள் மழை போல் பெய்துகொண்டிருக்க டிக்கி அமைதியாக ஃபோட்டோ பிடித்துக்கொண்டிருந்தாள். ஹெயூகாவின் மார்டர் பீரங்கிகள்கூட அவள் முன்னேற்றத்தைத் தடுக்கவில்லை. ஹங்கேரியில் சிறையிடப்பட்ட இவளைத் தூக்கிலிடப் போவதாகப் பயமுறுத்தியது கம்யூனிஸ அரசாங்கம். வியட்காங் கலகக்காரர்கள் மத்தியில் பாராசூட்டிலிருந்து இறங்கிப் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டு வெற்றிகரமாகத் திரும்பினாள் டிக்கி. இன்னும் கொரியா, காஷ்மீர், அல்ஜீரியா, டொமினிகன் ரிபப்ளிக் — எங்கெங்கெல்லாம் துப்பாக்கிச் சத்தம் கேட்டதோ அங்கெல்லாம் டிக்கி காமிராவும் கையுமாகக் காட்சி யளித்தாள்.



''இத்தகைய இடங்களில் ஒரு பெண்ணுக்கு என்ன வேலை?'' என்று கேட்கக் கூடியவர்களுக்காக அந்தக் கேள்வியையே தலைப்பாகக் கொண்டு தன் சுயசரிதையை எழுதினாள் இந்த அழகிய அமெரிக்க நங்கை டிக்கி.

பத்தொன்பதாவது வயதில் யுத்தப் புகைப்பட நிபுணர் டோனி சாப்பெல்லை மணம் புரிந்துகொண்ட டிக்கி அவரிடம் போட்டோ கலையைப் பயின்றாள். இரண்டாம் உலக யுத்தத்தின் பல்வேறு போர் முனைகளில் தனித்தனியே பிரிந்திருந்த இவர்களின் இல்லறம் இனிது நடப்பது எப்படிச் சாத்தியம்? பின்னும் விவாகரத்து செய்துகொண்டபோதிலும் கணவனிடம் கற்றுக் கொண்ட புகைப்படப் பாடங்களை மறக்கவில்லை டிக்கி.

பார்ப்போர் நெஞ்சைக் கவ்வும் வகையில் யுத்தத்தின் பயங்கரங்களைப் படம் பிடித்துக் காட்டினாள் டிக்கி. ரீடர்ஸ் டைஜஸ்ட், லைஃப், நேஷனல் ஜியாகிரபிக் ஆகிய பத்திரிகைகளில் அவள் எடுத்த படங்கள் வெளியாகிப் பெரும் புகழ் தேடித் தந்தன அவளுக்கு.

அல்ஜீரியாவில் கலகக்காரர்களுடன் வாழ்ந்து புகைப்படங்கள் எடுத்த நாட்களில் பாறை மீது படுத்துறங்கவும் நாளைக்கு ஆறு பேரிச்சம்பழங்களை மட்டுமே உண்டு வாழவும் உடலில் நீர் வற்றிப் போகாதிருக்க நாளைக்கு ஒரே தடவை சிறுநீர் கழிக்கவும் டிக்கி பழக்கிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அதற்கெல்லாம் அஞ்சவில்லை டிக்கி. 'ராணுவ பூட்ஸ்களும், இரும்புத் தொப்பியும் அணிந்தபடியே அவளால் ஐம்பது தண்டால்கள் எடுக்க முடியும்' என்று வியந்து கூறியுள்ளார் ஒரு கடற்படைத் தளபதி. 'போர் வீரர்களுக்கும் அவளுக்கும் இடையில் வித்தியாசமே தெரியாது. அவர்கள் துப்பாக்கியால் சுடுவார்கள்; இவள் காமிராவால் 'சுடு'வாள். அவ்வளவே.

போர் முனையின் மத்தியில் டிக்கியைக் கண்டதும் அவள் ஒரு பெண் என்பதால் அவளுடைய கனமான காமிராக்கள் பலவற்றைத் தாங்கள் அவளுக்காகச் சுமந்து வருவதாகக் கூறிப் பல வீரர்கள் உதவ முன்வருவார்கள். அவ்வுதவிகளைப் புன்னகையுடன் மறுதலித்து விடுவாள் அவள். அந்தப் புன்னகையே சோர்வுற்ற வீரர்கள் பலருக்குப் புத்துணர்ச்சி அளித்திருக்கிறது.

ஹங்கேரி ஜெயிலில் இருந்தபோது, வேவு பார்த்ததாக ஒப்புக் கொள்ளுமாறு டிக்கியை வற்புறுத்தியது கம்யூனிஸ அரசாங்கம். டிக்கி பிடிவாதமாக மறுத்துவிட்டாள். அப்போது, 'போராடிக் கொண்டே இருந்தால் அதன் முடிவில் நீ எந்த நிலையில் இருந்தாலும் சரி. அதில் மேன்மையில்லாமல் போகாது' என்றாள்.

அவளுடைய போராட்டத்தின் முடிவில் இன்று அவள் மரணம் எய்திய நிலையில் தானிருக்கிறாள். ஆனால் அவள் வாக்குப்படியே மேன்மையான — மதிப்பும் கௌரவமும் பெருமிதமும் மிக்க — நிலைதான் அது.

சமீபத்தில் வியட்நாம் போர்முனை ஒன்றினைப் படங்களாகப் பதிவாக்கிக் கொண்டிருந்தபோது ஒரு நிலக்கண்ணியில் கால் இடற அது வெடித்து இவளைப் பலி வாங்கிவிட்டது. யுத்தத்தின் கொடுமைகளை விளக்கும் அவளுடைய புகைப் படங்கள் மனித குலத்துக்கு என்றுமே அறிவுரைகள் வழங்கிக் கொண்டுதானிருக்கும். ஆனால் டிக்கியை மதிக்கும் மனிதன் அவள் புகைப்படங்கள் கூறும் செய்திக்கு மதிப்புக் கொடுத்துச் செயலாற்றுவானா?

நன்றி: டைம் 13-11-65 இதழ்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

:.பாஸ்:.போமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிவும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ :.பாஸ்பேட்கள் கலந்துள்ளது.

:.பாஸ்:.போமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிவை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமாமாய் வாழ உதவுவது பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் :.பாஸ்:.போமின்.



SQUIBB A century of experience builds faith

REGISTERED No. M.
Registered as a Newspaper in

